702

# கண்ணதாசன்

# சுயசரிதம்

# வனவாசம்

கண்ணதாசன் நூலகம்

சி. க. அரங்கராசன்,
அறிவு நூல் நிலையம்,
மண்ணச்சநல்லூர் அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

கண்ணதாசன்
சுயசரிதம்
வனவாசம்
கண்ணதாசன் நூலகம்

# வனவாசம்

1172
312-ஏ
GNANALAYA
Card No. 39/91.
PUDUKKOTTAI.

கவிஞர் கண்ணதாசன்

மீனாட்சி நூல் நிலையம்.
திருச்சி.
நாள்: ..............
எண்: ..............
பா. கிருட்டிணமூர்த்தி, M.A., B.T.,

கண்ணதாசன் நூலகம்
3 லேடி மாதவன் நாயர் ரோடு
சென்னை-34

முதற் பதிப்பு ஏப்ரல் 1965
இரண்டாம் பதிப்பு செப்டம்பர் 1968
பதிப்புரிமை பெற்றது

விலை ரூ. இரண்டு

அச்சிட்டோர்:
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ்,
81/5 பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை-17.

மீனாட்சி நூல் நிலையம்,
திருச்சி.
நாள்: ..............
எண்: ..............

முதற்பதிப்பின்

# முன்னுரை

கவிஞர் கண்ணதாசன் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு இந்தப் புத்தகம் ஒரு வாய்ப்பளிக்கிறது இது வாழ்க்கை வரலாறாக இருந்த போதிலும், இதை அவர் எழுதியுள்ள ஏதோ ஒரு கதை போலிருக்கிறது.

தங்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தாங்களே எழுதி வெளியிடும் பழக்கம் நம்முடைய நாட்டிலும், பிற நாடுகளிலும் உண்டு.

பெரியவர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் முதலியோரின் வரலாற்றை மற்றவர்கள் வாய் மொழியில் கேட்பதைவிட, அவர்கள் மொழியிலேயே கேட்பது சுவையானது.

கண்ணதாசன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பிலிருந்து. அவருக்கு இயற்கையாகவே கவிதை பாடும் ஆற்றல் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது.

இன்று தமிழகத்தில் இவருடைய கவிதைகளுக்கு ஒரு தனிச் சிறப்பும், மதிப்பும் உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

பாரதியாருக்குப் பிறகு எழுச்சிமிக்க ஆவேசக் கவிதைகள் இவரிடமிருந்தே பிறக்கின்றன.

கடந்த காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளையே இந்தப் புத்தகத்தில் அவர் சொல்லி இருக்கிறார். எதிர்காலம் இதை விடப் பிரகாசமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஜனநாயகத்தைப் பற்றியும், சோஷலிசத்தைப் பற்றியும் பாடுவதற்கான வாய்ப்பு இனி இவருக்கு அதிகம். அந்தத் தத்துவங்கள் நிலையானவை கவிதைகளும் நிலையானவை. இரண்டும் தேசத்துக்கு வெற்றி தேடித் தரும் என்பதில் ஐயமில்லை

பலதரப்பட்ட துன்பங்களில் உழன்று கரையேறி நெடுஞ்சாலையான தேசியச் சாலைக்கு உற்சாகமாக வந்து சேர்ந்துள்ள கவிஞர், மேலும், மேலும் தனது கவிதைகள் மூலம் நாட்டுக்குச் சிறந்த தொண்டு செய்ய வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். அவ்வாறு செய்வார் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

சென்னை—17
16—4—1965

காமராஜ்

# கவிஞர் வாழ்க!

கவிதை வளத்தாலே கன்னித் தமிழ்வளர்க்கும்
கண்ணன் அடியானே கவிதை நிதியானே
தென்னர் திருநாட்டார் தென்பாண்டி வளநாட்டார்
செந்தமிழின் மேன்மை தெளிந்துணரும் வேளையிலே
சிறுகூடற்பட்டியிலே செந்தமிழை அள்ளிக்
குடிக்கப் பிறந்தாயோ கொடுக்கப் பிறந்தாயோ!
தென்பாண்டி நாட்டின் திருவூராம் காரைநகர்
தன்னில் வளர்தற்குத் தடம் பார்த்து வந்தாயோ!
செல்வமிகும் செட்டிமார் சீர்சொல்லும் பாவையர்தாம்
செந்தமிழை அள்ளி அடுக்கினரோ உன் மடியில்!
தென்னகத்து முக்கனியும் சேரக் குழைக்கின்ற
தென்பாங்கை எங்கு, தெளிவாகக் கற்ருயோ!
செந்தமிழை உண்டார் தெவிட்டினுர் யாருமில்லை
தெவிட்ட நீ செந்தமிழைச் சேர்த்துக் குழைப்பாயோ
என்றுநான் அஞ்சுவதில் ஏதும் பிழையில்லை,
இன்றதனைக் கூறுவதில் எக்குறையும் காணவில்லை.
கொஞ்சு தமிழ்பாடிக் குழைகின்ற கோமானே
அஞ்சினேன்; ஆனுலும் அஞ்சாமை கொள்கின்றேன்.
மிஞ்சிக் கிடக்கின்ற தென்றெவரும் எண்ணுமல்
கெஞ்சி உனைக் கவிதை கேட்டுவருவார்க்கெல்லாம்
வஞ்சமில்லை என்நினைவில் வந்து குழைந்தோடுகின்ற
வார்த்தெடுத்த முத்துக்கள் கோர்த்தெடுக்க நேரமில்லை
என்று சொல்லிக் கெஞ்சவைத்து இம்மியளவும்
மதிப்பின்
ஏற்றம் குறையாமல் எழுதிக் கொடுத்திடுவாய்
வாழிய நீ செந்தமிழில் வண்ணங்கள் சொல்லிடவே!
வாழிய நீ செந்தமிழும் வாழ்ந்து களிப்புறவே!

வேந்தன்பட்டி: பெரி. சிவனடியான்.

# முன்னுரை



சுயசரிதம் எழுதுகிறவனுக்கு இரண்டு பெருமைகள் வேண்டும்.

ஒன்று, அதை எழுதும்போது அவன் புகழ் ஓங்கி நிற்க வேண்டும்.

இரண்டு, அவன் வாழ்வில் வியக்கத்தக்க சாதனைகள் நிகழ்ந்திருக்க வேண்டும்.

இந்த இரண்டும் இருந்தால்தான் அவனது சரித்திரத்தைப் படிப்பதற்குச் சிலபேர் கிடைப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை, என் புகழ் குன்றிலிட்ட விளக்காக ஒளிவீசுகிறதென்று நான் பெருமைப்பட முடியாது.

என் வாழ்வில் வியக்கத்தக்க சாதனை என்று எதுவும் இல்லை.

ஆயினும் எந்தத் துணிச்சலில் நான் சுய சரிதம் எழுதத் தவங்கினேன்?

இது கேள்வி!

நான் நடந்துவந்த பாதை, தனி வாழ்வில் நான் பட்ட துயரங்கள், இவையெல்லாம் ஒரு கதைபோல இருப்பதாக நான் கருதினேன்.

ஆகவே, வேறு கதாபாத்திரங்களை உற்பத்தி செய்து கதை எழுதுவதைவிட, என்னையே பாத்திரமாக்கி உண்மையைக் கதை வடிவில் சொல்ல நான் விரும்பினேன்.

அந்த முயற்சியே இந்த நூலாக எழுந்தது.

''நான்'' என்று எழுதுவதற்குத் தகுதி போதாது என்ற தன்னடக்கத்துடனேயே ''அவன்'' என்று என்னைக் குறிப்பிட்டேன்.

இதில், நான் பிறந்த கதை சொல்லவில்லை, அப்படியொன்றும் நான் அதிசயப்பிறவி அல்ல என்பதனால்.

நான் வளர்ந்த கதை சொல்லவில்லை, அப்படியொன்றும் நான் ராஜபோகத்திலோ, கொடிய ஏழ்மையிலோ வளர்க்கப்படவில்லை என்பதனால்.

நடுத்தரக் குடும்பத்தின் சாதாரண மகனுக்கு வயதும் மனதும் வளர்ந்ததிலிருந்தே கதை தொடங்குகிறது.

1943-லிருந்து 1961 ஏப்ரல் வரை என் வாழ்க்கை நடந்த விதம் இதில் வருணிக்கப்பட்டுள்ளது.

சில உண்மைகளை நிர்வாணமாகக் காட்டியிருக்கிறேன்.

சில துயரங்களைத் தாழ்வு கருதாது கூறியிருக்கிறேன்.

எனது மேன்மைகள் என்று நான் கருதுபவற்றைப் பயத்துடனேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

ஒரு பெரிய அரசியல் தலைவனின் வரலாறல்ல இது! ஒரு மாபெரும் கவிஞனின் காவிய வாழ்க்கையுமல்ல இது.

வாழ்க்கை வழிப்போக்கன் ஒருவனின் உயர்வு, தாழ்வுகளே இந்நூல்.

இதனைப் படிக்கின்றவர்கள் என்னை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

சில ரசிகர்களுக்காக இந்தச் சரிதம் பலகாலம் காத்துக் கொண்டிருக்க நேர்ந்தாலும் நான் வருந்த மாட்டேன்.

ஏனென்றால், என் காலத்துக்குப் பிறகு இது ஓர் அதிசயமாக இருக்கும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு.

இதில் நான் ''வனவாசம்'' என்று குறிப்பிடுவது ஓர் அரசியல் கட்சியில் நான் வாழ்ந்த வாழ்க்கையையே ஆகும்.

அந்தக் கட்சியிலிருந்து வெளியேறியதோடு வனவாசம் முடிந்து விடுகிறது.

அடுத்த பகுதியை மனவாசம் என்ற தலைப்பில் எழுத நினைத்துள்ளேன்.



இந்த வனவாசத்தின் ஒரு பகுதி முதலில் தென்றலிலும், பிறகு இனமுழக்கத்திலும் வெளிவந்தது.

அந்த ஏடுகளுக்கும், அவற்றின் நிர்வாகிகளுக்கும் எனது நன்றி!

முடிவுறாமல் நின்ற சரிதத்தை முடிப்பதற்காகப் பல நாட்கள் என்னிடம் நடந்து, பெரும் முயற்சியில் இதனை எழுதி வாங்கிய திரு. நாகசண்முகம் அவர்களுக்கும் எனது நன்றி!

என்னிடத்தே பெரும் பற்றுக்கொண்டு, உற்ற நேரத்தில் உதவிய நண்பராசவுமிருந்து இதன் முதற்பதிப்பை அழகாக வெளியிட்ட வேந்தன்பட்டி திரு. பெரி. சிவனடியான் அவர்களுக்கும் எனது நன்றி!

இந்நூலில் சில அச்சுப் பிழைகள் உள; இலக்கணக் குற்றங்கள் உள; அவசரமோ பக்குவக் குறைவோ எது காரணமாயினும் 'குற்றம் மறந்து குணங் கொள்வது' தமிழர் பண்பு.

அடுத்த பதிப்பில் குறைகள் திருத்தப்பெறும்.

விசாலாட்சி இல்லம்
16, என்சுமென் ரோடு,
சென்னை-17.
14—9—68

கண்ணதாசன்

# காணிக்கை

கம்பனுக்கு ஒரு சடையப்பவள்ளல், கண்ணதாசனுக்கு ஒரு சின்னப்ப வள்ளல் என்று சொல்லத்தக்க அளவில் மனம் நிறைந்த அன்பும், என்னிடத்தே நீங்காத பற்றும் — பரிவும் காட்டி, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் கைகொடுத்துவரும் திரு,எம்.எம்.ஏ. சின்னப்பாதேவர் அவர்களுக்கு இது காணிக்கை

கண்ணதாசன்

# மறக்க முடியாத சிரிப்பு

"நான் ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்''—கையிலிருந்த எண்பது பக்க நோட்டுப் புத்தகத்தை நீட்டி மிகவும் பணிவான குரலில் அவன் சொன்னான்.

ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஆசிரியர் தன் கண்ணாடிக் கண்களை மெதுவாகத் தூக்கி அவனைப் பார்த்தார்.

''என்ன எழுதியிருக்கிறாய்...?'' என்று இழுத்தார். மிகவும் பயத்தோடு, 'கதை' என்றான் அவன்.

''கதையா...?'' ஆசிரியர் ஓங்கிச் சிரித்தார்.

''நீயெல்லாம் ஏனப்பா கதை எழுதுகிறாய்! போய் வேறு ஏதாவது நல்ல வேலையைப் பார். கதை எழுதுவதொன்றும் சாமான்யமான வேலையல்ல...'' என்றார்.

ஆமை தலையை ஓட்டுக்குள்ளே இழுப்பதுபோல், நீட்டிய நோட்டுப் புத்தகத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு, தலைகுனிந்து வெளியேறினான் அவன்.

ஆசிரியரின் அந்தச் சிரிப்பு அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆம்; ஒலித்துக் கொண்டிருந்தது. இன்றைக்குப் பதினான்கு வயதுகளைக் கடந்துவிட்ட அந்தச் சிரிப்பு, இளமை மாறாமல் இன்னும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் அவன் பிறந்தான். அப்படியும் இப்படியுமாக எட்டா

GNANALAYA Regd. No. 39/91. PUDUKKOTTAI.

# காணிக்கை

கம்பனுக்கு ஒரு சடையப்பவள்ளல், கண்ணதாசனுக்கு ஒரு சின்னப்ப வள்ளல் என்று சொல்லத்தக்க அளவில் மனம் நிறைந்த அன்பும், என்னிடத்தே நீங்காத பற்றும் — பரிவும் காட்டி, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் கைகொடுத்துவரும் திரு,எம்.எம்.ஏ. சின்னப்பாதேவர் அவர்களுக்கு இது காணிக்கை

கண்ணதாசன்

மீனாட்சி நூல் நிலையம் திருச்சி

# மறக்கமுடியாத சிரிப்பு

"நான் ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்''—கையிலிருந்த எண்பது பக்க நோட்டுப் புத்தகத்தை நீட்டி மிகவும் பணிவான குரலில் அவன் சொன்னான்.

ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஆசிரியர் தன் கண்ணாடிக் கண்களை மெதுவாகத் தூக்கி அவனைப் பார்த்தார்.

''என்ன எழுதியிருக்கிறாய்...?'' என்று இழுத்தார். மிகவும் பயத்தோடு, 'கதை' என்றான் அவன்.

''கதையா...?'' ஆசிரியர் ஓங்கிச் சிரித்தார்.

''நீயெல்லாம் ஏனப்பா கதை எழுதுகிறாய்! போய் வேறு ஏதாவது நல்ல வேலையைப் பார். கதை எழுதுவதொன்றும் சாமான்யமான வேலையல்ல...'' என்றார்.

ஆமை தலையை ஓட்டுக்குள்ளே இழுப்பதுபோல், நீட்டிய நோட்டுப் புத்தகத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு, தலைகுனிந்து வெளியேறினான் அவன்.

ஆசிரியரின் அந்தச் சிரிப்பு அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆம்; ஒலித்துக் கொண்டிருந்தது. இன்றைக்குப் பதினான்கு வயதுகளைக் கடந்துவிட்ட அந்தச் சிரிப்பு, இளமை மாறாமல் இன்னும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் அவன் பிறந்தான். அப்படியும் இப்படியுமாக எட்டா

GNANALAYA
Regd. No.
39/91.
PUDUKKOTTAI.

வதுவரை படித்தான். அதற்குமேல் படிக்கவுமில்லாமல் வேலை பார்க்கவுமில்லாமல் அந்தக் கிராமத்திலேயே இருந்தான்.

அந்தச் சிறுவயதிலேயே ஒரு துறவியின் மனோ நிலையை அவன் கொண்டிருந்தான். மாலையில் விளையாடும் நேரத்தைத் தவிரப் பாக்கி நேரங்களில், நிகழும் உலகின் தொடர் பற்றவனாக அவன் இருந்தான்.

கிராமத்திற்கு மேற்கிலிருந்த கண்மாய்க் கரையை ஒட்டிய ஒரு தென்னந்தோப்பில் அவன் அடிக்கடி போய் உட்கார்ந்திருப்பான். சலசலக்கும் தென்னை ஓலையும் 'விர்' ரென்று பறந்து செல்லும் வண்டுகளும் பல கவிதைகளில் வருவதை அவன் படித்திருக்கிறான். அவற்றையே தென்னந்தோப்பில் கண்ட அவன், அவற்றைப் பற்றித் தானும் பாட எண்ணினான். பாடியும் பார்த்தான். தனக்குத்தானே பேசிக்கொண்டான். அப்போதே ஒரு பெரிய எழுத்தாளனாகி விட்டதாக அவனே இறுமாந்து கொண்டான்.

தினசரி அவனைத் தென்னந்தோப்பில் சந்திக்கும் பலர், அவன் தன்னிடமிருப்பதாகக் கருதிய 'தெய்வீக' அம்சத்தை உணராமல், பையன் எதற்கோ தென்னந்தோப்பில் சுற்றுகிறான் என்று எண்ணினார்கள்.

புதுவிதச் சிந்தனைகளின் மீது அவனுக்கு விடாப்பிடியான பற்று இருந்தது. தான் ஒரு பெரிய எழுத்தாளனாக ஆகிவிட்டதாகக் கற்பனை செய்து பார்ப்பதில் அவனுக்கு நிம்மதியும் தெம்பும் கிடைத்தன.

கடையில் வேலைபார்க்கும் கணக்காயனுக்கும் கேலிப் பொருளாக இருந்த அவனை, கற்பனை ஒன்றுதான் உயர்ந்த இடத்தில் வைத்துத் திருப்திப்படுத்திற்று. கிராமத்திலுள்ளவர்களெல்லாம் தன்னை மிகவும் சாதாரணமாகக் கருதுவதைப்பற்றி அவன் மிகவும் வருந்தினான்.

உலகம் தன்னைக் கவனிக்க வேண்டும், தான் சொல்வதைக் கேட்கவேண்டும் என்னும் ஆசை ஒன்றிருந்தாலும், கிராமத்தின் சிறு துரும்புகூடத் தன்னை அறிந்து கொள்ளாததைப் பற்றி வருந்தினான். அந்த மனிதர்களிடமிருந்து பிரிந்து, அவர்கள் நடமாட்டமே இல்லாத இடத்தில் அமர்ந்திருப்பதின் மூலம், ஓர் உயர்வு மனப்பான்மையை அவன் பெற்றான்.



கூரை பிரிந்துபோன சாயாக்கடையும், கூடை கூடையாகக் காய்கறிகள் வந்து குவியும் சந்தைக் கடையும், பழக்கமான கண்மாய்க் கரையும் வர வர அவனுக்கு வெறுப்பை அளித்தன. அவன் சந்திக்க விரும்பிய இலட்சிய உலகத்திற்கும் அந்தக் கிராமத்திற்கும் துளிக்கூட சம்பந்தமில்லையே என்று அவன் எண்ணினான். அந்திபடும்போது அமைதி மிக்க சூழ்நிலையில் காட்சியளிக்கும் அந்தக் கிராமத்தைவிட்டு விட்டு, ஒருநாள் அவன் வெளியேறினான்.

கையில் ஒரு சிறு பெட்டி. அதில் சாதாரணமான இரண்டு சட்டைகள், வேட்டிகள், சில பழைய புத்தகங்கள், கதை எழுதிய நோட்டுப்புத்தகங்கள், உடைந்துபோன ஒரு பவுண்டன் பேனா. இந்தக் கோலத்தோடு எங்கே போவது என்று திட்டமில்லாமல், வீட்டிலும் சொல்லிக்கொள்ளாமல் அவன் வெளியேறினான்.

ஊருக்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலிருந்த, ஊருணிக் கரைக்கு அவன் வந்தான். அங்கேதான் வெளியூர் பஸ்கள் போகும் பாதை இருந்தது. மதுரையிலிருந்து திருச்சி செல்லும் பஸ்களும், திருச்சியிலிருந்து மதுரை செல்லும் பஸ்களும் அந்தப் பாதையில் உண்டு. எந்த பஸ் முதலில் வருகிறதோ அந்த பஸ்ஸில் ஏறிவிடுவது என அவன் தீர்மானித்துக் கொண்டான். அவனுக்குத் தான் எங்கே போவது என்ற திட்டமில்லையே! ஓர் அரைமணிநேரம் அந்த ஊருணிக் கரையில் உட்கார்ந்திருந்தான்.

வீட்டிலே தாய் தந்தையர் தன்னைத் தேடுவார்களே என்ற பயமும் கவலையும் அவனை வாட்டி வதைத்தன. அவன் கண்கள் கலங்கின. சிறு வயதிலிருந்தே குடும்பத்தை விட்டுப் பிரியாமல், கோழிச்சிறகில் குஞ்சாக அடைபட்டுக் கிடந்த அவன், பெற்றோரைப் பிரிந்து எப்படி இருக்கப் போகிறோம் என்று ஏங்கினான்.

அன்றைய அவனது குடும்பநிலை, அவன் மனத்தை அதிக வேதனைப் படுத்திற்று. பேசாமல் வீட்டுக்கே திரும்பி விடலாம் என்றுகூட எண்ணினான். திரும்பி என்ன

செய்வது ஒரு காலணாப் பயன்கூட அற்றவனாக, குடும்பத்திற்கு மேலும் பாரமாக அவன் இருந்தாகவேண்டும்.

இந்தச் சிந்தனைகளில் அவன் மூழ்கிக்கிடந்தபோது, திடீரென்று மதுரைப் பாதையிலிருந்து பஸ் வருவதைக் கண்டான். படபடக்கும் நெஞ்சோடு கையை நீட்டி பஸ்ஸை நிறுத்தினான். முன் சீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டான். பஸ் புறப்படும்போது திரும்பி, கிராமத்துப் பாதையைப் பார்த்தான். கலங்கிய அவன் கண்கள் மழையே பெய்தன.

இரவில் அவன் வரக் கொஞ்சம் நேரமானாலும் அவன் பெற்றோரின் மனம் பொறுக்காது. கையில் அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு கிராமம் பூராவும் சுற்றி வந்துவிடுவார், அவன் தந்தை. அன்னையோ பையனுக்கென்று சில மாமிச வகைகளைப் பத்திரமாக வைத்திருப்பாள். இதை எண்ணிக்கொண்டபோது, பஸ்ஸிலிருந்தே குதித்துவிடலாமா என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். திருச்சிக்குப் போய் எங்கேயாவது வேலை தேடிக்கொண்டு, குடும்பத்திற்கு நிறையப் பணம் அனுப்பவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டான். அந்த முடிவைச் செய்து கொண்டானோ இல்லையோ, அவன் மனத்தில் கற்பனை பொங்க ஆரம்பித்தது.

அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது போலவும், ஊருக்குப் பணம் அனுப்புவதுபோலவும், அவன் பெற்றோர் அதைப் பெற்றுக்கொள்வதுபோலவும், மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப்படுவது போலவும்—முடிவை ஆரம்பத்திலேயே சிந்தித்துப் பார்த்து அவன் பெருமைப்பட்டான்.

அவன் மனத்தில் புதிய உற்சாகம் பிறந்தது. ஆர்வம் பஸ்ஸைவிட வேகமாக அவனைத் திருச்சிக்கு அழைத்துச் சென்றது. திருச்சியில் இறங்கியதும் எங்கே செல்வது என்று அவன் திட்டமிட்டுக்கொண்டான். பஸ் புதுக்கோட்டைக்கு வந்ததும், கீழே இறங்கிக் காபி சாப்பிட்டான்.

தனியாக வெளியூர் சென்று, தானாக ஒன்றை வாங்கி உண்டு அவனுக்குப் பழக்கமில்லை. சாப்பிட்ட காப்பிக்குத் தானே பணம் கொடுத்தபோது, ஏதோ சம்பாதித்த பணத்திலிருந்து கொடுப்பதுபோன்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.



திருச்சிக்கு வந்தான். சிறிய தகரப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். பரபரப்பான அந்த நகரத்தை அப்போதுதான் அவன் முதன் முறையாகப் பார்க்கிறான்.

கிராமத்தைக் காட்டிலும் நகரம் விசாலமாக இருந்ததைக்கண்டு அவனுக்குப் பயம்கூட ஏற்பட்டது. நகரத்து நாகரிகம் ஆச்சரியமாக இருந்தது.

பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, வேட்டியைத் திருத்திக்கொண்டு, சட்டையின் காலரைக் கொஞ்சம் தூக்கிவிட்டுக்கொண்டு நகரத்தோடு ஒட்டித் தன்னை நாகரிகப் படுத்திக்கொண்டான்.

காலிலே இருந்த பூட்ஸ் பழையதானாலும், அது நகர நாகரிகத்தின் சின்னமல்லவா! அப்படி ஒரு பூட்ஸ் தன் காலில் இருப்பதற்காக அவன் பெருமைப்பட்டான். பெட்டியைத் தூக்கிக்கொண்டு 'நாகரிக'மாக நடந்தான்.

திருச்சி ஜாபர்சா தெருவில் ஒரே ஒருவரை மட்டும் அவனுக்குத் தெரியும். ஆமாம்; திருச்சி நகரிலேயே அந்த ஒருவரைத்தான் அவனுக்குத் தெரியும்! தெரியுமென்றால் நேரில் பார்த்துப் பழகியல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவன் ஒரு கதை எழுதினான். அந்தக் கதையைத் திருச்சி ஜாபர்சா தெருவிலிருந்த பத்திரிகை ஆசிரியருக்கு அவன் அனுப்பி வைத்தான். அவர் அதைக் கொஞ்சம் திருத்தம் செய்து பிரசுரித்து விட்டார். அதனால் அவனுக்கு அவரைத் தெரியும்!

அவர் வீட்டிற்கு அவன் சென்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றார். சாப்பிடச் சொன்னார். அவனுக்கு இதெல்லாம் அதிசயமாக இருந்தது. தன்னைப்பற்றிய நம்பிக்கை அவனுக்கு வளர்ந்தது. அவர் சொன்னதை மறுக்காமல் அவன் சாப்பிட்டான். மறுத்தால் பட்டினியல்லவா கிடக்க நேரிடும்! அவன் கையிலிருந்தது எட்டே அணா. அடுத்த வேளைச் சாப்பாடு எங்கேயோ! அவன் நிம்மதியாகச் சாப்பிட்டான்.

அந்த நண்பர் ஒரு பார்ப்பனர். சமரச நோக்கமுடையவர். அவருடைய அன்னையார் அன்பின் வடிவம். அவரது மனைவியார் அன்பும், பண்பும் நிறைந்தவர். தங்கள் அருகிலேயே அவனை வைத்துச் சாப்பிடச் செய்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும் 'எது விஷயமாகத் திருச்சிக்கு வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார் அவர். ஒரு பெரிய எழுத்தாளனாக ஆவதில், தனக்குள்ள ஆசையை அவன் வெளியிட்டான்.

உடனே அவர், வானொலி நிலையத்திற்கும், இரண்டு பத்திரிகை நிலையங்களுக்கும் சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்தார்.

அதை எடுத்துக்கொண்டு அவன் எல்லா இடங்களுக்கும் ஏறி இறங்கினான். ஆமாம்; ஏறினான், இறங்கினான்; அவ்வளவுதான்! வேலை கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, ''நீயாவது, கதையாவது, எழுதுவதாவது?'' என்றுதான் எல்லோருமே சொன்னார்கள்.

ஒரே ஒருவர் மட்டும் '''கதை' எழுதுவது சரிதான், அதிலேயே வாழ்க்கையை நடத்துவதென்பது தமிழ்நாட்டில் முடியாது; கதை வேண்டுமானால் எழுதிக் கொடுங்கள். பிரசுரிக்கிறோம். காசு கொடுக்க மாட்டோம்,'' என்றார். ''கதை பிரசுரமானால்கூட போதுமே!'' என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. யாராவது இலவசமாகச் சாப்பாடு போட ஒப்புக் கொண்டிருந்தால், அவனும் இலவசமாகவே கதை எழுதித் தந்து கொண்டிருப்பான். அதற்கும் ஆளில்லை. ஆகவே இதற்கும் வழியில்லை.

இரவில் அவன் திரும்ப நண்பரைப் பார்த்தான். ''இதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய நிலைமையும், நன்றாக இல்லை. இருந்தால் எவ்வளவோ செய்ய ஆசை'' என்று அவர் கூறிவிட்டார். பெட்டியை அவர் வீட்டில் வைப்பதற்கு மட்டும் அனுமதி கேட்டுக் கொண்டு, பெட்டியை வைத்துவிட்டு அவன் வெளியேறினான். ரத்தினவேலுத்தேவர் மன்றத்தின் அருகிலிருந்த பூங்காவில் வந்து அமர்ந்தான்.



கவலையும், பயமும் அவனை ஆட்கொள்ளத் துவங்கின. கையிலே நான்கணாவே மிச்சமிருந்தது. என்ன செய்வதென்று திகைத்து யோசித்துக் கொண்டிருந்தான். அதுவரை அவன் சந்தித்த பத்திரிகாசிரியர்கள், அவன் ஓர் எழுத்தாளனாக ஆகவே முடியாது என்று கூறியிருந்தார்கள்.

''எட்டாவதுவரை படித்தவர் எழுத்தாளராக முடியுமா?'' என்றுகூட ஒருவர் கேட்டிருந்தார். ஆனாலும் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. எழுத்தாளராவதற்குப் படிப்புத்தான் தகுதியா? அவன் நம்பவில்லை. படிப்பு வேறு, சிந்தனை வேறு என்பதில் அவனுக்குத் திடமான நம்பிக்கை இருந்தது.

சிந்தனையை ஒழுங்காகச் செயல்படுத்தத்தானே மொழி! அந்த அளவு அவனுக்கு மொழி அறிவு இருந்தது. பயத்தின் வாய்ப்பட்டிருந்த சிந்தனையை மீண்டும் அவன் துணிவுக்குக் கொண்டு போனான். தான் ஓர் எழுத்தாளனாகவும், கவிதை எழுதுபவனாகவும் ஆகியே தீருவது என்று முடிவு கட்டிக் கொண்டான். இரண்டு நாட்கள் பசி, பட்டினியோடு திருச்சி நகரத்தை வலம் வந்தான். திருச்சி அவனுக்குச் சலித்தது. கருணை உள்ளவர்களே திருச்சியில் இல்லை என்பது போல் தோன்றிற்று.

அடுத்த நாளே அவன் சென்னைக்கு ரயிலேறிவிட்டான். 'டிக்கட்' இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்வது தவறு என்பது அவனுக்கும் தெரியும். அவனிடம்தான் பணமில்லையே, அவன் என்ன செய்வான்? ரயிலில் அவனும் ஏறி உட்கார்ந்து கொண்டான். ஒவ்வொரு நிலையத்திலும் வண்டி நிற்கும்போது அவன் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ளும். பரிசோதகர் வந்துவிடுவாரோ என்று மெல்ல மெல்ல எட்டிப் பார்ப்பான். புகைவண்டித்தலைவர் (கார்டு) அந்தப் பக்கம் வந்தாலும் அவன் நெஞ்சம் நடுங்கும். ஆனால் அவனுடைய நல்ல காலம், சென்னை எழும்பூர் வரும் வரை யாரும் அவனைப் பரிசோதிக்கவில்லை. 'பரிசோதகர்கள் மிகவும் நல்லவர்கள்! 'டிக்கட்' இல்லாதவர்களை அவர்கள் தொல்லைப்படுத்துவதில்லை போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

எழும்பூர் நிலையத்தில் இறங்கியாகிவிட்டது. இனி வெளியே போவது எப்படி? அது சுலபமல்ல. வெளியே போக ஒரு வழிதான் உண்டு. அங்கேயும் பரிசோதகர் நிற்பார். அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். தண்டவாளத்து ஓர மாகவே நடந்து, நிலைய வரம்பு கடந்தவுடன் கரையேறி விடலாமா என்று யோசித்தான். அவன் கையில் பெட்டி யிருந்தது. பெட்டி உள்ளவனெல்லாம் பிரயாணி என்பது தான் ரயில் நிலையத்து விதி! பெட்டியோடு நடக்கும்போது எவராவது பிடித்துவிட்டால்? இந்த யோசனை முன் வந்த யோசனைக்கு முடிவு கட்டிற்று.

அது வெள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்ட காலம். அதாவது இறுதிக்காலம். 1943-ன் தொடக்கம். அப்போது போலீஸாருக்குக் கொஞ்சம் அதிகாரமிருந்தது. குடி மக்களுக்கு அவர்களிடம் பயமும் இருந்தது. அவர்களுக்கும் கொஞ்சம் தைரியம் இருந்தது. அந்தக் காலத்தில் அவனுக்கும் போலீஸ் என்றால் கொஞ்சம் நடுக்கம்தான்! ஏதோ அடுத்த ரயிலுக்குக் காத்திருப்பவன்போல, மெது வாகப்போய் ஒரு மூலையில் பெட்டியோடு உட்கார்ந்து கொண்டான் அவன். ஓர் அரை மணி நேரத்திற்குப் பிறகு நிலையம் வெறிச்சோடியது. பரிசோதகர் பழைய 'டிக்கட்டு' மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். அதைக் கவனித்த அவன் கம்பீரமாக நிலையத்தைவிட்டுவெளியேறினான்.

இது சென்னை நகரம். இதுவரை இந்த நகரத்தைப் படங்களிலேதான் பார்த்திருக்கிறான்.

'சாயங்கால நேரத்திலே
சமுத்திரக்கரை ஓரத்திலே
மாயமான கம்பம் ஒண்ணு
மனுசம் போலவே.........'

......பாடுவதை அவன் கேள்விப்பட்டிருக்கிறான். சென்னைத் தெருக்களைப் பார்த்து அவன் பிரமித்தான். மனிதர்கள் அவசர அவசரமாக நடப்பதையும், கார்கள் வெகு வேகமாக ஓடுவதையும், ரிக்ஷாக்கள் துள்ளிக் குதித்துக்கொண்டு செல்வதையும் பார்த்த அவன், சென்னையின் சுறுசுறுப்பை எண்ணி வியந்தான். அப்படியே கால் நடையாகவே வழி



நெடுக ஒவ்வொருவரையும் பாதை விசாரித்துக்கொண்டே பிராட்வேக்கு வந்தான்.

அங்கே அப்போது சிறப்பாக நடந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றான். படபடக்கும் நெஞ்சோடு பெட்டியைத் திறந்து, கதை எழுதிய நோட்டுப் புத்தகம் ஒன்றை எடுத்தான். உள்ளே சென்று ஆசிரியரிடம் நீட்டினான். அப்பொழுதுதான் அவர் ஓங்கிச் சிரித்ததும், உனக்கென்ன தெரியும் என்று கேட்டதும்!

அந்தச் சிரிப்பை அவனால் மறக்க முடியவில்லை. திருச்சி தான் ஒதுக்கித் தள்ளிற்று; சென்னையுமா? அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் பட்டினி கிடந்ததால் தாளமுடியாத பசி. நெடுந்தூரம் நடந்ததால் கால்களில் கடுமையான வலி. அவன் மூளை கிறுகிறுத்தது. எழுத்தாளனாகும் ஆசை மறைந்தது. பிழைத்தால் போதும் என்கின்ற எண்ணம் வளர்ந்தது.

அவனது நெருங்கிய உறவினர் ஒருவர் அதே தெருவில் இருந்தார். அவரைப் போய்ப் பார்க்கலாமென்று அங்கே போனான். உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அவர் கொடுத்த வரவேற்பு 'ஏன் வந்தாய்?' என்ற கேள்வியோடு தொடங்கிற்று. அவன் நன்றாகவே அழுதுவிட்டான். அவர் இரங்குவதாக இல்லை. அவன் சிறு வயதில் சுட்டித் தனங்கள் செய்தவன். யாரையும் எதிர்த்து எதிர்த்துப் பேசிப் பழகியவன். ஆகவே அவனுக்குத் தெரிந்தவர்களில் கருணை காட்டுவோர் குறைவாகவே இருந்தார்கள். அந்த உறவினர் அவனை வெறுத்தவர்களுள் ஒருவர். 'இப்பொழுதே வெளியே போ! இங்கு காலடி எடுத்து வைக்காதே' என்றார். ஒரு வேளை சாப்பாடாவது சாப்பிடச் சொல்லி அனுப்பமாட்டாரா என்று எண்ணினான். அவனது பசியை அவர் அறிய மாட்டார். அறிந்திருந்தால் உணவிட மறுக்கும் அளவுக்குக் கொடியவரல்ல அவர். சத்தம் போட்டுக்கொண்டு கதவைச் சாத்திவிட்டு உள்ளே போய்விட்டார் அவர்.

அந்த வரு[illegible]ால எழுந்தானவ், சோகத்தின் மொத்த வடிவமாகத் தலையில் கையை வைத்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

கொஞ்ச நேரம்தான் அப்படி இருந்தான். அவனது மான உணர்ச்சி குத்திக் குடைந்தது. உடனே எழுந்தான். கையில் பெட்டியைத்தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

சமுதாயத்தில் பண வசதியற்றவனுடைய நிலையை அவன் முழுக்க உணர்ந்தான். காரிலே வருபவர்கள், காரிலே வருபவர்களைத்தான் கட்டித் தழுவுகிறார்கள். மாடியில் நிற்பவன், மாடியில் நிற்பவனோடுதான் சொந்தம் கொண்டாடுகிறான். வெள்ளாடை உடுத்தவன், வெள்ளாடை உடுத்தவனைப் பற்றித்தான் விசாரிக்கிறான். இருப்பவன் வேறு, இல்லாதவன் வேறு, என்பதை நகரத்தின் ஒவ்வொரு தெருவும் அவனுக்கு உணர்த்திற்று. 'வரட்டும், வரட்டும்! நாமும் ஒரு நாளைக்கு வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து விட்டால், இந்தப் பணக்காரர்களைப் பார்ப்போம் ஒரு கை!' என்று எண்ணிக்கொண்டான்.

பிராட்வே திருப்பத்தில் திரும்பி, ஓர் உணவு விடுதிக்கு முன்னால் அவன் நடந்து சென்றபோது, திடீரென்று அவன் தோளிலே ஒரு கை விழுந்தது. திரும்பினான்.

அவனுக்குப் பழக்கமான ஒரு நண்பர் நின்றுகொண்டிருந்தார். 'எங்கே இப்படி பெட்டியும் கையுமாகப் புறப்பட்டாய்?' என்று விசாரித்தார்.

'சும்மா ஏதாவது வேலை பார்க்கலாமென்று வந்தேன்' என்று அவன் கூறினான்.

சந்திரமதியின் தாலி அரிச்சந்திரனுக்குத் தெரிந்த மாதிரி, அவனுடைய பசி அவருக்குத் தெரிந்ததோ என்னவோ, 'காப்பி சாப்பிடலாம், வா!' என்று அழைத்தார்.

அவனுக்கிருந்த பசியில், ஒப்புக்காக மறுக்கக்கூட அவன் தயாராயில்லை. அவரைப் பின் தொடர்ந்தான். சாப்பிட்டான். விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான்.



# சிந்தனை அலைகள்

மாலை நேரம். இது சென்னைக் கடற்கரை. அப்பாடா! எவ்வளவு கூட்டம்! அவன் உடம்பில் இப்போது தெம்பு தளிர்த்தது. கடற்கரையின் உள்வாயில் போய் அமர்ந்தான்! சிந்தனை சிறகடித்துப் பறந்தது.

நகரத்தில் மனிதர்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டுதான் நடக்கிறார்கள். ஆனாலும் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாமலேயே வாழ்கிறார்கள். 'சுயநலம் கூடாது! சுயநலம் கூடாது!' என்று வெகு காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும், சுயநலமே முதலிடம் வகிக்கிறது. கடலை நோக்கி ஒரு குழந்தை வேகமாக ஓடினால், அதன் தாய்தான் பின்னால் ஓடுகிறாள். மற்றவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் நிற்கிறார்கள். கருணை என்பது மனிதனுடைய இதயத்தில் சுயநலத்துக்கு அடுத்த இடத்தைத்தான் வகிக்கிறது. மெருகு கலையாத வண்டியிலிருந்து இறங்குபவன், தன்னை மற்றவர்கள் கவனிப்பதில் பெருமைப்படுகிறான். காலணாவைப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுப்பதானாலும், மற்றவர்கள் கவனிப்பதற்காகவே கொடுக்கிறான்.

ஆசைகளை அடக்க வேண்டுமென்ற உபதேசம் அவனி உள்ளளவும் நிறைவேறாது. ஆசைகளை அடக்கிக்கொண்டு விட்டதாகக் காட்டுக்கு ஓடுகிற வேதாந்தியும், தான் ஆசை

களை அடக்கிக் கொண்டவன் என்பதைப் பிறர் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஏதோ ஓர் உருவத்தில் ஆசை அங்கேயும் ஆதிக்கம் வகிக்கிறது.

கடற்கரையில் தேங்காய், மாங்காய், பட்டாணி, சுண்டல் விற்றுக்கொண்டு வந்தார் ஒருவர். அழகான பட்டுப் பாவாடை கட்டியிருந்த ஒரு குழந்தை, அதைப் பார்த்து விட்டு 'அம்மா! அம்மா! பட்டாணி! பட்டாணி!' என்று கத்திற்று. தன் ஆசையை அம்மாவிடம் குழந்தை தெரிவித்ததும், அந்தக் குழந்தையிடம் ஆசை வைத்திருந்த தகப்பனார், அதற்குப் பட்டாணி வாங்கிக் கொடுத்தார். அந்தப் பட்டாணியை அந்தக் குழந்தை தின்பதை, ஒரு பிச்சைக்காரக் குழந்தை பார்த்து ஆசையோடு கையை நீட்டிற்று. 'சீ! போ, அந்தப் பக்கம்!' என்ற கடுமையான குரல், தகப்பனாரிடமிருந்து வந்தது.

அவன் இதைக் கவனித்தான். இரண்டு குழந்தைகள் ஒரு பொருளின்மீது ஆசை வைக்கின்றன. ஒன்று அதைப் பெற்று விடுகிறது; மற்றொன்று விரட்டப்படுகிறது. அவனுக்குச் சமுதாய அடிப்படை புரிந்தது. முதலாளித்துவத்தைப் பற்றியும், பொதுவுடைமையைப் பற்றியும் தத்துவ முறைப்படி அறிந்து கொண்டவனல்ல அவன். ஆனால், கண்முன்னாலே சிறிய வடிவத்தில் அதை அவன் கண்டான். இதுதான் உலகமா? இரு வேறு கூறுகள் தவிர்க்க முடியாததா? மேடும் பள்ளமும் இருந்துதான் தீருமா?

கிராமத்தில் அவன் வண்டிகளை நிறையப் பார்த்திருக்கிறான். அவன் தந்தையே பூரணி மாடுகள் பூட்டுகிற பெரிய வில்வண்டி வைத்திருந்தார். அந்த வண்டியின் இரண்டு சக்கரங்களும் ஒரே அளவில் இருந்தன. ஒரே அளவில் இருந்தால்தான், வண்டி ஒழுங்காக ஓடும்.

ஆனால் உலக வண்டியின் இரண்டு சக்கரங்களும் ஒன்றிற்கொன்று சிறிதுகூட தொடர்பற்ற நிலையில் இருக்கின்றன. உலகம் என்னவோ ஓடிக்கொண்டுதான் இருக்கிறது! இந்தப் புதிரை யார்தான் தீர்த்து வைக்க முடியும்!

அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில், ஓர் இளைஞனும், இளம் பெண் ஒருத்தியும் அருகருகே அமர்ந்



திருந்தார்கள். அவர்கள் கணவன் மனைவி உறவு உடையவர்கள் அல்ல. இளம் பெண்ணின் கையிலிருந்த புத்தகக்கட்டு, இதற்குச் சான்று கூறியது. அவள் ஒரு கல்லூரி மாணவி. அவன் யாரோ! இருவரும் உற்சாகமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் ஏதாவது சொல்லுவான். அவன், அவள் தொடையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டுச் சிரிப்பான். ஒவ்வொரு தடவையும் இப்படியே செய்தான். அதில் என்னவோ அவனுக்கு ஓர் ஆசை! அவளும் அதை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு, மேலும் மேலும் பேசுவாள்...

இந்தக் காதலர்களை அவன் கவனித்தான். இவர்களுக்குக் கவலையே இல்லையோ! எவ்வளவு மகிழ்கிறார்கள்! கவலை இருக்கிறதோ, இல்லையோ, பசி இல்லை! அது இருந்தால் காதல் இவ்வளவு உற்சாகமாக இருக்காது! அந்தக் காதலர்களிடத்தில் அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. அவனும் காதலித்திருக்கிறான். ஆனால் இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்ததில்லை. நாடகம் கண்களிலேயே தோன்றி, கண்களிலேயே முடிந்தது. அவள் வேறொருவனுக்குக் கட்டப்பட்டுவிட்டாள். கண்களோடு நிற்பதுதான் காதல் தத்துவம் என்று அவன் கருதி இருந்தான். ஆனால் கடற்கரையில் நடந்த காதல், அருகருகே இருந்து செயல்பட்டது. அவனுக்குப் புதுமையாகவும் பொறாமையாகவும் இருந்தது.

அவர்களைப் பார்வையிலிருந்து விலக்கிவிட அவன் விரும்பினான். எழுந்து போய் கடல் அலை மோதும் இடத்திலேயே அமர்ந்தான்.

அவன் அமர்ந்திருந்த இடத்தின் இருமருங்கிலும், ஏராளமான படகுகள், தோணிகள், கட்டு மரங்கள் கிடந்தன. அவை அவனது எண்ணத்தை ஈர்த்தன.

ஒரு கட்டுமரத்தைத் தொட்டுப் பார்த்தான். புரட்டியும் பார்த்தான். இதில் ஏறிக்கொண்டா பரதவர்கள் கடலில் வெகு தூரம் போகிறார்கள்! உயிருக்கு உறுதி இல்லாமலா அவர்களது தினசரி வாழ்வு நடக்கிறது! ஒவ்வொருவருக்கும் எத்தனை குழந்தைகளோ! அவற்றைக் காப்பாற்றவும், வயிற்றை நிரப்பவும் இந்தக் கடினமான தொழிலை மேற்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. கரையில் நின்று பார்க்

கும்போதே, கடல் எவ்வளவு பயங்கரமாகக் காட்சியளிக் கிறது! இந்தத் தமிழன், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னு லேயே, கப்பலோட்டினுன் என்பது பொய்யல்ல. துணிந்து அவன் கடலிலேயே பல காலம் மிதந்திருக்கிறுன். சிங்களம், புட்பகம், சாவகம் ஆகிய தீவுகள் பலவும் கண்டு வந்திருக் கிறுன். இந்தத் துணிவு அவனுக்கு எப்படி வந்தது? வேறென்றுமில்லை. உயிரையும் வாழ்வையும் பற்றி அவன் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறுன்.

சாவை வாழ்விலேயே கண்டிருக்கிறுன். விட்டுவிடப் போகுது உயிர், விட்டவுடனே உடலைச்சுட்டுவிடப்போகிறுர் கற்றத்தார் என்ற மெய்ஞ்ஞானத்தை முழுமைபெற உணர்ந் திருக்கிறுன். அவனுக்குத் துணிவு வந்துவிட்டது. பரதவர் களும் அப்படித்தானே!

ஆனுல் ஒரு வேறுபாடு. பழந்தமிழன் புகழுக்காகத் துணிந்தான். புதுத்தமிழன் வயிற்றுக்காகத் துணிந்தான். சாவைப் பற்றி பயம், ஓரளவாவது பழந்தமிழனுக்கு இருந் திருக்கலாம்! பரதவத் தோழனுக்கு அது வராது! கட்டுமரம் கட்டிக் கடலேறிச் சென்ருல், செத்துவிடுவோமே என்று பயந்து வீட்டிலேயே அவன் இருந்தால், பட்டினி அந்தச் சாவை வீட்டிலேயே கொண்டுவந்து விடும்! துணிந்து இறங் காமல் வேறு என்ன செய்வது.

கடல் அலை, படபடவென்று கரையில் மோதுவதை அவன் கண்டான். ஒவ்வொரு தடவையும் உள்ளே போய்த் திரும்புகிற அலை, எதையாவது கொண்டு வந்து வெளியில் போடுகிறது. நண்டுகள், ஒருவகை நத்தைகள், சிலவகைக் கிளிஞ்சல்கள், சங்குகள், தெறிக்கப்பட்டு விழுந்த சில கட்டைகள்—எதையாவது கரைக்குக் கொண்டுவந்து சேர்க் கிறது.

அறிவு என்பது என்ன? இதுதான்! படிக்கின்றபொழுது உள்ளே போய், ஒரு புதுப்பொருளை வெளியே கொண்டு வந்து தள்ளுகிறது. அவ்வளவுதான்!

நல்ல நிலவொளி, வெண்ணிற நுரைகள் பொங்கிப் பொங்கிக் கரைக்கு வந்து சேருவதை, அவன் கவனித்துக் கொண்டே இருந்தான். பத்துப்பதினைந்து அடி உயரம்கூட



அலை மேலே எழும்பிற்று. இவ்வளவு பெரிய அலைகளைவா, சிறிய தோணிகள் கிழித்துக்கொண்டு செல்கின்றன! இல்லை! கடலின் கரைப்பகுதியைக் காட்டிலும் உட்பகுதியில் அலை மிகவும் தாழ்ந்திருக்கும் என அவன் படித்திருக்கிறுன். ஆழம் அதிகமிருந்தால் அலை அதிகம் சுருளாது. ஆமாம், நிறையப் படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் உள்ள பேதம்தான்!

ஓர் அலை மூலம் மிகப் பெரிய நண்டு ஒன்று கரையில் வந்து விழுந்தது. பயந்து அவன் எழுந்து நின்றுவிட்டான். நண்டு கரையிலேயே ஓடும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனுல், அது மீண்டும் கடலுக்குள்ளேயே ஓடிற்று. கடல் அதை ஏற்றுக்கொண்டது.

அவனுக்கு ஒரு நம்பிக்கை தோன்றிற்று. சமுதாயம் நம்மை வெளியில் தூக்கி எறிந்தாலும் நாம் மீண்டும் சமு தாயத்திற்குள்ளேயே ஒடித்தான் இடம்பிடிக்க வேண்டும். வெறுப்பினுல் அல்ல அலை நண்டை வெளியே தள்ளியது. நண்டு சரியாக ஊன்றிக்கொள்ளாததனுலேதான், வெளியில் வந்து விழுந்தது. சமுதாயத்தில், ஓர் உயர்ந்த இடத்தில் காலூன்றி நின்று விடுவது என அவன் முடிவுகட்டிக் கொண்டான்.

வரவறியாமல் செலவிடுபவன் பொருள்போல கடற் கரைக்கு வந்திருந்த கூட்டம் கரைந்தது. ஒன்பது மணிக் கெல்லாம் கூட்டம் முழுதும் மறைந்தது.

அந்தச் 'சிந்தனையாளன்' மட்டும், அங்கேயே இருந் தான். கடல் ஒலியைத் தவிர, வேறு ஒலி இல்லை. அவன் மெதுவாக எழுந்து, பாதையை ஒட்டிய மணற்பகுதிக்கு வந்தான். 'மெரிஞு'வின் உள்வாய் மின்சார விளக்குக்குச் சிறிது தூரத்தில் உட்கார்ந்து, கடல் மணலைத் தோண்டிப் படுக்கை தயாரித்துக் கொண்டான். பிணங்கள் மணலைத் தோண்டித் தாங்களே உள்ளே விழுவதில்லை. உயிரோடிருப் பவன் அப்படிச் செய்து பார்க்க முடிகிறது! தோண்டிய பிறகு, அந்தப் பள்ளத்தில் படுத்துக்கொண்டு, தலையணை யாகப் பெட்டியைப் பயன்படுத்திக்கொண்டான்.

பசி இல்லை இப்போது! பயம் தோன்றிற்று. பாசம் ஆறுகப் பெருகிற்று தாய் தந்தையர் நினைவு அவனை அலைக்

கழித்தது. தாய்ப்பாசம், பிள்ளைப்பாசம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, தெரியாமலா? பல ஆண்டுகாலம் தாயின் அருகிலேயே இருந்துவிட்டுப் பிரிந்திருப்பவனுக்குத் தான் அந்த வேதனை தெரியும். அவர்கள் எப்படித் துடிக் கிறார்களோ, என்று எண்ணி எண்ணித் துடித்தான். பிரிந்த திலிருந்து கடிதமே எழுதாததால், அவன் மனம் படாத பாடுபட்டது. உடனே பெட்டியைத் தூக்கி வைத்துக் கொண்டு கடிதம் எழுத ஆரம்பித்தான்.

தன்னைப்பற்றி அவர்கள் கவலையே படாமலிருக்க வேண்டும், என்பதையே கடிதத்தின் முழுக் கொள்கையாக வைத்துக் கொண்டான். வேலை கிடைப்பதற்கான ஒரு வழி யும் இல்லாத அந்த நிலையில், 'நாளையே வேலை கிடைத்து விடும்' என்று எழுதினான். கடிதத்தைப் படித்து, பெற்றோர் மகிழவேண்டும் என்பதே அவனது முக்கிய நோக்கமாக இருந்தது.

எழுதி முடித்த கடிதத்தை, மீண்டும் அவன் பெட்டிக் குள்ளேதான் வைத்தான். என்றாலும், அது ஏதோ பெற்றோர் கைக்குக் கிடைத்து, அவர்கள் மகிழ்வது போன்ற ஓர் எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அவன் மீண்டும் குழியி லேயே சாய்ந்தான். கண்களை மூடினான். எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளில் ஆழ்ந்தான்.

அந்தக் கனவு, அவனை ஒரு மாளிகையில் வைத்திருக்கும் நேரத்தில், நிகழ்காலம் ஒரு தடியின் உருவத்தில் அவன் தலையில் தட்டிற்று. விழித்துப் பார்த்தான். ஒரு போலீஸ் காரர் நின்று கொண்டிருந்தார்.



# வேலை கிடைத்தது

"ஏய்! யார் நீ?" போலீஸ்காரர் அதட்டும் குரலில் கேட் டார். அவன் மௌனமாக இருந்தான். மீண்டும் கடுமை யான குரலில் அதே கேள்வியைக் கேட்டார் போலீஸ்காரர்.

யார் அவன்?

ஓர் எதிர்கால எழுத்தாளன். உலகக் கடலிலே நீந்தி உச்ச இடத்தில் கால் ஊன்ற விழையும் ஒருவன். அவனைப் பற்றி அவனுக்கே அதிகமாக எண்ணம். ஆனால், அவற்றைப் போலீஸ்காரரிடம் சொல்லிக்கொண்டிருக்கவா முடியும்? தன் பெயரை மட்டும் சொன்னான்.

"இங்கே உனக்கு என்ன வேலை?"

"வேலை தேடுவதே வேலை!"

"சொந்த ஊர் எது?"

"இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கிராமம்!"

"மதராசுக்கு எதற்காக வந்தாய்?"

"வேலை தேடி வந்தேன்!"

"கடற்கரையில் படுத்துத் தூங்கக் கூடாது. தெரியுமா!"

"தெரியாது!"

"எழுந்திரி! எழுந்திரி! வேறு எங்கேயாவது போய்த் தூங்கு!"

"எனக்குத் தெரிந்தவர்கள் இங்கு யாருமில்லை!"

"யாரும் இல்லாதப்போ, ஏன் வந்தே? ஊரில இருக்க முடியாம கொழுப்புப் புடுச்சு வந்துட்றது, சுத்தரது!

பலசரக்குக் கடையானால் அரிசி அளக்கலாம். துணிக்கடையானால் முழம் போடலாம். கசாப்புக் கடையானால் கறி வெட்டலாம். சிகை அலங்காரக் கடையானால் முடிவெட்டலாம். ஏதாவது ஒரு வேலை தேடிவிட அவன் முடிவுகட்டிக் கொண்டான்.

பைக்ராப்ட்ஸ் ரோடு வழியாக நடந்தான். துணிந்து ஓர் உணவு விடுதியில் ஏறி வேலை கேட்டுவிட்டான். விடுதி முதலாளி அவனை ஏற இறங்கப் பார்த்தார். தான் இன்ன சமூகத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னதும், அவர் 'ஆ' என்று வாயைப் பிளந்தார். அந்த சமூகத்தைச் சேர்ந்தவனா உணவு விடுதியில் வேலை கேட்கிறான் என்பது அந்த வாய்த் திறப்பில் எழுந்த கேள்விக்குறி!

அவன் பிறந்த சமூகம், ஆள் தொகையில் சிறியது என்றாலும், பணக்காரர்களை அதிகமாகக் கொண்டது. அந்த சமூகத்தில் ஏழைகளே இருக்கமுடியாது என்றுதான் வெளி உலகம் நம்பியிருந்தது. அந்த வெளி உலகத்தில் அவர் ஓர் உறுப்பினர்!

சில நேரங்களில் வருகிற தொல்லை இதுதான். இருப்பவன் என்று கருதப்பட்டு இல்லாதவனாக வாழ்பவன திண்டாட நேருகிறது. இல்லாதவன் என்றே முத்திரை போடப்பட்டால்தான் ஏதாவது நிம்மதி கிடைக்கிறது.

அரசாங்க நடைமுறையிலேகூடப் பார்க்கிறோம், பின் தங்கிய வகுப்பினர் என்று சிலருக்கு முத்திரை போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்களில் சொந்த வசதி அதிகம் படைத்தவர்கள்கூட, அரசாங்கத்தின் இந்த உதவியை அனுபவிக்க முடிகிறது.

அரசினரால் 'முன் போகும்' வகுப்பினர் என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அவர்களில் இருக்கும் பின்தங்கியவர்கள் பாடு ஆபத்துதான். அவர்களுக்குச் சொந்த வசதியும் கிடையாது. அரசாங்க வசதியும் கிடையாது.

அந்தப் பணக்கார வம்சத்து ஏழையிடம் பரிதாபமாகப் பேசிக் கொடுத்தார் விடுதி முதலாளி. இறுதியில், ''உங்களையெல்லாம் இங்கே வேலை பார்க்கச் சொல்ல என் மனது நடுங்குது'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

இன்னும் அந்த முதலாளி இருக்கிறார். அவரைப் பார்க்கும் போதெல்லாம், அவனுக்குப் பழைய ஞாபகம் எழுந்து கொண்டிருக்கிறது.

அடுத்தாற்போல் அவன் கவனித்தது ஒரு சிகை அலங்காரக் கடையை. அந்தக் கடையில் அவனுக்கு இரண்டு வகையான தேவைகள். ஒன்று அவனே முடிவெட்டிக் கொள்ள வேண்டும். மற்றொன்று யாருக்காவது முடி வெட்டுகிற வேலை அவனுக்குக் கிடைக்க வேண்டும். இதில் முன்னதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. பின்னதுதான் பெருந் தேவை. முடி வெட்டுவதிலோ, முகம் வழிப்பதிலோ அவனுக்குப் பழக்கம் இல்லை. ஆனாலும் யார் தலையிலாவது பழகிக் கொள்ளலாமென்ற நம்பிக்கை இருந்தது.

எவனாவது ஒரு பட்டிக்காட்டான் வராமலா போவான்? அவனுக்கெல்லாம் முடியை இப்படி இப்படி வெட்டிக் கொள்ள வேண்டும் என்ற திட்டம் ஒன்றும் கிடையாது. எப்படி வெட்டினாலும் சகித்துக்கொள்வான். அதனால்தான் அந்த வருங்கால எழுத்தாளன், அந்த வேலையாவது கிடைத்தால் போதுமென்று தீர்மானித்தான். படிக்கட்டுகளில் ஏறி. ''வேலை இருக்கிறதா?'' என்று கேட்டுவிட்டான். உணவு விடுதியில் நடந்ததே இங்கும் நடந்தது. அந்தப் பரிதாபத்திற்குரியவன் வெளியேறினான்.

அங்கிருந்து பெல்ஸ் ரோட்டில் திரும்பி நடந்தான். அவனுக்குத் தெரிந்த சிலபேர், சென்னையில் பட்டாளத்துக்குச் சட்டை தைக்கும் 'காண்ட்ராக்ட்' எடுத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் பெல்ஸ் ரோட்டில் ஒரு விடுதி பிடித்திருந்தார்கள். அந்த ஞாபகம் வந்ததும், அவர்கள் தங்கியிருக்கும் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தான் அவன்.

அவர்கள் எல்லோருமே அவன் போன நேரத்தில் அங்கே இருந்தார்கள். அவர்களில் அவனை வரவேற்பவர்கள் கூடச் சிலர் இருந்தார்கள். அப்பாடா! ஒரு பெரும் பிரச்சினை தீர்ந்தது. தங்குவதற்கு அவனுக்கு வீடு கிடைத்துவிட்டது. அதோடு வேலையும் கிடைத்துவிட்டது. அந்த வேலைக்குக்

கூலி, வேளா வேளைக்குச் சாப்பாடு; அவ்வளவுதான்!

அவன் அன்றிருந்த நிலைமைக்கு அது போதாதா? ஏற்றுக் கொண்டு விட்டான். என்ன வேலை? தினசரி ஜாம்பஜார் மார்க்கெட்டுக்குப் போய் காய்கறி வாங்கிவர வேண்டும், அவ்வளவுதான்!

அவன் தன் கடமையைச் செய்ய ஆரம்பித்தான். இரண்டொரு நாள்வரை என்ன விலைக்குக் காய்கறி வாங்கினானோ, அதே விலைப்படி கணக்குக் கொடுத்து வந்தான். அதற்குப் பிறகு அவனது கைச்செலவுக்குக் கொஞ்சம் காசு தேவைப் பட்டது. தேவைப்பட்டவன் திருடுவதில் தவறில்லை என்பது அவனது அப்போதைய ஏழைமை வகுத்த சித்தாந்தம். நாலணா முள்ளங்கியை ஐந்தணா ஆக்கினான். ஓரணா கீரை தானாகவே ஒன்றரை அணா ஆயிற்று. இப்படி எல்லாக் காய்கறிகளும் அவனுக்காகத் தங்கள் விலையை உயர்த்திக் கொண்டன. இதன் மூலம் அவனுக்கு தினசரி எட்டணாவுக்குக் குறையாமல் கிடைத்து வந்தது. இன்றைக்கும் பெல்ஸ் ரோட்டிலுள்ள அந்த வீட்டைப் பார்க்கும்போதெல்லாம், அவனுக்கு அந்த ஞாபகம் வருகிறது.

தினசரி மாலை நேரங்களில் கடற்கரைக்குப் போக அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. படம் பார்க்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த வாழ்க்கையின் மூலம், இரண்டொரு மாதங்களை வழியனுப்பி வைத்தான். இன்றைய வாலிபர்களைப் போலவே, அவனுக்கும் அன்று ஓர் ஆசை திடீரென்று எழுந்தது. திரைப்படங்களில் நடித்தாலென்ன? என்று ஒரு கேள்வியைத் தனக்குத்தானே, போட்டுக்கொண்டான்.

தன் பெயரை 'சந்திரமோகன்' என்று மாற்றிக்கொண்டான். அப்போது அடையாறிலிருந்து, இப்போது 'பரகதி' யாகிவிட்ட ஒரு படப்பிடிப்பு நிலையத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டான். அவர்கள் பதில் எழுதுவதில் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். 'வேலை இல்லை' என்று உடனேயே பதில் எழுதி விட்டார்கள்.

பதில் கிடைத்தபோது அவன் வருந்தினான் என்றாலும், தான் ஒரு நடிகனாகிவிட முடியும் என்கிற நம்பிக்கையை மட்டும் இழந்து விடவில்லை.



# நினைக்காத உறவு

இந்த நேரத்தில்தான் பதினாறு வயது நிரம்பாத அவனுக்கு, ஒரு புதுமையான அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவத்தை உண்டாக்கித் தந்தது, அன்று இருந்த டிராம் வண்டி. ராயப்பேட்டையில் அந்த டிராம் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். அவன் எதிரிலே ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். இன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துவிட்ட அந்தப் பெண்ணின் பெயர் எமிலி. கிருத்துவ வகுப்பைச் சார்ந்தவள். அவள் கையில் 'குவண்டின்டர் வார்டு' என்ற ஆங்கிலப் புத்தகம் வைத்திருந்தாள். கழுத்துச் சங்கிலியில் சிலுவை மின்னிக் கொண்டிருந்தது. சிறிது கூட கள்ளம் கபடம் கலவாத தெளிந்த முகம். நீலநிறச் சேலையும், வெண்ணிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். இடது கை விரலில் ஒரு சிலுவை மோதிரம் அணிந்திருந்தாள். அந்தப் பரிதாபத்துக்குரிய வாலிபனை, அவள் மிகவும் அனுதாபத்தோடு பார்த்தாள் அவனும் அவளைப் பார்த்தான். அவன் அவளிடம் கேட்கவேண்டியது எதுவும் இல்லை. ஆனால் அவளிடம் ஏதோ கேட்கவிரும்பியவள்போல அவள் காணப் பட்டாள். அவளது பார்வையில் அந்தப்பொருள் தெரிந்தது. ஏதோ பேசப் போகிறாள் என்று எதிர்பார்த்து அவன் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது நடந்தது. அவள் கேட்டாள்:

"உங்களுக்கு எந்த ஊர்?"

அவன் சொன்னான்!

"இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கிராமம்."

''உங்கள் பெயர்?''

அவன் தன் பெயரைச் சொன்னான்.

''இங்கே எங்கே இருக்கிறீர்கள்?''

அவன் தான் இருக்குமிடத்தைச் சொன்னான்.

புதிய அறிமுகம். இதற்குமேல் அவள் கேட்க வேண்டியது என்ன இருக்கிறது? ஆனாலும் அவள் மேலும் பேச விழைந்தாள். அதை அவன் துவக்கி வைத்தான். அவளது பெயர் எமிலி என்பதையும் ராணிமேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும், சொந்த ஊர் காரைக்கால் என்பதையும் பேச்சுக் கொடுத்துத் தெரிந்து கொண்டான்.

இந்த நிலையில், ராணி மேரி கல்லூரியின் விடுதியினருகில் நான்கு பாதை சந்திப்பில், டிராம் வண்டி நின்றது. தான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது என்பதைக் கூறியபடி, ''நீங்களும் வாருங்களேன்''—என்பதுபோல் அவள் அவனைப் பார்த்தாள். இந்த அழைப்புத் தோற்றம் அவனுக்குப் புதுமையாக இருந்தது.

அவனும் இறங்கி விட்டான். எமிலி,புத்தகத்தை விடுதிக்குள் வைத்துவிட்டுத் திரும்பி வந்தாள். இருவரும் எட்வர்டு எலியட்ஸ் ரோட்டிலேயே நேராக, நடந்து போனார்கள்.

நடக்க நடக்க, ஏதோ வெகு காலம் நெருங்கிப் பழகியவர்கள் போன்ற பாச உணர்வு அவர்களுக்குள் ஏற்பட்டது. ஆம்; பாச உணர்வுதான். அதைக் காதல் உணர்வு என்று அவர்கள் இருவருமே கருதவில்லை. கடற்கரை மணலில் போய் இருவரும் அமர்ந்தார்கள்.

கதைகளில் நடக்கும் திடீர் நிகழ்ச்சிகள் வாழ்க்கைக்கு ஒத்து வராதவை என்றுதான் அன்றுவரை அவன் எண்ணியிருந்தான்.

திடீரென்று ஒரு பெண்ணைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கும் நிலையை எண்ணிப் பார்த்தபோது, அவனுக்கு ஆச்சரியம் பிறந்தது. ஓர் உற்சாகமான உணர்ச்சியோடு அவளோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவனிடத்திலே பேச வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு ஏன் ஏற்பட்டது? காரணத்தை அவள் விளக்கினாள்.

உடன் பிறந்த தமையன் ஒருவன் இருந்தானாம் அவளுக்கு. இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இறந்துவிட்டானாம். அவனைப் போலவே அந்த எழுத்தாளன் இருந்ததால் அவனுடன் பேச்சுக் கொடுக்க விரும்பினாளாம். தன் கதையை முழுக்க அவள் அவனிடம் சொன்னாள்.



இளம் வயதில் கருகிப்போன மலர் அவள். வாழ்க்கையின் இன்பங்களைச் சுவைக்கவேண்டிய கட்டத்தில் வளமிழந்து போனவள். பதினைந்தாவது வயதில் பெரியவளான அவளுக்கு, பதினாறாவது வயதில் மணம் முடித்து வைத்தார்களாம்! சரியாக ஒன்பது மாதங்களில் கணவன் இறந்துவிட்டானாம். அந்த வேதனை தாங்க முடியாமல், இரண்டாண்டு காலம் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாளாம்! அதன் பிறகுகூட மறுமண நினைவு அவளுக்கு ஏற்படவில்லையாம். தாய் தந்தை அற்ற அவள், தன் அண்ணனின் துணையிலே இருந்தாளாம். அண்ணி கொடுமைக்காரியாக இருக்கவே, அங்கிருந்து வெளியேற அவள் விரும்பினாளாம். அண்ணன் தன் உறவினர் ஒருவர் உதவியின் மூலம் அவளைச் சென்னைக்கு அனுப்பி கல்லூரியில் சேர்த்தாராம்.

அவள் தன் கதையைச் சொல்லிக்கொண்டு வரும்போதே அடிக்கடி கண்ணீர் வடித்தாள். அவனிடமிருந்து அனுதாப வார்த்தைகளை எதிர்பார்த்தாள். துன்பங்களைப் பிறரிடம் சொன்னால் மனத்துக்கு ஆறுதல் கிடைக்கிறது என்றாலும், கேட்பவர்களிலே கேலி செய்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

அவன் கேலி செய்யக் கூடியவன் அல்ல என்பதை உணர்ந்தே தன் இதயத்தைத் திறந்து பேசினாள் அவள்.

அவன் அவளைத் தேற்றினான். வேதாந்தம் பேசக் கூடிய வயது அவனுக்கில்லை. ஆனாலும் அவன் வேதாந்தம் பேசினான். மிகுந்த அன்பு பாராட்டினான்.

பிறகு அவர்கள் பிரிந்தார்கள். அதன் பிறகு அவனை அடிக்கடி சந்திக்கிற வாய்ப்பை அவள் ஏற்படுத்திக்கொண்டாள். அவனுக்காக அவள் தினசரி கடற்கரையில் வந்து காத்திருப்பாள். சந்திப்பார்கள்; பேசுவார்கள். சா

PUDUKKOTTAI.

திக்க முடியவில்லை என்றால் சஞ்சலப்படுவார்கள். ஆனாலும் அது காதலாக இல்லை.

அவன் மிகவும் நல்லவன் என்று அவள் நினைத்தாள். அவள் மிகவும் அன்புள்ளம் கொண்டவள் என்று அவன் நினைத்தான்.

ரகசியங்களைச் சிலரிடந்தானே சொல்ல முடிகிறது! இருவரும் ஒருவருக்கொருவர் ரகசியங்களை வாங்கிக்கொள்ளும் கருவிகளாக அமைந்தார்கள்.

இந்தப் புதிய பாசத்தில் ஒரு விநோத உணர்ச்சி இருந்தது. என்றாலும் அவர்கள் ஒருவரையொருவர் காப்பாற்றக் கூடிய நிலையிலே இல்லை. பெல்ஸ் ரோடிலிருந்து மூன்று மைல் தூரம் ஐ. ஜி. ஆபீஸ் கடற்கரைக்கு அவள் நடந்தே வருவாள். "நடந்தா வந்தீர்கள்! ஐயோ கால்கள் வலிக்குமே!" என்று அவன் வருந்துவான்.

தன் துயரத்தைப் பகிர்ந்து கொள்ள இன்னொருவர் இருந்தால் மனத்துக்கு ஆறுதல் கிடைக்கிறது. அதுவும் அவள் பெண்ணாக இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது! ஆதாரமில்லாமல் எதுவும் நிற்பதில்லை. எதன் துணையுமின்றித் தனித்தியங்கும் பொருள்களே இல்லை. ஓர் அணுவும் இன்னோர் அணுவின் துணையில்தான் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பதால்தான் உலகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஏற்படும் குழப்பங்கள் சமாளிக்கப்படுகின்றன. அவளும், அவனும் ஒருவருக்கொருவர் ஆதாரமானார்கள். இரண்டு அனாதைகள் அன்புள்ளத்தோடு கூட்டுச்சேரும் நிலைதான் அது.

அவள், காய்கறி வாங்கிய வகையில் மிச்சம் பிடித்த காசைப் பத்திரமாகக் கடற்கரைக்குக் கொண்டு வருவாள். வறுகடலையும், முறுக்கும் அவனுக்கு வாங்கித் தருவாள். அவை மிகச் சாதாரணமான பொருள்கள்தான். ஆனால் அவள் தருகிறாள் என்பதாலே அவனுக்கொரு திருப்தி.

ஒருநாள் இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, அவளுடைய கல்லூரித் தோழிகள் சிலபேர் அங்கே வந்து விட்டார்கள். எதைப்பற்றிப் பேசினாலும், ஆணும்



பெண்ணும் தனியாக இருந்து பேசினால் அது காதல் என்று தானே உலகம் முடிவு கட்டுகிறது.

அந்தத் தோழிகள், எமிலிக்கு அவன் மீது காதல் பிறந்து விட்டதாகக் கருதினார்கள். தூரத்திலிருந்தே அவர்கள் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். அவள் அவர்களை அருகில் அழைத்து உட்காரவைத்துக் கொண்டாள். அவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள். அப்போது அவன் மிரண்டே போய்விட்டான். பட்டினத்துக் கடற்கரையில், பத்துப் பெண்களுக்கு மத்தியில் தான் உட்கார்ந்து பேசுவோம் என்று சிந்திக்கக்கூட இல்லை அவன்.

அவர்கள் எல்லோருமே அவனை ஒரு குழந்தை மாதிரி கருதினார்கள். அதற்குப் பிறகு அடுத்தடுத்த நாட்களில் அவள்கூட இரண்டொரு தோழிகளும் வர ஆரம்பித்தார்கள். அவனைச் சந்திப்பதிலும், பேசுவதிலும் அதிக அக்கறை காட்டி அடிக்கடி கடற்கரைக்கு வர ஆரம்பித்ததால் அவனுக்கு இருந்த ஒரே உத்தியோகமும் போய்விட்டது.

அவனது உறவினர் திருவெற்றியூரிலிருந்த அஜாக்ஸ் தொழிற்சாலையில் அவனை ஒரு குமாஸ்தாவாகச் சேர்த்து விட்டார். சாப்பாடு போட்டு மாதம் இருபது ரூபாய் சம்பளம். அதை வாரத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் கொடுப்பார்கள். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை அந்த ஐந்து ரூபாய் கிடைக்கும். அதை வாங்கிக்கொண்டு அவன் சென்னைக்கு வந்து விடுவான். ஞாயிற்றுக்கிழமை சென்னை நகரில் சுற்றுவான். எமிலியையும், தோழிகளையும் சந்திப்பான். திங்கட்கிழமை காலை திருவெற்றியூருக்குத் திரும்பி விடுவான்.

திருவெற்றியூரிலேதான் பட்டணத்தார் சமாதி இருக்கிறது அதுவும் அஜாக்ஸ் தொழிற்சாலைக்குச் சிறிது தூரத்தில் இருக்கிறது. ஒரே வெண்மணற்பாங்காக இருந்தஅந்தப் பூமியில் சிறிய, பழைய சமாதிக் கட்டிடம் அமைந்திருந்தது.

வேலை முடிந்ததும், மாலை நேரங்களில், அந்தச் சமாதி அருகில் அவன் வந்து அமருவான். சிந்திப்பான்; பழக்கமான கற்பனையில் பறப்பான். இருட்டியதும் திரும்பி விடுவான். சொல்லப்போனால் திருவெற்றியூர்தான் அவன் எழுத்தாளனாவதற்கான சூழ்நிலையை வளர்த்தது.

இரண்டு வாரங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னைக்கு வராமலே அவன் இருந்தான். காரணம் எதுவுமில்லை. வாரக் கடைசியில் கிடைக்கும் ஐந்து ரூபாயை கடைகளுக்குக் கொடுத்துப் பாக்கியைத் தீர்த்ததால் கையில் பணமில்லை. அவ்வளவுதான்.

மூன்ருவது ஞாயிற்றுக்கிழமை அவன் சென்னை திரும்பிய போது ஒரு பெரிய அதிர்ச்சி அவனுக்காகக் காத்திருந்தது.





அஜாக்ஸ் கம்பெனியின் தலைமை நிலையம் சென்னையில் இருந்தது. அதன் உரிமையாளரும் சென்னையிலேயே இருந் தார். வாராவாரம் சென்னைக்கு வரும் அந்த 'எழுத்தாளன்' அவரைப் போய்ப் பார்ப்பான். பார்க்கும் போதெல்லாம் தன்னைச் சென்னை அலுவலகத்திற்கு மாற்றிக் கொள்ளும்படி கேட்பான். சென்னையின் இனிய சூழ்நிலையிலேயே தினமும் வாழ்க்கை நடத்த அவன் விரும்பினுன். அவன் வாராவாரம் தன்னைச் சந்திப்பதைத் தொல்லையாகக் கருதினுர் அந்த உரிமையாளர். மூன்ருவது ஞாயிற்றுச்கிழமை அவரை அவன் சந்தித்ததும் வேலையை விட்டு நின்றுவ்டும்படி கூறிவிட்டார். கொஞ்சம் கடுகடுப்பாகவும் பேசிவிட்டார். அதிர்ச்சியடைந்த அவன், எட்வார்டு எலியட்ஸ் சாலையிலிருந்த அவரது வீட்டி லிருந்து வெளியேறினுன்.

சென்னையிலேயே வேலையில் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்குமே என்று எண்ணியவனுக்கு இருந்த வேலையும் போய் விட்டது. கையிலிருந்த இரண்டு மூன்று ரூபாயை வைத்துக் கொண்டு, இரண்டொரு நாட்கள் சென்னையிலே சுற்றினுன் அவன். திட்டமில்லாத வாழ்க்கையில் தொல்லைகள் குறை வதேயில்லை. ஆனுல், திடீர் திடீர் என்று குறைவதுபோல் தோன்றிக் கொண்டே இருக்கும். அவன் மீண்டும் சென்னை யைச் சுற்றினுன், சுற்றினுன், கால் வலிக்கச் சுற்றினுன்.

விசித்திரமான இந்த வாழ்க்கையைப்பற்றி, அவன் ஒவ்

உறவினருமான ஒருவரை 'மெயின் காட் கேட்' அருகில் அவன் சந்தித்தான். அவர் அவனை விசாரித்தார். தன் நிலைமை அவன் கூறினான். வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே சாப்பிட்டுவிட்டு இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது, அவருக்கு ஒரு பத்திரிகை வந்தது. புதுக்கோட்டையை அடுத்த இராமச்சந்திரபுரத்திலிருந்து அந்தப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

பத்திரிகையைப் பிரித்துப் பார்த்து அவர் சொன்ன ஒரு செய்தி அவனுக்கு எல்லையில்லா மகிழ்வைத் தந்தது. அந்தப் பத்திரிகையின் உரிமையாளர் அவரது சகலைதான். "இந்தப் பத்திரிகைக்கு வேண்டுமானால் போகிறீர்களா?" என்று அவர் கேட்டார்.

அதை மறுத்துவிடக் கூடிய சூழ்நிலையில் அவன் இல்லை. உடனே உற்சாகமாக ஒப்புக்கொண்டான். "இதற்கு முன்னால் ஏதாவது பத்திரிகைகளில் இருந்திருக்கிறீர்களா?" என்று அவர் கேட்டார்.

"இல்லை" என்று சொல்லப்போன அவன், தயங்கினான். இந்த உலகத்திற்குத்தான் பொய் தேவைப் படுகிறதே! இரண்டு மூன்று பத்திரிகைகளின் பெயரைச் சொல்லி அங்கெல்லாம் இருந்ததாகச் 'சரடு' விட்டான்.

அவர் ஓர் அறிமுகக் கடிதம் எழுதி, அதில் அவனைப் பற்றிப் பிரமாதமாகக் குறிப்பிட்டு, வேலையில் வைத்துக் கொள்ளும்படி சிபார்சும் செய்திருந்தார். அதைப் பெற்றுக் கொண்டு அவன் மிகுந்த நன்றி யுணர்ச்சியோடு வெளியேறினான். அறிமுகக் கடிதம் கிடைத்துவிட்டது. போனால் வேலையும் கிடைத்துவிடும்! ஆனால் போவதற்குப் பணம் தான் இல்லை! சரி, அதை எங்கேயாவது தேடுவோம் என்று அவன் நடந்தான்.

மேலப் புலவன் சாலையில் அவன் வந்து கொண்டிருக்கும் போது ஒரு வட்டிக்கடை அவன் கண்களுக்குத் தட்டுப் பட்டது. அதை அவனது ஊரைச்சேர்ந்த சிலபேர் நடத்திக் கொண்டிருந்தார்கள். சிறிதுகூடத் தயக்கமின்றி அவன் அந்தக் கடையினுள்ளே நுழைந்தான். அங்கு கிடைத்த வரவேற்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வரும்போது



எல்லாம் சேர்ந்து வரும் என்பார்களே, அது மெய்யாயிற்று. அவன் கேட்டவுடனேயே அங்கே பணம் கிடைத்தது. பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

இப்போது உலகம் அவனுக்குத் தொல்லை நிறைந்ததாகத் தோன்றவில்லை. சே! சே! இதல்லவா உலகம்!

# 1

# முதல் கவிதை

இதோ வந்துவிட்டது இராமச்சந்திரபுரம். அவன் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினான்.

இராமச்சந்திரபுரம் ஓர் அழகிய நகரம். ஆம்! உயர்தரக் கிராமங்களில் அது சேர்க்கப்பட்டாலும், நகரத்துக்குரிய சிறப்பியல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த நகரத்திலும் காண முடியாத அளவுக்கு அகன்ற பெரிய நடுச்சாலை அதன் தனிச் சிறப்பு. ஏறக்குறைய அந்தச் சாலையின் அகலம் 200 அடி இருக்கும். சாலையின் இருமருங்கிலும் சிறிய சிறிய கடைகள் உள்ளன. ஊருக்குள் சென்றுவிட்டால், எல்லாச்சாலைகளுமே ஒழுங்காக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

செட்டிநாட்டின் மற்றைய நகரங்களைப் போலவே, இங்கும் வானளாவி நிற்கும் மாடமாளிகைகள் ஏராளமாக உண்டு. நகரத்தின் நான்கு எல்லைகளிலும் முறையாகக் கட்டப்பெற்ற நான்கு ஊருணிகள் உண்டு. அடர்த்தியாக வளர்ந்த அரச மரங்களும், புளிய மரங்களும் நகரத்தின் எழிலுக்கு மகுடம் வைப்பன. ஒரு சிறிய பள்ளியும் அங்கே உண்டு.

பஸ்ஸைவிட்டு இராமச்சந்திரபுரத்தின் நடுச்சாலையில் கீழே இறங்கிய அவன், அங்கே நின்றவாறே சுற்றும் முற்றும் பார்த்தான். சில இடங்கள் மனிதனுக்குப்பார்த்த உடனேயே பிடித்துவிடும். சில இடங்கள் பழகிய பின்னும் வெறுப்புத் தரும். மனத்துக்கு இது ஒரு வியாதி. கண்களைப் பகைத்துக் கொண்டு அது, தானே, தனியாகச் செயல்படுகிறது.



அந்த இளைஞனுக்கு, இராமச்சந்திரபுரத்தைப் பார்த்த வுடனேயே பிடித்துவிட்டது. அதனால்தான் அவன் அதை நகரம், நகரம் என்றே வர்ணிக்கிறான்.

மெதுவாக, அவன் பத்திரிகை அலுவலகத்தை விசாரித்துக் கொண்டு அங்கே சென்றான். ஒரு சிறிய கட்டிடம். பார்த்தால் பிள்ளையார் கோயில் மாதிரி இருக்கும். முன் பக்கத்துச் சுவரில், முட்டை கலந்த வெண்சாந்து பூசப் பட்டிருந்தது. செட்டிநாட்டு முறைப்படி, முன் வாசலும், படிக் கற்களும் தலைக்குடையும் அமைக்கப்பட்டிருந்தன. அதன் மேற் பகுதியில் வழக்கம்போல் ஒரு சிலை இருந்தது. அந்தத் தெருவிலேயே அதுதான் கடைசிக் கட்டிடம்.

அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். பத்திரிகைக்கு அலுவலகமாக அமைந்திருந்த அந்த வீடு அமைதி தவழும் இடமாகக் காட்சியளித்தது. காலில் பழைய பூட்சும், கையில் தகரப்பெட்டியுமாக நின்ற அவன், 'சார், சார்!' என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை! இன்னும் உள்ளே நுழைந்தான் அந்த எழுத்தாளன்.

இரண்டு திண்ணைகள் நடுவே ஓர் ஊஞ்சல். வலப் புறத்துத் திண்ணையின் மேல் உடம்பில் சட்டைபோடாமல், வெறும் துண்டை மட்டும் போர்த்திக்கொண்டு, ஒருவர் உட் கார்ந்திருந்தார். அவர் கையில் ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. கீழே ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் கையில் ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. அவருக்கு முன்னால் ஒரு கைப்பெட்டியின்மீது மற்றொரு கணக்குப் புத்தகம விரித்து வைக்கப்பட்டிருந்தது. இருவரும் ஏதோ ஒரு கணக்கைப் பெயர்த்து எழுதிக்கொண்டிருந்தார்கள் என்பது, அவர்கள் இருந்த நிலையிலிருந்து தெரிந்தது. தலைகுனிந்து, கணக்கிலே ஆழ்ந்திருந்த அவர்கள், அந்த எழுத்தாளனை நிமிர்ந்து பார்த்தார்கள்.

''யார் நீங்கள் ?''

''திருச்சியிலிருந்து வருகிறேன்.''

''யாரைப் பார்க்க வேண்டும் ?';

''பத்திரிகையின் அதிபரைப் பார்க்க வேண்டும்.''

''என்ன விஷயம்?''

''அவரது சகலை ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார்!''

''நான்தான்'' என்று கூறிய அவர், கடிதத்தைக் கையில் வாங்கி, பிரித்துப் பார்த்தார். அவரது முகம் மலர்ந்தது. அப்பாடா! சிபாரிசுக் கடிதம் படித்துவிட்டு ஒருவரின் முகம் மலர்ந்ததை, அப்போதுதான் அவன் கண்டான்! அவனது அகமும் மலர்ந்தது.

''உட்காருங்கள்'' என்று கூறிய அவர், தொடர்ந்து, ''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்றும் கேட்டுவிட்டு, காப்பிக்கு உத்திரவிட்டார்.

இதுவும் அவனுக்குப் புதுமையாகத்தான் இருந்தது. தாய் தந்தையரைத் தவிர அவனை அன்போடு உபசரித்தவர்கள் கிடையாதல்லவா? அவன் ஊஞ்சலில் உட்கார்ந்தான். அவன் காலில் இருந்த பழைய பூட்சு, தானும் தலை நிமிர்ந்து நின்றது. அதாவது, அதிலிருந்து ஓர் ஆணி கழன்று மேல் பாகம் தலையைத் தூக்கிக்கொண்டு நின்றது.

''என்ன பெயரில் இதுவரையில் கதை, கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள்?'' என்று அவர் கேட்டார்.

சொந்தப் பெயரைச் சொல்லவந்த அவன், கொஞ்சம் தயங்கினான். புனைபெயருக்குச் செல்வாக்கு இருந்த காலம் அது! அதிலும் தாசன் என்று வரும் புனைபெயருக்கு மரியாதையே தனி. பாரதிதாசன், கம்பதாசன், சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்கள் நாலு பேருக்குத் தெரிந்த பெயர்களாக விளங்கின. அவன், ''என்னதாசன்'' என்று சொல்லலாம் என்றுதான் யோசித்தான். சில வினாடி யோசனைகளுக்குப்பின் தான் யோசித்துச் சொல்வதை அவர் அறியாமல் மறைக்க, எங்கேயோ நினைவில் இருந்தவன் போல், ''என்ன கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

மீண்டும் அவர் பழைய கேள்வியையே திருப்பினார். அப்போதே அவன் முடிவு கட்டியபடி பளிச்சென்று, ''கண்ணதாசன்'' என்பது, என் புனைபெயர் என்றான். அவரும் அது ஏதோ அறிமுகமான பெயர்போல், ''பார்த்திருக்கிறேன் பத்திரிகைகளில்'' என்றார்.

இதற்குப் பெயர்தான் சந்தர்ப்பம் என்பது! உண்மையில்



அவர் அந்தப் பெயரை, எந்தப் பத்திரிகையிலும் பார்த்திருக்க முடியாது. அந்தப் பெயரே இரண்டு நிமிடங்களுக்கு முன்னால்தான் பிறந்தது!

தெரியாததுபோல் காட்டிக்கொள்வது பெரிய மனிதர்களுக்கு அழகில்லை யல்லவா? அவர் தெரிந்ததைப்போல் காட்டிக் கொண்டார். அவனும் சளைத்தானா? ''நீங்கள் பார்த்திருக்கக் கூடும்'' என்று மட்டும் கூறினான்.

கீழே உட்கார்ந்து கணக்கு எழுதிக்கொண்டிருந்தாரே ஒருவர், அவர் திறந்த வாய் மூடாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். நிறத்தில் அவர் கறுப்புத்தான். ஆனால் அமைப்பான உருவம். ஜிப்பா போட்டிருந்தார். தலையை அழகாக வாரிவிட்டிருந்தார். கணக்குப் புத்தகத்தில் அவர் எழுதிய எழுத்துக்கள் மணிமணியாக இருந்ததை அவன் கவனித்தான்.

''உங்கள் பெயரென்ன?'' என்று அவரைப் பார்த்து அவன் கேட்டான். அவனைப்போலவே வயதில் இளையவரான அவர் தன் பெயர் ''சோமநாதன்'' என்றார்.

பிறகு அவன் அவரைப்பற்றி முழுவதும் விசாரித்துத் தெரிந்துகொண்டான். அன்றிலிருந்து, அவனது நெருங்கிய நண்பனாக ஆகிவிட்ட அவரது சொந்த ஊர், வலையபட்டி என வழங்கப்படும் வலம்புரியாகும். அவர்தான் இந்நாளில் ''வலம்புரி சோமநாதன்'' என்று அழைக்கப்படும் எழுத்தாளர் ஆவார். நட்புக்கு அவர் ஓர் இலக்கணம். சொல்லுகிற கருத்தைக் கூர்ந்து கவனிப்பதிலும், எதையும் ஆழ்ந்து சுவைத்துப் படிப்பதிலும், தான் சுவைத்ததை தெளிவாக, அழகாக பிறருக்கு மயக்கம் தரும் வகையில் எடுத்துரைப்பதிலும் அவர் வல்லவர். அந்த எழுத்தாளனுக்கு அங்கே கிடைத்த வேலையைக் காட்டிலும், அந்த நண்பர்தான் உயர்வாகத் தோன்றினார். நிற்க.

கடிதத்தைப் பத்திரிகை அதிபர் பார்த்தவுடனேயே அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. மிகுந்த மரியாதையோடு அவன் நடத்தப்பட்டான். முதலில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலை, 'புரூப்' திருத்துவது. பழக்கமில்லாத அந்த வேலையையும் இரண்டு நாளில் அவன் பழகிக்கொண்டான்.

வித்தை தனைக்கூறி
விரைவில்வெளி யேறு''மென்றேன்
''கண்ணே'' எனக்கூவிக்
கரத்தைப் பிடித்துவிட்டீர்!
கரம்பறிக்க எத்தனித்தேன்
காதல் தடுத்ததையோ!
கட்டிப் பிடித்தீர்!
கனிமுத்தம் கொடுத்தீர்
காதற் களஞ்சியத்தைக்
கலவியினால் கட்டிவிட்டீர்
பின்னர் பிரிந்த உமைப்
பேதை இன்னும் காணவில்லை
ஒரு நாளை இன்பமன்று
உருவாகி விட்டதையோ!
ஒன்றும் புரியவில்லை
உடன்வந்து காவீரோ!
சொல்லாலே கொல்லுகிறார்?
சோர்வு பொறுக்கவில்லை!
உற்றார் உளங்களிக்க,
ஊராரின் வாயடைக்க
பெற்றார் உடன்வந்து
பேதையெனைக் காவீரோ!

இங்ஙனம்,
காதலி



# ஓர் எளிய பக்தன்

மாலை மணி ஆறடித்தது. கோவில்மணி ஓங்கி ஒலித்தது.

ஊரிலே யாருடைய கண்ணுக்கும் அதிசயமாகத் தோன்றாத ஓர் எளிய மனிதன், அந்த நடுத்தர நகரத்தின் தெருக்களில் நடந்து கொண்டிருந்தான்.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் நன்றாக வாழ்ந்த காலம் அது.

ஆகவே கோவில்கள் எப்போதும் தீபாலங்காரத்துடன் விளங்கும்.

அந்தக் கோவில்களில் ஒன்றை நாடித்தான், அவன் சென்று கொண்டிருந்தான்.

பயம் வரும்போது இறைவனிடம் முறையிட்டுக் கொண்டால், பயன் கிடைக்குமென்று அவன் திடமாக நம்பியிருந்தான்.

பக்தர்கள் காக்கப்படுவார்கள்; பாவிகள் ரட்சிக்கப்படுவார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

கோவில் மண்டபத்தில் குழந்தையைப்போல அவன் அமர்ந்திருந்தான்.

கண்களை மூடி கைகளைக் கூப்பி, தன்னையும் தன் குடும்பத்தவரையும் நிம்மதியாக வாழவைக்கும்படி இறைவனிடம் வேண்டிக் கொண்டான்.

கோவிலில் அப்போது கூட்டமில்லை. அர்ச்சகர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அந்த ஆலயத்தினுள்ளே அவன் உள்ளம் அமைதியுற்றிருந்தது.

தாயைப் பிரிந்து பழக்கமே இல்லாத அவன், தன் தாய்க்காகவே அதிகம் வேண்டிக் கொண்டான்.

ஆறு சகோதரிகளோடும் இரண்டு சகோதரர்களோடும் பிறந்த அவன், அந்த எண்மரையும் காப்பாற்றும்படி இறைவனிடம் இறைஞ்சினான்.

நன்றாக மழை பொழிந்து ஓய்ந்த பிற்பாடு, மண்ணிலே தேங்கி நிற்கும் அமைதியைப் போல் அவன் உள்ளமும் சலனமற்றிருந்தது.

அந்த அமைதியை இன்று நினைத்தாலும், அவன் உள்ளம் ஆனந்தத்தில் திளைக்கும்.

மாதம் இருபத்தைந்து ரூபாய்தான் சம்பளம் என்றாலும், அதிலும் பத்து ரூபாய் மீதமாகும்.

ஆலயத்தில் இருந்தபடியே தான் அன்று எழுதி முடித்த கட்டுரையைப் பற்றி, அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

எதிர் காலத்தைப் பற்றிய ஆசைகள் அவன் நெஞ்சில் துளிர்விட ஆரம்பித்தன.

இன்று அவன் எழுதியதை இரண்டாயிரம் பேர் படிக்கப் போகிறார்கள்.

நாளை அவர்கள் அதிகமாகலாம். அதிகமாக வேண்டுமென்பது அவனது ஆசை.

என்னென்ன எழுதலாம்? எப்படி எப்படி எழுதலாம்? இந்தக் கேள்விகள் அவனது சிந்தனையைத் தொடர்ந்தன.

இறைவனிடத்தில் அவன் நம்பிக்கை வைத்திருந்ததால், எதிர்காலத்தையும் அவன் நம்பிக்கையுடனேயே கணக்கிட்டான்.

''இன்று கட்டுரை எழுதிவிட்டோம்; நாளை கதை எழுத வேண்டும்; அடுத்த நாள் கவிதை எழுத வேண்டும்.'' இப்படி அவன் தன் எண்ணங்களை வளர்த்தான்.

''என்ன தம்பி?'' என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.



''நீ சாத்தப்பன் மகனில்லை...?'' வந்தவர் கேட்டார்.

''ஆமாம்'' என்றான். எழுந்து நின்றான்.

''இங்கேதானிருக்கிறாயா...?''

''ஆமாம்...''

அவர்கள் பேச்சுத் தொடர்ந்தது.

அவன் தந்தைக்கும் அவருக்குமுள்ள உறவை அவர் விளக்கினார்.

பர்மாவில் 'கையான்' என்ற ஊரில், இருவரும் ஒன்றாக இருந்ததாக அவர் சொன்னார்.

''எப்படியாவது முன்னுக்கு வந்து நல்ல பேர் எடு'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

முன்னுக்கு வர ஆசைதான்.

காற்று பின்னுக்குத் தள்ளாமல் இருக்க வேண்டும்.

அவன் நடக்கத் தயார்.

பாதை தெரிய வேண்டும்.

அந்தப் பாதையைக் காட்டும்படி அந்த எளிய பக்தன் இறைவனை வேண்டிக் கொண்டான்.

கைநிறையத் திருநீறெடுத்து நெற்றியில் பூசிக் கொண்டான்.

ஆலயத்தை விட்டு வெளியேறினான்.

ஆறு மணிக்கெல்லாம் அந்த நகரம் அமைதியில் ஆழ்ந்து விடும்.

சிறு ஒளி காட்டும் தெரு விளக்குகளுக்கு நடுவே நடந்த அவனது காலடி ஓசை எல்லோருக்குமே கேட்டிருக்கும்.

அவ்வளவு அமைதி.

அலுவலகம் வந்து சேர்ந்தான்.

அலுவலகத்தில் அவனோடிருந்த நண்பர், நிறைந்த அனுபவங்கள் உடையவர்.

அவரும் வயதில் குறைந்தவர் என்றாலும், அடிபட்டுத் தேறியவர்.

அவர் கோவிலுக்குப் போவதில்லை; ஆனாலும் நாத்திகரல்ல.

அவனுடன் இதயம் திறந்து உறவாடினார்.

மறுநாள் 'காதலியின் கடிதம்' என்று ஒரு கவிதை எழுதினன்.

'குழந்தை உள்ளம்' என்று ஒரு கட்டுரை எழுதினன்.

'எப். சி. எப்.' என்று ஒரு கதை எழுதினன்.

பத்திரிகையின் நாற்பத்தெட்டுப் பக்கங்களில் இருபது பக்கங்களை அவனே அடைத்துக் கொண்டான்.

பத்திரிகை வெளி வந்தது.

படித்தவர்களின்—கடிதங்கள் வந்தன.

புத்தம் புதிய எழுத்தாளனுக்கு அவற்றைவிட வேறென்ன வேண்டும்...? தொடர்ந்து எழுதினன்.

ஆனல் இந்த வாழ்க்கை சில மாதங்களே நீடித்தது.

அலுவலகத்தில் அவனேடிருந்தவர் விலகினர்.

அவருக்கு அனுதாபம் தெரிவித்து அவனும் விலகினன்.

பத்திரிகையும் நின்றது.

அங்கிருந்து மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டான்.

சென்னையிலே 'முல்லைப் பதிப்பகம்' என்று ஒரு பதிப்பகம் இருக்கிறது.

முத்தையா என்பவர் அதன் உரிமையாளர்.

அங்கே போய்த் தங்கினன். அங்கேதான் அவன் ஒரு நண்பரைச் சந்தித்தான்.

அந்த நண்பர் ஒரு நடிகர். திராவிடர் கழகத்தில் தீவிரப் பற்றுக் கொண்டவர்.

இது 1945ஆம் ஆண்டு.

அண்ணுத்துரை முதலியோர் திராவிடக் கழகத்திலேயே இருந்த காலம்.

அவன் சந்தித்த நடிக நண்பர் மிகவும் நல்லவர்.

பழகுவதற்கு இனியவர், பண்புள்ளவர்.

அப்போதுதான் டி. கே. எஸ். நாடகக் கம்பெனியிலிருந்து அவர் விலகியிருந்தார்.

'நசுக்கப்பட்ட நாடகத் தொழிலாளர்கள்' என்று ஒரு புத்தகமும் எழுதியிருந்தார்.

அந்தப் புத்தகத்தி லொன்றை, அவர் அவனுக்குத் தந்தார்.

அவனையும் ஓர் பகுத்தறிவாளனுக்க அவர் விரும்பினர்.



அதற்காக அல்லும் பகலும் சுயமரியாதைக் கொள்கையே பேசிக் கொண்டிருந்தார்.

அவரோடு பழகுவது அவனுக்குப் பிடித்திருந்தாலும், அவர் சொன்ன 'சுயமரியாதை'யில் அவனுக்கு உடன்பாடு ஏற்படவில்லை.

தலைவனை நம்புவதைவிட இறைவனை நம்புவதையே அவன் பெரிதாகக் கருதினன்.

வைதீக எண்ணங்களில் வளர்ந்தவன் ஆதலால், சுயமரியாதை உணர்ச்சிகள் அவனை சுலபத்தில் ஆட்கொள்ள முடியவில்லை.

கையில் வசதியில்லாத நிலையில் அங்கிருந்து மீண்டும் கிராமத்திற்குப் புறப்பட்டுவிட அவன் விரும்பினன்.

அந்த நடிக நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டான்.

அவர் பெயரை அவன் சொல்லியே ஆக வேண்டும்.

அங்கே தங்கியிருந்த நேரத்தில் அவனுக்குக் கிடைத்த மற்ருெரு நண்பர், பதிப்பகத்தின் பொறுப்பிலிருந்த சொக்கலிங்கம் என்பவர்.

தேவகோட்டையைச் சேர்ந்தவர். அவருக்கு 'அம்மை' நோய் கண்டது. ஊருக்குப் புறப்பட வேண்டியவரானர். துணைக்கு அவனையும் அழைத்துக் கொண்டார்.

அவரைத் தேவகோட்டையில் விட்டுவிட்டுத் தன் கிராமத்திற்குத் திரும்பினன் அவன்!

கிராமத்தில் சில நாட்களே இருந்தான்.

மீண்டும் புறப்பட்டான்.

அவனேடு குருகுலத்தில் படித்த நண்பர்கள் சிலர் 'கோனபட்டு' என்ற ஊரில் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே போய் அவர்களை அவன் சந்தித்தான்.

'குருகுல'த்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், அவர்கள் அனைவருமே பக்தி உள்ளவர்கள்.

'கோனபட்டி'ல் அவர்களை அவன் சந்தித்தபோது அனைவருமே' திராவிடர் கழக' அனுதாபிகளா யிருந்தனர்.

'கோனபட்டு' கோவிலுக்கு அவன் போய் வந்தான்

அவனைக் குளக்கரையிலேயே உட்கார வைத்து, 'திரா

விட உணர்ச்சி' ஊட்ட ஆரம்பித்தார்கள், அந்த நண்பர்கள்!

இரண்டு மணி நேரம் விவாதம் நடந்தது.

பார்ப்பனர் பித்தலாட்டம், புராணங்களின் பொய்மை, ஆரிய திராவிடர் போராட்டம், இவையே விவாதத்திற்கு வந்த கருத்துக்கள்.

பொய்யைப் பொய்யென்று ஏற்றுக்கொள்ள அவன் தயார்.

ஆனால் தெய்வமும் பொய்யென்று எண்ண அவன் தயாராக இல்லை.

அண்ணாத்துரையின் 'திராவிட நாடு' இதழ்களை, அவர்கள் அவனுக்குப் பரிசாகத் தந்தார்கள்.

முழுதும் படித்துப் பார்க்கச் சொன்னார்கள்.

'குடியரசு' வெளியீடுகள் சிலவற்றையும் தந்தார்கள்.

பெற்றுக்கொண்டு அவன் புறப்பட்டான். மீண்டும் சென்னைக்கு வந்தான்.



# மாறிய வடிவம்

எழும்பூர் புகை வண்டி நிலையத்தில் அவன் இறங்கியதும், 'முல்லைப் பதிப்பக'த்தில் பணி புரிந்த ஓர் ஊழியரையும் அவன் கண்டான்.

அவர், ஒரு நண்பரை வரவேற்க அங்கு வந்திருந்தார்.

தான் பவழக்காரத் தெரு 'நகரத்தார் விடுதி'யில் தங்கப் போவதாக, அவன், அவரிடம் சொன்னான்.

"அப்படி என்றால் சாயங்காலம் கோகலே மண்டபத்திற்கு வாருங்களேன்" என்றார் அவர்.

ஏனென்று அவன் கேட்டான்.

'தளபதி அண்ணா' பேசுகிறார் என்று அவர் சொன்னார்.

அண்ணாத்துரையை 'தளபதி' என்று அழைப்பதுதான் அந்நாளைய வழக்கம்.

"சரி" என்று சொல்லிவிட்டு அவன் சென்றான்.

அன்றைய மாலைப் பொழுது, அவன் வாழ்வில் முக்கியமான பொழுதாகும்.

அவனது பக்தி நெஞ்சத்தைப் பிளந்து கொண்டு, பல தீவிர எண்ணங்கள் அன்று மாலைதான் வேரோடித் தலைப்பட்டன.

அந்த மாலை...

சரியாக ஆறு மணிக்கு அவன் 'கோகலே மண்டப'த்திற்குள் நுழைந்தான்.

மன்றம் நிறைந்திருந்தது.

ஒரு மூலையில் போய் அவன் அமர்ந்தான்.

குறிப்பிட்ட நேரத்திற்கு வெகு நேரம் கழித்து, கூடியிருந்தவர்கள் கை தட்டினார்கள். ''தளபதி வாழ்க'' என்ற முழக்கம் எழுந்தது.

அவன் திரும்பிப் பார்த்தான்.

அவர் வந்துகொண்டிருந்தார். சரியாக எட்டு மணிக்கு அவர் பேசத் தொடங்கினார்.

நீரோட்டம் போலத் தாவி வரும் வார்த்தைகள், வரிக்கு வரி அழகான உவமைகள், புதிய புதிய சொல்லாட்சி, தமிழ் இலக்கணத்திற்கே அப்பாற்பட்ட புதிய 'பாணி'கள்...

அவன் மெய்மறந்திருந்தான்.

அன்றைய அண்ணாத்துரை அவன் நெஞ்சில் அழிக்க முடியாதவரானார்.

அவரது பேச்சு, காலமறிந்து ஒரு பேரறிஞர் அவதரித்திருக்கிறார் என்றே அவனை எண்ண வைத்தது.

நகர விடுதிக்கு அவன் திரும்பியபோது, இனம் தெரியாத ஓர் உணர்ச்சியில் அவன் உள்ளம் ஆழ்ந்திருந்தது.

அந்த எளிய பக்தன் தன் வடிவம் மாறுவது கண்டான்.

''தெய்வம் பொய்யா?

புராணங்கள் பொய்யா?

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அசைக்க முடியாமல் இருந்து வருகிற இதிகாசங்கள் பொய்யா?

சரித்திரத்தில் படிக்கிற ஆரியர்கள் என்போர், இந்தப் பார்ப்பனர்கள் தானா?

கடவுள்கள் எல்லாம் திராவிடர்கள் என்போரை ஏமாற்றப் பிறந்த கட்டுக் கதைகளா?''

அவன் உள்ளம் அன்றெல்லாம் இவற்றையே சிந்தித்தது.

அண்ணாத்துரையின் பேச்சு அவன் இதயத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

அதிலும் குறிப்பாக பார்ப்பனச் சமூகத்தின் மீது அவர் தொடுத்த தாக்குதல்கள், அவனால் மறக்க முடியாதவைகளாயின.



''பாம்புக்குப் பல்லிலே விஷம்; பார்ப்பானுக்கு உடம்பெல்லாம் விஷம்,''

''வேதமோதிகள்; மாடோட்டிகள்'' என்றெல்லாம் அவர் பார்ப்பனச் சமூகத்தை வர்ணித்திருந்தார்.

''உலகத்தில் சொந்த நாடே இல்லாத இனங்கள் இரண்டு :

ஒன்று யூத இனம், மற்றொன்று ஆரிய இனம்.

மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த ஆரியர்கள் தமிழ் நாட்டில் வேரூன்றி, தமிழகத்தின் பூர்வ குடிகளைத் தாழ்த்தி வைத்துவிட்டார்கள்''

இப்படியெல்லாம் அவர் சொன்னது, அவனுக்கு மிகவும் புதுமையாய் இருந்தது.

அந்தக் கருத்து அவனைப் பற்றிக் கொள்ளவும் ஆரம்பித்தது.

தெரியாமலா சொல்வார்!

''பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி வாழ்வதற்காக யாரையும் சாய்ப்பதற்குத் தயாராய் இருப்பார்கள். வேதியர்களால் வீழ்ந்த வேந்தர்கள் பலபேர்'' என்று ஆதாரத்தோடு சொன்னாரே, அது உண்மைதான் என்று அவன் எண்ணத் தலைப்பட்டான்.

அவன் பிறந்த ஊரில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நாளையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் அவன் நினைவிற்கு வந்தன. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பெயர் சாம்பசிவ ஐயர் என்பது. அவர், அவனை மிகவும் கொடுமையாக நடத்தியவர்.

பரீட்சைகளில் பார்ப்பன மாணவர்களுக்குத்தான் அதிகமான மார்க்குகள் வழங்குவார்.

அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதும் வீட்டிற்குள் யாராவது வந்துவிட்டால் கடுமையாகத் திட்டுவார்.

அந்த ஊரில் 'பாரதமாதா வாசகசாலை' என்று ஒன்றுண்டு. அதன் ஆண்டு விழாவில் பேச வந்திருந்த ஒரு பேச்சாளர்:

''ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு: ஐயங்கார் சுவாமிக்கு மூன்று கொம்பு'' என்று பாட்டுப் பாடினார்.

அவன் அந்தப் பாட்டை விளையாட்டாக பள்ளிக்கூடத்தில் பாடினான். அதற்காக அவன், தலைமையாசிரியரிடம் வாங்கிய உதை அவன கவனத்திற்கு வந்தது.

'பார்ப்பனர்கள் எல்லோருமே சமூகத்தின் விரோதிகள், என்ற அண்ணாத்துரையின் கருத்தை அவன் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டான்.

அவன் வடிவம் மேலும் அதிகமாக மாறத் தொடங்கியது.

எது சரி, எது தவறு என்று ஆராய்வதைவிட, அண்ணாத்துரை சொன்னதை அப்படியே ஏற்றுக் கொள்வதில் நாட்டுக்கு நன்மை இருக்கிறதென்று அவன் நம்பினான்.

பதினேழு ஆண்டு வைதீக உணர்ச்சி, மூன்று மணி நேரத்தின் தலை சாய்க்கத் தொடங்கியது.

கண்ணனை நினைக்கும் பக்தர்களுக்கு பார்க்குமிடமெல்லாம் கண்ணனே தோன்றுவதுபோல, அண்ணாத்துரையைப் பார்த்த அவன் கண்கள், எங்கும் அவரையே கண்டன.

'சுயமரியாதை' என்ற சொல் அவனைக் கவர்ந்தது.

''நானும் மனிதன்தான். என் மரியாதையைக் கெடுத்துக் கொண்டு எவனுக்கும் நான் மரியாதை தர மாட்டேன்.

அரசனாயினும் சரி, ஆண்டவனாயினும் சரி.

என் மரியாதைக்கு மேல் அவர்களிடம் ஒன்றுமில்லை''

இவையே சுயமரியாதை பற்றி அவனுக்குத் தோன்றிய கருத்துக்கள்!

அவன் உள்ளம் உணர்ச்சிகளில் மிதந்தது.

கூனிக் குறுகிப் போய் தேவாலயத்து மண்டபத்தில் உட்கார்ந்திருந்த அவன் வேறு.

நகர விடுதியில் இப்போது இருக்கும் அவன் வேறு.

அவன் புதிய பிறவி ஆனான்.

ஆனாலும், விட்ட குறை தொட்டகுறை போகவில்லை.

விபூதிஎடுத்துப் பூசிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கடைவீதிக்குச் சென்று சில சுயமரியாதை இயக்கப் புத்தகங்கள் வாங்கினான்,

அண்ணாத்துரையின் பேச்சுக்களை சிலர் சிறு சிறு புத்தகங்களாக வெளியிட்டிருந்தார்கள்.

அவற்றையெல்லாம் விடாமல் படித்தான்.



அன்றைய அண்ணாத்துரையை அவனால் மறக்கவே முடியவில்லை.

ஆனாலும் அவன், தன்னை சுயமரியாதைக்காரனாக ஆக்கிக் கொள்ளவோ, காட்டிக் கொள்ளவோ விரும்பவில்லை.

காரணம், அவன் விரும்பிச் செல்ல முயல்கிற பல துறைகளுக்கு அது இடையூறு என்பதை அவன் அறிந்திருந்தான்.

அந்நாளில் சுயமரியாதைக்காரனை விரும்பியவர்களை விட, வெறுத்தவர்களே அதிகம்.

ஓரளவு வசதியும், எதிர் நீச்சல் போடும் துணிச்சலும் இருந்தாலொழிய அந்நாளில் ஒருவன் சுயமரியாதைக்காரனாகத் தொடர்ந்து வாழ முடியாது.

அவனைச் சுற்றி இருந்தவர்கள், அவனை வாழவைக்க வேண்டியவர்கள், அத்தனை பேருமே பழுத்த வைதிகர்கள்.

சுயமரியாதை இயக்கத்தின் கடுமையான பகைவர்கள்.

'சிவனடியார் திருக்கூட்டம்' என்றே செட்டி நாட்டில் ஒரு திருக்கூட்டம் உண்டு.

எங்கே சுற்றினாலும் அவன் திரும்பிப் போகவேண்டியது செட்டி நாட்டிற்குத்தான்.

ஆகவே, அவன் இதயத்தில் சுயமரியாதையையும். நெற்றியில் வைதிகத்தையும் அமர்த்திக் கொண்டான்.

# எதிர்பாராத வேதனை

மீண்டும் அவன் வேலை தேடத் துவங்கினான்.

அந்நாளில் பட்டப்படிப்பு இல்லாதவனுக்கு என்ன வேலை கிடைக்கும்?

பத்திரிகைத் துறையிலிருந்த ஓரளவு அனுபவத்தைக் கொண்டு, பத்திரிகைக் காரியாலயங்களுக்குப் படையெடுக்கத் துவங்கினான்.

பதினெட்டு வயது; பார்வைக்கும் சாதாரணத் தோற்றம்; 'ஆசிரியர் வேலை பார்த்தேன்' என்றால் யார் நம்புவார்கள்?

படியேறி இறங்கியதைத் தவிர, வேறு எந்த லாபமும் இல்லை.

இருந்த பணம் தீர்ந்துவிட்டது.

கைமாற்று வாங்க இடம் வேண்டும்.

செட்டி நாட்டைச் சேர்ந்த சிலர் திருவல்லிக்கேணியில் குடியிருந்தார்கள்.

ஒவ்வொருவரையும் போய்ப் பார்த்தான்.

ஒரேயொருவர் மட்டும் பத்து ரூபாய் கொடுத்தார்.

நல்ல பசி.

திருவல்லிக்கேணி பைக்கிராப்ட்ஸ் ரோட்டில், இன்று 'முரளி கபே' என்றழைக்கப்படும் உணவு விடுதிக்குள் நுழைந்தான்.

சாப்பிட்டு முடித்தான்.

மனத்தில் அதுவரை இருந்த சலிப்பு அடங்கிற்று.

வாழ்க்கையில் மீண்டும் நம்பிக்கை பிறந்தது.

முன்பு தேவக்கோட்டையில் கொண்டு போய் அவன்



விட்டுவிட்டு வந்த நண்பர் சொக்கலிங்கம், அப்போது சென்னையில் இருந்தார்.

அவரும், 'அருணோதயம்' என்ற பெயரில் இப்போது பதிப்பகம் நடத்தும் அருணாசலம் என்பவரும், கவிஞர் குயிலனும் கூட்டாக 'தென்றல்' என்னும் திங்கள் இதழைத் துவக்கியிருந்தார்கள். [ஆம்; அதே பெயரைத்தான் பின்னாளில் அவன் சுவீகரித்துக் கொண்டான்.]

அந்த நண்பர்களைப் போய் அவன் பார்த்தான்.

அவர்களுடைய அலுவலகம், தியாகராயநகர் உஸ்மான் ரோட்டில், இப்போது 'சப்ரிஜிஸ்டரார் ஆபீஸ்' இருக்கும் கட்டிடத்திற்கு அடுத்தாற்போல் இருந்தது.

அரைகுறையாகக் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருந்த அந்தக் கட்டிடத்தில், ஒரு மேஜை நாற்காலிகூட இல்லாமல் பாயை விரித்தே அலுவலகம் நடந்தது.

அவன் அங்கே தங்குவதற்கு நண்பர்களின் அனுமதி கிடைத்தது.

அவனது வயிற்றுப் பிரச்சினையை சொக்கலிங்கம் கவனித்துக் கொண்டார்.

தினம் இரண்டு ரூபாய் கொடுப்பார்.

'தென்றல்' முதல் இதழுக்கு, அவன் 'பிலிவளை' என்று ஒரு சொற்சித்திரம் எழுதிக் கொடுத்தான்.

சோழன் நெடுமுடிக்கிள்ளியைப் பற்றிய சித்திரம் அது.

இந்தப் பத்திரிகைக்கு முதலீடு, ஆளுக்கு ரூபாய் ஐநூறு வீதம், மொத்தமே ஆயிரத்து ஐநூறு ரூபாய்தான்.

இதில் நான்குபேர் சாப்பிட்டுக்கொண்டு பத்திரிகையும் நடத்துவதென்றால், எவ்வளவு காலம் முடியும்?

இரண்டு இதழ்களிலேயே 'தென்றல்' தள்ளாடத் தொடங்கியது.

உஸ்மான் ரோடு அலுவலகம், பழைய மாம்பலத்தில் ஒரு குடிசைக்கு மாற்றப்பட்டது.

ஓட்டலில் சாப்பிட்டால் கட்டி வராது என்று, அங்கே சுயம்பாகம் ஆரம்பமாயிற்று.

மண்பாண்டங்கள் பல வாங்கி, ஒருவர் மாற்றி ஒருவர் சமையல் செய்ய ஆரம்பித்தார்கள்.

அந்த வாழ்வும் ஒரே மாதம்.

அவனைப் பற்றிய பிரச்சினை மூன்று கூட்டாளிகளுக்கும் பெரும் பிரச்சினையாகி விட்டது.

அதை அறிந்து கொண்ட அவன், சொக்கலிங்கத்திடம் பத்து ரூபாய் பெற்றுக்கொண்டு சொந்தக் கிராமத்திற்குப் புறப்பட்டுவிட்டான்.

அவன் கண்களுக்கு ஒரு காலத்தில் அலங்காரமாயிருந்த அந்தக் கிராமம், இப்பொழுது பாலைவனம்போல் காட்சியளித்தது.

பதினைந்தே நாட்கள்!

கிராமத்தில் ஒருவரிடம் பதினைந்து ரூபாய் வாங்கிக் கொண்டு, புதுக்கோட்டைக்கு வந்தான்.

புதுக்கோட்டையில் 'திருமகள்' இதழில் அவனோடு வேலை பார்த்த நண்பர் சோமநாதன், 'செல்லப்பா, ஸ்டோர்ஸ்' என்ற பேப்பர் கடையில் பணிபுரிந்தார்.

அவரை வந்து சந்தித்தான்.

இரண்டொரு தினங்கள் அவரோடு இருந்தான்.

அங்கே செட்டியார் ஒருவர் ஹாஸ்டல் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்.

அந்த ஹாஸ்டலில் தங்கி ஏதாவது வேலை கிடைக்குமா என்று தேடினான்.

அங்கே 'தாய்நாடு' என்றொரு பத்திரிகையை க. நாராயணன் என்பவர் நடத்திக்கொண்டிருந்தார்.

'அணிகலம்' என்றொரு பத்திரிகையை, ஒரு செட்டியார் நடத்திக்கொண்டிருந்தார்.

இந்தப் பத்திரிகைகளுக்கு ஏதாவது எழுதிக் கொடுத்து. ஐந்து ரூபாய் வாங்கிக் கொள்வான்.

அந்தப் பணமும் செலவாகிவிடும்.

ஹாஸ்டலுக்குப் பணம் கட்ட முடியாது.

ஹாஸ்டலில் கடன் ஏறிக் கொண்டே வந்தது.

இனி அங்கே சாப்பிடமுடியாது என்ற நிலைமை வந்ததும் விரைவில் கடனைத் தருவதாகச் சொல்லிவிட்டு, சோமநாதனிடம் பதினொரு ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டான்.



சென்னையில் அப்போது இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கான செயற்குழுக் கூட்டம் (ரானடே ஹாலில் என்று ஞாபகம்) நடந்துகொண்டிருந்தது.

எழுத்தார்வம் மிக்க அவன், எழுத்தாளர்களைப் பார்ப்பதற்காக அங்கே போனான்.

போன இடத்தில் 'கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.' அவர்களுடைய மகன் சுப்பிரமணியத்தின் தொடர்பு கிடைத்தது.

அவர் அப்போது 'தினமணி'யில் உதவி ஆசிரியராக இருந்தார்.

கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்த உடனேயே அவர் கேட்டார், ''ஒரு பத்திரிகையில் ஆசிரியர் வேலை காலியாக இருக்கிறது: போகிறீர்களா?'' என்று.

அவனுக்கு எப்படி இருந்திருக்கும்?

அதைத்தானே அவன் தேடிக்கொண்டிருந்தான்!

''இப்பொழுதே கடிதம் கொடுங்கள், இன்றிரவே புறப்படுகிறேன்'' என்றான்.

கடிதத்தை எழுதி வாங்கிக் கொண்டான்.

அவரிடமே இருபது ரூபாய் கடனும் வாங்கிக்கொண்டான்.

பெருத்த உற்சாகத்தோடு அன்றிரவே அவன் புறப்பட்டான்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், அந்தப் பத்திரிகை நடந்த ஊர் அவன் ஏற்கனவே வேலை பார்த்த இராமச்சந்திரபுரத்திற்கு நான்காவது மைலில் இருந்தது.

ராயவரம் என்பது அந்த ஊரின் பெயர்.

'மேதாவி' என்பது பத்திரிகையின் பெயர்.

முதலில் அதை ஆரம்பித்தவர் கோ. த. சண்முகசுந்தரம் என்பவர்.

அதற்குமுன் 'தந்தி' என்ற தினசரிப் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர். (அதுதான் இப்போது 'தினத்தந்தி' என்று வழங்கப்படுகிறது.)

அவர் விலகிய பிறகு 'மேதாவி' பத்திரிகையின் முழுப்

பொறுப்பையும் ஏற்றுக்கொண்டவர், அருப்புக்கோட்டை சேவகரத்தினம் என்பவர்.

அவரிடம் கொண்டுபோய் அவன் கடிதத்தைக் கொடுத்தான்.

உடனே வேலை கிடைத்துவிட்டது.

அவன் 'மேதாவி'யின் ஆசிரியரானான்.

அவன் அங்குபோய்ச் சேர்ந்த அன்றே, ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அவனை அலுவலகத்தில் உட்கார வைத்துவிட்டு அலுவலக நிர்வாகி கொஞ்சநேரம் வெளியே போய்த் திரும்பினார்.

திரும்பி வந்து, பெட்டியைத் திறந்து பார்த்தவர் நூறு ரூபாய் காணோம் என்றார்.

அவனுக்குப் பகீரென்றது.

அவன் திருடியது உண்டு, என்றாலும் வெளியிலே திருடியதில்லை.

தன் தாயாரின் பணத்தைத்தான் திருடியிருக்கிறான்.

அங்கே நூறு ரூபாய் காணோம் என்றதும், அவனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

ஆளை அடையாளம் கண்டு கொள்வதற்கு முன்னாலேயே இப்படியொரு சம்பவம் நிகழ்ந்துவிட்டால் யார்மீது சந்தேகம் வரும்?

ஆனாலும்கூட, அலுவலக நிர்வாகி அவனைச் சந்தேகிக்கவில்லை.

அக்காலத்தில் அவன், சிகரெட், காபி எதையும் தொடமாட்டான்.

அதுவொன்றே அவனை அவர் நம்புவதற்குக் காரணமாய் அமைந்தது.

ஆபீஸ் பையன்மீது சந்தேகம் வந்தது.

ஊரிலே முக்கியமான பிரமுகர் ஒருவர்.

ராமசீனிவாசன் என்பது அவர் பெயர். (இந்தத் தேர்தலில் சுதந்திராக் கட்சியின் சார்பில் திருமயம் தொகுதியில் மந்திரி ராமையாவுடன் போட்டியிட்டுத் தோற்றவர்.)

அவருக்குத் தகவல் தரப்பட்டது.



அவர் வந்தார்.

பையனை மிரட்டினார்.

பலன் இல்லை.

பையனிடம் அவன் கெஞ்சினான்.

பலனளித்தது.

சமையலறையில் ஒளித்துவைத்திருந்த நூறு ரூபாயை பையன் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான்.

அவனுக்கு உயிர் வந்தது.

பையனை மன்னித்து மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி அவன் நிர்வாகியிடம் கேட்டுக் கொண்டான்.

அதுவும் பலனளித்தது.

இருந்தும் அது நீண்டநாள் பலன் அளிக்கவில்லை.

சில நாட்களிலேயே அந்தப் பையன் இருபது ரூபாய் திருடிக் கொண்டு ஓடிவிட்டான்.

# நல்ல நண்பர்கள்

'மேதாவி'யின் இரண்டோர் இதழ்கள் வெளிவந்தன.

சென்னையில் 'இரண்டாவது எழுத்தாளர் மாநாடு' ஒற்றைவாடைக் கொட்டகையில் நடைபெறப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

மாநாட்டிற்குப் போகவேண்டுமென்று அவனுக்கு ஆசை பிறந்தது.

அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

புதுக்கோட்டையிலிருந்தும் பல நண்பர்கள் அவனோடு சேர்ந்துகொண்டார்கள்.

மறுநாள், ஒற்றைவாடைக் கொட்டகையில் எழுத்தாளர் கூட்டம் திரண்டிருந்தது.

'தினமணி' வெங்கடாச்சாரி, ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், நாமக்கல் கவிஞர், 'சுதேசமித்திரன்' 'ஹிந்து' துணையாசிரியர்கள், 'இந்துஸ்தான்' நாராயண ஐயங்கார், சிலம்புச் செல்வர் ம பொ சி, தோழர் ஜீவானந்தம், 'நாரதர்' சீனுவாசராவ், 'பிரசண்ட விகடன். நாரண துரைக் கண்ணன், எம். எஸ். கமலா, கவிஞர் குயிலன், இன்னும் பலர் அங்கே கூடியிருந்தனர்.

மாநாடு துவங்கிற்று.

நாமக்கல் கவிஞர் தலைமை வகித்ததாக நினைவு.

பலர் பேசினார்கள்.



ஒவ்வொருவர்பேச்சிலும் அவனுக்கு அலுப்புத்தட்டியது.

இந்த நேரத்தில் மேடையில் உட்கார்ந்திருந்த ஆசிரியர்கள் வாசல் பக்கம் கூர்ந்து கவனித்தனர்.

உட்கார்ந்திருந்த எல்லா எழுத்தாளர்களும் திரும்பிப் பார்த்தார்கள்.

அவனும் திரும்பினான்.

துள்ளிக் குதித்தான்.

தன்னந்தனியாக அவன் மட்டும், ''அண்ணா வாழ்க!'' என்று கத்தினான்.

அண்ணாத்துரை வேகமாக மாநாட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

அவரை மேடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவரைப் பேசச் சொல்வார்களோ, இல்லையோ என்றொரு பயம் அவனுக்கிருந்தது.

''அண்ணாவைப் பேசச் சொல்லுங்கள்'' என்று அவன் கத்தினான்.

மேடையில் உட்கார்ந்திருந்த நாரணதுரைக்கண்ணன்' ''அவர் பேசத்தான் போகிறார்'' என்கிற பாவனையில் கையைக் காட்டினார்.

அவன் காதுகளைத் நீட்டிக்கொண்டு அமர்ந்தான்.

''அண்ணாத்துரை பேசுவார்'' என்று, 'இந்துஸ்தான்' நாராயண ஐயங்கார் அறிவித்தார்.

அண்ணாத்துரை எழுந்து ஒலிபெருக்கியின்முன் வந்தார்.

எழுத்தாளர்களைப் பற்றித்தான் அவர் பேசினார். எப்படி எழுதவேண்டும் என்பதை விளக்கினார்.

தலையிலே மெத்தை விரித்து அதன் மீது குட்டுவது போல் சில பத்திரிகாசிரியர்களையும் குட்டினார்.

புராண இதயத்திற்கும், அறிவுள்ளத்திற்கும் இடையே உள்ள பேதங்களைச் சுட்டிக்காட்டினார்.

நாமக்கல் கவிஞர் தலையிலே ஒரு தட்டு, டி. எஸ். சொக்கலிங்கத்தின் உச்சி குளிரும்படி இரண்டு வார்த்தை, இவை கார் காலத்து மழைச் சரம் போல பேச்சோடு பேச்சாக வந்து விழுந்தன.

''விஞ்ஞானத்தைப் பற்றிக் கேட்டால் தமிழனுக்

குத் தெரியாது. 'எமனுக்கு வாகனம் என்ன?' என்ருல் 'எருமைக் கடா' என்பான்'' என்று அவர் சொன்ன கருத்து, அங்கே சொன்னதுதான்.

மூடத்தனமான பக்தியில் ஆழ்ந்திருக்கும் எந்த மனிதனும், தன் தவற்றுக்கு வெட்கித் தலைகுனியும்படி அமைந்திருந்த அந்தப் பேச்சு எழுத்தாளர்களையும் கவர்ச்சித்தது.

ஆனுலும் எந்த எழுத்தாளரும், அந்த எண்ணங்களுக்குச் சாதகமாகத் தங்களைக் காட்டிக்கொள்ளவில்லை.

அவன் ஒருவன் மட்டும் அந்தப் பேச்சினுடைய சுதியில் லயித்துக் கிடந்தான்.

அதே போல், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் மாநாட்டில் வந்த இரண்டொரு தீர்மானங்களில் காட்டிய பிடிவாதமும் நேர்மையும் அவனைக் கவர்ந்தன.

மாநாடு முடிந்த பிற்பாடு, அப்போது லிங்கிச் செட்டித் தெருவிலிருந்த ம. பொ. சி. அவர்களின் 'தமிழ் முரசு' அலுவலகத்திற்குச் சென்ருன்.

கவிஞர் குயிலனும் மற்றையோரும் உடன் வந்தார்கள்.

பல பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தார்கள்.

திரு. ம. பொ. சி. அவர்கள் ஓரளவிற்குத் தீவிரமாகக் காங்கிரசை எதிர்த்த காலமது.

அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, வேறு சில விஷயங்களையும் அவன் தெரிந்து கொண்டான்.

வெந்தும் வேகமாலும் பரிமாறப்பட்ட உணவு போல், சில விஷயங்கள் அவனுக்கு விளங்கியும் விளங்காமலும் இருந்தன.

தனது பக்குவமற்ற தன்மைக்கு அவன் வெட்கப் பட்டான். பதினெட்டு, பத்தொன்பது வயதில் பெரும் பக்குவமடைய முடியாது. ஆனுல், அவனுக்கிருந்த ஆசை அண்ணுத்துரையைப் போலவும் ம. பொ. சி. யைப் போலவும் தனக்குப் பக்குவமில்லையே என்று அவனை வருந்தச் செய்தது.

சென்னையில் பெற்ற புதிய அனுபவங்களோடு அவன் இராயவரத்திற்குத் திரும்பினுன்.

எழுத்தாளர் மாநாட்டு விபரங்களை அவன் 'தாய் நாடு' இதழில் எழுதினுன்.



அக்காலத்தில் சுயமரியாதைக்காரர்களின் பேச்சை எந்தப் பத்திரிகைகளும் பிரசுரிப்பதில்லை.

ஏதாவது ஒரு மூலையில் தங்களைப் பற்றிய செய்தி வந்து விட்டால், சுயமரியாதைக்காரர்கள் எல்லோருமே அதை வாங்கிப் பார்ப்பார்கள்.

அண்ணுத்துரையின் பேச்சைப் பற்றி அவன் எழுதியிருந்த இதழ், அதன் சக்திக்குமேல் விற்பனையாயிற்று.

அந்தக் கட்டுரைக்குக் கீழே அவன் தன் பெயரை 'வணங்காமுடி' என்று போட்டிருந்தான்.

பின்னெரு சமயம் கலைவாணரோடு சென்று அவன் அண்ணுத்துரையைப் பார்த்தபோது, அறிமுகப் படலம் முடிந்ததும் அண்ணுத்துரை கேட்ட முதல் கேள்விகூட, ''தாய் நாடு இதழில் எழுதியது நீங்கள்தானு?'' என்பதுதான். இதனைப் பின்னர் விவரிப்பேன்.

அந்தக் கட்டுரைக்குப் பிறகு புதுக்கோட்டையில் அவனுக்குச் சில புதிய நண்பர்கள் அறிமுகமானுர்கள்.

அப்போது 'பொன்னி' என்ற பத்திரிகையை நடத்தி வந்த தோழர் முருகு. சுப்பிரமணியன் அவர்களும், தோழர் பெரியண்ணன் அவர்களும் அவனுக்கு வாய்த்த இனிய நண்பர்களாவார்கள்.

பெரியாரை அவர்கள் கடவுளாகக்கொண்டாடியவர்கள்.

அண்ணுத்துரையை உயிருக்குயிராக நேசித்தவர்கள்.

திராவிடர் கழகத்தை ஆதரிக்கும் ஏடுகள் மிகக் குறைவாக இருந்த காலம்.

அவையும் அழகில்லாமல், அச்சுப் பிழை மிகுந்து வெளி வந்தன.

அந்த நேரத்தில் வண்ண முகப்பு அட்டை போட்டு அழகாக நடந்த இதழ் 'பொன்னி' தான்.

பத்திரிகைத் துறையில் மற்றவர்கள் செய்து காட்டாத புதுமை எல்லாம் அவர்கள் செய்து காட்டினுர்கள்.

இன்றும் தமிழகத்தில் சிலரை அச்சுக் கலை நிபுணர்கள் என்று தேர்ந்தெடுத்தால் அவர்களில் பெரியண்ணன் மிக முக்கியமானவராக இருப்பார்.

'பொன்னி'யின் ஆசிரியர் முருகு. சுப்பிரமணியம் குழந்தையுள்ளமும், குளிர்ந்த சுபாவமும் கொண்டவர்.

'தாய்நாடு' இதழ் கட்டுரையைப்பற்றி அவனிடம் வெகுவாகப் பாராட்டினார்.

'பொன்னி' ஆரம்பமாவதற்கு முன்னால் காரைக்குடி 'குமரன்' பத்திரிகையில் அவர் ஆசிரியராயிருந்தபோது, அவன், அவருக்கு ஒரு கதை அனுப்பியிருந்தான்.

அந்தக் கதையின் தலைப்பு 'ஜெய்ஹிந்த்' என்பதாகும்.

அதைத் தான் பிரசுரித்ததையும் அவர், அவனுக்கு நினைவூட்டி, ''இனி நீங்கள் 'ஜெய்ஹிந்த்' காரராக இருக்க மாட்டீர்களே?'' என்று கேட்டார்.

அவன் அடக்கத்தோடு தனக்கு நேதாஜியின் மீதுள்ள பக்தியை வெளிப்படுத்திக் கொண்டான்.

அவர் அதிலிருந்தும் அவனை மாற்ற முயற்சி செய்தார்.

'பொன்னி'க்குக் கதை எழுதும்படி கேட்டார். அவன் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான்.

அந்தக் காலத்து 'திராவிடர் கழக'த்தாரின் கதைகளை அவன் படித்திருக்கிறான்.

பக்தியுள்ள பெண்களை ஆபாசமாகக் கேலி செய்வது அந்தக் கதைகளில் பிரதான அம்சமாக விளங்கிற்று.

அவனும் அதே பாணியில் 'ஆலமரத்தைச் சுற்றிய வளுக்கு அடி வயிறு வலித்த கதை' 'ஜமீன்தார் மகளின் காமக் கதை' என இரண்டொரு கதைகள் எழுதினான். (தலைப்புகள் இவையல்ல, வேறு.)

நல்ல வேளையாக அந்த இரண்டொன்றோடு அவற்றை நிறுத்திவிட்டான்.

பின் நாளில் அவனை யாரும் கேலி செய்ய முடியாதபடி பண்புள்ள கதைகள் எழுதத் துவங்கினான்.

அப்போது 'பொன்னி' இதழில் 'பாரதிதாசன் பரம் பரை' என்றபெயரில் புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தினார்.

அந்தப் பகுதிக்கு அவனும் ஒரு கவிதை எழுதினான்.

நான்காவது நாள் அந்தக் கவிதை அவனுக்கே திரும்பி வந்தது. கூடவே கீழ்க்கண்டவாறு ஓர் இணைப்புக் கடிதமும் இருந்தது.



''அன்புள்ள நண்பருக்கு,

கதையனுப்பும்படி கேட்டிருந்தேன்; கவிதை அனுப்பி யுள்ளீர்கள். தயவு செய்து கதையே அனுப்பினால் நலம்,

அன்பன்

முருகு சுப்பிரமணியன்.''

தன் கவிதைக்குக் கிடைத்த மரியாதை அவனை அதிர்ச்சி படைய வைத்தது! அந்த அதிர்ச்சிதான் கவிதை எழுது வதில் அதிக ஆசையை அவனுக்கு உண்டாக்கிற்று.

அதற்குப் பிறகு அவன் எவ்வளவோ கவிதைகள் எழுதினான். ஆனால் 'பொன்னி' மட்டும் ஒரு கவிதையைக் கூட வெளியிடவில்லை.

இந்த நிலையில் 'மேதாவி'ப் பத்திரிகையில் அவனது வாழ்வு முடியத் தொடங்கிற்று.

அப்போது அதே ஊரில் இராம. தியாகராசன் என்பவர், 'திரை ஒலி' 'பாப்பா' என்று இரண்டு பத்திரிகைகள் நடத்தி வந்தார்.

'திரை ஒலி'யில் பொறுப்பேற்றுக்கொள்ளும்படி அவர் அவனை அழைத்தார்; அதற்குத் தோதாக இன்று தமிழரசுக் கழகத்தில் துணைப் பொதுச்செயலாளராக இருக்கும் தோழர் கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் 'மேதாவி'க்கு ஆசிரியராக வந்தார்.

அவனும் 'திரை ஒலி'க்குத் தாவினான்.

'திரை ஒலி' வாழ்க்கை அவனுக்குப் புதிய அனுபவங் களைத் தரவில்லை.

பழைய பசி, பட்டினியையே அவனுக்குப் புதுப்பித்துக் காட்டியது.

மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் என்று பெயர். ஒரு மாதம்கூட அதை முழுசாகக் கையிங் வாங்கியதில்லை.

இந்த நிலையில் புதுக்கோட்டை ஹாஸ்டலில் பட்ட கடனும் எதிரொலிக்கத் துவங்கிற்று.

அந்தக் கடனை ஒரு வழியாகத் தீர்த்துவிட்டு அவன் அமைதியுற்ற நேரத்தில், புதிய கடன் தொல்லை உள்ளூரி லேயே ஆரம்பமாயிற்று.

பத்திரிகையில் பலமாதங்கள் சம்பளமே கிடைக்கவில்லை.

ஒருநாள் பத்திரிகை முதலாளி அவனை யழைத்து சென்னைக்குப் போவதற்கு ஆளில்லை என்றும், போய் 'ஆர்ட் பேப்பர்' வாங்கி வரும்படியும் இருநூறு ரூபாய்களை அவன் கையில் கொடுத்தார். அவன் மகிழ்ச்சியோடு அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டான். மனத்திற்குள்ளேயே அந்தப் பணத்தைத் தன் கணக்கில் வரவு வைத்துக்கொண்டான். இராயவரத்திற்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு சென்னைக்கு ரயிலேறினான்.

'திரை ஒலி' உரிமையாளர் இராம. தியாகராசன் அவர்களுக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. ஒருவர் நான் சென்ற இதழில் குறிப்பிட்டுள்ள இராம. சீனிவாசன் அவர்கள். மற்றொருவர், அன்று மிகப் பிரபலமாக விளங்கிய திரு. வை. கோவிந்தன் அவர்கள்.

திரு. வை. கோ. அவர்கள் மிகுந்த இரக்க குணம் வாய்ந்தவர்! அவர் நடத்திய 'சக்தி' காரியாலயம் அன்று மிகப் பெரிய புத்தக நிலையமாக விளங்கிற்று. பெரும் நூல்களை எல்லாம் அவரேதான் வெளியிட்டு வந்தார்.

அங்கு உதவி ஆசிரியர் கூட்டமே ஒன்றிருந்தது.

தன் தம்பியின் பத்திரிகை சம்பந்தப்பட்டவர்கள் வந்தாலும், அவர்களை அங்கேயே தங்க அனுமதிப்பார்.

அவரது அலுவலகம் அப்போது 'சிவகங்கா ஹவுஸ், என்று அழைக்கப்பட்டதும், இப்போது திரு. எஸ். எஸ். வாசன் அவர்களின் இல்லமாக இருப்பதுமான ஒரு கட்டிடத்திற்கு எதிரே 'மோபரீஸ்' ரோட்டில் இருந்தது.

அங்கே அவன் வந்து சேர்ந்தபோது, தனது பழைய நண்பர் வலம்புரி சோமநாதனும் அங்கே துணையாசிரியராக இருக்கக் கண்டான். மற்றும் அவரோடு இன்று 'குமுதம்' துணையாசிரியராக இருக்கும் திரு. ரா. கி. ரங்கராஜன், 'கல்கண்டு' ஆசிரியராக இருக்கும் தோழர் தமிழ்வாணன், தோழர் கா. பம்பாபதி பி. ஏ., பி. எல். ஆகியோர் இருந்தனர்.

இன்று 'மஞ்சரி' ஆசிரியராயிருக்கும் திரு. தி. ஜ. ர. அவர்கள்தான், அன்று 'சக்தியின்' ஆசிரியர்.



# மனப் போராட்டம்

'சக்தி' காரியாலயத்தில் அவன் தங்கிய நாட்கள் மிகவும் இனிமையான நாட்கள். அந்த நாட்களிலேதான் அவன் வாழ்க்கையில் பல நிலைகளைக் கண்டான்.

சில நல்ல பழக்கங்கள், சில கெட்ட பழக்கங்கள் அந்தக் காலத்திலேதான் ஏற்பட்டன.

ஒருநாள்.........

அவன் கையில் நூற்றைம்பது ரூபாய்கள் இருந்தன.

அன்று இரவு ஒன்பது மணியிருக்கும்.

மோபரீஸ் ரோட்டில் இருந்த பஸ் ஸ்டாப்பில் அவன் நின்று கொண்டிருந்தான்.

ஒரு ரிக்ஷா வந்து அவன் பக்கத்தில் நின்றது.

"சார்!"

அவன் திரும்பிப் பார்த்தான்.

ரிக்ஷாக்காரன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு "வேணுமா?" என்று கேட்டான்.

"பதினெட்டு வயது!"

அவன் விழித்தான்.

"புதுப் பொண்ணு சார்!"

அவனுக்குப் புரிந்தது.

விலைமாதர்களைப்பற்றி அவன் அனுபவமே இல்லாதவன் அல்ல. ஆனாலும் இப்படித் திடீரென்று ஒருவன் அவனது நினைவைத் திருப்பியது அவனுக்குப் புதுமையாக இருந்தது.

சென்னை நகரம் அந்நாளில் இன்றிருப்பதுபோல் அவ்வளவு நெரிசலாக இருந்ததில்லை.

இந்த எட்டாண்டு காலத்திற்குள்ளேதான் குடியேற்றம் அதிகம்.

அவன் நின்று கொண்டிருந்த 'மோபரீஸ்'ரோட்டிலேயே கூட போக்குவரத்துக் குறைவாகவே இருந்தது.

ரிக்ஷாக்காரன் ஒரு பெண்ணைப்பற்றி விரிவாக வர்ணித்தான்.

மறுக்கவும் முடியாமல், போகவும் மனமில்லாமல் அவன் தயங்கினான்.

கடைசியில் துணிந்து ரிக்ஷாவில் ஏறி விட்டான்.

ரிக்ஷா போகப் போக அவன் மனத்தில் பயம் கவ்வியது.

''யாராவது போலீஸ்காரர்கள் பிடித்துவிட்டால்... சே...எவ்வளவு அவமானம்!''

இறங்கி விடலாமென்று நினைத்தான்.

அவன் நினைக்க நினைக்க ரிக்ஷா போய்க்கொண்டே இருந்தது.

அவன் நினைப்பதை ரிக்ஷாக்காரன் புரிந்துகொண்டானோ என்னவோ, அவனுக்குத் தைரியம் கொடுக்க ஆரம்பித்தான்.

''உன்னைப் பார்த்தால் புதுசுபோல இருக்கு சார்......நீ எதுக்கும் கவலைப்படாதே சார். போலீசுக்கு எல்லாம் நாங்க அப்பப்ப 'காசு' கொடுத்திடுவோம். நம்ப ரிக்ஷாக்கிட்டே எவனும் வரமாட்டான். நாங்களெல்லாம் உயிரைக் கொடுத்துக் காப்பாத்துவோம் சார். துரோகம் பண்ண மாட்டோம். ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு இந்தக் காரியம் செய்கிறோம்...''

நெஞ்சம் 'திக்' 'திக்'கென்று அடித்துக்கொள்கிற நிலையில், இதையும் அவன் மௌனமாகக் கேட்டுக்கொண்டு வந்தான்.

ரிக்ஷா 'லாயிட்ஸ் ரோட்'டில் திரும்பி 'மவுண்ட்ரோட்'டில் ஏறிற்று.



ஆயிரம் விளக்கில் ஒரு குறுகலான சந்துக்குள் புகுந்தது.

இன்று 'ஹோட்டல் இந்தியா' என்று அழைக்கப்படும் ஹோட்டல், அன்று 'ஹோட்டல் ரோயல்ஸ்' என்ற பெயரிலிருந்தது.

மதுவும் வினியோகிக்கப்படும் ஆங்கில 'பாணி' ஹோட்டல் அது. [அக்காலத்தில் 'மதுவிலக்கு' இல்லை.]

அந்த 'ஹோட்ட'லுக்கு எதிரே இருந்த சந்திலேதான் ரிக்ஷா நுழைந்தது. அதிலிருந்து இன்னொரு சந்திற்குள் நுழைந்ததும் ஒரு 'காம்புவுண்டு' தெரிந்தது.

அந்தக் 'காம்பவுண்டி'ற்குள் வரிசையாக நான்குவீடுகள். அவ்வளவும் நாட்டு ஓடுகள் வேயப்பட்ட பழங் கட்டிடங்கள். எல்லா வீட்டிற்கும் பொதுக் கதவு 'காம்பவுண்டு' கதவுதான், ஒரு வீட்டிற்கும் தனிக் கதவு கிடையாது. கோணிகளைத் தைத்துத் தொங்க விட்டிருந்தார்கள்.

ரிக்ஷா காம்பவுண்டிற்குள் நுழைந்து ஒரு வீட்டின் முன் நின்றது.

மற்ற வீட்டுக்காரர்களெல்லாம் 'குசு குசு'வென்று பேச ஆரம்பித்தார்கள்.

எல்லா வீட்டுக்காரர்களோடும் ரிக்ஷாக்காரன் பழகிய விதத்திலிருந்து நாலு வீடுகளிலுமே விலைமாதர்கள் இருப்பது தெரிந்தது.

அவன் நுழைந்த வீட்டிற்குள் ரிக்ஷாக்காரனால் வர்ணிக்கப்பட்ட பெண் இருந்தாள். அவள் கருப்புதான்; என்றாலும் நல்ல உடற்கட்டு.

அவன் சொன்ன வயதுகூட சரியேன்றே தோன்றிற்று.

ஒரு 'ஜமுக்காளம்' விரிக்கப்பட்டது.

அவன் பயத்தோடு அதிலே அமர்ந்தான்.

இருபத்தைந்து ரூபாய் கொடுக்கும்படி ரிக்ஷாக்காரன் சொன்னான்.

பணம் கைமாறியது.

அவன் அவளோடு வெகு நேரம்வரை பேசிக்கொண்டிருந்தான்.

அவள் கல்யாணமானவள். ஆன இரண்டாவது மாதமே கணவனால் கைவிடப்பட்டவள்.

அடைக்கலம் புகுந்தாள் ஒருவனிடம்.

அவன் அவளை இந்தத் தொழிலுக்குப் பயன்படுத்தி விட்டான்.

ஒருவனிடம் வாழவே அவள் விரும்பினுள்.

அந்தப் பாக்கியம் அவளுக்குக் கிடைக்கவில்லை என்று வருந்தினுள்.

அவள் கேட்ட ஒரே ஒரு கேள்வி அவனைத் திணற வைத்தது. "நீயே என்னை வைத்துக் கொள்ளுகிருயா? ஒழுங்காக இருந்து விடுகிறேன்" என்ருள்.

எந்த ஒரு மனிதனும் சிந்திப்பது இந்த இடத்திலேதான்.

விபச்சாரம் தீய பழக்கம்; அது ஒழிக்கப்படவேண்டியது மெத்த சரி.

எத்தனை சீர்திருத்த வீரர்கள் வழி தவறிய பெண்ணுக்கு வாழ்வு தரக்கூடியவர்கள்?

பேசுவதற்கு சுவையாக இருக்கிறது.

எழுதிப் பார்த்தால் இரத்தம் கொதிக்கிறது.

நடத்திக்காட்ட நேரும்போது சித்தம் தடுமாறுகிறது.

"செய்யுங்கள்" என்று ஊருக்குச் சொல்ல முடிகிறதே தவிர, தானே செய்ய முடிவதில்லை.

சமுதாயத்தின் மேல் தளத்தில் இருக்கிறவர்கள், விபச்சாரத்தை ஊக்குவிக்கிருர்கள்.

ஆனுல் அதற்குக் காரணமானவர்கள் எல்லாத் தளங்களிலும் இருக்கிருர்கள்.

[பின் நாளில் அவனும் அவனது அரசியல் நண்பர் ஒருவரும் ஒரு பெண்ணைச் சந்தித்தபோது, உலகம் தெரிந்த அந்தப் பெண் ஒரே ஒரு வார்த்தை சொன்னுள்.

"சினிமாவில் உங்கள் கருத்தைக் கேட்டிருக்கிறேன். மேடையில் உங்கள் முகத்தைப் பார்த்திருக்கிறேன். நேரில் இப்பொழுதுதான் பார்க்கிறேன்."

இதில் எவ்வளவோ அர்த்தங்களை அவள் அடக்கி விட்டாள்.

இதனைப் பின்னர் விரிவாகவே எழுதுவேன்.]

வாழ ஆசைப்படும் ஒரு பெண்ணின் இதயதாகம் அவனுக்குப் புரிந்தது.



ஆனுல் சாதியையும் சமூகத்தையும் தாண்டி தீவிரமாகச் செயல்படக் கூடியவனுக அவன் இல்லை.

அவளை நம்பவும் அவன் தயாராக இல்லை.

நம்பிக்கை பிறக்கக்கூடிய முறையில் அவள் நடந்து காட்டினுள்.

ஆனுலும் "சாகசம் செய்பவர்கள்" என்ற பெயரைப் பெற்றுவிட்டவர்கள் பேசுகிற உண்மைகூட, சாகசம் போலவே தோன்றும்.

இரவு பன்னிரண்டு மணியளவில் அவன் அந்த வீட்டை விட்டு வெளியேறினுன்.

அந்தப் பெண்ணின் முகம் அவன் மனத்திலே நின்றது.

தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை.

வேறு யாரும் செய்யாத காரியத்தைத் தான் செய்து விட்டதைப்போல அவனுக்கு ஒரு பிரமை.

சீர்திருத்த உலகத்தை மனம் நாடிக் கொண்டிருந்த வேளையில் இது நடந்ததால், சீர்திருத்தத்திற்குத் தான் லாயக்கானவனு என்று அவன் சிந்திக்க ஆரம்பித்தான்.

பலநாள்வரை இந்தக் கேள்வி அவன் மனத்திலிருந்தது.

அவன் அரசியல் இயக்கம் ஒன்றில் புகுந்து அதிலிருந்த தலைவர்களோடெல்லாம் பழகிய பிற்பாடுதான், இந்தக் கேள்வியிலிருந்து விடுபட்டான்.

விபசாரத் தொழில் நடக்கின்ற இடங்களுக்கு அவன் போனுலும், அங்கே இருப்போரை அனுதாபத்துடன்தான் அவன் கவனிப்பான்.

ஆனுல் அவனது பின் நாளைய நண்பர்கள் பயமுறுத்தியே காரியம் சாதிக்கிறவர்களாக அமைந்தார்கள்.

'சீர்திருத்த' உலகமே அப்படித்தானிருக்குமென்று அவனுக்கு அப்போது தெரியாதாகையால், இரவெல்லாம் அவன் சிந்தித்தான்.

பொழுது விடிந்து உடலைச் சுத்தமாக்கிய பிற்பாடு, உள்ளமும் சுத்தமாகி விட்டதுபோல் தோன்றிற்று.

இந்தப் புனிதத் தன்மையும் அதைப் பற்றிய சிந்தனையும் சில மணி நேரமே நீடித்தன.



# மயக்கத் துவக்கம்

அன்று மாலையே அவனது நண்பர்கள், அவனை 'மவுண்ட்ரோட்'டிலிருந்த ஒரு மதுக் கடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் ஒன்றும் அடிக்கடி குடிப்பவர்கள் அல்ல. எல்லோருக்குமே அது புது அனுபவம்.

'பசட்டோ ஹோட்டல்' அந்த ஏழை எழுத்தாளர்களை வரவேற்றது.

மூன்று நண்பர்களும் அவனுமாக ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்தார்கள்.

அப்போது பக்கத்து மேஜைக்கு அருகிலேயிருந்த நாற் காலியில் ஒருவர், பாதி மயங்கிய நிலையில் அமர்ந்திருந்தார்.

அவனுக்கு அவர் அறிமுகமானவரல்ல என்றாலும், மற்ற நண்பர்களுக்கு அவர் அறிமுகமானவர்.

அவருக்கு அவர்கள் வணக்கம் தெரிவித்தார்கள்.

அவர்தான் கவிஞர் கம்பதாசன்.

''இதில் பழக்கமுண்டா?'' என்று அவர் கேட்டார்.

''முதல் நாள்...'' என்றான், அவன்.

''பழகாதீர்கள். பிடித்துக் கொண்டால் விடாது'' என்றார் அவர்.

''இன்று மட்டும்...நானே விட்டு விடுவேன்'' என்றான் அவன்.

''அப்படியென்றால் 'பீர்' சாப்பிடுங்கள். அது ஆபத் தில்லாத பானம்'' என்றார் அவர்.



பொன் வண்ணத்திலே அந்த மது கண் திறந்து வைக்கப்பெற்றது.

அன்று அது பார்த்த பார்வை என்றும் தொடரு மென்று அவன் நினைத்தானா என்ன?

சுவைத்தான், கசந்தது.

சுவைக்கச் சுவைக்கக் கசப்புக் குறைந்தது.

நேரம் ஆக ஆக அந்தத் 'தெய்வ'த்தின் வரம் பூரண மாகக் கிடைத்தது.

உலகம் மிகச் சாதாரணம் என்ற அபிப்பிராயம் உரு வாகிவிட்டது.

நண்பர்களோடு தெருவிற்கு வந்தான்.

''நான் பாட்டுப் பாடட்டுமா?'' என்று கேட்டான்.

''ஆரம்பமாகி விட்டது, 'தெய்வ'த்தின் வேலை'' என்றார் ஒரு நண்பர்.

''இல்லை, நான் நிதானமாகத்தானிருக்கிறேன்'' என்றான்.

''அந்தச் 'சந்நிதானத்'தில் நிதானமேது?'' என்றார் அவர்.

''ஆஹா! இதல்லவா உலகம்'' என்றான் அவன்.

''உமர்கய்யாம் சென்னைக்கு வந்துவிட்டார்!'' என்றார் நண்பர்.

''எப்போதும் இப்படியே இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்'' என்றான் அவன்.

சம்பளம் எழுபத்தைந்து ரூபாய்தான் என்பதை அவர் கவனப்படுத்தினார்.

'மோபரீஸ்' வழியே போகிற பஸ் ஒன்று வந்து நின்றது.

ஒரு கூட்டம் அதற்குள்ளே முண்டியடித்து நுழைந்தது.

''சீ...இந்தப் 'பஸ்'ஸில் மனுஷன் போவானா? ஏறுங்கள் ஆளுக்கொரு ரிக்ஷாவில்...''

நான்கு ரிக்ஷாக்கள் பாதையிலே; அதில் நான்கு பேர் போதையிலே...

'மோபரீஸ் ரோட்' வருகிற வரைக்கும் அவன் பாடிக் கொண்டே வந்தான்.

சாதாரண காலத்தில் அவன் பாட்டை யாரும் சகிக்க மாட்டார்கள்: அத்தகைய சாரீரம்.

அப்பொழுது அவன் பாடியதை நண்பர்கள் ரசித்துக் கேட்டார்கள்.

காரணம், அவனா பாடினான்? 'அது' வல்லவா பாடிற்று!

இதோ சக்தி காரியாலயம் வந்துவிட்டது.

''என்னையா, எல்லாரையும் எங்கிருந்து தூக்கிக் கொண்டு வருகிறீர்கள்?'' என்று ஒரு குரல் கேட்டது.

சக்தி காரியாலயப் பொருளாளர் அழகப்பன், சட்டையைக் கழற்றிவிட்டு நின்று கொண்டிருந்தார்.

''நாங்கள் இப்போது எங்கள் வசத்திலே இல்லை'' என்றார் ஒரு நண்பர்.

''ஆஹா...! டீ குடிக்கவே காசு கிடையாதே! இதற்கு ஏது பணம்?'' என்று அவர் கேட்டார்.

''எல்லாம் ஐயன் அருள்'' என்று அனைவரும் அவனைக் கையைக் காட்டினார்கள்.

நாட்கள் நடந்தன.

பணம் கரைந்தது.

பட்டினி தொடர்ந்தது.

எல்லா எழுத்தாளர்களுக்குமே வறட்சி.

யாரிடம் யார் கடன் வாங்குவது?

இந்த நிலையில் பத்திரிகை உரிமையாளர் சென்னைக்கு வந்து சேர்ந்தார்,

பணத்தைச்செலவுசெய்து விட்டதற்காகக்கோபித்தார்.

பத்திரிகை வேலையிலிருந்து அவன் விடைபெற்றுக் கொண்டான்.

ஆனாலும் சக்தி காரியாலயத்திலேயே தங்கினான்.






அப்போது சேலத்தில் 'மாடர்ன் தியேட்டர்'ஸார் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்தி வந்தார்கள்.

அதன் பெயர் 'சண்டமாருதம்' என்பது.

அதிலொரு வேலை காலியாகப் போவதாக அவனது நண்பர் சோமநாதன் சொன்னார்.

அதற்கொரு விண்ணப்பம் எழுதினான்.

நான்காவது நாள் பதில் வந்தது.

நேரில் வரும்படி குறித்திருந்தார்கள்.

அவன் மிகவும் மகிழ்ச்சி யடைந்தான்.

ஆனால் ரயிலுக்குப் பணம்...? எவ்வளவோ பேரைக் கேட்டான்; கிடைக்கவில்லை.

அந்நாளில் தங்கசாலைத் தெருவில் 'சாயிபாபா புத்தகாலயம்' என்றிருந்தது.

அதன் அதிபர் காலண்டர்கள், பஞ்சாங்கங்கள், ஆண் பெண் இரகசிய உறவு பற்றிய புத்தகங்கள் போன்ற பல ரகமான புத்தகங்களை வெளியிடுபவர்.

எந்தக் கையெழுத்துப் பிரதியையும் விலைக்கு வாங்கிக் கொள்ளுவார். படித்துப் பார்ப்பதில்லை; நிறுத்துப் பார்ப்பது தான் வழக்கம்.

அவனது நண்பர்கள் பலர் அவசரத்திற்கு எதையாவது எழுதிக்கொடுத்து அங்கேதான் பணம் வாங்குவது வழக்கம்.

அந்தப் பட்டியலில் கவிஞர் கம்பதாசன், கோ. த. சண்முகசுந்தரம் எல்லோருமே இருந்தார்கள்.

அந்தப் புத்தகாலயம் அவனது நினைவுக்கு வந்தது.

அதுவரைக்கும் அவன் பத்திரிகையில் 'ஆடப் பிறந்த வர்கள்' என்ற தலைப்பில், நாட்டியக்காரர்களான கோபி நாத், உதயசங்கர் ஆகியோருடைய வரலாறுகளை எழுதி யிருந்தான்.

அவற்றைத் தொகுத்தான்.

'சக்தி' பொருளாளரிடம் இருந்து கஷ்டப்பட்டு இரண்டு ரூபாய் கடன் வாங்கினான்.

இரண்டு இரவுகள், ஒருபகல் முழுதும் வெறும் டீயை குடித்துக்கொண்டே மற்றும் பல நாட்டியக் காரர்களுடைய வரலாற்றை எழுதினான்.

தூக்கக் கலக்கம், பசி மயக்கம் இவற்றோடு கை யெழுத்துப் பிரதியைக் கையிலெடுத்துக்கொண்டு தங்க சாலைத் தெருவரை நடந்தே போனான்.

அவன் போன நேரத்தில் நல்ல வேளையாக சாயிபாபா புத்தகாலய அதிபர் சண்முகம் அங்கேயே இருந்தார்.

அவரிடம் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்தான்.

அதை அவர் தூக்கிப் பார்த்தார். "எத்தனை பக் கம் வரும்" என்று கேட்டார்.

புத்தக வடிவில் நூறு பக்கம் வருமென்றான்.

"மொத்தம் ஐம்பது ரூபாய்தான், தருவேன். இப் போது முப்பது தருகிறேன். பிரசுரித்த பிற்பாடு இரு பது தருகிறேன்" என்றார்.

அவன் உடனே சம்மதித்து விட்டான்.

மூன்று பத்துரூபாய் நோட்டுகளை எடுத்துக்கொடுத்தார்.

அந்த நோட்டுகள்......

இன்று வரை அவன் சம்பாதித்த பல லட்ச ரூபாய் களும் அந்த முப்பது ரூபாய்க்கு ஈடாகமாட்டா.

(அன்று அவன் அவரைத் தேடிச்சென்ற அதே நிலையில், பின்நாளில் அவர் அவனைத் தேடிவந்த உருக்க மான நிகழ்ச்சியைப் பின்னர் விவரிப்பேன்.)

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன் 'பிரௌன்



டாக்கீஸ்' அருகிலேயிருந்த ஹோட்டலுக்கு ஓடினான்.

அது ஒரு தனிக் கட்டிடம்.

சுற்றிலும் குதிரை வண்டிகள் நிற்குமிடம்.

அந்த ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அவசர, அவசர மாக ஆறு மசால் தோசை என்று 'ஆர்டர்' கொடுத்தான்.

'சர்வர்' திகைத்தார்.

"நீங்கள் ஒருவர்தானே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எனக்கு மட்டும்தான் ஆறு" என்றான் அவன்.

தோசைகள் வந்தன.

அவற்றின் ருசியை வர்ணிக்க முடியுமா?

"சாயிபாபா சண்முகம்! நீ நீடூழி வாழவேண்டும்" என்று வாழ்த்தினான்.

அன்று இரவே நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சேலத்திற்குப் புறப்பட்டான்.

'நீலகிரி எக்ஸ்பிரஸ்'ஸில் ஏறினான்.

அந்த ரயிலில் ஒரு ரசமான சம்பவம் நடந்தது.

அவன் உட்கார்ந்திருந்த பெட்டியில் சுமார் நாற் பது ஐம்பது பேர் இருந்திருப்பார்கள்.

அவர்கள் யாரும் அவனுக்கு அறிமுகமானவர்களாக இல்லை.

கொஞ்ச நேரம் ஒரு பேப்பரைப் படித்துக்கொண்டிருந் தான். அப்படியே அவனது கண்கள் கீழே பார்த்தன.

ஒரு 'டிக்கட்' அங்கே கிடந்தது.

சென்னையிலிருந்து சேலத்திற்குப் போவதற்குள்ள 'டிக்கட்' அது.

அந்த டிக்கட்டைக் கையில் எடுத்துக்கொண்டு "இது யாருடைய டிக்கட்? யாருடைய டிக்கட்?" என்று ஒவ் வொருவரையாக விசாரித்தான். எல்லோரிடமும் அவரவர் களுடைய 'டிக்கட்'டுகள் பத்திரமாக இருந்தன.

"யாரோ ஓர் அப்பாவி, 'டிக்கட்'டைப் போட்டு விட் டான் போலிருக்கிறது" என்று 'டிக்கட்'டை இழந்த

வனுக்குத் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

கடைசியில் 'டிக்கட்' பரிசோதகர் வந்து அவனுடைய 'டிக்கட்'டைக் கேட்டார்.

தேடினான், தேடினான்; அகப்படவில்லை.

உடனே பக்கத்திலிருந்த ஒருவர் ''நீங்கள் கீழே கிடந்து எடுத்து 'டிக்கட்' உங்கள் 'டிக்கட்'டுதான் சார்'' என்றார். ஆமாம், அவனால் அனுதாபம் தெரிவிக்கப்பட்ட அப்பாவி அவனாகவே யிருந்தான்.

'டிக்கட்' பரிசோதனை முடிந்தது.

பழையபடியும் 'டிக்கட்'டை கீழே போடாமலிருப்பதற்காக இடுப்பிலே முடிந்து கொண்டான்.

இது சேலம் சந்திப்பு.

மிக உற்சாகத்தோடு இறங்கினான், அவன்.

''இந்த ஊரிலேதான் நல்ல உத்தியோகம் பார்க்கப் போகிறோம்'' எனும் எண்ணம் அவனுக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது.

மறுநாள் காலையில் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' விநியோக இலாக்கா நிர்வாகியாக இருந்த தாமோதரனைப் பார்த்தான்.

திரு. டி ஆர். சுந்தரத்துடன் பேசினான்.

அந்த நாளில் திரு. சுந்தரத்தைக் கண்டால் எல்லோருமே நடுங்குவார்கள்.

அவருடைய சுபாவத்தை அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

மிகவும் பயத்துடனேயே நின்றான்.

வேலை கிடைத்துவிட்டது. மாதம் 90 ரூபாய் சம்பளம்.

சம்பளம் கிடக்கட்டும். போடப்படும் சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கிற இடமாயிற்றே......! அதில்தான் அவனுக்கு மகிழ்சசி.

நான்கு நாட்களில் மீண்டும் வந்து வேலையில் சேர்ந்து கொள்வதாகக் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

சென்னைக்குப் போய் பெட்டி படுக்கைகளை எடுத்து வர வேண்டும்.

கையிலிருந்த பணம் தீர்ந்து விட்டது.

மீண்டும் யாரிடம் கடன் வாங்குவது?



நேரே 'ஜவகர் மில்'லுக்குப் போனான்.

அங்கே சேது என்று ஒரு நண்பன் முன்பு சக்தியில் வேலை பார்த்தவன்.

அவனிடம் பதினைந்து ரூபாய் வாங்கிக் கொண்டான்.

சென்னைக்குப் போய் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, 'சாயிபாபா' சண்முகத்திடம் 'பாக்கி'யை வாங்கிக்கொண்டு சேலத்திற்குத் திரும்பினான்.

வேலையில் சேர்ந்து விட்டான்.

# புதிய உலகம்

அழகான ஒரு கொட்டகை; அதன் பின்னே ஒரு பழைய கட்டிடம்; கட்டிடத்தில் குடியிருப்பு; கொட்டகையில் அலுவலகம்.

அடுத்த கட்டிடம் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' விநியோக அலுவலகம். அதன் தொடர்பாக பின்புறத்தில் ஒரு சிறிய கட்டிடம். அது அவர்களுடைய 'கஜலட்சுமி அச்சகம்'.

அதன் நிர்வாகி பரசு என்பவர் சுந்தரத்தின் உறவினர்.

'மாடர்ன் தியேட்டர்ஸி'ல் இரண்டு 'டைப்பிஸ்டு'கள்.

ஒருவர் இன்று சினிமா டைரக்டராக விளங்கும் வி. சீனிவாசன் என்பவர். மற்றொருவர் அவரது சகோதரரான ராமசாமி.

இவர்கள் அவனது நண்பர்களாயினர்.

அவன் ஆசிரியரான பத்திரிகை அவன் சேரும்போது ஐநூறு பிரதிகள் மட்டுமே விற்பனையாகிக் கொண்டிருந்தது. அவன் சேர்ந்த பிற்பாடு அறுநூற்றி ஐம்பதாயிற்று.

அவ்வளவுதான். அதற்கு மேல் ஏறவும் இல்லை, இறங்கவும் இல்லை.

''தேவலோகத்தில் சில நாட்கள்' என்ற கட்டுரையை அதில் அவன் எழுதினான்.

அதை சுமார் அறுநூற்றைம்பதுபேரும் படித்திருக்கக் கூடும்.

சேலத்தில் பொதுக்கூட்டம் கேட்பதற்கு அவனுக்கு நிறைய வாய்ப்புக்கள் இருந்தன.

ஒருநாள் நகர் நடுவிலிருந்த மைதானத்தில் திராவிடர் கழகக் கூட்டம்.



''நெடுஞ்செழியன் பேசுகிறார்'' என்பதை அறிவிப்புப் பலகைகள் பறைசாற்றின.

சங்கொலி கிளம்பும் கட்டிடத்தின் முன்பிருந்த மேடையில் 'நாவலர்' அமர்ந்திருந்தார்.

அப்போதெல்லாம் அவரை ''இளந்தாடி நெடுஞ்செழியன்'' என்று அழைப்பார்கள்.

ஆனால் அவன் பார்த்தபோது அவர் தாடியின்றிக் காட்சியளித்தார். தாடியை எடுத்த புதிது.

அதை அவரே பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்.

''உருவம் மாறியிருக்கிறது, உள்ளம் மாறவில்லை'' என்றார்.

ஒரு மணி நேரப் பேச்சு; சுவையான விளக்கங்கள்.

நெடுஞ்செழியனிடம் அவனுக்கு அன்பு ஏற்பட்டது. தொடர்ந்து பலரது கூட்டங்கள்.

சிலரது பேச்சுக்கள் அவனைத் திருப்தி செய்யவில்லை.

அண்ணாத்துரையின் மீது அவனுக்கு ஏற்பட்ட பாசம், திராவிடர் கழகத்தின் மீது ஏற்படவில்லை.

இன்று அவனுக்குச் சிந்திப்பதற்கு நேரமில்லை. ஆனால் அன்று அதைத் தவிர வேறு வேலையில்லை.

அமைதி தவழும் அலுவலகக் கொட்டகையில் இருந்து கொண்டே அன்று அவன் சிந்தித்த சிந்தனைகளின் அடிப்படையிலேதான், இன்று அவனது 'கட்டிடம்' எழுந்து நிற்கிறது.

அடிக்கடி சென்னை வருவான்; நண்பர்களைச் சந்திப்பான்; திரும்புவான்.

ஒரு நாள் சென்னைக்கு வந்தான்.

மாலை ஆறு மணி.

'ரிப்பன் கட்டிட'த்திற்கு எதிரேயுள்ள 'பஸ்ஸ்டாப்'பில் நின்றான்.

சொல்லி வைத்தாற்போல் இப்போதும் ஒரு ரிக்ஷா வந்து அருகில் நின்றது.

ஆனால் இந்த அனுபவம் மிகவும் கொடுமையானது.

மிகப் பயங்கரமானது.

அக்காலத்தில் சென்னையில் நடந்து வந்த பரவலான தொழில் விபச்சாரமாகவே இருந்தது என்பதற்கு, இந்த

இரண்டாவது ரிக்ஷா உதாரணமாக இருந்தது.

ஆனால் அதே சமயத்தில் ஆளை ஏமாற்றுகிற கூட்டமும் அதிகமாயிருந்தது.

இந்த இரண்டாவது ரிக்ஷா அவனை ஏமாற்றுவதற்காகவே ஏற்றிக்கொண்டு போனது.

ஒவ்வொரு வீடாக ரிக்ஷாக்காரன் நுழைந்தான்.

ஒவ்வொரு தடவையும் பத்துப் பத்து ரூபாய்கள் அவன் வாங்கிக் கொண்டான்.

சுமார் அறுபது ரூபாய்கள் அவன் வாங்கிக் கொண்டபிற்பாடு, இருட்டான ஒரு சந்திலே ரிக்ஷாவை நிறுத்திக்கொண்டு 'இன்னும் பத்து ரூபாய் கொடுத்துவிட்டு இறங்கிப் போய்யா!' என்றான். அவன் நடுங்கிவிட்டான்.

மெதுவாக அவனைக் கெஞ்சி ''பூக்கடை வரையில் கொண்டு போய் விட்டுவிடு'' என்று கேட்டுக் கொண்டான்.

அவனும் சம்மதித்து இழுத்து வரும்போது 'பூக்கடை போலீஸ் ஸ்டேஷன்' வந்தது. தைரியம் பெற்று அவன் ''ஐயா! போலீஸ்காரய்யா!'' என்று கத்தினான்.

ஒரு போலீஸ்காரர் திரும்பிப் பார்த்தார்.

ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவை வைத்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.

போலீஸ்காரர் ஓடிப்போய் அவன் தலை மயிரைப் பிடித்து இழுத்து வந்தார்.

''என்ன சார் நடந்தது?'' என்று கேட்டார்.

நடந்ததைச் சொன்னான்.

போலீஸ்காரர் அவனை உதைத்து, அவன் பையைச் சோதனையிட்டார். சுமார் இருநூற்றைம்பது ரூபாய் இருந்தது.

எத்தனை பேரை ஏமாற்றிப் பெற்ற பணமோ?

''என் பணம் எழுபதுதான்'' என்றான் அவன்.

ரிக்ஷாக்காரனை 'லாக்கப்'பில் தள்ளினார்.

வழக்கு தொடரப் போவதாகவும், அவன் சாட்சியாக வரவேண்டுமென்றும் சொன்னார்.

''நான் சேலத்திலிருக்கிறேன், வழக்குக்கு வருவது கஷ்டமாக இருக்குமே'' என்றான் அவன்.



கடைசியில் வழக்கில்லாமலே ரிக்ஷாக்காரன் விடுதலை செய்யப்பட்டான்.

பணம் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சி அன்றைய சமூகத்தின் நிலைமையை அவனுக்குப் படம் பிடித்துக் காட்டிற்று.

குற்றம் புரிவோர் பலவிதம்; குற்றத்தைத் தொழிலாகக் கொண்டோர் அதிலே ஒரு விதம்.

அவர்களை எப்படித் திருத்த முடியும்?

இன்று அவர்களிலே பலர் சில அரசியல் கட்சிகளின் பாதுகாப்பிலிருக்கிறார்கள்.

அரசியல் என்ற 'போர்வை'யின் மூலம் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

சமூகத்தின் தலைவர்களுக்கு இவர்களே 'வலது கரங்'களாக விளங்குகிறார்கள்.

ஆனால் அன்று நாமும் அரசியலில் ஈடுபட்டால் இவர்களைத் திருத்த முடியும் என்று அவன் நம்பினான்.

அவர்கள் அரசியலையே 'திருத்தி' விடுவார்கள் என்று அவன் நினைக்கவில்லை.

அன்றிலிருந்து ஒவ்வொரு ரிக்ஷாவைப் பார்க்கும் போதும் அவனுக்குப் பயம் ஏற்பட்டது.

ரிக்ஷா குற்றவாளிகளின் 'வாகனம்' போல் தோன்றிற்று.

சேலத்திற்குத் திரும்பியபோது அவன் புது மனிதனாக இருந்தான்.

இனி புதிய உலகத்தில் தன்னுடைய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அவன் முடிவு கட்டிக் கொண்டான்.

# ஆசை அலைகள்

தனியாகப் பிறந்த மனிதனுக்கு வயிற்றுப் பாட்டைத் தவிர வேறு பாடில்லை.

அதுவும் தாய் தந்தையற்ற அநாதையாக இருந்தால் வேதனை குறையும்.

அவனோ உறவும் சுற்றமும் அதிகம் படைத்தவன்.

பாசத்தில் உழன்றவன்.

தாய்ப்பாசத்தின் கொடுமையை அவன் சேலத்தில் அனுபவித்தான்.

தன் தாய் போன்ற தோற்றம் உடையோரை எங்காவது பார்த்து விட்டால் அவனுக்கு அழுகை வந்துவிடும்.

தாயார் எப்படியிருக்கிறார்களோ என்று எண்ணி, தனியே இருந்து கலங்குவான்.

தேடி வருவோர், மாலையிடுவோர், கூட்டத்திற் கழைப்போர் என்று யாருமில்லாத அன்று தனிமையே அவனது துணைவியாக அமைந்தது.

துயரங்களுக்குத் தனிமை பொல்லாதது.

அது துயரை வளர்ப்பதன்றி குறைப்பதில்லை.

மாலை நேரத்தில் சேலம் ஜங்ஷன் வரை நடந்து செல்வான்.

எவ்வளவோ சிந்தனைகள். எவ்வளவோ ஆசைகள்...... எவ்வளவோ கற்பனைகள்......

மனித மனத்தின் சபலங்கள் முழு வடிவில் திரண்டன.

ஒரே எண்ணமில்லை. மனக்குரங்கு அங்குமிங்கும் தாவிக் குதித்தது.



'வளர வேண்டும்; உயர வேண்டும், ஈன்றவள் மகிழ சான்றோனாகத் தோன்ற வேண்டும்' இந்த ஆசைகளே அவனது நெஞ்சில் மேலோங்கி நின்றன.

பயங்கரமான உலகத்தில் பருந்துகளுக்கும், வல்லூறுகளுக்கும் நடுவே இந்தக் கிளி எப்படிப் பறக்கப் போகிறது என்ற அச்சமும் அவனுக்கிருந்தது.

தன்னம்பிக்கை, துணிச்சல், திடமான உள்ளம் இவற்றை வழங்கும்படி இறைவனை வேண்டினான்.

காடு மேடுகளில் அலைந்து திரிந்த ஞானிகள், கவிபாடிக் காலம் கழித்த புலவர்கள் இவர்கள் வரிசையிலே அவன் தன்னையும் வைத்து எண்ணிப் பார்த்தான்.

அது அவனுக்கு வெட்கமாகக் கூட இருந்தது.

ஆனால் அப்படி வரவேண்டுமென்ற ஆசை மட்டும் வளர்ந்து கொண்டே போனது.

சோலையைப் பார்த்தால் அவன் நினைப்பான், ''சோலைகளைப்பற்றியே கவிஞர்கள் பாடுவார்களே, நாமும் பாடினால் என்ன?''

பாடுவான்; கேட்க ஆளிருக்காது.

சிறிய வயதில் பெரிய ஆசைகள் தோன்றி அவனை உந்தித் தள்ளின.

கற்பனையில் தன்னையொரு மகா கவிஞனாக ஆக்கிக் கொண்டு, அந்தத் தேரிலேயே ஒரு மணி நேரம் பவனி வந்த பிற்பாடு கீழே இறங்கிப் பூமியைப் பார்ப்பான்.

அந்தப் பூமியிலே சராசரி மனிதனிலும் சாதாரண மனிதனாகத் தானிருக்கக் காண்பான்.

கண்ணில் காணும் உலகத்தை விட கற்பனை உலகம் சுவையானது. அங்கே தங்கு தடையில்லாமல் எங்கேயும் போக முடிகிறது.

எந்தச் சின்ன மனிதனும் தன்னை எவ்வளவு பெரிய மனிதனாகவும் நினைத்துக்கொள்ள முடிகிறது.

ஆனால் உள்ளம் காட்டுகிற இடமெல்லாம், கைக்குக் கிடைத்து விடுவதில்லை.

அவன் நிறையப் படிக்க ஆரம்பித்தான்.

புரியாத கவிதைகளைக்கூட மனப்பாடம் செய்தான்.

கம்பனின் இராமகாதை, புறநானூறு, கலித்தொகை, முத்தொள்ளாயிரம் என ஒவ்வொன்றிலும் சில பாடல்களை மனனம் செய்து கொண்டான்.

பொருள் விளங்காமலேயே அவை மனத்தில் படிந்தன.

பிற்காலத்தில்தான் பல கவிதைகளுக்கு அவன் பொருள் விளங்கிக்கொண்டான்.

அவனைப் பொறுத்த வரையில் தமிழின் மீது அவனுக்கு ஏற்பட்ட பற்றுதல் அரசியல் ரீதியானதல்ல.

அவன் ஆங்கிலம் படிக்கவில்லை.

படித்ததே தமிழ் ஒன்றுதான்.

ஆகவே தமிழ்தான் தன்னைக் காத்தாக வேண்டும் என்ற தன் நலமும், அந்தத் தமிழ்ப்பற்றில் நிறைந்திருந்தது.

ஒவ்வோர் இலக்கியத்தையும் அவன் படிக்கும்போது, அந்த அளவிற்குத் தானும் எழுத வேண்டும், எழுத முடியு மென்று நம்பினான்.

அன்று அவனிருந்த நிலைமையில் இதை யாரிடம் சொல்லி யிருந்தாலும் சிரித்திருப்பார்கள்.

ஆனால் அவனே அந்த 'ஊற்று' தனக்கிருப்பதாக நம்பினான்.

அன்றும் சரி, இன்றும் சரி, வெறும் கல்வியறிவு மட்டுமே ஒருவனை உலகின் கண்ணிற்குத் துலங்க வைக்கும் என்று அவன் நம்பவில்லை.

இயற்கையான உள்ளுணர்ச்சி ஒன்று அவனுக்குத் துணை புரிந்தது.

அந்த உள்ளுணர்ச்சி எதனாலே விளைந்தது என்று எண்ணிப் பார்க்கவும், அவனால் முடியவில்லை.

தம் மகனை பி. ஏ., எம். ஏ. என்று படிக்க வைக்க முடியவில்லையே என்று பெற்றோர் வருந்தியது கண்டு அவன், வணங்கிய தெய்வம் அவனுக்கு அதை அளித்த தாகக் கருதிக் கொண்டான்.

அப்போது அவனுக்குக் கிடைத்த நண்பர்களிலே சிலர், ஓர் இசைக்குழுவில் வாத்தியக்காரர்களாக இருந்தார்கள்.

அவர்களிடமெல்லாம் தனது கவிதை ஆசைகளை அவன் விசாலமாக வெளிப்படுத்துவான்.



''காலம் வரும்'' என்று ஒரு வார்த்தைதான் அவர்கள் சொன்னார்கள்.

ஒருநாள்...............

தூங்கி விழித்தபோது ஒரு துயரம் அவனுக்கு காத்துக் கொண்டிருந்தது. ஊரிலிருந்து அவனது தந்தை வந்திருந் தார்.

அவரைக் கண்டதில் அவன் மகிழ்ச்சியடைந்தான் என் றாலும் அவர் சொன்ன செய்தி கேட்டு வருந்தினான்.

அவன் தந்தை சீட்டாட்டப் பிரியர்.

சீட்டாட்டத்தில் பணத்தைத் தோற்றுவிட்டு வீட்டிலே கோபிப்பார்களே என்று சேலத்திற்கு வந்து விட்டார்.

அவனும் அலுவலகத்தில் ரூபாய் அறுபது அச்சாரம் வாங்கிக்கொண்டு, தந்தையோடு தானும் ஊருக்குச் சென்று திரும்பினான்.

உறவினரைப் பார்த்துத் திரும்பியதில் அவனுக்கு கொஞ்சம் அமைதியிருந்தது.

உலகத்தில் எப்படியும் மேலோங்கி வரவேண்டும்; வந்த நிலையில் பெற்றோரைக் காண வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்தது.

இப்படி ஆசையும் சஞ்சலமுமாக ஓராண்டு சேலம் வாழ்க்கை கழிந்தது.

அந்த வாழ்க்கை முடிவதற்கும் ஒருநாள் வந்தது.

அந்நாளில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய கட்டுரையொன்று ஒரு பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

அதை எடுத்து மீண்டும் 'சண்டமாருத'த்தில் வெளி யிட அவன் முயன்றான்.

அந்தப் பிரதியை எடுத்து அச்சகத்தில் கொடுத்தான்.

அச்சகத்திலிருந்து அதைப்பெற்றுக்கொண்ட பத்திரிகை நிர்வாகி, அதைப் பிரசுரிக்கக் கூடாதென்று சொல்லி விட்டார்.

அந்த எழுத்தாளனின் தன்மான உணர்ச்சி பீறிட்டு எழுந்தது.

உடனடியாக ஒரு 'ராஜினாமா' கடிதம் எழுதி திரு டி. ஆர். சுந்தரத்தின் மேஜையின் மீது வைத்து விட்டான்.

அதைப் படித்துப் பார்த்த திரு சுந்தரம் அவனை யழைத்தார்.

திரு. டி. ஆர். எஸ். ஸிடம் ஒரு வழக்கமுண்டு.

யார் 'ராஜினமா' செய்தாலும், அவர்களை அழைத்துப் பேசமாட்டார்.

உடனடியாகக் கணக்குத் தீர்க்கும்படி சொல்லிவிடுவார்.

அவனும் அதைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆனால் அழைப்பு அவனை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

சென்றான்; அவர் எதிரே நின்றான்.

''போகத்தான் போகிறாயா?'' என்று கேட்டார்.

அந்தப் பாச உணர்ச்சி அவனை உருக்கிவிட்டது.

''உனக்குப் பத்திரிகை வாழ்க்கை பிடிக்கவில்லை யென்றால், பத்திரிகையை மூடிவிடுவோம். நீ நமது சினிமா இலாகாவிலேயே சேர்ந்து விடு'' என்றார்.

மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டான்.

பத்திரிகை நிறுத்தப்பட்டது.

அவன் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' கதை இலாகாவிற்குத் தாவினான்.

மாதச் சம்பளம் முப்பது ரூபாய் உயர்ந்தது.

ஆனால் அங்கேயிருந்தவர்களாவது அவனை முன்னேற விட்டார்களா?

காக்கைக் கூட்டத்திற்குள் அகப்பட்டுக்கொண்ட குயில் போல, அந்தக் கதை இலாகாவில் அவன் அவதிப்பட்டான்,

தினம் ஒவ்வொரு கதையாக அவனிடம் தந்து காட்சி யமைக்கச் சொல்லுவார்கள்.

இரவு பகலாக உட்கார்ந்து எழுதி முடிப்பான்.

அது சுந்தரத்தின் மேஜைக்கே போகாமல் குப்பைக் கூடைக்குப் போய்விடும்!

இது அவனுக்குப் பெரும் கவலை அளித்ததென்றாலும், திரைக்கதை எழுதிப் பழகுகிற வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ந்தான்.

திரைக் கதைக்கே தனியாக உள்ள சில அங்கங்களை அவன் கண்டு கொண்டான்.



தொழில் நுணுக்க வார்த்தைகள் சிலவற்றை அவன் கற்றுக் கொண்டான்.

அந்த அலுவலகத்தில் அவனுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது ஒரு சிறிய அறை.

அங்கேயே உணவு விடுதியுமிருந்தது.

அங்கே அவன் வாழும் நாளில் ஒரு வேடிக்கைச் சம்பவம் நடைபெற்றது.

பாடல் எழுதுவதைப் போலவே, எழுதியதைப் பாடுவதிலும் அவனுக்குத் தனி இன்பம்.

ஆனால் அவனது சாரீரம் பயங்கரமானது.

ஒருநாள் அந்தச் சாரீரத்தை உச்சசுதியில் எழுப்பி, அவன் பாடிக்கொண்டிருந்தான்.

அப்போது அலுவலகத்திற்கு வந்த சுந்தரம், அவன் பாடியதைக் கேட்டு விட்டார்.

அங்கே அந்நாளில் தயாரிப்பு நிர்வாகியாக இருந்த திரு. எம். ஏ. வேணுவை அழைத்து, ''கண்ணதாசன் எழுதினால் போதும், பாட வேண்டாம்'' என்று சொல்லி யனுப்பினார்.

அன்று முதல் அந்த இடத்தில் பாடுவதை அவன் நிறுத்திக்கொண்டான்.

# புதிய கட்சி

அங்கே இருக்கும்போதுதான் நடிகர் எம். ஜி. சக்கர பாணியின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது.

திரு. சக்கரபாணி வேடிக்கையான சுபாவமுடையவர். யாரிடமும் சிரித்துப் பழகுவார்.

அந்நாளில் அவரோடுதான் அவன் அதிகமாகப் பழக ஆரம்பித்தான்.

'கோயம்புத்தூர் லாட்ஜ்' என்ற 'உணவு விடுதி'யில் அவர் தங்குவார்.

இரவு வெகுநேரம் வரையிலும் அவனும் அவரும் பேசிக்கொண்டிருப்பார்கள்.

அவர்தான் கருணாநிதி என்கிற பெயரை, முதலில் அவனுக்கு அறிமுகப்படுத்தினார்.

கருணாநிதியின் வசனங்களைப்பற்றி, அவனிடம் அடிக்கடி சொல்லுவார்.

தோழர் கருணாநிதி அப்போது மைசூரில், மருதநாட்டு இளவரசி என்கின்ற படத்திற்கு வசனமெழுதிக் கொண்டிருந்தார்.

அந்தப் படம் 'பஞ்ச கோல'த்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தயாரிப்பாளரிடம் பண வசதியில்லை. அதனால் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், சக்கரபாணி, டைரக்டர் காசிலிங்கம், தோழர் கருணாநிதி ஆகியோர் தாங்



களே அதிகம் ஒத்துழைத்து அந்தப் படத்தை எடுத்துக் கொண்டிருந்தனர்.

அதற்காகத் தோழர் சக்கரபாணி அடிக்கடி மைசூர் சென்று வருவார்.

ஒருநாள் சேலம் அம்பிகா தியேட்டருக்கு, அவனும் சக்கரபாணியும் 'அபிமன்யு' படம் பார்க்கப் போனார்கள்.

அந்தப் படத்தின் வசனங்களைக் கருணாநிதி எழுதியதாகச் சக்கரபாணி சொன்னார்.

ஆனால் படத்தில் கருணாநிதியின் பெயரில்லை.

'அபிமன்யு' படத்தில் அவன் கேட்ட தமிழ், என்றும் மறக்க முடியாத இன்பத் தமிழாகும்.

''ஒடிந்த வாளானாலும் ஒரு வாள் கொடுங்கள்.''

''அண்ணன் செய்த முடிவைக் கண்ணன் மாற்றுவதற்இல்லை.''

''கண்ணன் மனமும் கல் மனமா?''

''அர்ச்சுனனால் கூட வளைக்க முடியாத சக்ரவியூகத்தை அபிமன்யு வளைத்து விட்டானென்றால், அங்கேதானிருக்கிறது ஆச்சாரியாரின் விபீஷண வேலை.''

இந்த வசனங்கள் இன்று வரை அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாளல்ல... ஆறு நாட்கள் சேர்ந்தாற்போல் அந்தப் படத்தை அவன் பார்த்தான்.

'அம்பிகா தியேட்ட'ரின் கலையான காப்பியும், 'அபிமன்யு'வில் கண்ட கருணாநிதியின் கை வண்ணமும் அவன் நெஞ்சிலே நிலைத்தன.

''காணாமலே காதல்'' என்பார்கள். அந்தக் 'காதலே' பிறந்து விட்டது அவனுக்குக் கருணாநிதியின் மீது...!

''எப்படியாவது கருணாநிதியைச் சேலத்திற்குக் கூட்டி வாருங்கள்'' என்று, அவன் சக்கரபாணியைக் கேட்டான்.

'மாடர்ன் தியேட்டர்' ஸுக்கு அவரை வரவழைக்க வேண்டுமென்று, அவரிடம் சொன்னான்.

அன்று அவன் 'மாடர்ன் தியேட்டர்'ஸுக்குச் சொல்லியிருந்தால் எடுபட்டிருக்காது.

சக்கரபாணி சொன்னார்; அவனும் கூடச் சேர்ந்து பாடினான்.

கருணாநிதியை வரவழைக்க திரு. டி. ஆர். சுந்தரம் முடிவு செய்தார்.

இந்த நிலையில் 'மருதநாட்டு இளவரசி' படம் முடிந்தது.

ஒரு நாள் கருணாநிதியும், சக்கரபாணியும் சேலம் வந்து சேர்ந்தார்கள்.

திறமை என்பதை யாரிடம் கண்டாலும், நேருக்கு நேரே பலபடப் பாராட்டி விடுவது அவனது சுபாவம்.

தன்னைத் தாழ்த்திக்கொண்டு இன்னொருவரை உயர்த்து வான்.

அதுதான் திறமைக்குத் தரும் மரியாதை என்றே அவன் கருதினான்......

இந்தச் சுபாவத்தை இறுதிவரை இறைவன் அவனோடு வைத்திருக்க வேண்டும்.

உலகம் அவனைக் கண்டு கொள்ளும் அதே நேரத்தில், அவன் சிலரைக் கண்டுகொள்ள வேண்டும்.

அன்று கருணாநிதியை அவன் முதன் முதலாகக் 'கோயம் புத்தூர் லாட்ஜில்' சந்தித்ததும், ஒரு காதலியைக் காணும் உணர்ச்சியே அவனுக்கு ஏற்பட்டது.

சக்கரபாணி அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தார்.

அன்று முதல் கருணாநிதியும் அவனை உயிருக்குயிராக நேசிக்கத் துவங்கினார்.

'மாடர்ன் தியேட்டர்ஸி'ல் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் அவர் வேலைக்கமர்ந்தார்.

ஒரு நாளாவது ஒருவரை ஒருவர் காணாமலிருந்தால் எதையோ பறிகொடுத்தது போலிருக்கும்.

ஒருவர் கையில் இன்னொருவர் தலை வைத்துத் தூங்குகிற அளவுக்குப் பாசம் வளர்ந்தது.

அவர்கள் இருவருக்கிடையில் இரகசியம் என்பதே இல்லாமலிருந்தது.

அவரைப் பற்றி யாராவது தவறாகப் பேசி விட்டால், அவனால் பொறுக்க முடியாது. அவருக்கும் அப்படியே.



இந்த நேரத்தில்தான், பெரியாரின் திருமணத்தைச் சாக்கிட்டு அண்ணாத்துரை, சம்பத் ஆகியோருடன் ஆயிரக் கணக்கானவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து விலகினார்கள்.

விலகிய அந்த நிலையை அவன் கூர்மையாகக் கவனித் தான்.

பெரியார் செய்த 'கொடுமை'களைப் பற்றி கருணாநிதி அவனிடம் சொன்னார்.

விலகியதில் அவர் பெரு மகிழ்ச்சியடைந்திருந்தார்.

அவர் மகிழ்ந்ததால் அவனும் மகிழ்ந்தான்.

அப்போது பெரியாரின் திருமணத்தைச் சாடி, கருணாநிதி இரண்டொரு கட்டுரைகள் எழுதினார்.

அவனிடம் படித்துக் காட்டினார்.

அவை பத்திரிகைகளில் வெளிவந்தன.

இந்நிலையில் புதிய கட்சியை ஆரம்பிப்பதற்காக கூட்ட மொன்று சென்னையில் நடந்தது.

அந்தக் கூட்டத்திற்கு வரும்படி, கருணாநிதிக்கும் அழைப்பு வந்தது.

கருணாநிதி அவனையும் அழைத்தார்.

இருவரும் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

அன்று செப்டம்பர் 17-ந் தேதி.

அவனும் அவரும், சென்னை 'சென்ட்ரல் ஸ்டேஷ'னுக்கு அருகாமையிலுள்ள 'நாடார் உணவு விடுதி'யில் தங்கினார்கள்.

அவர்கள் வந்து இறங்கியதும், பல நண்பர்கள் கருணா நிதியைப் பார்க்க வந்தார்கள்.

அவர்களனைவருக்கும் அவனை அறிமுகப்படுத்தினார்.

அன்று மாலை 'ராபின்சன் பார்க்'கில் பொதுக்கூட்டம்.

அந்தக் கூட்டத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய கட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

பலர் பேசினார்கள்.

குறிப்பாகக் குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் காரசாரமாகப் பேசினார்.

மழை கொட்ட ஆரம்பித்தது.

மேலே கட்டியிருந்த 'கருப்பு சிவப்பு'க் கொடி களின் வர்ணங்கள் கலந்து, எல்லாருடைய ஆடை

களிலும் புள்ளிமயில் கோலம் போட்டன.

உடனே அண்ணாத்துரை எழுந்து பேச ஆரம்பித்தார். கண்ணீர் வருகிற மாதிரி பேசினார்.

''பெரியாரே எங்கள் தலைவர்'' என்றார்.

''தலைவர் நாற்காலி காலியாகவே இருக்கிறது'' என்றார்.

பெரியாரைப் பற்றி யாரும் தவறாகப் பேசக்கூடாதென்று கண்டிப்பாக உத்தரவு போட்டார்.

புதிய கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் தோழர்கள் பின்பற்ற வேண்டிய வழிகளைச் சொன்னார்.

மழையினால் அவர் குறைந்த நேரமே பேச முடிந்தது.

கூட்டம் முடிந்ததும், கருணாநிதியும் அவனும் ஒரு வாடகைக் காரில் 'நாடார் விடுதி'க்குத் திரும்பினார்கள்.

தங்களது அறையைத் திறந்தார்கள்.

நூல் நிலையம், திருச்சி. நாள்: ........ எஸ். ...கிருஷ்ணமூர்த்தி, M.A., B.T.





மாலையில் அவர்கள் பலகாரம் சாப்பிட்ட தட்டு, கட்டில் மீதே வைக்கப்பட்டிருந்தது.

அந்தத் தட்டைக் கருணாநிதி எடுத்தார்.

அதை இன்று நினைத்தாலும் அவன் மெய் சிலிர்க்கும்.

அந்தத் தட்டினடியில் கருநாகம் ஒன்று சுற்றிக்கொண்டு கிடந்தது. தட்டை எடுத்த பின்னும் அது ஓட முயற்சிக்கவில்லை.

அந்த அறை ஜன்னலுக்கு வெளியே, அடுக்கப்பட்டிருந்த விறகுகளுக்குள் அந்த 'நாகம்' குடியிருந்திருக்கிறது.

மழையில் அது விறகு வழியாக ஏறி ஜன்னல் வழியாக உள்ளே வந்திருக்கிறது.

நாகத்தைக்கண்டதும் இருவருமே நடுங்கி விட்டார்கள்.

வெளியிலே மழை பலமாகக் கொட்டிக்கொண்டிருந்தது.

அந்த மழையிலே நனைந்து அவனொரு விறகை எடுத்து வந்தான்.

நாகத்தைக் கீழே தள்ளி இருவரும் அதைக் கொன்றார்கள்.

பிறகு அந்தக் கட்டிலில் படுப்பதற்கு, கருணாநிதிக்குப் பயம் வந்து விட்டது.

இருவரும் ஒரே கட்டிலில் படுத்துறங்கினார்கள்.

அதிகாலை ஆறரை மணிக்குப் புறப்படுகிற ரயிலில் ஏறி, அவர்கள் சேலம் போக வேண்டும்.

திருவாரூரிலிருந்து புறப்பட்ட கருணாநிதியின் குடும்பத்தினர் அன்றிரவு சேலம் வந்து சேருவதாக இருந்தது.

காலை ரயிலில் சென்னையிலிருந்து புறப்பட்டால் சேலம் சந்திப்பிலேயே தன் குடும்பத்தாரைச் சந்தித்து விடலாம்

என்று எண்ணியே, கருணாநிதி காலை ரயிலைத் தேர்ந் தெடுத்தார்.

இருவரும் 'சென்ட்ரல் ஸ்டேஷ'னுக்கு வந்தார்கள்.

கருணாநிதி கையிலிருந்த பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அந்தப் பணத்தைக் கொண்டு அவன் இரண்டு முதல் வகுப்பு 'டிக்கட்'டுகள் வாங்கி விட்டான்.

அவன் கையில் பணமில்லை.

அதற்கு மேல் கருணாநிதியிடமும் பணமில்லை.

'டிக்கட்' வாங்கியது போக மிச்சமிருந்தது, ஒரே ஒரு ரூபாய். அதிலும் எட்டணாவுக்கு 'சிகரெட்' வாங்கியாகி விட்டது.

அதில் இரண்டு வேளை சாப்பிட்டாக வேண்டும்.

ரயில் புறப்பட்டதும்தான் இருவரிடமும் பணமில்லை என்பது தெரிந்தது.

ஆளுக்கு ஒரு டீதான் சாப்பிட்டிருந்தார்கள்.

''இது தெரிந்திருந்தால் மூன்றும் வகுப்பிலேயே போயி ருக்கலாமே'' என்றான் அவன்.

''பரவாயில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு வாருங்கள். சாயந்திரம் சேலம் போய் விடலாம்'' என்றார் அவர்.

இரண்டு வேளை உணவில்லாமல் அவனால் இருக்க முடியுமா?

கருணாநிதியால் முடியும்.

உணவைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

''எப்படி பகல் பூராவும் ரயிலில் பயணம் செய்யப் போகிறோம்'' என்ற கவலை வந்து விட்டது அவனுக்கு!

அடுத்த 'ஸ்டேஷ'னில் ரயில் நின்றது.

அவர்களிருந்த பெட்டிக்குள் வயது முதிர்ந்தவர் ஒருவர் ஏறினார். அவர் கையில் கூடை நிறையப் பழங்கள் கொண்டு வந்திருந்தார்.

அவனும் கருணாநிதியும் அவருக்குத் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டார்கள்.

ரயில் புறப்பட்டுச் சிறிது நேரமானதும், அந்தப் பெரியவர் எழுந்து 'பாத்ரூமுக்'குள் நுழைந்தார்.



''எனக்குப் பசி தாங்க வில்லையே'' என்று அவன் கருணாநிதியிடம் சொன்னான். ''திருடலாமா?'' என்று கேட்டார் அவர்.

இப்படி அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போதே, 'பாத்ரூமி'ற்குள் சென்ற பெரியவர் திரும்பி வந்து விட்டார்.

நல்ல வேளை, வேடிக்கை வினையாகாமல் முடிந்தது. ஜோலார்பேட்டையில் வண்டி வந்து நின்றபோது, பகல் மணி இரண்டு. சாப்பாட்டிற்காக அங்கு அரைமணி நேரம் வண்டி நிற்கும்.

பிரயாணிகள் சாப்பிட வேண்டும் என்று கருணையோடு நிறுத்தப்பட்ட வண்டியில், சாப்பாட்டிற்கு வழியில்லாத பிரயாணிகளும் இருந்தார்கள்.

அவர்களில் அவனும் கருணாநிதியும் முக்கியமானவர்கள். அந்நாளில் கருணாநிதியையோ அவனையோ தெரிந்தவர்கள் அதிகமில்லை. ஆகவே ஜோலார்பேட்டை சந்திப்பில், அறி முகமான நண்பர்கள் யாரையுமே காண முடியவில்லை.

அவனது உதடு வறண்டு விட்டது. கீழே இறங்கி இரண்டு குவளை தண்ணீர் குடித்தான். இன்னும் நான்கு மணி நேரம் எப்படி ரயிலில் இருக்கப் போகிறோம் என்ற கவலை வந்து விட்டது.

அந்த வேதனையை, கருணாநிதியின் வேடிக்கைப் பேச்சுக்கள் தீர்த்து வைத்தன.

பல்லைக் கடித்துக்கொண்டான்; பசியைப் பொறுத்துக் கொண்டான்.

சேலத்திற்கு முன்னாலுள்ள ஒரு சிறு சந்திப்பில் அந்தப் பெரியவர் இறங்கிவிட்டார். சுமார் ஏழு மணிக்கு சேலம் சந்திப்பில் அவர்கள் இறங்கினார்கள்.

கருணாநிதியின் குடும்பத்தார் அங்கே வந்திருந்தார்கள். அவர்களோடு கருணாநிதி புறப்பட்டார். அவனும் மாடர்ன் தியேட்டர்ஸ் ஒத்திகை விடுதிக்குச் சென்றான். (நல்ல வேளையாகக் கருணாநிதியின் குடும்பத்தாரிடம் பணமிருந்தது)

அப்போது அங்கே 'பொன்முடி' என்ற படம் தயாரிக்கப் பட்டு வந்தது. அதில் இரண்டொரு காட்சிகளுக்கு கருணாநிதி வசனமெழுதிக் கொடுத்தார்.

பிறகு, அவரது 'மந்திரிகுமாரி' கதையைப் படமாக எடுப்பதென்று முடிவாயிற்று. அந்த நேரத்தில், இன்னும் இருவர் 'மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாகா'விற்கு வந்து சேர்ந்தனர். ஒருவர் சி. பி. சிற்றரசு, இன்னொருவர் ஆசைத்தம்பி.

அவர்களுக்கும் அவன் அறிமுகமானான். அவர்கள் மூவரில், கட்சிப் பற்றுடையோர் யார் யார் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது.

அந்த சினிமாக் கம்பெனியில் வேலை பார்த்தும்கூட, கருணாநிதிக்குக் கட்சி ஆர்வமே அதிகமிருந்தது. அதுபோல் சிற்றரசும் கட்சிக் கூட்டங்களுக்குச் சென்று வந்தார்.

ஆனால், வேலைக்குச் சேர்ந்ததும் சேராததுமாக இனிக் கட்சியை யெல்லாம் மறந்துவிடவேண்டுமென்று சொன்னவர் ஆசைத்தம்பி. கருணாநிதிக்கு மாடர்ன் தியேட்டர்ஸில் செல்வாக்கு ஏற்பட்டது. அவரது எழுத்துக்களுக்கு மதிப்பு கிடைத்தது.

ஆனால், சிற்றரசும் ஆசைத்தம்பியும் எழுதி எழுதிக் குவித்தார்களே தவிர எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவனது நிலைமையும் அதுதான்.

''பாட்டெழுதுகிறேன், பாட்டு எழுதுகிறேன்'' என்று நிர்வாகிகளிடம் கேட்டுக்கேட்டுப் பார்த்தான். அந்தப் பாட்டுத்தான் மிஞ்சியதே தவிர, சினிமாப்பாட்டுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவனுக்கு எழுதத் தெரியும் என்றுகூட யாரும் நம்ப வில்லை. இந்த நிலையில், அவனது உத்தியோகத்தை மாற்றி, ஓர் உத்தரவு வந்தது.

அதாவது, கதை இலாகாவிலிருந்து அவனை விளம்பர இலாகாவுக்குத் தூக்கிப் போட்டார்கள். அந்த உத்தரவு அவனுக்குச் சொல்லப்பட்டதுமே, அவனது தன்னம்பிக்கை தளரலாயிற்று.



எவ்வளவோ ஆசைகளை அடக்கி வைத்துக்கொண்டு எழுத்துத் துறையில் முன்னேற வேண்டுமென்றே அவன் கருதினான். அந்த உத்தரவுக்குப் பயந்து, பொறுப்பை மாற்றிக் கொள்வதற்கு இரண்டு நாள் அவகாசம் கேட்டான்; தரப்பட்டது.

அந்த நாளில் மாடர்ன் தியேட்டர்ஸில் நடிப்பதற்காக ஒரு பெண் வந்திருந்தாள். மிகவும் அழகிய பெண். நாகர் கோவிலைச் சேர்ந்தவள், அவளுடைய அழகில் அவன் மயங்கியிருந்தான்.

ஆனால் ஏறிட்டுப் பார்க்க விழியுமில்லை. எடுத்துச் சொல்ல வழியுமில்லை!

இந்த நேரத்தில்தான் உத்தியோக மாற்றம் பற்றிய உத்தரவு வந்தது. அந்தப் பெண்ணும் மாடர்ன் தியேட்டர்ஸ் வேலை முடிந்து கோயம்புத்தூருக்குப் புறப்பட்டாள்.

அவளும் போய், எழுத்து வேலையும் போகிறதே என்று எண்ணிய பொழுது அவனுக்கு ஒரே வழிதான் தோன்றிற்று.

ஒரு விலகல் கடிதம் எழுதி சுந்தரத்தின் மேஜையின் மேல் வைத்துவிட்டான். அதைப் படித்துப் பார்த்த சுந்தரம் அவனை அழைத்தார்.

''என்ன நீ அடிக்கடி ராஜினாமா செய்துகொண்டே இருக்கிறாய். இந்த எண்ணம் வந்த பிற்பாடு நீ நிலைத்திருக்க மாட்டாய், போவதென்றால் போ'' என்று கூறிவிட்டார்.

அவன் சங்கடத்தோடு திரும்பினான். அவர் மீண்டும் அவனை அழைத்தார். ''நான் எப்பொழுதாவது கடிதம் எழுதினால் வந்து ஏதாவது எழுதிக் கொடுத்துவிட்டுப்போ'' என்று பாசத்தோடு சொன்னார். அவன் விடைபெற்றுக் கொண்டான்.

கருணாநிதியிடமும் சொல்லிவிட்டு அன்று இரவு இரயிலில் கோவை புறப்பட்டான். அவனிருந்த பெட்டியில், ஒரு குடும்பமும் ஏறியிருந்தது. தாய் தந்தை மூன்று பிள்ளைகள்; மூன்று பிள்ளைகளும் குருடு. அந்தப் பெற்றோர் என்ன பாவம் செய்தவர்களோ? ஒவ்வொரு பிள்ளையையும்

தடங்காட்டி அழைத்துச் செல்லுவதே அவர்களுக்குப் பெரிய வேலையாக இருந்திருக்க வேண்டும்.

வாடிக் களைத்திருந்த அந்தப் பாவிகளைப் பார்த்ததும் அவனுக்குக் கண்ணீர் வந்து விட்டது.

''இறைவா! என்னை இந்தக் கதியில் படைக்காமலிருந்த தற்கு உனக்கு நன்றி!''

கண்களை இழந்து விடுவதை விடப் பெரிய துயரம் உலகத்தில் என்ன உண்டு!

கண்ணில்லாதவர்கள் உலகத்தில் வாழ்ந்து என்னபயன்?

கண்ணுக்குரிய சிறப்பை யறிந்துதானே 'கண்ணே' என்று அழைப்பதை அன்பு வார்த்தை யாக்கினர்கள்.

இறைவன் தனக்குக் கண்ணளித்ததை எண்ணினன்.

அவன் இறைவனுக்கு நன்றி செலுத்தினன்.

''தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்று'' அகமகிழ்ந்தான்.

வேலையை விட்டு விட்டதால் வந்த வேதனை, தனக்குக் கண்ணிருக்கிறது என நினைத்ததால் தீர்ந்தது!

ஈரோட்டிலே ரயில் நின்றது. ஒரு பிச்சைக்காரன், கைப்பிடியில் ஒரு சிறு பெண்ணோடு ஏறினன்.

அந்தோ! அந்தப் பெண்ணும் குருடு!

உலகத்தைப்பற்றிய சிந்தனை அவன் மனத்தில் வேரோடிற்று.

தத்துவச் சிந்தனை வளர்ந்தது.

உலகத்தின் பல கூறுகளைப் பற்றியும் நினைக்கத் தொடங்கினன்.

ஒரு முழு ரூபாயை எடுத்து அந்தப் பிச்சைக்காரன் கையில் கொடுத்தான். குருட்டுப் பெண் பாடத் தொடங்கினள்.

பழைய 'மங்கம்மா சபதத்' திலிருந்து ஒரு பாட்டு. ''சிறிதும் கவலைப் படாதே! மன உறுதியை மட்டும் விடாதே! மன உறுதியை மட்டும் விடாதே''—ஆம். ஏற்கெனவே அந்தப் பாட்டுத்தான் அவனுக்குத் தைரியத்தை அளித்திருந்தது.



இன்று அதே பாட்டு மீண்டும் கேட்கிறது. அவன் மன உறுதியை விடப்போவதில்லை. பயங்கர மனிதர்கள் வாழும் உலகத்தில், பாயந்து சென்று முன்னேறுவது என்ற எண்ணத்தை விடப்போவதில்லை.

எண்ணம் சரிதான்; வழி எங்கே?

ஆயிரக்கணக்கான வழிகள் உள்ள உலகத்தில் அவன் கண்ணுக்கு ஒரு வழி தெரியாமலா போகப் போகிறது?

நடத்தப்படும் படகு கரை வந்து சேர்கிறது. சிதறி விழுந்த கட்டையும் காலங்கடந்தாவது கரைக்கு வந்து விடுகிறது.

முடியுமானல் படகாவோம்; இல்லை யென்றால் கட்டையாவோம்; என்றேனும் ஒரு நாள் கரை சேர்வோம்—அவன் நம்பினன்.

# பாட்டு எழுதினன்

பெருஞ் சத்தத்தோடு கோவை சந்திப்பில் ரயில் நுழைந்தது. அந்தப் பரபரப்புக்களிடையே அவனும் இறங்கினன்.

கோவை ஜெயில் ரோடில் ஒரு சிறிய இல்லம். அங்கே தான் அவனது சகோதரர் இருந்தார். அந்த இல்லம் ஆலாந்துரை துரைசாமிக் கவுண்டர் என்பவருடையது.

அவர், அவனது சகோதரருக்கு மிகவும் வேண்டியவர்; அங்கே போய்த் தங்கினன். கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவை அப்போது ஜுபிடர் பிக்சர்சார் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அதன் நிர்வாகியாக இருந்தவர், திருமதி யூ. ஆர். ஜீவரத்தினத்தின் கணவரான திரு டி. எஸ். வெங்கடசாமி அவர்கள். அவன் அவரைப்போய்ப் பார்த்தான். ஏற்கெனவே அவர் சேலம் வந்திருந்தபோது அவனைச் சந்தித்திருக்கிறார்.

அந்த அறிமுகத்தை வைத்தே அவரிடம் சென்றான். அவர் அவனை அனுதாபத்தோடு விசாரித்தார். நிலைமைகளைச் சொன்னன். பத்துநாள் கழித்து வரச் சொன்னார்.

பத்துநாள்! அடேயப்பா! அதுவரை அவன் என்ன செய்வான்?

என்ன செய்தான்? வேளைக்குச் சாப்பிட்டான்; மாலையிலே சினிமா பார்த்தான்.

கோவைத் தெருக்களைக் காலாலே அளந்தான்; கற்பனையில் வாழ்ந்தான்.

புதிய புதிய எண்ணங்கள் தோன்றினல் குறித்து வைத்துக் கொண்டான்.



அந்த நிலையிலும் மாடர்ன் தியேட்டர்ஸில் சந்தித்த பெண்ணைத் தேடினன். அவள் அங்கே ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தாள்.

தனியாக அல்ல; வேறொரு நபரோடு!

அவர் ஒரு படத் தயாரிப்பாளர். அவன் அவளோடு பேசவில்லை. மறக்க முயன்று நினைவைத் திருப்பினன்.

9 நாட்கள் கழிந்தன. அடுத்த நாள் காலை சீவி முடித்து சிங்காரித்து சென்ட்ரல் ஸ்டுடியோவை நோக்கிப் புறப்பட்டான்.

''கடவுளே! எப்படியாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும்''—என்று இறைவனை வேண்டிக்கொண்டான்.

சென்ட்ரல் ஸ்டுடியோ பரபரப்பாக இருந்தது. அங்கே ஐந்தாறு படங்கள் எடுத்துக்கொண்டிருந்தார்கள். பல டைரக்டர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள் நிறைந்த ஒரு பொருட்காட்சி அரங்கம் போல அது காட்சியளித்தது.

அவர்களுக்கு நடுவே அந்தச் சாதாரண மனிதன் அங்கங்களை ஒடுக்கிக்கொண்டு நுழைந்து, முன் வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

திரு. வெங்கடசாமிக்கு ஒரு சீட்டுக் கொடுத்து அனுப்பினன். வரச் சொன்னார். போய்ப் பார்த்தான்.

''எந்த மாதிரி வேலையை எதிர்பார்க்கிறீர்கள்''—என்று கேட்டார்.

''அருமையாகக் கதை எழுதுவேன்; அற்புதமான வசனமெழுதுவேன்'' என்றான்.

''அதற்கெல்லாம் ஆட்கள் இருக்கிறார்கள்'' என்றார்.

அவர் கொஞ்சம் வேடிக்கையாகப் பேசுவார். ''பாட்டெழுதத் தெரியுமா?'' என்றார். ''ஓ! எழுதுவேனே'' என்றான்.

எது அவனுக்குத் தெரியாது? அவனைப் பற்றிய அபிப்பிராயமே அவனுக்கு நிறைய இருந்தது.

''அப்படி என்றால் கொஞ்சம் இருங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனார். அவன் மனம் குளிர்ந்தது. அப்பொழுதே ஆரம்பித்து விட்டான்.

அவர் திரும்பி வந்து அவனை அழைத்துக் கொண்டு டைரக்டர் ராம்னாத்திடம் சென்றார். அப்போது திரு. ராம்னாத் அவர்கள், ஜூபிடருக்காக 'கன்னியின் காதலி' என்ற படத்தை எடுக்கத் தொடங்கியிருந்தார்.

''பாட்டு எழுதப் புது ஆள் எனக்குப் போதும்'' என்று அவர் சொல்லியிருந்தாராம்.

அந்தப் புது ஆளாக முதன் முதலில் அறிமுகப்படுத்தப் பட்டவன் அவன் தான்.

மனிதனுடைய திறமை பெரிதல்ல; கிடைக்கின்ற சந்தர்ப்பமே அவனைப் பிரகாசிக்கச் செய்கின்றது.

நல்ல வேளையாக அவன் ராம்னாத்திடம் அறிமுகப் படுத்தப்பட்டான். வேறு எந்த டைரக்டரிடம் அவன் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தாலும் அவன் மனத்தைத் தளர வைத்து அனுப்பி இருப்பார்கள்.

ராம்னாத் பரந்த உள்ளம் படைத்தவர். புதியவர்களைக் கைதூக்கி விடுவதில் அவரைப் போல் இன்னொருவர் பிறக்க முடியுமா என்பதே சந்தேகம்.

ஒரு பாட்டுக்கான இடத்தை அவர் அவனுக்கு விளக்கினார். ஆண்வேடம் பூண்ட பெண்ணொருத்தி, இன்னொரு பெண்ணுக்கு ஆறுதல் சொல்லும் கட்டம்.

''முதலில் எழுதிக் கொண்டு வாருங்கள்; அதன் பிறகு இசையமைப்பாளரோடு உட்காரலாம்'' என்றார்.

அவன் ஓட்டமாக ஓடினான். ஒரு கோப்பைத் தேனீரைக் குடித்துவிட்டு, ஒரு 'பாக்கெட்' சிகரெட்டும் கொஞ்சம் பேப்பரும் வாங்கிக் கொண்டான்.

ஜெயில்ரோடு வீட்டில் அமர்ந்து மனத்தில் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளைக் கொட்டினான்.

திரைப் படத்திற்கு முதல் பாட்டு பிறந்தது.

''கலங்காதிரு மனமே—உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே.''

இந்தப் பாட்டு, படத்திற்காக மட்டும் எழுதியதல்ல; அவன் தனக்கே சொல்லிக் கொண்ட ஆறுதலுமாகும்.

பாட்டு பிடித்துவிட்டது ராம்னாத்துக்கு; 'ரேட்டு' பேசினார் வெங்கடசாமி. எவ்வளவு தெரியுமா?



பாட்டுக்கு நூறு ரூபாய்.

அடேயப்பா! நூறு ரூபாய்!

ஒரு மாதத்திற்கே அவன் அவ்வளவுதானே வாங்கிக் கொண்டிருந்தான். முதல் நூறு ரூபாய் கைக்கு வந்தது. அவன் உடம்பில் திமிரும் வந்தது!

துணிக் கடைக்குச் சென்று புதிய துணிமணிகள் வாங்கிக் கொண்டான்.

'ரைன்போ தியேட்டர்'ருக்குப் படம் பார்க்கப் போனான். 'On an Island with you' என்ற படம்.

ஒரு நடிகையைக் கண்டு ஆசை கொள்கிறான் ஒரு விமானி. அவள் அவனை வெறுக்கிறாள். அவள் நடிக்கும் ஒரு படத்தில் விமானம் ஓட்ட வேண்டிய கட்டம் வருகிறது. அதே விமானி, விமானத்தை ஓட்டுகிறான்.

ஷூட்டிங் முடிந்த பின் கீழே இறக்க வேண்டும். டைரக்டர் இறக்கச் சொல்லிக் கத்துகிறார்.

ஷூட்டிங்கிற்காகப் பறந்த அவனோ, உண்மையிலேயே பறந்து அவளோடு ஒரு தீவில் இறங்குகிறான்.

இப்படிப் போனது அந்தக் கதை. அந்தக் கதையில் எந்த நீதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், கிடைக்கிற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளும் முறை இருந்தது.

படம் பார்த்துவிட்டுத் திரும்பினான்.

பால் செல்லவில்லை! படுக்கை கொள்ளவில்லை!

மனிதனுக்குள்ளே இருந்த மிருகம் தலை தூக்கி நின்றது. மெதுவாகத் தெருக்களிலே நடக்க ஆரம்பித்தான்

இரவு பன்னிரெண்டு மணிவரை, நடந்ததைத் தவிர எந்தப் பயனும் காணவில்லை.

வேறு பயன் இல்லாவிட்டாலும் நடந்த களைப்பின் நல்ல தூக்கம் வந்தது. தூங்கி விழித்து தொழிலுக்குப் புறப்பட்டான்.

அன்று இரண்டாவது பாட்டு எழுதியாக வேண்டும்.

எழுதிக்கொடுத்தான். அதுவும் பிடித்தது.

மூன்றாவது பாட்டு, நான்காவது பாட்டு—

நாட்கள் நகர்ந்தன.



நாள்: ........
எண்: ........
M.A., B.T.

எண்ணிப் பத்தாவது நாள், அவன் எதிர்பாராதது நடந்தது.

மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து தந்தி—''உடனே புறப் படவும்'' என்றிருந்தது.

இரண்டு நாளில் வருவதாகப் பதில் தந்தி கொடுத்தான். ஜுபிடருக்குரிய எல்லாப் பாடல்களையும் எழுதி முடித்து, பணத்தைக் கையில் வாங்கிக் கொண்டு சேலம் சென்றான்.

அங்கே 'திகம்பர சாமியார்' என்ற ஒரு படம் துவங்கப் பெற்றது. அதற்கு இரண்டொரு பாடல்கள் எழுதினான்.

பாட்டுக்கு முந்நூறு ரூபாய் என்று அங்கே பணத்தை வாங்கிக் கொண்டான்.

சென்னைக்குப் புறப்பட்டான்.



# பயங்கர அனுபவம்

அவன் கையில் சுமார் ஆயிரம் ரூபாய்கள் இருந்தன.

ஆயிரம் ரூபாய்; போவதோ சென்னைக்கு.

ரயிலிலெல்லாம் அவன் தூங்கவே இல்லை! சென்னையில இறங்கியதும் ராயப்பேட்டையில் இருந்த ஓர் உணவு விடுதிக்குச் சென்றான்.

ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான்.

குளித்துவிட்டு, மைலாப்பூரில் இருந்த தன் நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி நடக்கும்போது அவனது காலணியின் தோல் அறுந்து விட்டது.

அதைத் தைப்பதற்காக நடைபாதையில் இருந்த ஒரு தொழிலாளியிடம் கொடுத்துவிட்டு நின்று. கொண்டிருந்தான். அங்கேதான் அவன் வாழ்க்கையில் மறக்க முடியாத விபத்து நேரிட்டது.

அவன் சேலத்திலும் கோவையிலும் சந்தித்த அந்தப் பெண் அங்கே வந்து கொண்டிருந்தாள்.

அவளது தாயும் கூட வந்தாள்.

அவளைக் கண்டதும் நின்று பேசினார்கள். தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தார்கள்.

அப்பொழுதே புறப்பட்டான். நண்பரை மறந்து விட்டான்.

மைலாப்பூர் சித்திரக்குளத்தின் வடகரையில் வீடு.

அதிலே ஒட்டுக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந் தார்கள் அவர்கள்.

உள்ளே போய் அமர்ந்தான். அவர்கள் தங்கள் வறுமை நிலையைச் சொன்னார்கள்.

வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

குறிப்பறிந்து தாய் அகன்றாள்.

அந்தக் கதை அன்றோடு முடியவில்லை!

ஆறு மாத காலம் அவனது வாழ்க்கையைத் துயரம் கவ்விக் கொண்டது.

பத்தே நாளில் ஆயிரம் ரூபாயும் செலவழிந்து, கடன் வாங்கத் தொடங்கினான்.

அவள் பெரிய சாகஸக்காரி.

அவளுக்குப் பின்னால் ஒரு சரித்திரமே இருந்திருக்கிறது.

அவளால் பொருளிழந்தோர் பலர்.

பெயரிழந்தோர் பலர்.

தொழில் கெட்டு அலைந்தவர்கள் பலர்.

அவர்கள் எல்லோருமே பெரும்பாலும் சினிமாத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள்.

ஓர் ஒலிப்பதிவாளர்; படங்களை வெட்டி ஒட்டும் ஓர் எடிட்டர். இப்படிப் பலபேர்!

இதில் எதுவும் அவனுக்கு அப்போது தெரியாது.

புதுமயக்கம் மது மயக்கம்போல் ஒட்டிக்கொண்டது!

மைலாப்பூர் வீட்டைக் காலி செய்ய வேண்டிய அவசியம் வந்து விட்டது; வாடகை கொடுக்காததால்.

குடியிருப்பு மாற்றப்பட்டது.

வேளாள தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு எதிரே ஒரு வீடு.

செங்கல் மட்டுமே அடுக்கப்பட்டிருந்தது; சிமெண்ட் கூட பூசப்படவில்லை.



உள்ளே ஒரு கூரைக் கொட்டகை; அதற்கு மாதம் பத்து ரூபாய் வாடகை.

அதற்குள்ளேயே மேலும் இரண்டு குடித்தனக்காரர் களும் இருந்தார்கள்.

ஒரு பக்கமும் அடைப்பு கிடையாது. பழைய சேலை களையே திரையாகக் கட்டிவிட்டுத்தான் துயில் கொள்ள வேண்டும்.

அதில் இரண்டு மாதம் அவனும் அவளும் வாழ்ந் தார்கள்.

இந்தப் போக்கு, பெரும்பாலும் அவனது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரியத் தொடங்கிற்று.

பலரும் அவனை வெறுக்கத் தொடங்கினார்கள்.

தான் மிகவும் கீழ்த்தரமாகவும் மரியாதை யற்றவனா வும் ஆகிவிட்டதாக அவனே நினைக்கத்தொடங்கினான்.

ஆனாலும் உடலுணர்ச்சி மேலோங்கிய நிலையில், அவ ளுடனேயே தங்கினான்.

இனந்தெரியாமல் குணந்தெரியாமல் எல்லோரிடமும் கடன் கேட்கத் தொடங்கினான்.

வழியில் நண்பர்களைச் சந்தித்து விட்டால், அவர்களைப் பார்க்கவே வெட்கப்பட்டு பாதை மாறி நடக்கத் தொடங் கினான்.

உடல் இளைத்து, கண்கள் குழி விழுந்து பார்ப்பதற்கே அருவருப்பான தோற்றத்தையும் பெற்றான்.

வாழவும் முடியாமல் மீளவும் முடியாமல் சென்னைத் தெருக்களிலே அலைவதும், வெறியில் உழல்வதுமாக வாழ்ந் தான்.

# நாராயணன் ஆனான்

ஒருநாள் அவனுக்கொரு தந்தி வந்தது. உடனே புறப்பட்டு வரும்படி அவனது சகோதரர் தந்தி கொடுத்திருந்தார்.

அப்போது சேத்துப்பட்டிலிருந்த திரு எஸ். டி. சுந்தரத்திடமிருந்து இருபது ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டான்.

அவனது சரித்திரம் முழுவதையும் ஊரிலிருந்த உறவினர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

உடனே அவனை யாருக்காவது சுவீகாரமாகத் தந்து விடுவதென முடிவு கட்டினார்கள்.

அதுவரையில் சுவீகாரம் கேட்டு வந்தவர்களையெல்லாம் கோபித்துக்கொண்டு துரத்திய அவனது தந்தையும் அதற்குச் சம்மதித்து விட்டார்.

வெகு நாட்களாகவே அவனைத் தன் மகனாக்கிக் கொள்ள வேண்டுமென்று ஓர் அன்னை அவனது வீட்டிற்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார்.

கணவனை இழந்த அந்த அன்னையார், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள்.

ஒரு பெண் இருந்து, மண முடிந்த இரண்டு ஆண்டுகளில் ஓர் மகனை ஈன்று கண்மூடி விட்டார்கள்.

ஆகவே அவனது குல வழக்கப்படி அவனை மகனாக்கிக் கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.



பல நாட்களாகவே மறுத்து வந்த அவனது பெற்றோர், அந்த அன்னையாரையே அழைத்துச் சம்மதம் தெரிவித்து விட்டார்கள்.

சுமார் ஒன்னரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை உடையவராக அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.

உடனடியாகவே சுவீகாரத்துக்கு நாள் வைக்கப்பட்டது.

அதற்குள் அவன் ஒரு முறை சென்னை சென்று திரும்புவதாகச் சொன்னான். யாரும் சம்மதிக்கவில்லை.

அதே நேரத்தில், சென்னைக்கு கம்பெனியை மாற்றிக் கொண்ட ஜூபிடர் பிச்சர்சார், அவனுக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள்.

அதைச் சாக்கிட்டு அவன் சென்னைக்குப் புறப்பட்டான்.

சென்னைக்கு வந்ததும் வராததுமாக அவளைத் தேடி நடந்தான்.

வீடு வழக்கம்போல் திறந்தே கிடந்தது.

ஆனால் அந்தோ பரிதாபம்! அவள் அங்கே இல்லை.

வீட்டிலிருந்த மற்றவர்களை விசாரித்தான். அவர்கள் ஒரு விலாசத்தைக் கொடுத்தார்கள்.

அதில் குறித்திருந்தபடி மைலாப்பூரில் இருந்த ஒரு வீட்டிற்குச் சென்றான்.

கதவு தாளிடப்பட்டிருந்தது. தட்டினான். கதவு திறக்கப்பட்டது.

அங்கே — அந்தோ!

அதை எப்படி அவன் வர்ணிப்பான்?

அந்த வீட்டில் ஒருவனோடு அவள் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள்.

துயின்று எழுந்த நிலையிலிருந்தாள். அந்தக் காட்சி, இறைவன் அவன் மீது வைத்த கருணையால் தோன்றியதாகும்.

அன்றுதான் அவன் அகக்கண்கள் திறந்தன. பாலுணர்ச்சியிலும் தரம் வேண்டும் என்கிற ஞானோதயம் அன்றுதான் அவனுக்கு ஏற்பட்டது.

அவளிடம் அமைதியாகவே சில வார்த்தைகளைச் சொன்னான்:

''நீ நடந்து கொண்ட முறை சரிதான். என் ஆசைப் போதை தணிந்தது. என் விழிகளை நீதான் திறந்து வைத்தாய். இந்தக் கோலங்களையெல்லாம் இதுவரை நான் கதைகளில் தான் படித்திருக்கிறேன். கண்ணெதிரே இன்று கண்டேன். உன்னைச் சந்தித்ததையும், உன்னோடு சில மாதங்கள் அலைந்ததையும், அதனால் நிலை தாழ்ந்து போனதையும் எண்ணி நான் வருத்தப்படவில்லை, இந்த அனுபவம் எனக்குத் தேவையானது.

''உன் பெயருக்கேற்ப நீ 'லீலா' விநோதங்களையே புரிந்து கொண்டிரு; வருகிறேன்.''

அவன் வெளியேறினான்.

அவள், தான் ஓர் உத்தமி என்று வாதாடவில்லை.

அது அவள் சுபாவம்.

அமைதியாகத் தலைகுனிந்து குற்றங்களை அவள் ஒப்புக் கொண்ட நிலையில், அவன் பிரிந்தான்.

ஏதோ தத்துவம் பேசி விட்டானே தவிர, மனத்துக்குச் சமாதானம் சொல்ல முடியவில்லை!

ஆனாலும், 'காலத்தால் அந்த வியாதி தீரும்' என்று அமைதியுற்றான்.

அன்று இரவு, அவன் காய்ச்சலில் வீழ்ந்தான்.

கடுமையான காய்ச்சலோடு ஊருக்குப் புறப்பட்டான்.

சுவீகாரத்திற்கான நாள் நெருங்கிற்று.

ஒருநாள்-அதிகாலை நான்கு மணிக்கு அவனது கிராமமான சிறுகூடல்பட்டியிலிருந்து காரைக்குடிக்கு அவனை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

அவனுடைய சாதியில் சுவீகாரம் என்பது மிகவும் சர்தாரணமானது.

அந்தச் சமூகத்திலாவது குறைந்த பட்சம் சமதர்மம் நிலவட்டுமென்று இறைவன் ஒரு விதியை வகுத்திருந்தான்.

அந்தச் சமூகத்தின் பணக்காரர்களில் பெரும்பாலோருக்கு குழந்தையே இல்லாமல் ஆக்கி விட்டான்.



நடுத்தரக் குடும்பங்களில் நிறைய ஆண் குழந்தைகள் பிறக்க வைத்தான்.

அந்தப் பிள்ளைகளைப் பணக்காரர்கள் சுவீகாரம் எடுக்க வைத்தான்.

அந்தச் சமூகத்தில் இந்தச் சமதர்மம் அமைதியாக நிறைவேறிக் கொண்டிருந்தது.

சுவீகார நாளன்று பிள்ளையை வாங்கிக் கொள்கிறவர்கள் பெரு மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

கொடுக்கின்றவர்கள் கண்ணீரும் கம்பலையுமாய் இருப்பார்கள்.

அந்தச் சடங்கே அலாதியானது.

குறித்த நேரத்தில்—அது இரவு பன்னிரெண்டு மணியாகக் கூட இருக்கும்—

பையனுக்குப் பிறந்த வீட்டில் போட்டிருந்த சட்டை வேட்டிகளைக் கழற்றி, சுவீகார வீட்டிலிருந்து வந்த அலங்கார ஆடைகளை அணிவிப்பார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் மூதாதையருக்கான 'படைப்பு' அறையொன்று இருக்கும்.

அதன் எதிரே கோலம் போட்டு வைப்பார்கள். அந்தக் கோலத்தில் பையனை நிற்க வைப்பார்கள்.

அவன் கையிலே ஒரு வெள்ளித்தட்டைக் கொடுப்பார்கள். அதில் வெற்றிலை பாக்கு வைத்திருப்பார்கள்.

பையனுக்கு எதிரே முதலில் அவன் தந்தை வந்து நிற்பார்.

குடும்பத்துப் பட்டுத்துண்டு ஒன்றை அவர் தலையிலே கட்டிக்கொள்வார்.

தன் கையிலிருக்கும் வெள்ளித் தட்டை, மகன் தந்தையிடம் தருவான்.

பிறகு அவர் காலில் நெடுஞ்சாண்கடையாக விழுந்து கும்பிடுவான்.

''போய் வருகிறேன்'' என்பது அதன் பொருள்.

இப்படி வரிசையாகத் தாய் சகோதர சகோதரிகள் எல்லோருமே வந்து நிற்பார்கள்.

காலில் விழுந்து எழும்போது 'கோ'வென்று அலறி விடுவார்கள்.

காரணம், அந்நாளிலிருந்து அந்தக் குடும்பத்தில் அவனுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை.

உறவு கூட பையனின் பாச உணர்ச்சியைப் பொறுத்தே பிறகு நீடிக்கும்.

பெரும்பாலும், குழந்தையை விலைக்கு விற்கிற மாதிரி தான் இது.

பத்தாயிரம் இருபதினாயிரம் என்று அதற்கு விலையே உண்டு.

அவனுக்கு வாங்கப்பட்ட விலை ரூபாய் ஏழாயிரம்.

நடுத்தரக் குடும்பத்திலிருந்து பணக்காரக் குடும்பத்திற்குப் போகிற எந்தப் பையனும், நாளாக நாளாகப் பிறந்த வீட்டுப் பாசத்தை இழந்துவிடுவான்.

ஆனால் அவனுக்கோ குடும்பப் பாசம் என்பது ரத்தத்தோடு கலந்தது.

தாய் தந்தையரிடமும் உடன் பிறந்தோரிடமும் விடை பெற்ற போது அவர்கள் அழுதது போலவே அவனும் அழுது விட்டான். இத்தனைக்கும் அவனைச் சுவீகரித்துக்கொண்ட குடும்பத்தின் சொத்து மிகவும் குறைவுதான்.

பல பையன்கள் பெரும் கோடீஸ்வரர்கள் வீட்டிற்கே சுவீகாரம் போயிருக்கிறார்கள்.

ஆனாலும் பிள்ளைப் பேறு இல்லாத ஒரு தாயின் மனத்துக்கு அமைதி தரப் போகிறோம் என்கிற மகிழ்ச்சி அவனுக்கு இருந்தது.

அவன் சுவீகாரம் போன இடத்தில், சொத்துத்தான் அதிகமில்லையே தவிர, அரசியலுக்கும் அதற்கும் சம்பந்தமிருந்தது!

காரைக்குடியிலேயே மிகப் பெரிய அரசியல்வாதி, தியாகி என்றெல்லாம் போற்றப்பட்டவரும், இன்று சுதந்த



ராக் கட்சிப் பிரமுகராக இருப்பவருமான திரு. சா. கணேசனின் சொந்த அத்தையே அவனை சுவீகரித்துக் கொண்ட தாயாவார்.

அவனை அழைத்துப் போக திரு. கணேசனும் வந்திருந்தார்.

அவர் முன்னேற்பாடாகவே அவனைக் காங்கிரஸ்காரனாக ஆக்குகிற நிலையில் வந்திருந்தார்.

கதர் வேட்டியும் கதர்ச் சட்டையும் அவனுக்கு ஏராளமாகத் தைக்கப்பட்டிருந்தன.

காலை ஐந்து மணிக்கெல்லாம் அவன் பிறந்த ஊரிலிருந்து காரைக்குடிக்கு வந்து சேர்ந்தான்.

கழுத்துக்குச் சங்கிலி, கைக்குச் சங்கிலி, வைரக் கடுக்கன், வைர மோதிரம் என்று ஏராளமான நகைகளை அவன் உடம்பில் பூட்டினார்கள்.

அதுவரை அந்த வீட்டில் கணக்கப் பிள்ளையாக இருந்த ஒருவர், அவனிடம் வந்து ''நான்தான் உங்கள் வீட்டுக் கணக்கப்பிள்ளை'' என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

''உங்கள் வீடு'' என்று அவர் சொன்ன வீட்டிற்கு அவன் இனித்தான் போக வேண்டும்.

முதலில் அவனைக் கொண்டு வந்து இறக்கிய வீடு, அவனது உடன் பிறந்த சகோதரர் வீடாகும்.

அவர் ஏற்கெனவே காரைக்குடிக்கு சுவீகாரம் வந்தவர்.

அந்த வீட்டிலிருந்து காலை எட்டரை மணிக்கு ஊர்வலமாக அவனை அழைத்துப் போனார்கள்.

வழி நெடுகிலும் பெண்ணைப் பெற்றோர் பலர் நின்று அவனைப் பார்த்தார்கள்.

அவன் கூடவே வந்த புது வீட்டு உறவினர் ஒருவர் ஒவ்வொரு வீதியிலும் வரும்போது பாதி மறைந்து நின்ற சில பெண்களைக் காட்டி, ''இந்தப் பெண் வீட்டார் கேட்டார்கள்; அந்தப் பெண் வீட்டார் கேட்டார்கள்'' என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

ஏதோ மிதிலாபுரியில் ராமன் ஊர்வலம் வருவதுபோல் அவன் வந்து கொண்டிருந்தான்.

புது வீடு வந்தது.

புதிய அன்னை எதிர்கொண்டார்.

''இவர்தான் உன்தாய்'' என்று அறிமுகப்படுத்தினர்கள்.

காலைத் தொட்டு வணங்கினன்.

புதிய வீட்டுக்குள் நுழைந்தான்.

புதிய பெயரொன்றைச் சூட்டினர்கள்.

அது சுவீகாரத் தாயின் மாமனர் பெயர்.

அவனது பாட்டனர் பெயர்.

பழைய முத்தையாவிலிருந்து அவன் புதிய நாராயண ஞனன்.

அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் இரண்டொரு நாள் அங்கேயே தங்கிவிட்டு, கண்ணீரோடு விடைபெற்றுக் கொண்டார்கள்.

அவர்களைப் பிரிந்த அன்றிரவு அவன் பட்ட துயரம் சிறிதன்று!

புதிய இடம் பிடிபடுவதற்கு ஒரு வாரம் ஆயிற்று.

ஒருவாரம் கழித்து, மீண்டும் சென்னைக்குக்கிளம்பினன்.



# அச்சம்!

இதற்கிடையில், 'மந்திரி குமாரி' படத்தை வெற்றிகரமாக முடித்து மாடர்ன் தியேட்டர்ஸில் விடை பெற்றுக் கொண்டு நண்பர் கருணாநிதி சென்னையில் குடியேறியிருந்தார்.

அவன் அவரைப் பார்க்கச் சென்றான்.

கட்டித் தழுவினர்.

இருவருமே சென்னைக்கு வந்து சேர்ந்ததில் இருவருக்குமே மகிழ்ச்சி.

தொடர்ச்சியாக சென்னை வாழ்க்கை ஆரம்பமாயிற்று.

அந்தச் சிறிய மனிதனின் உலக அனுபவம், படிப்படியாக விரியத் தொடங்கிற்று!

உற்சாகம், கனவு, கற்பனை இப்படி வாழ்க்கை வளர்ந்தது.

ஒருநாள்—

இரவு எட்டு மணி இருக்கும்.

எவரெஸ்ட்ஹோட்டல் மாடியில்அவன் குடியிருந்தான்.

பெரிய அறை அது.

அந்த அறை, அவனது நண்பர்களுக்கும் அறிமுகமான அறையாக இருந்தது.

ஒருநாள் எட்டு மணிக்கு, அவன் வெளியிலிருந்து தன் அறைக்குத் திரும்பினன்.

போகும்போது அறையைப் பூட்டாமல் போயிருந்தான்.

திரும்பி வரும்போது அறை திறந்தே கிடந்தது. பெட்டி உடைக்கப்பட்டிருந்தது. துணிமணிகள் சிதறிக் கிடந்தன.

அது போதாதென்று, ஒரு மதுப்புட்டி தலையணைக்கடியில் வைக்கப்பட்டிருந்தது.

திருட்டு நடக்கவில்லை!

ஆனால் விஷமம் நடந்திருந்தது.

அதே நேரத்தில் தோதாக, சில போலீசாரும் சில அறைகளுக்குள் நுழைந்து திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அவன் மெதுவாக அந்த மதுப்புட்டியை எடுத்து வராந்தாவில் வைத்துவிட்டு, அறைக்குள் வந்து தாளிட்டுக் கொண்டான்.

போலீசாரின் காலடி ஓசை கேட்டது.

அவன் மனம் அடித்துக்கொண்டது.

அதோ! அவர்கள் மதுப்புட்டியை எடுத்து விட்டார்கள்.

ஏதோ பேசிக்கொள்கிறார்கள்.

கதவு தட்டப்பட்டது!

அவன் தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்தான்.

ஒரு சப்இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார்.

சுற்றும் முற்றும் பார்த்தார்.

''உங்களோடு வேறு யாரும் தங்கியிருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றான்.

படுக்கையைச் சோதனை செய்தார்.

எதுவும் அகப்படவில்லை.

போய் விட்டார்.

அவர் போன பிறகு கதவை மீண்டும் தாளிட்டுக் கொண்டு 'அப்பாட' என்று படுத்தான்.

முதுகில் ஏதோ அழுத்துவது போல் தெரிந்தது.

மெத்தையைத் தூக்கிப் பார்த்தான்.

அடியில் எதுவும் இல்லை!

ஆனால் மெத்தைக்கு உள்ளே வேறொரு பாட்டில் திணிக்கப் பட்டிருந்தது.

போலீசார் கண்ணுக்கு அது தப்பியதே! அது அவன் செய்த பாக்கியம், மெத்தைக்குள் கைவிட்டு அதை எடுத்தான்.



உடைக்கப்படாத ஒரு 'பிராந்தி' பாட்டில்.

எந்தச் சண்டாளன் இந்த வேலைகளைச் செய்தான்?

அவனுக்குப் பயமும் ஆத்திரமும் கலந்து பிறந்தன.

பிறகு பெட்டியைத் திறந்து சோதனை செய்தான்.

என்ன ஆச்சரியம்!

அது அவனுடைய பெட்டியே அல்ல!

அவனுக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது!

பிறகு ஏதோ சந்தேகம் வந்து, வெளிப்பக்கம் வந்து ரூம் நம்பரைப் பார்த்தான்.

என்ன அதிசயம்!

அது அவனுடைய ரூமே அல்ல!

அந்த ஓட்டலில் மூன்று நான்கு மாடிகள் உண்டு.

எல்லா மாடியும் ஒரே மாதிரியே இருக்கும்!

அவனுடைய அறை மூன்றாவது மாடியிலுள்ளது!

அவன் இப்போது புகுந்திருப்பது இரண்டாவது மாடி அறையில்.

அவனுக்கு வேறு பயம் வந்து விட்டது.

திடீரென்று அந்த அறைச் சொந்தக்காரன் வந்து, அவனைத் திருடன் என்று சொல்லி விட்டால்?

மெதுவாக அறையைத் திறந்து கொண்டு வெளியேறினான்.

தன்னுடைய அறைக்குப் போனான்.

கதவிலேயே சாவி இருந்தது.

சாமான்கள் பத்திரமாக இருந்தன.

அவன் அமைதி கொண்டான்.

மறுநாள், இந்த நிகழ்ச்சியை நண்பர்களிடம் சொல்லி ரசித்துக் கொண்டிருந்தான்.

சில நாட்களுக்குப் பிறகு, நண்பர் கருணாநிதி, கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்துக்குப் புறப்பட்டார்.

அவனும் உடன் சென்றான்.

அதுதான் அவனது அரசியல் வாழ்க்கை துவங்கிய நாளென்று சொல்ல வேண்டும்.

முழுக்க முழுக்க அன்றுதான் அவனது வாழ்க்கை திசை திரும்பியது.

அன்று பொள்ளாச்சியில் கூட்டம்.

கட்சி பிறந்து சில மாதங்களே ஆனபடியால், இன்றளவு கூட்டம் அன்றில்லை!

ஆனாலும் குறிப்பிடத்தக்க விதத்திலிருந்தது.

அந்தக் கூட்டத்தில் அவனும் பேசும்படி கருணாநிதி வற்புறுத்தினார்.

ஐந்து நிமிடம் பேசினான்.

அந்த அரைகுறைச் சுயமரியாதை உணர்ச்சியில் என்ன பேச முடியும்?

கூட்டம் முடிந்து கோவை திரும்பினான்.

அவன், தன் நண்பர் ஒருவருடைய மருந்துக் கடையில் இறங்கிக்கொண்டான்.

அங்கேயே அமர்ந்து வெகுநேரம் சிந்தித்தான்.

அரசியல் அவன் மனத்துக்கு ஏற்றதாகக் கொஞ்சங் கூடத் தோன்றவில்லை!

பறந்து திரியும் விடுதலைப் பறவை ஒன்று, சிறியகூட்டுக் குள் தன்னை அடைத்துக் கொள்வது போலவே தோன்றிற்று.

அத்தோடு, சிற்சில அரசியல்வாதிகளோடு பழகிய அனு பவம் வேறு அவனுக்கு இருந்தது.

அவர்களெல்லாம் மேடையிலே பேசிவிட்டுக் கீழே இறங் கிய உடனேயே, தாங்கள் கொண்ட கருத்தில் தங்களுக் குள்ள அவநம்பிக்கையை வெளியிடுவார்கள்.

மேடை மனிதர்கள் மேடையிலிருந்து இறங்கியதுமே முரண்பட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம் என்ன என்று அவன் யோசித் தான்.

அரசியல்வாதிகள் பல்வேறு கோணங்களில் நின்று மக்க ளைப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறார்களே தவிர, மக்க ளுக்குப் பயன்படுகிறவர்கள் அல்ல என்பதைக் கண்டான்

சில அரசியல் வாதிகளோடு சில நாட்கள் நெருங்கிப் பழகியதிலேயே இந்த உண்மை அவனுக்குப் புலப்பட லாயிற்று.



தாம் கொண்ட கொள்கைகளில், யாருமே உறுதியாக இல்லை!

ஜனங்கள் முட்டாள்கள் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டு, அதை வெளியில் சொல்லாமலேயே அரசியல் நடத்துகிறார்கள்.

முட்டாள்களின் கண்கள் யோக்கியர்களை அடையாளம் கண்டு பிடிப்பதில்லை!

ஏமாற்றுக்காரர்கள் நடிக்கும் நடிப்புத்தான் அவர் களுக்குப் பிடிக்கிறது.

அவனுக்கு நடிக்கத் தெரியாது.

ஏமாற்றத் தெரியாது!

அவன் எப்படி அரசியலுக்கு லாயக்காவான்?

அவன் வெகு நேரம் சிந்தித்தான்.

பொதுமக்கள் மீது அவனுக்கு வெகுவாக அனுதாபம் ஏற்பட்டது.

பலரைத் தலைவர்களாக்கவும், சிலரைப் பணக்காரர்க ளாக்கவும் அவர்கள் பயன்படுகிறார்கள்.

கொடி பிடிக்கிறார்கள்.

குண்டாந்தடிக்கு இரையாகிறார்கள்.

அந்தத் தியாகத்தின் மூலம் குழுக்களுக்கு உணவளிக் கிறார்கள்.

அவர்கள் வீணாகச் சாகிறார்கள்.

விழலுக்கு நீர் இறைக்கிறார்கள்.

அவர்களுக்கென்று ஏற்படும் பிரச்சினைகள் அரசியல் தலைவர்களாலே தீர்த்து வைக்கப்பட்டதில்லை!

கானலை நீரென்று மானலைவதுபோல், கட்சிகளை நம்பி அலைகிறார்கள்!

ஒவ்வொரு தொண்டனும், தன் தலைவர்களோடு நான்கு நாள் இரவும் பகலும் தங்கிப் பார்த்தானானால் அரசியலை விட்டு அவன் காதங்கடந்து ஓடுவான்.

பொதுமக்களை வாத்தியக்காரர்களாக வைத்துக்கொண்டு அரசியலில் அவர்கள் கேளிக்கை நடனமாடுகிறார்கள்.

அந்தக் குறுகிய காலத்திற்குள் அவனுக்கு ஏற்பட்ட அனுபவம் அதுதான்.

அந்த அரசியலில் அவன் புகுந்து என்ன பயன் ?

மேடையில் நிற்கும்போது, பொதுமக்கள் கை தட்டும் போது, உடலும் மனமும் என்னவோ செய்கின்றன.

ஆனால் மனச்சாட்சி உள்ள மனிதன், தான் என்ன செய்கிறான் என்பதை, தனிமையில் உட்கார்ந்து சிந்தித்தானானால் மனமறிந்து ஏமாற்றிக் கொண்டிருப்பது தெரியவரும்.

'உயிரையும் கொடுப்பேன்' என்று ஒவ்வோர் அரசியல் வாதியும் பேசுகிறான்.

அவனுக்கு இருப்பது எத்தனை உயிர் ?

எல்லாப் பிரச்சினைகளிலும் உயிரைக் கொடுத்துவிட முடியுமா?

முடியாது என்று தெரிந்தேதான் பேசுகிறான்.

வாழ்க்கைச் சிக்கலில் அவதிப்பட்ட மனிதர்கள், அந்தப் பேச்சையே மருந்தாக உண்டு வாழ்கிறார்கள்.

ஆறே மாதங்களில் அவன் பார்த்த அரசியல் உலகத்தில் அவன் இவ்வளவையும் கண்டு கொண்டான்.

அடுத்தடுத்து வந்த கூட்டங்களில், மேடைக்குப் போகாமல் பின்புறமாகவே அமர்ந்திருந்தான்.

ஆனால், வெறும் கூட்டங்களைச் சந்திப்பது அவனுக்கொரு வேடிக்கையாகவும் இருந்தது.

இப்படி ஆசைக்கும் அச்சத்திற்கு மிடையே போராடிய அந்த மனிதன், ஒரு முடிவுக்கும் வராமலேயே இருந்தான்.

அன்றைக்கு உலகில் யாருக்கும் அவனைத் தெரியாது.

அந்தச் சராசரி மனித வாழ்க்கையின் சுகம் இப்போது அவனுக்குத் தெரிகிறது.

எல்லோராலும் கவனிக்கப்படுகிற மனிதனைவிட, யாராலும் கவனிக்கப்படாதவன் அமைதியாகவே வாழ்கிறான்.

பூங்காவிலே அந்த மனிதன் தனித்திருக்கிறான்.

திரைப்படக் கொட்டகைகளிலே கூட்டத்தோடு கூட்டமாக அமருகின்றான்.

பத்தோடு பதினொன்றாகக் கணக்கிடப்படுகின்றான்.

அந்த நிலையில் அவன் சிந்தனையாளனாக விளங்குகின்றான்.



விளம்பரம் பெற்ற மனிதன் பெரும்பாலும் போலி வாழ்க்கையே வாழ்கிறான்.

அவன் தன் உணர்ச்சிகள்முழுவதையும் விற்றுவிடுகிறான்.

அவன் தன் சிந்தனையைக் குறுகிய இருட்டறைக்குள் வைத்து விடுகின்றான்.

நாடக மேடையில் ஏறி நின்றாலும் நடுங்குகின்ற அவன், பொதுமக்களிடம் தாராளமாக நடிக்கின்றான்.

இத்தனையும் அவன் சிந்தனையில் தோன்றின.

இரண்டு கூறுகளையும் எடைபோட்டுப்பார்க்கத் தெரிந்த அவனுக்கு எதை ஏற்றுக்கொள்வதென்று மட்டும் பிடிபடவில்லை!

அவன் சந்தர்ப்பங்களால் உருட்டிச் செல்லப்படும் பந்தாக மாறினான்.

# பரிதாபத்திற்குரியவர்கள்

அடுத்து இரண்டொரு கூட்டங்களில் பேசினான்.

அந்த இனிய மனிதன் அன்றைய கொடிய அரசியலில் தன் வலது காலை நுழைத்துக்கொண்டான்.

இந்த நிலையில் அவன் வாழ்க்கை மறுபடியும் குழப்பத்திற்கும் மயக்கத்திற்கும் ஆட்பட்டது.

ஊரிலே அவனது திருமணப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அவனுக்காகப் பலபேர் பெண் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவனது சமூகத்திற்கென்றே சில அதிசய சுபாவங்கள் உண்டு.

நாட்டுக்கோட்டை செட்டியார்களென்றால், பணக்காரர்கள், வட்டி வாங்குகிறவர்கள் என்றுதான் உலகத்திற்குத் தெரியும்.

அவர்கள், கொடிய உணர்ச்சிகள் பல கொண்டவர்கள்.

யாரையும் வாழவும் விடமாட்டார்கள், சாகவும் விடமாட்டார்கள்.

சொந்தச் சாதிக்காரனைத்தான் சீக்கிரமாகக் கவிழ்ப்பார்கள்.

பொறுமை என்பது அந்த சாதி பிறக்கும்போதே பிறந்த குணமாகும்.



அவனுக்காகப் பெண் பேசிய அவனது உறவினர்கள் கூட, அவனுக்கு அழகிய பெண் கிடைத்து விடாமலிருக்க, பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

ஒவ்வொரு 'தோஷ'மாகச் சொல்லி, ஒவ்வொரு பேச்சையும் தட்டிக் கழித்தார்கள்.

அவனோ, திருமணப் பைத்தியம் பிடித்தவனாகவே இருந்தான்.

பல பெண்களோடு பழக்கப்பட்டவனாதலால் ஒருத்தியோடு குடும்பம் நடத்த வேண்டுமென்பதிலே ஆர்வம் அதிகமுடையவனாக இருந்தான்.

ஊரில் ஒரு திருமணப் பேச்சும் முடிவதாக இல்லை!

தினம் தினம் பெண் பார்த்து அலுத்து விட்டான்.

''இஷ்டம்போல் பேசி முடியுங்கள்'' என்று சொல்லிவிட்டு, சென்னைக்குத் திரும்பி விட்டான்.

சென்னையிலே அவனது நண்பர்கள் வெகு உற்சாகமான முறையிலே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலே தாய்மார்களைப் பற்றி ரத்தக்கண்ணீர் வடிக்கின்ற அவர்கள், அந்தத் தாய்மார்களிடம் தனிமையில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அனுபவ பூர்வமாகக் காணும் கட்டம் ஆரம்பமாயிற்று.

அந்நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் பிரபல இயக்கமாக இல்லை.

வாடகைக்கார் டிரைவர்களுக்கும், அந்தக் கழகத்தைப் பற்றியோ, அதன் தலைவர்களைப் பற்றியோ எதுவும் தெரியாது.

அவனும் ஒரு தலைவனும், ஒருநாள் இரவு, ஒரு பெரிய வாடகைக்காரை வைத்துக்கொண்டு பெண் வேட்டையில் ஈடுபட்டார்கள்.

ஒவ்வோர் இடமாகப் போய்ப் பார்த்தார்கள்.

கடைசியில், தேனாம்பேட்டை பக்கமுள்ள குடிசைகளின் அருகில் வாடகைக்கார் நின்றது.

ஒரு நாலைந்து பெண்கள்—கிராமத்துப் பெண்கள்—வேறு பெயரில் சொல்வதானால் 'நாட்டுக் கட்டை'கள், மட மடவென்று வந்து காருக்குள் ஏறிக் கொண்டனர்.

காமுகன் பசிக்கு ருசியா தெரியும்?

அத்தனையையும் ஏற்றிக்கொண்ட வாடகைக்கார், நேரே சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் உள்ள ஹோட்டலை நோக்கிப் புறப்பட்டது.

திராவிட விடுதலை வீரர்கள் திராவிடநாடு அந்தப் பெண்களிடம் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தார்கள்.

காமக்கடலில் மூழ்கி எழுந்தார்கள். ஆனால் காரில் போவதற்குக்கூட பணம் கொடுக்காமல், அவர்களை வெளியே அனுப்பி விட்டார்கள்.

அன்றும் அதற்குப் பிறகும், நடைபெற்ற களியாட்டங்களை, ஒவ்வொன்றாக விவரிக்கத் தேவை இல்லை.

அது சுவைக் குறைவாகவும் போய்விடக்கூடும்.

ஆனால் சில பெண்கள், அவ்வப்போது நறுக்குத் தெறித்தாற்போல் கேட்ட கேள்விகளை அவனால் மறக்க முடியவில்லை.

''மேடையில் என்னென்னவோ பேசுகிறீர்களே! அதெல்லாம் ஊருக்குத்தான் உபதேசமா?''

''நீங்களே இப்படி நடப்பதைப் பார்த்தால், யாரை நம்புவதென்றே தெரியவில்லை.''

''உங்கள் கையில் நாடு கிடைத்தால்—சட்டசபை யெல்லாம் பெண்களாகவே இருப்பார்கள்.''

இப்படி ஆணித்தரமான பொன்மொழிகள் பலவற்றை அவர்கள் சந்தித்த பெண்கள் உதிர்த்திருந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள் பலரும், ஒழுக்கமற்றவர்களென்றும் காமுகர்களென்றும் எதிர்க் கட்சியினர் குற்றம் சுமத்தும்போது, அவனுக்குக் கொஞ்சம் கூடக் கோபம் வருவதில்லை!

காரணம்—அதுதான் உண்மை!

அரசியலையே அவர்கள் வேடிக்கையாகத்தான் நடத்தினார்கள்.

ஒரு விடுதலை இயக்கமானது, தனக்கு வைத்துக்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளை தி. மு. கழகம் என்றுமே வைத்துக் கொண்டதில்லை.

கட்சித் தொண்டும் ஒரு வகையான பொழுதுபோக்கு



என்றிருந்ததால் அவனும் தன்னையறியாமல் அதிலே மேலும் ஈடுபடத் தொடங்கினான்.

கட்சியினுடைய ஆரம்ப காலமான அக்காலத்திலும், ஒரு தலைவர் இன்னொரு தலைவரைக் கேலி செய்வதே வாடிக்கையாக இருந்தது!

''நீ இப்படி செய்யலாமா?'' என்று ஒருவரைக் கேட்டால், ''ஏன் அவர் மட்டும் என்ன யோக்கியராம்?'' என்று பளிச்சென்று பதில் சொல்வார்கள்.

பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்கின்ற தொண்டர்கள், அன்றும் சரி இன்றும்சரி அவ்வளவு உத்தமமானவர்கள்.

அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குப் பரிதாபமாக இருக்கும்.

''இந்தத் தலைவர்களை நம்பியா நீங்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்கத் தோன்றும்.

தவறுகளையே செய்து கொண்டிருக்கும் தலைவர்கள், அந்த உத்தமமான தொண்டர்களை மிரட்டுவார்கள்.

உள்ளூரிலேயே 'ஐம்பது ரூபாய் கொடுத்தால்தான் கூட்டத்திற்கு வருவேன்' என்பார்கள்.

வாடகைக் காருக்குப் பணம் கொடுக்கும்படி மிரட்டுவார்கள்.

தன் மனைவியின் தாலிச் சரட்டை விற்றுவிட்டுத் தலைவரின் வழிச் செலவுக்குப் பணம் கொடுத்த ஒரு தொண்டனை அவன் அறிவான்.

'ஈட்டிக்காரர்'னிடம் எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கி ஒரு கூட்டத்தை நடத்தினான் ஒரு தோழன்.

அந்தக் கூட்டத்தில் பேசுவதாக இருந்த ஒரு பேச்சாளர் பணத்தையும் வாங்கிக்கொண்டு வெளியூருக்குப் போய் விட்டார்.

கூட்டத்திற்கு அவர் வராததால் ஏமாந்த அந்தத் தோழன் 'கோ'வென்று அலறி அழுது கொடிகளையெல்லாம் பிய்த்துக் கீழே போட்டான்.

இப்படிப் பல நிகழ்ச்சிகளை அவன் கண்டான்.

ஜனநாயகத்தின் போலித்தனம் அவனுக்குத் தெரியலாயிற்று.

கரையான் புற்றெடுக்க, கருநாகம் குடிபுகுவது போல், நலம் நாடிப் பிறந்த ஜனநாயகத்தில் நாணயம் கெட்டவர்கள்தான் குடியேறினார்கள்.

போலிகளும் பொய்யர்களும் தவிர, யோக்கியர்கள் யாரும் ஜனநாயகத்தில் பெரும் புகழ் பெற முடியாதே என்று அவன் அஞ்சத் தொடங்கினான்.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலத்தில், எதிர்ப்புகளை யெல்லாம் சமாளித்து கட்சியை வளர்த்த உத்தமர்கள், அன்று செல்வாக்கு அற்றுக் கிடந்தார்கள்.

அரை வேக்காடுகளும் ஆர்ப்பாட்டக் குடுக்கைகளுமே தலைவர்களென்று தம்பட்டமடித்துக்கொண்டு ஊர்வலம் வந்தார்கள்.

ஒவ்வோர் அரசியல் கட்சியிலுமே நிலைமை இதுதான்!

ஒழுங்காக உழைத்தவன், தியாகம் செய்தவன் எங்கேயோ கிடப்பான்.

அவனை ஏமாற்றிக் கீழே தள்ளியவன் எல்லாப் பதவிகளிலும் அமர்ந்து கொண்டிருப்பான்.

வீட்டினுடைய அஸ்திவாரம் பூமிக்குள் மறைந்து கிடப்பதுபோல், அரசியல் கட்சியின் அஸ்திவாரமான உத்தமத் தியாகிகளும் மறைந்து கிடப்பார்கள்.

ஆகவே ஒருவன் அரசியலில் புகழ்பெற விரும்பினால் போலித்தனமான குறுக்கு வழிகளையேதான் பெரும்பாலும் கையாண்டு தீர வேண்டும்.

அவனுக்கு அது தெரியாது!

உழைக்கின்ற தொண்டர்களின் தோளிலே கைபோட்டுக் கொண்டு, அவர்களைத் தனக்குச் சமமாக நடத்தினான்.

கஷ்டங்களைக் கண்டு உருகினான்.

கஷ்டப்படுவோருக்குக் கை கொடுத்தான்.

அவ்வளவும் விழலுக்கிரைத்த நீராயிற்றென்றாலும் அவன் தன் வரையில் அமைதியடைய முடிந்தது!



# அரசியல் பிரமுகர்

அவனுடைய நண்பர் சரியான அரசியல்வாதி!

தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்கள் இருப்பது பற்றி அற்புதமான வசனங்கள் எழுதுவார்.

ஆனால் ஒரு பிச்சைக்காரனுக்குக்கூட கையை விட்டுக் காலணா கொடுத்ததில்லை.

தொழிலாளர்களையும், அவர்கள் ரத்தம், நரம்புகளையும் பற்றித் துள்ளும் தமிழில் கட்டுரைகள் தீட்டுவார்.

அவரிடம் ஊழியம் பார்ப்பவர்களுக்கு மிகக் குறைந்த அளவு சம்பளமே கொடுப்பார்.

தான் முன்னேறுவதுபோல் இன்னொருவனும் முன்னேறி விடாமல் இருக்க சகல விதமான வழிகளையும் கையாளுவார்.

அரசியல் உலகம் அத்தகைய பிரகிருதிகளுக்குத் தான் வழி திறந்து வைத்திருந்தது!

ஏன்? வயிற்றுப்பாட்டுக்காக விபசாரத் தொழில் புரிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணிடம், பணத்தைக் கொடுத்துக் காரியம் முடிந்தபின், சத்தம் போட்டு அந்தப் பணத்தையே திருப்பி வாங்கி வந்தவர் அவர்.

தலையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு, அந்தப்

பெண்ணின் தகப்பனோடு சண்டைக்குப் போய், அவர் செய்த ஆர்ப்பாட்டங்கள் சுவையானவை!

சென்னை ராயப்பேட்டையின் ஒரு குறுகலான சந்து.

அந்தச் சந்திலேதான் அந்தப் பெண்ணின் தகப்பனு ரான நாட்டு வைத்தியர், தன் மூன்று பெண் மக்களோடும் குடியிருந்தார்.

மூத்த பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு.

மற்றும் இருவர் கன்னியர்.

அவனும் அந்தத் 'துள்ளுதமிழ்த்' தோழனும் இன்னும் ஒரு தற்கால எம். எல். ஏ. யும் இரவு 9 மணிக்கு அந்த வீட்டில் நுழைந்தார்கள்.

மூவருக்குமாக ரூபாய் நூற்றைம்பது தரப்பட்டது.

இளைய பெண்ணொருத்தியை அந்தப் பிரமுகர் சேர்த்துக் கொண்டார்.

அந்தச் சிறிய வீடு, மறைவு தட்டிகளால் மூன்று பகுதி களாகப் பிரிக்கப்பட்டது.

இரவு பதினொருமணி இருக்கும். ஒரு பகுதியிலிருந்து பரபரப்பான பேச்சுக் குரல் எழுந்தது.

நேரம் ஆக ஆக, அது வாக்குவாதமாக வளர்ந்தது.

'கலாரசிகர்' வெளியிலே வந்தார்.

கையிலிருந்த துண்டைத் தலையிலே கட்டிக்கொண்டார்.

நாட்டு வைத்தியரைத் தட்டி எழுப்பினார்.

'உன் பெண் சரியாக நடந்து கொள்ளவில்லை. மரி யாதையாகப் பணத்தைத் திருப்பிக் கொடு'' என்றார்.

''போலீசைக் கூப்பிடுவேன்'' என்று மிரட்டினார்.

போலீஸ் வந்தால் தன்கதி என்ன என்பதை அந்தக் கலா ரசிகர் மறந்தே போனார்.

இறுதியில் ரூபாய் நூற்றைம்பதையும் பெற்றுக்கொண்டு தான் ஆளை விட்டார்.

பின், ஒருவாரம் வரை அதை ஒரு வெற்றி விழாவாகவே அவர் கொண்டாடினார்.



அந்த ரூபாயும் அன்று மிஞ்சியதுதானே தவிர, அடுத்து அதே மாதிரி காரியத்திற்குத்தான் பயன்பட்டது.

விடுதலை இயக்கத்தின் பிரமுகர்களைக் கவனியுங்கள்.

எப்படியோ அப்பாவிப் பொதுமக்களின் நம்பிக்கை யைப் பெற்றுவிட்ட அரசியல் வாதிகளின் யோக்கியதை யைக் கவனியுங்கள்.

சமுதாயத்தின் இருண்ட பகுதியை ஒளி மயமாக்கப் புறப்பட்ட அவர்கள், பொழுது இருண்ட பிறகு தான் தங்கள் வாழ்க்கையைத் தொடங்குவார்கள்.

எந்தெந்தத் துயரங்களிலே இந்தச் சமுதாயம் ஆழ்ந்து கிடக்கிறதென்று அவர்கள் புலம்புவார்களோ, அந்தத் துய ரங்கள் பலவற்றிற்கு அவர்களேதான் காரணம் ஆனார்கள்.

# அறிவுதரும் நாடகம்

அந்த நேரத்தில் அவன் அவர்களைப் பற்றி அதிகம் ஆராய விரும்பவில்லை.

காரணம் அவனும் உடன்பட்டே தான் அந்தக் காரியங்களில் இறங்கினான்.

பணக்கார மைனர்களைப் போன்று, பகலிரவு பாராமல் அவர்கள் ஆடினார்கள்.

'கொந்தளிக்கும் கடல்', 'குமுறும் எரிமலை' என்றெல்லாம் படங்களிலே வசனங்கள் வரும்.

அவை, வேறெவையுமல்ல!

பல பெண்களுடைய இருதயங்களே!

'தமிழ்ப் பண்பாடு! தமிழ்ப் பண்பாடு' என்ற கூக்குரல்கள் மேடையிலே கேட்கும்.

தன் பாடு தீரும்வரைக்கும் தான் அந்தப் பண்பாடெல்லாம்.

இந்த நேரத்தில் அவனுக்குச் சில செய்திகள் தரப்பட்டன!

நாம் மட்டும் தவறு செய்யவில்லை!

முக்கியத் தலைவரே அதைத்தான் செய்கிறார்—என்று அந்தச் செய்திகள் கூறின!

கலாரசிகரும், இன்றைய எம். எல். ஏ. ஒருவரும், அந்த நிகழ்ச்சியினை அவனுக்கு விரிவாகவே கூறினார்கள்.

அந்த எம். எல். ஏ. முக்கியத் தலைவரின் பத்திரிகையிலே வேலை பார்த்தவர்.

ஆதலின், அவர் சொன்னவற்றை அவன் நம்பினான்.



அது இது :

ஓர் இரவு, முக்கியத் தலைவர் தூக்கம் பிடிக்காமல் முன்னும் பின்னும் நடக்கிறார்.

வெளியிலே இருவர் போயிருக்கிறார்கள்.

அவர்களை அவர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

மணி பத்தடிக்கிறது.

பதினொன்று!

கோவிலில் அர்த்த ஜாம மணி அடிக்கிறது.

மணி பனிரெண்டு!

அதற்குள் தலைவர், ஏழெட்டுத் தடவை வெற்றிலை போட்டுத் துப்பி விட்டார்.

அதோ! அவர்கள் வரும் சத்தம் கேட்கிறது.

கதவு திறக்கப்படுகிறது!

மூன்று ஆடவர்கள் உள்ளே நுழைகிறார்கள்.

''ஆடவர்கள் தானா? அழகு மயில் வரவில்லையா?''

ஓர் ஆடவனின் தலைக்கட்டு அவிழ்க்கப்படுகிறது.

ஆண் உடைகள் களையப் பெறுகின்றன.

என்ன ஆச்சரியம்!

அந்த உடைக்குள் ஓர் அழகிய மயிலல்லவா ஒளிந்து கொண்டிருக்கிறது.

அழைத்து வந்தோர் குறிப்பறிந்து வெளியேறுகிறார்கள்.

பகுத்தறிவுத் தலைவரின் அறை பண்டார சன்னதியின் மடமாகிறது.

பொழுது விடியு முன்னே பூவை திரும்புகிறாள்.

ஓர் இரவு, இன்ப இரவாகிறது.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி அறிந்த கட்சிப் பிரமுகர்கள், இதற்குக் கொடுத்த பெயரென்ன தெரியுமா?

'சுந்தரகோஷ்' என்பதாகும்.

'வேலைக்காரி' படத்தில் ஆண் வேடம் தாங்கிய பெண்ணொருத்தி 'சுந்தரகோஷ்' என்று அழைக்கப்படுவதையே அவர்கள் அப்படி குறிப்பிட்டார்கள்.

இந்தச் செய்தி உண்மையா பொய்யா என்பதை அறிந்துகொள்ள அவன் துடித்தான்.

அந்தத் தலைவரிடம் அவன் வைத்திருந்த மரியாதை அவ்வளவு!

கடைசியில், மேலும் சில சாட்சிகள் அதனை உறுதிப் படுத்தினார்கள்.

அவர்களும், அந்தத் தலைவருடைய உப்பையே சாப் பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் செய்தியைவிட, அவனுக்குக் கவலையைத் தந்தது ஒன்றே ஒன்று.

அதுதான் நன்றி மறந்த ஊழியர்களைப் பற்றியது.

அவரிடம் சாப்பிட்டுக்கொண்டு அவரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்த அவர்கள், அவனுக்கோர் எச்சரிக்கை யாக அமைந்தார்கள்.

அடுத்தடுத்து அவன் சில பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டான்.

உள்ளத்தில் உறுதிப்பாடு இல்லாமல், தெரிந்தே ஜனங் களை ஏமாற்றுவதுபோல் அவனுக்குத் தோன்றிற்று!

அதுதான் அரசியல் என்று அவனுக்குப் போதிக்கப் பட்டது.

அந்த அரசியலிலேயே அவன் ஊர்ந்து சென்றாலும், சில விஷயங்களில் அவன் எச்சரிக்கையாக இருந்தான்.

கழகத்திற்கென்றே ஒரு தனித்தமிழ் நடை உண்டு.

அண்ணாத்துரையின் நடையைப் பின்பற்றி, எல்லோ ருமே ஒரே மாதிரி 'துள்ளு தமிழ்' எழுதுவார்கள்.

எழுதியவரின் பெயரை எடுத்துவிட்டுப் பார்த்தால் யார் எழுதியதென்றே தெரியாது.

கதை ஒன்றில் தொடங்கி, பிறகு அதைக் கட்டுரையாக விரிக்கும் அலுத்துப் போன முறையை அனைவருமே கை யாண்டார்கள்.

அவற்றில் எதையும் அவன் படிப்பதில்லை!

காரணம், அந்த நோய் தன்னையும் பற்றிக்கொள்ளக் கூடாது என்பதுதான்.

தன்னுடைய எழுத்துக்களை அவன் படிப்பதில்லை என் பதிலே அவனுடைய நண்பர் கருணாநிதிக்கு அசாத்தியக் கோபம் வரும்.



ஒருநாள் அவர், புதிதாக வெளியாகியிருந்த தனது இரண்டு புத்தகங்களை எடுத்து அவன் முன்னால் போட்டு ''இதையெல்லாம் படியய்யா'', என்றார்.

ஒரு புத்தகத்தை விரித்தான்.

நல்ல பண்பாடு உள்ள கதை அது!

'வாழ முடியாதவர்கள்' என்ற தலைப்பில் வெளியாகி யிருந்தது.

கதையென்ன தெரியுமா?

படிக்காதவர்களும் படித்துப் பயனடைய வேண்டிய புண்ணியக் கதையல்லவா!

விவரமாகவே சொல்கிறேன்.

மனைவியை இழந்த ஒரு போலீஸ்காரன்.

வறுமை தவழ்ந்து விளையாடும் சின்னஞ்சிறு வீடு அவன் குடியிருப்பு.

மாண்டுபோன அவன் மனைவி சும்மா போகக் கூடா தென்று ஒரு மகளை விட்டுப் போயிருந்தாள்.

கதையின் ஆரம்பத்திலேயே அந்த மகள், தளதள வென்று வளர்ந்து, பளபளவென்று மெருகேறிக் கவர்ச்சிப் பாவையாக விளங்குகிறாள்.

சின்னஞ்சிறிய வீட்டில் தன்னந்தனியாக இருக்குமவள், திருமணத்திற்காகக் காத்துக் கிடக்கிறாள்.

இரவுகள் வந்து போகின்றன; திருமணம் வரவில்லை.

ஒவ்வோர் இரவிலும், தந்தையும் மகளும் மட்டுமே அந்த வீட்டில் துயிலுகின்றனர்.

அவளோ கல்யாணமாகாதவள்! அப்பனோ மனைவியை இழந்தவன்.

தந்தை மகளையே மனைவியாக்கிக் கொள்கிறான்.

கதாசிரியர் கதையை முடிக்கிறார்.

மேலை நாட்டு ஆபாசக் களஞ்சியங்களான 'மாபசான்' கூட்டத்தினருக்குக் கூட, இத்தகைய கற்பனை தோன்றிய தில்லை.

அவர் எந்த நோக்கத்தோடு இந்தக் கதையை எழுதினார்? நாட்டின் வறுமை நிலையைப் படம் பிடித்துக் காட்ட என்பது அவரது வாதம்.

'ஆடெரி படர்ந்த, கோடுயர் அடுப்பில்' வறுமையைக் கண்டான் தமிழ்ப் புலவன்.

அணிவதற்கு மாற்றுடையில்லாமல், பெண் பார்க்க வந்தவர்களின் முன்னால் வரமுடியாமல், அடுக்களைக்குள் தவித்துக் கொண்டிருந்த அழகு மயிலைக் காட்டினான் ஒரு மலையாள ஆசிரியன்.

ஒரு துண்டு ரொட்டிக்காக ஓடி அலைந்தவன் கதையை உருக்கமாகச் சொன்னான் ரஷ்யக் கதாசிரியன்.

கோவணத்திற்குத் துணி இல்லாமல் தேசியக் கொடியையே கோவணமாக்கியவன் கதையைத் தெளிவாகச் சொன்னான் வட நாட்டு முற்போக்குக் கதாசிரியன்.

வறுமையின் கொடுமையைச் சித்தரிக்கும் 'ஏழை படும் பாடு.' ஏழையின் இருதயத்தைப் படம் பிடிக்கும் 'இளிச்சவாயன்' இருவரும் விக்டர் யூகோவின் பாத்திரங்கள்.

பண்பாடற்றவர்களெனக் கருதப்படும் வெளி நாட்டவர் கூட, வறுமையைச் சித்தரித்துக் கதையெழுதும்போது, பண்பாட்டோடு எழுதினார்கள்.

ஆனால்,

மகளைக் கெடுத்த தந்தையை, வறுமைக்கு உதாரணமாக்கினார் 'முற்போக்கு'க் கதாசிரியர்.

அவன் அந்தப் புத்தகம் முழுவதையும் படித்து முடித்தான்.

தமிழ்ச் சமுதாயத்தின் எதிர் காலத்தைப் பற்றிய பயம், அவன் நெஞ்சில் சூழ்ந்தது.

அடுத்தடுத்து 'குமரிக் கோட்டம்' 'ரோமாபுரி ராணிகள்' 'கபோதிபுரக் காதல்' முதலிய நூல்களைப் படித்தான்.

அந்த நூல்களில், பலரிடம் கெட்ட ஒருத்தியை பளபளப்பாக வருணித்திருந்தார் கட்சியின் மூலத் தலைவர்.

சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்போர், மேலெழ



வேண்டும், என்ற நன் நோக்கத்திற்கு, இவை எவ்வகையில் துணை புரியும்?

எழுதுகின்றவனின் வெறித்தனத்தை இவையுணர்த்துமே யல்லாது, நாட்டுக்கு என்ன பயன் தரும்?

பொது இடத்திலோ, குலமகளிர் மத்தியிலோ வைக்கக் கூடாத அளவுக்குப் பகுத்தறிவு வீரர்கள் புத்தக மெழுதுவானேன்?

பண்பு குன்றாத பங்கிம் சந்திரர், சாகாவரம் பெற்ற சரத் சந்திரர், நாடக அமைப்பில் கதையெழுதிய ரவீந்தர நாத் தாகூர் இவர்களெல்லாம், வங்காளம் போற்றிப் புகழும் இலக்கிய மேதைகள்.

இவர்களுடைய கதைகளை யெல்லாம் படிக்கும்போது, பண்பாட்டுக்குப் பெயர் போனது உலகத்திலேயே வங்காளம் தான் என்று எண்ணத் தோன்றுகிறது. வங்கத்தின் இருண்ட பகுதியை அவர்கள் காட்டவே இல்லை. ஒளிமிகுந்த குடும்ப வாழ்க்கையையே உன்னதமாகச் சித்தரித்தார்கள்.

கட்டுப்பாடான குடிவாழ்க்கையை மேற்கொள்ள விரும்பும்ஒருவன், தன் குடும்பம் முழுதும் தன்னிடத்தே பக்தி கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணும் ஒருவன், தான் வங்காளத்தில் பிறந்திருக்கக் கூடாதா என்று ஆசை கொள்ளும் அளவுக்கு, வங்க இலக்கிய ஆசிரியர்கள் கதைகள் சமைக்கின்றனர்.

மாளிகையைப் பார்க்க வந்தவன் மாட்டுக் கொட்டகையை ரசிப்பது போல், ஒளி உலகைக் காணவந்த சீர்திருத்தவாதிகள், இருண்ட பகுதிகளையே சுவைத்து எழுதினார்கள். அவற்றை 'ஆபாசம்' என்ற கணக்கில் அவன் சேர்க்க வரவில்லை. அவை என்ன பயன் தரும் என்பதுதான் அவன் கேள்வி.

அன்றிலிருந்தே, கட்சியின் முக்கியஸ்தர்கள் எழுதும் கதை கட்டுரைகளை அவன் படிப்பதில்லை.

ஓடிப்போனவள் கதையும், உருப்படாதவள் வாழ்க்கைச் சித்திரமும், ஆட்டங்கண்ட கிழவனுக்கெழுந்த ஆசையும்,

அந்தி நேரத்துச் சுந்தரியின் தளுக்கும் நிரம்பி வழிந்த கழகப் புத்தகங்கள், ஆயிரக் கணக்கில் விற்பனையாயின.

இளைஞர்களை அந்த மயக்கம் பற்றியது உண்மை.

வெளியிலிருந்து வந்த விமர்சனங்களை வெறுத் தொதுக்கி அவற்றை இளைஞர்கள் விரும்பிப் படித்தார்கள்.

நாகரிகம் மிகுந்த ஒரு சமுதாயத்தின், அழிவு காலம் அதிலேதான் தொடங்கிற்று என்றும் சொல்லலாம்.

கட்சியின் வளர்ச்சியை அவன் கவனிக்க ஆரம்பித்தான்.

ஏராளமானவர்கள் கையில் கழகப் புத்தகங்கள் தவழ ஆரம்பித்தன. அடிப்படை அமைப்பில்லாத கட்சி, நல்ல வளர்ச்சியினைப் பெறத் தொடங்கிற்று.



# புரட்சிக்காரன்!

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக விளங்கிய தோழர் கே. வி. கே. சாமி, தனியாகச் சில கூட்டங்களில் பேச வேண்டுமென்று அவனை அழைத்திருந்தார்.

அவனது திருமணம் முடிந்து சில மாதங்களே ஆகியிருந்தன.

பொது வாழ்க்கையில் பிடிப்பில்லாத நிலையிலேயே அவன், அந்தக் கூட்டங்களில் பேச ஒப்புதலளித்திருந்தான்.

நாளை கூட்டம்.

இன்று அவன் புறப்பட்டாக வேண்டும்.

'இன்று நான் தூத்துக்குடிக்குப் புறப்படுகிறேன்' என்று அவனுடைய நண்பருக்குச் சொன்னான்.

"நீ தனியாகப் போய் என்ன பேச முடியும்? உனக்கு என்ன பேசத் தெரியும்? எதற்கிந்த வீண் வேலை? வர இயலவில்லை யென்று தந்தி கொடுத்து விடு" என்றார் அவர்.

தன்னைத் தவிர யாருக்கும் பேரும், புகழும் வரக்கூடா தென்பதிலே அவர் மிகுந்த அக்கறை காட்டுவார்.

இன்னொருவன் முன்னுக்கு வராமலிருப்பதே, தான் வாழ வழியென்பது அவரது சித்தாந்தம்.

இவை அவனுக்குத் தெரிந்திருந்தும் கூட, தூத்துக்குடிக்குப் போகாமலிருக்க முடிவு கட்டினான்.

அந்த முடிவுக்கு இன்னொரு காரணம், அவனது சோம்பலுமாகும்.

'வர இயலவில்லை' என்று தூத்துக்குடிக்குத் தந்தி கொடுத்தான்.

கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

அன்று மாலை அந்த அரசியல் நண்பர், வடசென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுவதாக இருந்தது.

அதற்கு அவனையும் அழைத்துச் சென்றார்.

அன்று அவர் பேசிய பேச்சு முழுவதும், பார்ப்பனச் சமூகத்தைத் தாக்குவதாகவே அமைந்தது.

'பார்ப்பனர்கள் அக்கிரமக்காரர்கள்!'

'பார்ப்பனப் பெண்கள் கற்பிழந்தவர்கள்!'

'ஆரியர்கள், பெண்களைக் காட்டித்தான் திராவிட நாட்டில் இடம் பிடித்துக் கொண்டார்கள்!'

'பார்ப்பானையும் பாம்பையும் கண்டால், பாம்பைக் கொல்லாதே, பார்ப்பானைக் கொல்லு.'

இவையெல்லாலம் அவர் அழுத்தமாகச் சொன்ன சித்தாந்தங்கள்!

அவரது கைப்பிடிக்கு, ஆச்சாரியார் மகளும் தப்ப வில்லை. மகளைக் காட்டிக் காந்தியின் மகனை மயக்கினாராம் ஆச்சாரியார்!

''அரசியல் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள, ''ஆச்சாரியார் காட்டிக் கொடுப்பார்'' என்று அவர் ஓசை நயத்தோடு சொன்னபோது, கூட்டத்திலிருந்து எழுந்த கையொலி அடங்க வெகு நேரமாயிற்று.

உஞ்ச விருத்திகளென்றும், உச்சிக் குடுமிகளென்றும், தர்ப்பாயுதபாணிகளென்றும், சாணக்கியக் கும்பலென்றும், அவர் பார்ப்பனர்களை வருணித்தார்.

'வேதியர் வெங்கண்ணாவா?'

தஞ்சை வீழ்ந்ததைச் சொல்லி 'ஐயகோ! ஐயகோ' என்று அவர் அலறியபோது, கூட்டமே சோக மயமாக இருந்தது.

'ஆடும் மாடும் ஓட்டி வந்த ஆரியருக்கா திராவிடன் அடிமையாவது?' —என்று கேட்டார்.

இன்று அவன் அவ்வளவையும் நினைத்துப் பார்க்கிறான்.



'ஐயகோ, ஐயகோ!' என்றுதான் அவனுக்கும் அலறத் தோன்றுகிறது.

வேதியர் வெங்கண்ணாவைக் காட்டி, 'ஆச்சாரியாரின் கூட்டத்தை நம்பாதே!' என்று முழக்கமிட்ட கும்பல், இன்று அதே ஆச்சாரியாரின் காலடியில் விழுந்து கிடப்பதைக் காண்கிறான்.

பார்ப்பனர்கள் எதற்கும் துணிந்தவர்கள், பதவி கிடைத்தால் போதுமென்று அவர்கள் பேசி வந்தார்கள்.

இன்று, திராவிட மாவீரர்களே பதவிக்காக எதையும், செய்யத் துணிந்து விட்டார்கள்.

இன்று அவனுக்கோர் உண்மை விளங்குகிறது.

வஞ்சகர்கள் ஒரு சாதியில் மட்டும் இல்லை.

எல்லாச் சாதிகளிலும் இருக்கிறார்கள்.

அன்றிருந்த வகுப்புவாத வேகம், அந்த இயக்கத்திலே இல்லை.

இல்லை என்று ஆச்சாரியாரே 'சர்ட்டிபிகேட்' கொடுத்து விட்டார்.

ஆனால் வகுப்புவாதத்தைத் தீனியாகக் கொண்டுதான், அந்த இயக்கம் இந்த அளவு வளர்ந்தது.

''உயிரும் மயிருமில்லா
உருவச் சிலைகளுக்கு
வயிர முடிகள் ஏனடா?''

''வாயும் வயிறு மில்லா
சாமிக்கு மானியமாகவே
வயலும் வாய்க்காலும் ஏனடா?''

—என்றும்,

''சீரங்க நாதரையும்
தில்லை நடராசனையும்
பீரங்கி வைத்துப்
பிளப்பதுவும் எக்காலம்?''

—என்றும் அவர்கள் பாட்டுப் பாடினார்கள்.

''ஏரோட்டும் மக்களெல்லாம்
ஏங்கித் தவிக்கையிலே

தேரோட்டம் ஏனுனக்கு
தியாகராசா?''
—என்று கருணாநிதி பாட்டெழுதினர்.

அதற்குப் பதிலாக ஒரு காங்கிரஸ்காரர்.

''ஏரோட்டும் மக்களெல்லாம்
ஏங்கித் தவிக்கையிலே
காரோட்டம் ஏனுனக்குக்
கருணாநிதி?''
—என்று பதில் பாட்டெழுதினர்.

பெரும்பாலும், அன்று இயக்கத்தினுடைய பேச்சும் எழுத்தும், ஆரியர்கள் மீதும், ஆண்டவன் மீதும், வசைபாடு வனவாகவே இருந்தன.

பார்ப்பனர் அல்லாதாரிடையே அவை, கவர்ச்சிகரமாக விழுந்தன.

'நான் கோயிலுக்குப் போகாதவன்!'

'நான் பார்ப்பன விடுதிகளில் உண்ணாதவன்!'

—என்று சொல்லிக் கொள்வது அன்று பெருமையாகவும் புரட்சிகரமாகவும் இருந்தது.

அப்படி சொல்லிக் கொள்கிறவர்களை, சமூகத்திலுள்ளவர்கள் ஆச்சரியத்தோடு கவனித்தார்கள்.

ஒவ்வொருவனும் புரட்சிக்காரன் போலவே தென்பட்டான். அதுதான் அவனுக்குக் கவர்ச்சியளித்த கட்டமாகும்.

அவனுடைய சமூகத்தில் அப்படிப்பட்டவர்கள் சொற்பமே.

அவர்களும் தீண்டப்படாதவர்களைப் போல் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்.

பத்துப்பேர் நினைப்புக்கு எதிராக நினைப்பது, புரட்சிகரமானது! என்ற தத்துவப்படி, அவனும் புரட்சிக்காரனாகத் திட்டமிட்டான்.

நான் ஒரு சுயமரியாதைக்காரனென்று பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள ஆரம்பித்தான்.

கருப்பு புஷ்கோட்டுகள் ஆறு தைத்துக் கொண்டான்.



எந்த ஆண்டவனிடம் இடையறாத பக்தி கொண்டிருந்தானே, அந்த ஆண்டவனையே கேலி செய்ய ஆரம்பித்தான். அவன் வடிவம் முழுக்க முழுக்க மாறி விட்டது.

அவனது ஆலய வாசம் முடிந்தது. வனவாசம் தொடங்கிற்று.

அவன் இயற்கைத் தலைவனை மறந்து செயற்கைத் தலைவன் வசப்பட்டான்.

சமூகத்திலும், நண்பர்களிடையேயும், அவன், சுயமரியாதைக் கருத்துக்களைப் பேச ஆரம்பித்தான்.

ஒருநாள்......?

அவனுடைய சமூகத்தில் ஒருவருக்குத் திருமணம் நடைபெற்றது.

வைதிக முறைப்படி, சகல சடங்குகளுடனும் அந்தத் திருமணம் நடந்து கொண்டிருந்தது. உறவினன் என்ற முறையில் அந்தத் திருமணத்திற்கு அவன் சென்றாக வேண்டும்.

ஆனால், அவன் புதிய சுயமரியாதைக்காரன் ஆயிற்றே, வைதீகத் திருமணத்திற்குப் போகலாமா ?

அவனது பங்காளிகளிடையே ஒருவித வழக்கம் உண்டு.

ஒருவர் வீட்டு நல்ல—கெட்ட நிகழ்ச்சிகளுக்கு வராத பங்காளியை விசித்திரமாகத் தண்டிப்பார்கள்.

அவன் வீட்டிலே நிகழ்ச்சி நடக்கும்போது யாரும் போகாமல் இருந்து விடுவார்கள்.

பலவாறாக அவன் யோசித்துவிட்டு, இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

திருமண வீட்டிற்குச் சென்று, தூரத்திலேயே யிருந்து பார்த்துவிட்டு வந்து விடுவது என்பதுதான் அது!

அந்தச் சமூகத்தின் திருமணங்களில், பலவகையான சடங்குகளில் நூற்றுக்குத் தொண்ணூறு தமிழ்ப் பெயரிலேயே அமைந்திருக்கும்.

மணவறை அமைத்தல்
மாப்பிள்ளை அழைத்தல்
சீர் பார்த்தல்

திருப்பூட்டுதல்
இசை குடிமானம் எழுதுதல்
பால் பழம் சாப்பிடுதல்
வேவு இறக்குதல்
மஞ்சள் நீராடல்

—இப்படி வடமொழிக்குத் தொடர்பில்லாத தமிழ் மரபுகள் பல உண்டு.

அவை தமிழ் மரபுகள் என்று அறிந்தும் கூட, அவற்றையும் ஒதுக்க வேண்டியவனாக அவன் ஆனான்.

எதையும் மறுத்துரைப்பதே தீவிர சுயமரியாதை, என்று அவன் மனத்தில் பதிந்திருந்தது.

குப்பைகளை வாரிக் கொட்டும் வேகத்தில் குப்பைகளுக்கு நடுவே விழுந்துவிட்ட தங்கத்தையும் வாரிக் கொட்டுவது போல், களையெடுக்கும் வேகத்தில் பயிரையும் எடுத்துவிடுவது போல், கண்ணில் விழுந்த தூசியை எடுக்க நீளும் கைகள் கண்ணையே எடுக்கும் தன்மை போல, நான்கு வடமொழி நிகழ்ச்சிகளுக்கு நடுவே, தனித்தன்மையோடு இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மரபுகளையும் தள்ளிவிட அவன் துணிந்தான்.

இது அவன் மனச்சாட்சிக்கு ஒத்ததல்ல.

அருமையான தமிழ்ச்சடங்குகளை, அவன் ஒதுக்கத் துணிந்ததற்குக் காரணம், எல்லோரும் தன்னைப் புரட்சிக்காரன் என்று கருதவேண்டும் என்பதுதான்.

அந்தத் திருமண வீட்டில் அவன் நுழைந்தபோது, வேவு இறக்கும் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு நாட்டுக்கூடை நிறைய அரிசியை வைத்து, அதன் உச்சியில் நாலைந்து கத்தரிக்காய்களை வைத்து, ஒருவர் தலையில் ஏற்றி, இன்னொருவர் இறக்குவார்கள். அதன் பொருள், 'ஆயுள் முழுவதும் வறுமை வராமல் ஒருவரையொருவர் காப்பாற்றுவோம்' என்பதாகும்.

இதை வடமொழி மரபு என்று ஒதுக்கிவிட முடியுமா?

அவன் கூட்டத்து நடுவில் வந்து நின்றான், வேடிக்கை பார்ப்பதற்காக.



ஒரு பெரியவர் அவன் தலையிலும் ஒரு துண்டைக் கட்டி விட்டார்.

இன்னொருவர் அதில் அரிசிக் கூடையை ஏற்றினர்; வேறொருவர் இறக்கினர்.

எல்லோரும் சிரித்தார்கள்.

'ஏனப்பா, நீ பெரிய சு. ம. ல்ல' என்று ஒருவர் கேட்டார்.

''அப்படியே இருந்தாலும் இதிலென்ன தப்பு?''

—என்று இன்னொருவர் பதிலளித்தார்.

அவன் சாப்பிட்டுவிட்டு வீடு திரும்பினான்.

திருமண வீட்டிற்கு வந்திருந்தவர்கள் எல்லாம், ஒரு புரட்சிக்காரனைப் பார்ப்பது போல தன்னைப் பார்த்ததை எண்ணி, அவன் பொங்கி வழிந்தான்.

புகழ் !

அதைத் தமிழன் மூன்று எழுத்துக்களுக்குள் அடக்கி விட்டான்,

அதென்ன அவ்வளவு சாமானியமா ?

பத்துப் பேர் தன்னைக் கவனிக்கிற மாதிரி, தான் வளர்ந்து விட்டோம் என்பதை நினைக்கும்போதே, மனிதன் உடம்பும் தலையும் கனத்து விடுகின்றன.

அவனும் சராசரி மனிதனே !

அவனும் அந்தப் புகழில் புதுச் சுகத்தைக் காணத் தொடங்கினான்.

அன்றுமுதல் எதையும் மறுத்துரைப்பவனாக மாறினான்.

''தெய்வம் உண்டா ?''
'கிடையாது'
'கோவிலில் இருப்பது......?'
'வெறும் கல்'
'அர்ச்சகர்கள்...?'
'தரகர்கள்'
'வேதம் என்பது......?'
'மோசம் செய்வது.'
'சாத்திரம் பார்ப்பது......?'

நூல் நிலையம்
நாள் :
எண் :

'மூடர் கொள்கை'
'சகுனம் பார்ப்பது......?'
'மடிசஞ்சித்தனம்.'
'திருமணத்தில் தாலி கட்டுவது......?'
'பெண்ணை அடிமை செய்வது'
'பெண் தலை குனிந்திருப்பது?''
'அடிமையின் சின்னம்'
'மேளம் கொட்டுவது......?'
'வேலையற்றவன் செய்வது'
'விபூதி......?'
'அது வெறும் சாணி'
'பொட்டு வைப்பது.........?'
'முட்டாள் தனமானது'

—இப்படி எதையும் மறுப்பதிலே ஓர் இனிய சுகம் விளைந்தது, அவனுக்கு!

மேலை நாட்டு இங்கர்சாலும் தானும் சமமாகி விட்டது போல் ஒரு மயக்கமே தோன்றியது அவனுக்கு.

வீதியிலே பார்ப்போர் எல்லாம் அவனை 'சு. ம.' என்பார்கள்.

அவனது உச்சி குளிரும்!

வைதீகர்கள் அவனிடம் பயபக்தியோடு பேசுவார்கள்.

அவன் தலை நிமிரும்.

அப்போது காரைக்குடியில் அவனுக்குக் கிடைத்த தி. மு. கழக நண்பர், இராம, சுப்பையா என்பவர்.

உழைப்பைத் தவிர வேறொன்றறியா உத்தமத் தோழர் அவர்.

அந்நாளில், அவரை அந்தச் சமூகம் ஒதுக்கியே வைத்திருந்தது.

அவரோடு அவன் கலந்து பேசி, காரைக்குடியில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தான்.

செலவுகள் அனைத்தையும் அவனே ஏற்றுக்கொண்டான்.

கூட்டத்திற்குத் தலைவராக அவனேயாகிக்கொண்டான்.

பேச அழைக்கப்பட்டோர் நால்வர்.



நாவலர் நெடுஞ்செழியன்,
தோழர்கள், கருணாநிதி,
டி. கே. சீனிவாசன்,
சி. பி. சிற்றரசு.

இதில் ஆச்சரியமென்னவென்றால், நால்வருமே கூட்டத்திற்கு ஒழுங்காக வந்து விட்டார்கள்.

பிரம்மாண்டமான கூட்டம்.

அவன் பதினைந்து நிமிடங்களே பேசினான்.

நாவலர் பேச்சு அன்று அழகாக அமைந்தது.

அதுவரை இரண்டு மூன்று பேர்களுக்குள் இருந்த காரைக்குடிக் கிளைக்கழகம், புதிய இளைஞர்களைக் காண ஆரம்பித்தது.

வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பலர் உதவி செய்யத் தொடங்கினார்கள்.

நம்பிக்கையின்றிக் கிடந்த கழகத் தோழர்களும் கொஞ்சம் துணிந்து வெளியே வந்தார்கள்.

கழகத்தின் வளர்ச்சியில் அவனது பங்கு கணிசமாகவும் அமைந்தது.

அந்நாளில் கழகத்திற்கு எதிராக சில்லரை விஷமங்கள் அடிக்கடி நடக்கும்.

கொடி களவு போகும்.

கூட்டத்தில் பன்றி வரும்.

சுவரொட்டியில் சாணி அடிக்கப்படும்.

சுவரொட்டிகள் கிழிக்கப்படும்.

இன்றைக்கு அந்தக் கழகத்தினர் என்னென்ன செய்கின்றார்களோ அவ்வளவும் அன்று அவர்களுக்கு எதிராக நடந்தது.

'மூடர் கொள்கை'
'சகுனம் பார்ப்பது......?'
'மடிசஞ்சித்தனம்.'
'திருமணத்தில் தாலி கட்டுவது......?'
'பெண்ணை அடிமை செய்வது'
'பெண் தலை குனிந்திருப்பது?''
'அடிமையின் சின்னம்'
'மேளம் கொட்டுவது.......?'
'வேலையற்றவன் செய்வது'
'விபூதி......?'
'அது வெறும் சாணி'
'பொட்டு வைப்பது.........?'
'முட்டாள் தனமானது'

—இப்படி எதையும் மறுப்பதிலே ஓர் இனிய சுகம் விளைந்தது, அவனுக்கு!

மேலை நாட்டு இங்கர்சாலும் தானும் சமமாகி விட்டது போல் ஒரு மயக்கமே தோன்றியது அவனுக்கு.

வீதியிலே பார்ப்போர் எல்லாம் அவனை 'சு. ம.' என்பார்கள்.

அவனது உச்சி குளிரும்!

வைதிகர்கள் அவனிடம் பயபக்தியோடு பேசுவார்கள்.

அவன் தலை நிமிரும்.

அப்போது காரைக்குடியில் அவனுக்குக் கிடைத்த தி. மு. கழக நண்பர், இராம, சுப்பையா என்பவர்.

உழைப்பைத் தவிர வேறொன்றறியா உத்தமத் தோழர் அவர்.

அந்நாளில், அவரை அந்தச் சமூகம் ஒதுக்கியே வைத்திருந்தது.

அவரோடு அவன் கலந்து பேசி, காரைக்குடியில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தான்.

செலவுகள் அனைத்தையும் அவனே ஏற்றுக்கொண்டான்.

கூட்டத்திற்குத் தலைவராக அவனேயாகிக்கொண்டான்.

பேச அழைக்கப்பட்டோர் நால்வர்.



நாவலர் நெடுஞ்செழியன்,
தோழர்கள், கருணாநிதி,
டி. கே. சீனிவாசன்,
சி. பி. சிற்றரசு.

இதில் ஆச்சரியமென்னவென்றால், நால்வருமே கூட்டத்திற்கு ஒழுங்காக வந்து விட்டார்கள்.

பிரம்மாண்டமான கூட்டம்.

அவன் பதினைந்து நிமிடங்களே பேசினான்.

நாவலர் பேச்சு அன்று அழகாக அமைந்தது.

அதுவரை இரண்டு மூன்று பேர்களுக்குள் இருந்த காரைக்குடிக் கிளைக்கழகம், புதிய இளைஞர்களைக் காண ஆரம்பித்தது.

வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பலர் உதவி செய்யத் தொடங்கினார்கள்.

நம்பிக்கையின்றிக் கிடந்த கழகத் தோழர்களும் கொஞ்சம் துணிந்து வெளியே வந்தார்கள்.

கழகத்தின் வளர்ச்சியில் அவனது பங்கு கணிசமாகவும் அமைந்தது.

அந்நாளில் கழகத்திற்கு எதிராக சில்லரை விஷமங்கள் அடிக்கடி நடக்கும்.

கொடி களவு போகும்.

கூட்டத்தில் பன்றி வரும்.

சுவரொட்டியில் சாணி அடிக்கப்படும்.

சுவரொட்டிகள் கிழிக்கப்படும்.

இன்றைக்கு அந்தக் கழகத்தினர் என்னென்ன செய்கின்றார்களோ அவ்வளவும் அன்று அவர்களுக்கு எதிராக நடந்தது.

# கொதித்தெழுந்தான்

ஒரு நாள்—!

அவன் காரைக்குடியிலிருந்து சென்னைக்குப் புறப் பட்டான்.

அவனது சுபாவத்தைக் கிளறிவிட்டு, வெறித்தனமான பக்தியை கழகத்திடம் ஏற்படுத்திய நிகழ்ச்சி ஒன்று ரயிலிலே நடந்தது.

பதினாறு பேர் அமரக்கூடிய இரண்டாவது வகுப்புப் பெட்டி அது.

பதினைந்து பேரோடு அவனும் ஒருவனாக அமர்ந்திருந் தான். அதில் ஆறேழு பேர் வயது முதிர்ந்த பார்ப்பனர் களாவார்கள்.

வைதீக நெறி பிறழாத தோற்றத்தில் அவர்கள் விளங் கினார்கள்.

அவர்களில் இரண்டு பேர் தேவகோட்டை வழக் கறிஞர்கள்.

அவர்கள் அனைவரும் ஆளுக்கொரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பத்திரிகைகளில் பெரியார் அவர்களுடைய கடுமையான பேச்சு ஒன்று வெளியாகியிருந்தது.

ஒருவர் பத்திரிகையைப் படித்துவிட்டு இலேசாக ஆரம்பித்தார்.

''இந்த நாயக்கரை ஒழிச்சாத்தான் நாடு உருப்படும்.''

இன்னொருவர் சொன்னார் :



''அவரைச் சொல்லி என்ன பயன். சர்க்காரில் எவனெ வனோ வர்றான். புத்தியுள்ளவனுக்கு மரியாதை இல்லை. இராஜாஜி இருந்தா இப்படி நடக்குமா?''

மூன்றாமவர் சொன்னார்.

''நாமும் கையில் ஆளுக்கொண்ணு எடுத்துக் கிட்டாத் தான் நாய்க்கன் அடங்குவான்.''

முதல்வர் சொன்னார் :

''இவனெல்லாம் கடைசியில் நல்ல கதிக்குப் போக மாட் டான். புழுத்துப் போய்த் தான் சாவான்.''

பேச்சு வளர்ந்தது.

பெரியாரைப்பற்றி அவர்கள் மனம்போன போக்கில் பேசினார்கள்.

அந்தப்பேச்சுகள் அவன் மனத்தில் முள்ளாகப்பாய்ந்தன.

ஒரு முழு சுயமரியாதைக்காரன் கோபம் அவனுக்கு வர லாயிற்று. அதுவரை அவன் மனத்தில் ஏறியிருந்த எண் ணங்கள் பூரண ஆதிக்கம் பெற்று விட்டன.

உண்மையிலேயே சிலர் தமிழ்ச் சமுதாயம் முழுவதை யும் கட்டியாள விரும்புகிறார்கள் என அவன் நம்பத் தொடங்கினான்.

அவர்கள் இரயிலில் உணவு உண்ணும்போது கூட மேல் துண்டால் மறைத்துக்கொண்டு உண்டார்கள்.

மேடைகளில் அவன் காதுகளில் விழுந்திருந்த சொற்கள் அன்று அவன் கண்ணுக்குக் காட்சியாயின.

இனித் தொடர்ந்து கூட்டங்களில் பேச வேண்டும் என்று அவன் முடிவு செய்தான்.

அவனது திருமணம் முடிந்துவிட்ட நிலை.

இனி வைதீகச் செட்டிமார்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

அவனது வைதீகத் திருமணத்திற்கு கருணாநிதி போன்ற நண்பர்கள் வந்திருந்து வாழ்த்தியபோதே அவனைப்பற்றி அவர்கள் முடிவு செய்து விட்டார்கள்.

உள்ளூரில் ஒரு கூட்டத்தில் வேறு பேசிவிட்டான்.

இனி என்ன தடை?

சென்னை வாழ்வில் சமுதாய சீர்திருத்தத்திற்கு அவன் நன்கு பயன்பட விரும்பினான்.

அப்போது அவனுடைய சகோதரர் கோவையிலிருந்து சென்னைக்கு வந்து, இராயப்பேட்டை சண்முக முதலித் தெருவில் குடியிருந்தார்.

கலைவாணர் என். எஸ். கே. யின் வீட்டிற்கு இரண்டாவது வீடு அது.

அந்த வீட்டில் போய் இறங்கினான்.

வழக்கம்போல் நண்பர்களைச் சந்தித்தான்.

அப்பொழுது கலைவாணர் 'மணமகள்' என்ற படத்தை ஆரம்பித்திருந்தார்.

தோழர் கருணாநிதி அதற்கு எழுதிக் கொண்டிருந்தார்.

கூட்டங்கள் அபூர்வமாகத்தான் நடக்கும். அன்றைக்குச் சென்னை நகர தி. மு. கழகத்தின் கிளை அமைப்புகளில் பதவி வகித்தோர் கூட்டங்களை ஆர்வத்தோடு நடத்தினார்களெனினும், பேச்சாளர்கள் சென்னையில் பேசுவதில் ஆர்வம் காட்டவில்லை.

அதற்குக் காரணங்கள் இரண்டு.

ஒன்று சென்னை நகரத்தில் கழகம் வளரும் என்று அவர்கள் நம்பவில்லை.

மற்றொன்று வெளியூர்க் கூட்டங்களுக்குத்தான் பணம் கிடைத்து வந்தது.

அவனைப் பொறுத்தவரையில் சென்னையிலேயே அதிகம் பேச விரும்பினான்.

காரணம் வெளியூருக்குக் குறிப்பிட்ட நேரத்தில் போவதென்பது அவனால் முடியாதது.

சென்னைக் கூட்டங்களிலே பேசினான்.

தட்டுத்தடுமாறிப்பேசப்பழகினான் என்பது பொருந்தும்.

ஆரம்பத்தில் பதமான வார்த்தைகள் அவனுக்குப் பிடிபடவில்லை.

கடுமையான சொற் பிரயோகம்! கண்மூடித்தனமான தாக்குதல்கள்!... அவனே நினைத்து வெட்கப்படத்தக்க வகையில்தான் அவனது பேச்சு அமைந்தது.

அவன் மட்டுமென்ன, அண்ணாத்துரையைத் தவிர மற்ற



அனைவருமே கடுஞ் சொற்களைத்தான் பிரயோகித்தார்கள்.

பேச்சுக்கலை தனித்தன்மை வாய்ந்தது.

நயமான வார்த்தைகளின் மூலம் பயமுறுத்துவது அதில் ஒருவகை.

அது எல்லோருக்கும் பிடிபடுவதில்லை.

அந்த வகையில் அண்ணாத்துரையின் பயிற்சி ஈடு இணை இல்லாதது.

அவர் பின்னாளில் பெற்ற பெருமைகளுக்கெல்லாம் அதுவே காரணம்.

எந்தச் சமயத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் ஆத்திரமடையாமலிருப்பது என்பது அசாதாரணமான குணம்.

சபலங்களுக்கும், சஞ்சலங்களுக்கும் இரையாகும் சராசரி மனித மனம் ஆத்திர உணர்ச்சிக்குச் சீக்கிரம் அடிமையாகி விடும்.

இதைப் பேசலாம், இதைப் பேசக்கூடாது என்னும் பகுத்தறிவே அடிபட்டுப் போகும்.

அந்த நேரத்தில் மனத்தைத் தெளிவுபடுத்திக்கொண்டு வைதோரை வாழ்த்துவதென்பது செயற்கையாக முயன்று பார்த்தாலும் சிரமமே.

அன்று அண்ணாத்துரை ஒருவர்தான் தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ளக் கூடிய சக்தியினையும் நாக்கடக்கிப் பேசுகின்ற வன்மையினையும் பெற்றிருந்தார்.

அதனால் எந்த சுயமரியாதைக்காரனும் ஏற முடியாத சபையிலே கூட அவருக்கு இடம் கிடைத்தது.

கல்லூரி மாணவர்கள் அவரை விரும்பி அழைத்தனர்.

அந்தப் பயிற்சியைப் பெற அவன் விரும்பினான்.

ஆனால் அவனுடைய பழக்கம் கருணாநிதியைப் போன்ற நண்பர்களிடமே அதிகமிருந்ததால், அவர்களுடைய பாணியே வரலாயிற்று.

இந்த நேரத்தில் நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நாகர்கோயிலில் ஆரம்பமாயிற்று. அவனும் போயிருந்தான்.

மாநாட்டிற்குத் தலைவர் இளம்வழுதி.

திறப்பாளர் இளங்கோ.

பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரும் அவனோடு வந்திருந்தார்.

பெருங்கூட்டமென்று சொல்லிவிட முடியாது.

இருப்பினும் நாஞ்சில் மாவட்டத்தில் தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு அடிகோலப்பட்டது.

பேச்சுக்கள் பெரும்பாலும் சமுதாய சீர்திருத்தத்தைப் பற்றியவையாக இருந்தன.

அந்த நாளில் சென்னையின் முதலமைச்சராக திரு. குமாரசாமி ராஜா இருந்தார்.

கழகத்தின்மீது அவர் எடுத்துக்கொண்ட கடும் நடவடிக்கைகள் அங்கே விமர்சனம் செய்யப்பட்டன.

அந்நாளில் கலைவாணருக்கும் அண்ணாத்துரைக்குமிடையே பிளவு ஏற்பட்டிருந்தது.

'நல்லதம்பி' படத்தின் கதையை கலைவாணர் மாற்றியமைத்ததாலே அது உருவாகியிருந்தது.

இருப்பினும் அதை மனத்தில் வைத்துக்கொள்ளாமல் மாநாடு நடந்த நாளில் கலைவாணர் நாகர்கோயில் வந்து தங்கியிருந்தார்.

முதல் நாள் மாநாட்டை முடித்துக்கொண்டு, அவனையும், கருணாநிதியையும், அப்பாத்துரையாரையும் அழைத்துக் கொண்டு கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையைப் பார்த்துவர அவர் புறப்பட்டார்.

கவிமணியைப் பார்க்கப் புறப்பட்டதில் அவனுக்கு மெத்த மகிழ்ச்சி.

கவிமணியின் வீடு நாகர்கோயிலுக்குச் சில கல் தொலைவில் சுசீந்திரம் என்ற ஊரில் அமைந்திருந்தது.

அவர்கள் அனைவரும் அங்கு போனபோது கவிமணி ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார்.

அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

மிகவும் சுவையான உரையாடல் நடந்தது.

தி. மு. கழகம் ஆரியர்களைத் தாக்குவதைப் பற்றிய தனது கருத்து வேறுபாட்டை அவர் சொன்னார்.

அப்பாத்துரையார் அதைக்கடுமையாகமறுத்துரைத்தார்.



"ஆரியர்கள் தமிழர்களின் விரோதிகள் என்று நான் நினைக்கவில்லை" என்றார் கவிமணி.

"ஆமாம். அவர்கள் உலகத்திற்கே விரோதிகள்" என்றார் அப்பாத்துரையார்.

சிரித்துக்கொண்டே பல கருத்துக்களைச் சொல்லி வந்த கவிமணி, இடையில் ஏதோ கேட்க வந்து, "என்ன அப்பாத்துரை..." என்று ஆரம்பித்தார்.

எங்கோ ஞாபகமாக இருந்த அப்பாத்துரையார், பளிச்சென்று "கா. அப்பாத்துரை" என்று பதில் சொன்னார்.

நண்பர்களிடம் சிரிப்பொலி கிளம்பிற்று.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கவிமணியோடு பேசிக்கொண்டிருந்து விட்டு எல்லோரும் திரும்பினார்கள்.

அன்று கலைவாணர் இல்லத்திலேயே எல்லோரும் தங்கினார்கள்.

மறுநாள் காலையில் குளித்துவிட்டு வரலாமென்று கன்னியாகுமரிக்குப் புறப்பட்டார்கள்.

நாவலர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கலைவாணர், கருணாநிதி, அவன் ஆகியோர் அந்தக் குழுவிலிருந்தார்கள்.

அன்று குமரியிலே கடலாடிய காட்சி அவன் நெஞ்சில் பசுமையாக அமர்ந்தது.

மாநாடு முடிந்து அனைவரும் சென்னை வந்தபோது குமாரசாமி ராஜாவின் ஆட்சி அடக்குமுறைக்குத் தயாராகி இருந்ததை அவன் கண்டான்.

பெரியார், அண்ணாத்துரை ஆகியோரின் புத்தகங்கள் சில தடை செய்யப்பட்டன.

அவனுக்கு ஆட்சியின் மீதும் கோபம் வரலாயிற்று.

# கண் கலங்கினேன்

அரசியலில் படிப்படியாக வெறி ஏறலாயிற்று.

ஒன்றை அரைகுறையாக ஆதரிக்கத் தொடங்குகிறவன் கூட ஒவ்வொரு நிகழ்ச்சிகளாலும் வெறியடைந்து முழு ஆதரவாளனாக மாறி விடுகிறான்.

அவன் கதையும் அதுதான்!

மேடைகளில் காங்கிரஸ் அமைச்சர்களை மிகக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினான்.

பேச்சுரிமை, எழுத்துரிமைகளுக்குப் புதுப்புது வியாக்கியானங்களைத் தரத் தொடங்கினான்.

அரசாங்கம் ஏதோ பெரும் அநீதியை இழைத்துவிட்டது போலவே கூட்டம் கேட்கிற மக்களும் எண்ணத் தொடங்கினர்.

இன்றைய தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் காரணமா யமைந்தது குமாரசாமி ராஜாவினுடைய அரசாங்கம் என்றால் மிகையாகாது.

சாதாரணப் புத்தகங்களைக் கூடத் தடை செய்ததன் மூலம் அவற்றைப் பரபரப்பான புரட்சி நூல்களாக ஆக்கிவிட்ட பெருமை அவரைச் சாரும்.

சில புத்தகங்களின் பேரால் வழக்குகளும் தொடரப்பட்டன.

அந்த வழக்குகள் பொது மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியதோடு, கழகத்தைப் பற்றித் தெரியாதவர்களையும் தெரிந்துகொள்ளச் செய்தன.



அந்நாளில் தமிழகத்தின் கிராமங்களில் கழகத்திற்குச் கொஞ்சங்கூட செல்வாக்குக் கிடையாது.

கிராமங்கள் என்பன ஒரு பெரிய மனிதனுக்குக் கட்டுப்படுகிற சில குடும்பங்களைக் கொண்டதாகவே காட்சியளிக்கும்.

ஒவ்வொரு கிராமத்துப் பெரிய மனிதரும் பெரும்பாலும் ஆளும் கட்சியினைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள்.

அந்நாளில் கிராமத்தில் இருந்த இளைஞர்களிடம்கூட முன்னேற்றக் கழகம் பரவவில்லை என்பது உண்மை.

நடுத்தர நகரங்களில் கழகத்திற்கு நல்ல செல்வாக்கு இருந்தது.

குமாரசாமி ராஜாவின் அரசாங்கம் தொடுத்த வழக்குகளும், அவற்றின் முடிவுகளும் கழக வளர்ச்சிக்குத் தீனி போடத் தொடங்கின.

அப்போதிருந்துதான் முன்னேற்றக் கழகக் கருத்துக்களை வெளியிடும் புத்தகங்கள் புற்றீசல் போலப் புறப்படத் தொடங்கின.

வியாபாரத்திற்காகவே பலர் அந்தக் கருத்துக்களை எழுதத் தொடங்கினார்கள்.

பயங்கரமான தலைப்புக்களில் 'திடீர்' வெளியீடுகள் வந்தன.

சில புத்தகக் கம்பெனிகள் இத்தகைய புத்தகங்கள் மூலம் பல்லாயிரக் கணக்கில் சம்பாதித்தன.

குறிப்பாக அண்ணாத்துரை கருணாநிதி ஆகியோரின் புத்தகங்கள் பலராலும் வெளியிடப்பட்டன.

கழகக் கருத்துக்களை வைத்து 'அமெச்சூர்' நாடகங்கள் ஆரம்பமாயின.

இவ்வளவும் குமாரசாமி ராஜாவின் நடவடிக்கைகளால் விளைந்த விளைச்சல்களே!

அன்று முன்னேற்றக் கழத்தின் கருத்து என்பது பார்ப்பனரைத் தாக்குவதாய்த்தான் இருந்தது.

அரசியல் கருத்துக்கள் அதிகமாக அன்று வற்புறுத்தப் படவில்லை.

அரசியல் பேசினாலும் அதில் பார்ப்பனருக்கு இடம் கூடாது என்றே பேசப்பட்டது.

தடை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு சென்னையில் ஆரம்பமாயிற்று. அதுதான் முதல் மாநில மாநாடு.

மாநாட்டிற்காகப் போடப்பட்ட பந்தலைப் பார்த்த அண்ணாத்துரை இவ்வளவு பெரிய பந்தலுக்குக் கூட்டம் வருமா? என்றே அஞ்சினார்.

ஆனால், அவரும் வியக்கத்தக்க வகையில் பந்தல் நிரம்பி வழிந்தது.

அவனும் அந்த மாநாட்டிற்குப் போனான்.

அந்த நேரம் அவனுக்கும் கருணாநிதிக்கும் தகராறு ஆரம்ப நேரமாகும்.

அவன் தன் வாழ்க்கையில் இரண்டாவது ஏற்பாடு ஒன்றையும் செய்து கொண்டிருந்தான்.

அது அவனுடைய சொந்த விவகாரம் என்றாலும் கருணாநிதி அதனைக் கண்டிக்கத் தொடங்கினார்.

அவன் சட்டையில் குத்தியிருந்த கழகச் சின்னத்தைப் பறித்துக் கொண்டார்.

மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் அவனுக்கு உத்தரவிட்டார்.

கழகத்தில் கருணாநிதியைத்தவிர அவனுக்கு உற்ற நண்பர்கள் என்று அன்று யாருமில்லை.

அப்படியிருந்தவர்களும் கருணாநிதிக்குப் பின்னால்தான் நின்றார்கள்.

அண்ணாத்துரையுடன் கூட அவன் நெருங்கிய பழக்கம் வைத்துக்கொள்ளவில்லை.



ஆகவே, அவன் உடனே வீடு திரும்பி அண்ணாத் துரையின் பேருக்கு மாநில மாநாட்டு முகவரி போட்டு ஒரு கடிதம் எழுதினான்.

அந்தக் கடிதத்தில் கழகத்திலிருந்து தான் விலகிக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தான்.

பதில் வருமென்று அவன் எதிர்பார்க்கவில்லை.

பதிலும் வரவில்லை.

அன்று கல்கத்தாவிலிருந்து அவனுக்கு ஒரு தந்தி வந்தது.

வங்காளத்தின் பிரபல திரைப்பட இயக்குநர் தேவகி போஸ் அந்தத் தந்தியைக் கொடுத்திருந்தார்.

அவர் தமிழில் எடுக்கத் தொடங்கிய 'ரத்தின தீபம்' என்ற படத்திற்கு வசனம் எழுத அவனை அழைத்திருந்தார்.

ஏற்கெனவே அவர் சென்னை வந்திருந்தபோது, அவன் தனது சகோதரரின் வீட்டில் அவருக்கு ஒரு விருந்து கொடுத்திருந்தான்.

அதற்கு, அந்த விருந்தில் அவனோடு பேசிக் கொண்டிருந்த தேவகிபோஸ், "நான் ஒரு தமிழ்ப் படம் எடுக்கப் போகிறேன். அப்போது உங்களுக்கு அழைப்பு அனுப்புகிறேன்" என்று சொல்லியிருந்தார். அந்த அழைப்பே அன்று அவனுக்குக் கிடைத்த அழைப்பாகும்.

தேவகிபோஸின் பிரதிநிதியாக சென்னையிலிருந்த பி. என். மணியம் கம்பெனியினர் அன்று இரவு விமானத்திலேயே அவனுக்கு ஒரு டிக்கெட் வாங்கி விட்டார்கள்.

கழக மாநாட்டில் கலந்துகொள்ள முடியவில்லையே என்ற பெருங் கவலையோடு விமானத்தில் அவன் புறப்பட்டான். அதிகாலை ஆறு மணிக்கு 'டம்டம்' விமான நிலையத்தில் இறங்கினான்.

இறங்கியவன் தன் பெட்டிக்காகக் காத்துக்கொண்டிருந்தபோது அந்த விமானநிலையச் சிப்பந்தி ஒருவர்—தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் அவனிடம் வந்து ஆச்சரியத்தோடு ஒரு கேள்வியைக் கேட்டார்.

"என்ன சார் மாநாடு நடக்கிறதே, நீங்கள் கலந்து கொள்ளவில்லையா? இங்கே வந்து விட்டீர்களே...?" என்றார்.

அவன் கண்களில் கண்ணீர் பெருகிவிட்டது.

தனக்குக் கல்கத்தாவில் முக்கியமான வேலை என்று சொல்லித் தப்பித்துக் கொண்டான்.

நேரே சௌரங்கியிலுள்ள 'பிராட்வே' ஹோட்டலுக்குச் சென்று ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டான்.

கல்கத்தா வாழ்க்கையின் சுகத்தையே அவனால் அனுபவிக்க முடியவில்லை. நினைவு முழுவதும் சென்னை மாநாட்டிலேயே இருந்தது. 'கழகத்தின் மீது ஏன் பற்றுக் கொண்டோம்' என்றே அவன் கலங்கத் தொடங்கினான். பாசம் வைத்த பொருள் பறிபோனால் வருகின்ற துயரம் அவனுக்கு வந்தது.





# கல்கத்தா வாழ்க்கை

'ரத்தின தீபம்' என்ற படம் ஏற்கனவே வங்காள மொழியில் எடுக்கப்பட்ட படமாகும்.

அதனைத் தேவகிபோஸ் அவனுக்குப் போட்டுக் காட்டினார்.

வங்காளியிலிருந்து மொழிபெயர்த்துச் சொல்வதற்கு வங்காளம் படித்த தமிழ் நண்பர் ஒருவரையும் அவனுக்குத் துணையாக அமர்த்தினார்.

அந்த நண்பர் ஒரு சாஸ்திரியார், மிகவும் உன்னதமான மனிதர்.

'வங்கத் தமிழன்' என்னும் புனை பெயரில் தமிழ்ப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார்.

வங்காளத்திலேயே பல ஆண்டுகள் வசித்து வருபவர். 'சதர்ன் அவின்யூ'வில் ஒரு சிறு வீட்டில் அவர் குடியிருந்தார்.

கல்கத்தாவில் 'சதர்ன் அவின்யூ' என்பது தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும்.

அந்த நண்பர் வங்காள 'ரத்தின தீபத்'தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

எழுதுவதில் அவனுக்கு ஆசையிருந்தும்கூட நினைவெல்லாம் மாநாட்டில் இருந்ததால் எழுதாமலேயே பொழுதைக் கழித்தான்.

இரண்டாவது முறையாக மதுப்பழக்கத்தை அவனுக்கு ஏற்படுத்திய இடம் கல்கத்தா நகரமாகும்!

மொழி பெயர்ப்பாளராகிய சாஸ்திரியார் மிகவும் நல்லவர். அவர் மதுவைத் தொடமாட்டார்.

ஆனாலும்கூட நட்புமுறையில் அவனை அவர் வெறுத்ததில்லை.

அந்தச் சுவை வந்த உடனே மாநாட்டின் நினைவை அவன் மறக்கத் துவங்கினான்.

'ரத்தின தீப'த்தைத் தமிழில் எழுதி முடித்தான்.

அதற்காக அவன் பெற்றுக்கொண்ட ஊதியம் ஹோட்டல் பாக்கிக்கே சரியாக இருந்தது.

கல்கத்தா அனுபவங்கள் சுவையானவை.

அங்கே 'கிராண்டு' ஹோட்டல் என்று ஒரு ஹோட்டல் உண்டு.

இரண்டு மணி வரையிலே 'பால் ரூம்' நடனம் நடைபெறும்.

அந்த ஹோட்டலுக்கு அவன் போனான்.

'கோட்டும் சூட்டும்' போடாதவர்களை அங்கே அனுமதிக்க மாட்டார்கள்.

வேட்டி கட்டிய மனிதனுக்கு அங்கே இடமில்லை என்று அவனைத் திருப்பி யனுப்பி விட்டார்கள்.

கோட்டும் சூட்டும் தேவை யில்லாத சிறிய 'பார்' ஒன்றை அவன் நாடினான்.

'டெம்பிள் பார்' என்பது அதன் பெயர்.

அங்கேயும் சிறிய அளவில் 'பால் ரூம்' நடனம் உண்டு.

ஆனால் 'கிராண்ட் ஹோட்டலு'க்கு வருவது போல் உயர்ந்த ரகப் பெண்கள் அங்கே வருவது இல்லை.

கீழ்த்தரமான விலை மாதுகளே அங்கே வருவது வழக்கம்.

அங்கே போய் சிறிது நேரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.



ஒவ்வொரு பெண்ணும் ஆடி முடித்த பிறபாடு அந்தப் புதிய முகத்தைத் தேடி வந்து பேசினார்கள்.

அவன் சார்பிலே மதுவிற்கு 'ஆர்டர்' கொடுத்தார்கள். சாப்பிட்டு விட்டு பில்லை அவனிடமே கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இது அந்த இடத்து மரபு என்பது அவனுக்குத் தெரியாது.

நல்ல வேளையாகக் கையில் நிறையப் பணம் வைத்திருந்தான்.

அந்த கூட்டத்திலும் வங்காளத்துப் பிராமணப் பெண் ஒருத்தி அடக்கமாக ஓர் ஆடவனோடு உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள்.

அந்த ஆடவன் அவனையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு அவனுக்கு எதிரே யிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

அவனாகவே பேச்சை ஆரம்பித்தான்.

''நீங்கள் மதராஸ்காரரா?' என்று கேட்டான்.

'ஆமாம்' என்றான் அவன். மெது மெதுவாகப் பேசத் தொடங்கி அந்தப் பெண்ணைக் காட்டி 'அவளை உங்களுக்குப் பிடிக்கிறதா?' என்று கேட்டான்.

அந்த ஆடவன் நல்ல ஆங்கிலம் பேசினான்.

அவனோ அரைகுறை ஆங்கிலத்தில் அவனுக்குப் பதில் சொன்னான்.

''எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கிறது'' என்றான்.

''நாம் போவோமா?'' என்று அவன் கேட்டான்.

மகிழ்ச்சியோடு அவனும் புறப்பட்டான்.

ஒரு பஞ்சாபி டிரைவர் ஓட்டிய 'டாக்ஸி'யை மூவரும் அமர்த்திக் கொண்டார்கள்.

அந்த ஆடவன் 'டாக்ஸி' டிரைவரிடம் ஏதோ ஓர் இடத்தைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டான்.

'டாக்ஸி' புறப்பட்டது. அந்த ஆடவன் முன்னால் அமர்ந்திருந்தான். அவனும் அவளும் பின்னால் அமர்ந்திருந்தார்கள்.

அவள் வங்காளி மொழியில் பேசினாள்.

அதில் எதுவும் அவனுக்குப் புரியாவிட்டாலும், பேசிய 'தொனி' குழைவாக இருந்தது.

ஏறக்குறைய பதினைந்து மைல்களுக்குமேல் டாக்ஸி போய்க் கொண்டிருந்தது. கல்கத்தா நகரின் கிழக்கு எல்லை வரையில் போய் விட்டது. அங்கே ஒரு சிறிய அழகிய வீடு. அது கிராமச் சூழ்நிலையில் தோற்றமளித்தது.

ஒரு குடும்பம் அதில் குடியிருந்தது. அதற்குள்ளே அவனை அழைத்துச் சென்றார்கள்.

அந்த வீட்டுக்காரர்களுக்கும், அந்த ஆடவனுக்கும் உறவு இல்லை.

ஹோட்டல்களில் போலீசார் சோதனையிடுகிறார்கள் என்பதற்காக அந்த மாதிரியான வீடுகளைப் பயன்படுத்துவது வழக்கம்.

அன்று அவன் அங்கே தங்கினான்.

மொழி புரியாத காதல் ஊமைக்காதல். அந்த ஊமைக் காதலர்கள் ஓரிரவு அங்கே குடியிருந்தனர்.

வங்காளிகளின் சுபாவம் பொதுவாகவே உயர்ந்தது. வயிற்றுப்பாட்டிற்காக அவர்கள் தீய காரியங்களை செய்தால் கூட நாணயத்தோடு நடந்து கொள்கிறார்கள்.

பொதுவாக பஞ்சாபி 'டாக்ஸி' டிரைவர்கள் மிகவும் உத்தமமானவர்கள்.

அந்தப் பெண்ணின் பெயர் 'சாரதா' என்பதாகும்.

வங்காள தொனியில் 'ஷாரதா' என்று அழைப்பார்கள்.

புதிதாக வந்து அகப்பட்டுக்கொண்ட மனிதனைக் கொள்ளையடிக்கலாம் என்ற எண்ணம் கிஞ்சிற்றும் அவளிடமில்லை.

அதிகாலையில் அவளுடைய முகவரியைப் பெற்றுக் கொண்டு பிராட்வே ஹோட்டலுக்குத் திரும்பினான்.



சுவையான அனுபவங்களோடு கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டான்.

அப்போது சென்னையில் 52-வது ஆண்டு பொதுத் தேர்தல் ஆரம்பமாகி விட்டது.

அந்தத் தேர்தலில் கழகத்தின் பத்திரத்தில் கையெழுத்துப் போடுபவர்களுக்கு கழகம் ஆதரவு தரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கழகத்திலிருந்து அவன் விலகியது பற்றி அண்ணாத்துரையும் நெடுஞ்செழியனும் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று அவன் அறிய விரும்பினான்.

குளித்துவிட்டுத் தன் சகோதரரின் காரை எடுத்துக் கொண்டு சேத்துப்பட்டிலிருந்த நெடுஞ்செழியனைப் போய்ப் பார்த்தான்.

# இரண்டு இரண்டாம்!

நெடுஞ்செழியனிடம் கூட அவனுக்கு அதிகமான பழக்கமில்லை. அதாவது அந்தரங்கங்களைப் பரிமாறிக் கொள்கிற அளவுக்குப் பழக்கமில்லை.

அவன் போனபோது அவர் வெளியே செல்வதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். என்றாலும், அவனை அன்போடு வரவேற்று விஷயங்களை விசாரித்தார்.

எவ்வளவு தூரம் பிரிந்து போனாலும் அவனால் மறக்க முடியாத முகம் நெடுஞ்செழியன் முகமாகும். குழைவான சுபாவமும் புன்னகை முகமும் கொண்ட உயர்ந்த மனிதர் நெடுஞ்செழியன். எல்லோரையும் அணைத்துக்கொண்டு போக வேண்டும் என்ற எண்ணமுடையவர் கழகத்திலேயே அவர்தான். அவர் நிறை குடம்!

தான் கட்சியிலிருந்து விலகியது பற்றி அவருடைய அபிப்பிராயத்தை அவன் கேட்டான். ''வாழ்க்கையில் ஏற்படும் சொந்த விவகாரங்களை அரசியலில் கவனிக்க வேண்டியதில்லை. என்றாலும். அண்ணாவைப் பாருங்கள்'' என்று அவர் சொன்னார். அவன் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்திற்குப் புறப்பட்டான். காஞ்சியில் அண்ணாத்துரையின் பழைய வீட்டிற்கு எதிரே சிறிய புதுவீடு ஒன்றை அவர் அப்பொழுதுதான் கட்டியிருந்தார்.

அவன் போன நேரத்தில் பல சுயேச்சை அபேட்சகர்கள் அவரை மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அவனைப்பார்த்து



அவர் புன்னகை புரிந்தார். அது அவர் சுபாவம்! அதுதான் அவரது அன்பான வரவேற்புக்கு அடையாளம். ''உட்கார்'' என்றார். பிறகு வெகுநேரம் வரை வந்திருந்த அபேட்சகர்களோடு பேசிக் கொண்டிருந்தார். பெரும்பாலோர் அவரைக் கூட்டத்திற்கு அழைக்க வந்திருந்தார்கள். சிலருக்குத் தேதி கொடுத்தார். சிலரைத் தட்டிக் கழித்தார்.

இறுதியாக ராணிப்பேட்டைத் தொகுதி சுயேச்சை அபேட்சகர் வரதராசன் என்பார் ''யாராவது ஒருவரை அனுப்புங்கள்'' என்று அவரிடம் கெஞ்சினார்.

அண்ணாத்துரை சுற்று முற்றும் பார்த்துவிட்டு, அடக்கமாக அமர்ந்திருந்த அவனைப் பார்த்து ''நீ போய் வா'' என்றார். அவன் எப்படிப் போக முடியும்? அவன்தான் இராஜினாமாக் கடிதம் அனுப்பியிருக்கிறானே...!

அவன் அதைச் சொல்ல வாயெடுத்தான். அவர் உடனே புரிந்து கொண்டார். 'எல்லாம் எனக்குத் தெரியும்! போய் வா' என்றார்.

அந்த அன்பு அவன் கண்களைக் கண்ணீரால் நிரப்பியது. ''வா! நம் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்றார். சாப்பிடச் சென்றான். நாலைந்து விருந்தாளிகளோடு அவனும் அமர்ந்தான். ஆள் கொஞ்சம் கனமான ஆள் ஆதலால் இரண்டு இலைக்கு ஒருவனாக அமர்ந்தான்.

அவர் ஜாடையாக அவனைப் பார்த்தார். ''என்ன நீ எல்லாவற்றிலும் இரண்டு இரண்டு கேட்கிறாய்?'' என்றார் புன்னகையோடு. அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

அவரது அபிப்பிராயம் அவனுக்குப் புரிந்தது. அவனது இரண்டாவது ஏற்பாட்டைப் பற்றி அவர் சாதாரணமாகத்தான் நினைக்கிறார் என்பதும், பெரிய விபத்தாகக் கருதவில்லை என்பதும் புரிந்தது. உற்சாகத்தோடு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

மாலை, இராணிப்பேட்டையில் கூட்டம்.

மேடைக்கு முன்னால் காலி மைதானம் நிறைய இருந்தது. ஏதோ பேசினான்.

''எல்லோரும் வரதராசனுக்கு ஓட்டு போடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்.

மேடையை விட்டு இறங்கியதும் அடுத்த அழைப்பு அவனுக்குக் காத்துக் கொண்டிருந்தது.

குடியாத்தம் தொகுதியில் ஓர் அபேட்சகர். பெயர் ராஜகோபால் நாயுடு என்பது. அவரது சகோதரர் அவனுக்கு மிகவும் வேண்டியவர். அவனை ராஜகோபால் நாயுடுவுக்காக பேசுவதற்கு அழைத்தார்.

தாட்சண்யத்தாலேயே தொல்லைகளை அனுபவித்த அவன் மறுக்க முடியாமல் சென்றான்.

இரவு ஒன்பது மணிக்கு குடியாத்தம் கூட்டம்.

மேடைக்கு முன்னால் சுமார் ஆயிரம் பேர் அமர்ந்திருந்தார்கள். மேடையில் ஏறி அவன் பேசத் தொடங்கினான்.

அவ்வளவுதான் தாமதம். உடனே முன்னால் இருந்த கூட்டம் எல்லாம் எழுந்தது. சுமார் நூறு துண்டுச்சீட்டுகள் அவன் கையில் தரப்பட்டன. எல்லாச் சீட்டுகளிலும் ஒரே கேள்விதான் இருந்தது. 'இன்று ராஜகோபால் நாயுடுவை நமது கழகம் ஆதரிக்கவில்லை. உமக்குத் தெரியுமா......?'— இதுதான் கேள்வி! அவன் திடுக்கிட்டான்.

ஒலிபெருக்கி மூலமே பதில் சொன்னான். 'எனக்குத் தெரியாது! இன்று காலைதான் கல்கத்தாவிலிருந்து வந்தேன். எனது நண்பர் வந்து அழைத்ததால் வந்து விட்டேன்' என்றான்.

அதன் பிறகு கழகத் தோழர்கள் அவனை ஒரு சிறிய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

கழகம் ஆதரிக்கும் அபேட்சகரான அண்ணல்தங்கோ என்பவருக்காகப் பேசுவதற்கு ஒரு நாள் குறித்துத் தரும்படி கேட்டார்கள்.

அவனும் ஒரு நாளை குறித்துக் கொடுத்துவிட்டுப் புறப்படத் தயாரானான். அப்போது ஒரு வேடிக்கை நடந்தது. எங்கே கழகத் தோழர்கள் அவனைத் தாக்கி விடுவார்களோ என்று ராஜகோபால் நாயுடுவின் ஆட்கள் கண்காணிப்பதற்



காக இரண்டு கார்களில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். எங்கே அவர்கள் அவனைத் தாக்கி விடுவார்களோ என்று கழகத் தோழர்கள் அவனைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனது காருக்கு முன்னும் பின்னும் சுமார் ஐம்பது சைக்கிள்களில் கழகத் தோழர்கள் பத்துமைல் தூரம் வரை அவனுக்குப் பாதுகாப்பாக வந்தார்கள்.

அந்தப் பத்துமைல் தூரமும் இராஜகோபால் நாயுடுவின் கார்களும் அவனுக்குப் பாதுகாப்பாக வந்து கொண்டிருந்தன.

இப்படி இரண்டு பகுதியினரின் அன்புக்கும் பாதுகாப்பிற்கும் நடுவே அவன் பத்து மைல்களைக் கடந்து பாக்கித் தூரத்தை தனியாகவே கடந்தான்.

காரில் வரும்போதெல்லாம் அண்ணாத்துரை தன்னிடம் பிரியம் வைத்திருப்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

இனித் தன்னை யாரும் தடுக்க முடியாது என்ற தைரியம் அவனுக்கு வந்தது.

அதன் பிறகு தனிக்கூட்டங்கள் பலவற்றிற்கு ஒப்புதல் அளிக்கத் தொடங்கினான்.

வாழ்க்கையைச் சீர்செய்துகொண்டு முழு அரசியல்வாதியாகத் திகழ அவன் உறுதி கொண்டான்.

ஆனால், அந்த நேரமும் வருமானத்திற்கு வழியில்லாமல் இருந்த நேரமாக இருந்தது.

அந்தக் கலக்கம் அவனை ஆட்கொண்டது. எல்லாம் இரண்டே நாட்கள்தான்...! இறைவன் அவனை எப்போதுமே கண்காணித்துக் கொண்டிருந்தான் போலும்! சேலம் மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து அவனுக்கு ஒரு தந்தி வந்தது.

உடனே புறப்படும்படி அது உத்திரவிட்டது. சேலத்திற்கு வந்தான்...! 'சர்வாதிகாரி' 'கல்யாணி' இரண்டு படங்களுக்கு ஆறு பாடல்கள் எழுதினான். ரூபாய் மூவாயிரத்தைக் கையிலே வாங்கிக்கொண்டான்.

''தொடர்ந்து எல்லாப் படங்களுக்கும் அவனே எழுதட்டும்'' என்று டி. ஆர். எஸ். சொல்லி விட்டார்.

உற்சாகத்தோடு, அதுவரை அவன் கண்டிராத பணத்தோடு சென்னைக்குப் புறப்பட்டான்.

இப்போது அவன் முதல் வகுப்பில் பிரயாணம் செய்தான்......!

முதல் வகுப்பின் சுகத்தை அவன் தூங்கி அனுபவிக்கவில்லை.

விழித்த கண்களிலேயே 'சென்ட்ரல் ஸ்டேஷன்' வந்து நின்றது.

பரபரப்புக்கிடையே அந்தப் பாதி மனிதன் வண்டியை விட்டு இறங்கினான்.

அன்றிலிருந்து தான் குடியிருப்பதற்கென்று ஒரு வீடு தேடத் தொடங்கினான். இரண்டு நாளில் அதுவும் கிடைத்தது! இராயப்பேட்டை கணபதி முதலி தெருவில் ஒரு வீடு. திரு. வி. க. வீட்டிற்கு நேர் எதிர் வீடு. நூறு ரூபாய் வாடகை! குடியும் குடித்தனமுமாக ஒரு தனி வீட்டில் சென்னையில் வாழத் தொடங்கியது அன்றுதான் முதல் தடவை.

சேலத்திற்கு போய் பாட்டு எழுதவேண்டியது. கிடைத்த பணத்தைக் கொண்டு சென்னையிலே வாழ வேண்டியது.

இப்படியே ஓடிய ஆண்டுகள் இரண்டு.

இந்த நேரத்தில் கிராமத்திலிருந்து வந்த அவனது தந்தையார் கொஞ்ச நாள் கிராமத்திலிருந்து விட்டு வரலாம் என்று அவனை அழைத்தார்.

அவன் பிறந்த கிராமம் அன்று அவனை வெறுக்கவில்லை. அந்த நேரத்தில் மும்முனைப் போராட்டம் ஒன்றினை முன்னேற்றக் கழகம் அறிவித்திருந்தது. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஆட்சியிலிருந்த காலம் அது! அந்தப் போராட்டங்களுக்கு இன்னின்னார் 'தளபதிகள்' என்று நியமித்திருந்தார்கள். அவற்றில் எதிலும் அவன் இல்லை. ஒரு நாள்......! மதிய உணவிற்காக அவன் அமர்ந்திருந்தான்.

காரைக்குடியிலிருந்து அவனது நண்பர் — உழைப்பின் உருவம் இராம. சுப்பையா அவர்கள் ஓடோடி வந்தார்.



"தெரியுமா சேதி?" என்று கேட்டார்.

அவரது பதட்டத்தைக் கண்டு அவனும் பதறினான். "சென்னையில் அண்ணாவை எல்லாம் கைது செய்து விட்டார்கள்" என்றார் அவர். அவன் திகைத்தான். "நாம் சும்மா இருந்தால் நன்றாக இருக்காதே......?" என்றார்.

"என்ன செய்யலாம்......?" என்று அவன் கேட்டான். "திருச்சிக்குப் போய் டால்மியாபுரம் போராட்டத்தில் கலந்து கொள்வோம்" என்றார் அவர். அவன் உடனடியாகப் புறப்பட்டான்! கையில் இருந்தது இரண்டே ரூபாய்!

# போராட்டம்

உணர்ச்சி வசப்பட்டுப் போராட்டத்திற்கு அவன் புறப்பட்டு விட்டான்.

ஆனால், பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம் அவன் குழப்பமடையத் தொடங்கினான்.

எவ்வித வசதியுமற்ற நிலையில் குடும்பத்தை விட்டுவிட்டு போராட்டத்தில் ஈடுபடுவதால் நீண்டகாலச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியது வந்தால்.....?

எதையும் அவனால் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை.

உணர்ச்சி மட்டுமே அவனை நடத்திச் சென்றது.

காரைக்குடியில் இறங்கி, ஒரு வாடகைக் காரை இருவரும் பிடித்துக் கொண்டார்கள்.

திரும்ப வந்ததும் பணம் கொடுப்பதாகவும், பெட்ரோலும் அவரே போட்டுக் கொள்ளும்படியும், டிரைவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

மாலை சுமார் 7 மணிக்கெல்லாம் 'லால்குடி'க்கு வந்து சேர்ந்தார்கள்.

லால்குடியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

தோழர்கள் கருணாநிதி, அன்பில் தருமலிங்கம் ஆகியோர் அதில் பேசுவதாய் ஏற்பாடு.

அனைவரும் வந்து அமர்ந்திருந்தார்கள்.

அவனும் மேடையில் போய் அமர்ந்தான்.



வெறும் யந்திரம் போலவே அவன் இயங்கினான்.

கருணாநிதி அவனைப் பார்த்து ''நீரும் போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறீரா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றான்.

''ஏதோ யோசித்து முடிவு செய்யும்'' என்றார் அவர்.

அவனைப் பேச அழைத்தார் தலைவர்.

பேச எழுந்தான்.

பெரும் உணர்ச்சி வசம்!

''போகிறேன்......சாகிறேன்!'' என்றான்.

ஐந்து நிமிடப் பேச்சு!

அடுத்துப் பேசியவர் கருணாநிதி.

ரத்தம் தெறிக்கும் வீர முழக்கம்!

ஒருமாத காலமாகவே போராட்டத்தைப்பற்றி, டால்மியாபுரத்தைச் சுற்றியிருந்த ஊர்கள் பலவற்றிலும் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

அன்று கடைசிப் பேச்சு!

தாயிடம் விடை பெற்றதையும், மனைவியிடம் விடை பெற்றதையும் பற்றி மிக உருக்கமாகப் பேசினார்.

''ஒன்று 'டால்மியாபுரம்' ''கல்லக்குடி'யாக வேண்டும். இல்லையென்றால் என் 'பிணம்' விழ வேண்டும்'' என்று முடித்தார்.

கூட்டம் கைதட்டிக் கலைந்தது.

இரவு எல்லோரும் டால்மியாபுரம் சென்றார்கள்.

அங்கு போராட்டக்காரர்கள் தங்குவதற்காக என்று ஒரு பந்தல் போடப்பட்டிருந்தது.

எல்லோரும் அதில் தங்கினார்கள்.

எப்படிப் போராட்டத்தை நடத்துவதென்று பேச்சு எழுந்தது.

பலர் பலவிதமான கருத்துக்களைக் கூறினர்.

வெளியூர்களிலிருந்தும் பல பேர் போராட்டத்திற்கென்று வந்திருந்தனர்.

அவர்களுடைய பெயர்கள் குறித்துக்கொள்ளப்பட்டன.

பிறகு, குறிக்கப்பட்ட பெயர்கள் மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டன.

இத்தகைய திட்டங்களில் கருணாநிதியை யாரும் மிஞ்ச முடியாது.

மூன்று அணிகளுக்கும் தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

முதல் அணியின் தலைவர் கருணாநிதி!

இரண்டாவது அணிக்கு இராம சுப்பையா!

மூன்றாவது அணிக்குத் தலைவராக அவன் நியமிக்கப்பட்டான்.

இரவு முழுக்க அவன் தூங்கவே யில்லை.

ஆசைக்கும் அச்சத்திற்குமிடையே அவன் ஊடாடினான்.

பேர் கிடைக்குமென்று எண்ணியபோது பெருமிதம் தோன்றிற்று.

"எவ்வளவு நாள் சிறை வாசமோ?" என்று எண்ணிய போது, "ஏன் வந்து மாட்டிக்கொண்டோம்" என்று தோன்றிற்று.

வந்தபின் என்ன செய்வது?

'வருவது வரட்டும்' என்று அவன் காத்திருந்தான்.

பொழுது புலர்ந்தது.

போராட்ட உறுப்பினர்கள் அனைவரும் தயாரானார்கள்.

முதல் அணி 'கியூ' வரிசையில் நிறுத்தப்பட்டது.

பந்தலிலிருந்து புகைவண்டி நிலையம் அரை மைல் தூரத்திலிருந்தது.

அதுவரை ஊர்வலமாகப் போக வேண்டும்.

ஊர்வலத்திற்குக் கருணாநிதி தலைமை தாங்கினார்.

முழக்கங்களோடு முதலணி இரயில் நிலையத்தை அடைந்தது.

ஏற்கனவே 'கல்லக்குடி' என்று அச்சடித்த போஸ்டர்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஸ்டேஷனுக்கு வெளியிலே சுவரில் எழுதப்பட்டிருந்த 'டால்மியாபுரம்' என்ற பெயரின் மீது ஒரு போஸ்டரை கருணாநிதி ஒட்டினார்.



நூற்றுக்கணக்கான போலீசாரும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப்இன்ஸ்பெக்டர்களும் அங்கே குழுமியிருந்தனர்.

யாரையும் அவர்கள் கைது செய்யவில்லை.

பிறகு முதலணி ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

எல்லோரும் 'பிளாட்பாரம்' டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டார்கள்.

இரயில் வருவதற்குப் பத்து நிமிடமே இருந்தது.

எல்லோரும் உள்ளே சென்று பிளாட்பாரம், பெயர்ப் பலகைகள் இரண்டிலும் 'கல்லக்குடி' போஸ்டரை ஒட்டினார்கள்.

அப்போதும் யாரும் கைது செய்யப்படவில்லை.

கட்சியின் தீர்மானம் என்னவோ போஸ்டர் ஒட்டுவது தான்.

ஆனால் கருணாநிதி அதோடு நின்றுவிடத் தயாராக இல்லை.

தான் கைது செய்யப்படுவதற்கு வேறு என்ன வழி என்று பார்த்தார்.

இரயில் வந்து நின்றது.

உடனடியாகத் தன்னோடு வந்தவர்களில் நாலு பேரை அழைத்துக்கொண்டு தண்டவாளத்தில் படுத்துவிட்டார்.

போலீசார் திகைத்தனர். கட்சியின் தீர்மானத்தை அவர்களும் அறிந்திருந்தார்களாகையால் இதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்து வெங்கட்டராமன் என்பவர் படுத்திருந்தவர்கள் அருகிலே சென்று "உங்கள் தீர்மானத்தில் இந்தச் செயல் இல்லையே? எழுந்து சென்று விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்!

கருணாநிதி மறுத்து விட்டார்.

பிறகு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்!

அதே வழியைப் பின்பற்றிய மற்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள்!

எல்லோரும் போலீஸ் 'வேனி'ல் ஏற்றப்பட்டு, டால்மியாபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

இது நடந்தது காலை 9-45 மணிக்கு.

அடுத்த இரயில் 11 மணி.

இரண்டாவது அணி புறப்பட்டாக வேண்டும்.

தோழர் இராம சுப்பையாவின் அணியில் சுமார் 30 பேர் பந்தலில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டார்கள்.

அவர்கள் ஸ்டேஷனை வந்தடைந்த போது ஏராளமான கூட்டம் கூடிவிட்டது.

வெளியூரிலிருந்து வந்த இரயில்கள் முழுவதிலும், கழக ஆதரவாளர்களும் வேடிக்கை பார்ப்போருமாக ஆயிரக் கணக்கானோர் வந்து சேர்ந்து விட்டார்கள்.

கருணாநிதி காட்டிய அதே வழியில் இரண்டாவது அணி முழுவதும் இரயிலுக்கு முன்னால் படுத்து விட்டது.

அணியில் பதிவு செய்து கொள்ளாத சில பேரும் படுத்து விட்டார்கள்.

எல்லோரையும் போலீஸார் கைது செய்தார்கள்.

எஞ்சியிருந்த பெருங் கூட்டத்தை ஸ்டேஷனுக்கு வெளியில் விரட்டி இரயிலைப் புறப்பட வைத்தார்கள்.

கைது செய்யப்பட்டோர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

மூன்றாவது அணி புறப்படுவதற்கு வகுத்திருந்த நேரம் பகல் 1-30 மணி.

அதுவரை அவன் எதுவும் சாப்பிடவில்லை.

சாப்பாடு செல்லவில்லை.

அவன் புறப்பட வேண்டிய நேரம் வந்ததும் தோழர் டி. கே. சீனிவாசன் இரண்டு மசால் வடையும், 'டீ'யும் வாங்கி வந்தார்.

அதையும் அரைகுறையாகச் சாப்பிட்டான்.

ஒரு கவிதை எழுதித் தரும்படி கேட்டார்.

பதட்டத்தில் எதையோ எழுதிக் கொடுத்தான்.

மூன்றாவது அணி புறப்பட்டது.

அவன் தலைமை தாங்கினான்.

இரயில் நிலையத்துக்கு அவன் வந்து சேர்ந்தபோது பெரிய திருவிழா நடப்பதுபோல் அந்த இடம் தோற்ற மளித்தது.



போலீஸார் 'வியூகம்' வகுத்து அவ்வளவு பேரையும் விலக்கி வைத்திருந்தார்கள்.

போலீஸ் அதிகாரிகள் அனைவரும் ஆத்திரமடைந்த நிலையிலிருந்தனர்.

அவர்களுக்கும் பசி.

துணைக் கலெக்டரும் அங்கே வந்து விட்டார்.

அது நீதி நிர்வாகம் பிரிக்கப்படாத காலம்.

அந்தத் துணைக் கலெக்டர்தான் அரியலூர் மாஜிஸ்டிரேட்.

மிகவும் இளைஞர்.

ஐ. ஏ. எஸ். படித்து விட்டு, உடனடியாக இந்த உத்தியோகத்திற்கு வந்தவர்.

அவனுடைய அணி ஸ்டேஷனுக்குள் வந்தது.

உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்தார்.

''எல்லோரும் வெளியிலே போங்கள்'' என்றார்.

எல்லோரும் கையிலிருந்த 'பிளாட்பாரம்' டிக்கட்டுகளைக் காட்டினார்கள்.

''நான் உங்களை இரயிலின் முன்னால் படுப்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை'' என்றார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

''படுப்பது எங்கள் கடமை'' என்றான் அவன்.

போலீஸார் தீவிரமடைந்தார்கள்.

இரயில் வந்தது.

# ஷைத்தான்

இரயில் முன்னால் படுப்பதற்கு அவனும் நண்பர்களும் ஓடினார்கள்.

ஆயுதந் தரித்த போலீசார் அவர்களைத் தடியாலடித்துத் துரத்தினார்கள்.

சிலரை அலாக்காகத் தூக்கி அருகில் நின்ற கூட்ஸ் இரயிலுக்கு அந்தப் பக்கம் எறிந்தார்கள்.

அவனும் கூட்ஸ் இரயிலுக்குப் பின்பக்கம் தள்ளப் பட்டான்.

அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை.

கணநேரம்.

'விசில்' சத்தம் கேட்டது.

இரயில் புறப்பட்டது.

தூரத்தில் நின்ற டி. கே. சீனிவாசன் பக்கத்தில் ஓடி வந்தார்.

''போய்யா, போய்யா, ஓடுகிற இரயிலுக்கு முன்னால் படு அய்யா!'' என்றார்.

அருமையான யோசனை!

அவனுக்குக் கோபம் வந்தது.

''நீங்களும் வாருங்கள். இரண்டு பேருமே சாவோம்'' என்றான்.

அதற்குள் ஓடிய இரயில் ஒரு பர்லாங்கு தூரத்தில் நின்றது.

அவன் திரும்பிப் பார்த்தான்.



அங்கே தண்டவாளத்தில் சுமார் ஐயாயிரம் பேர் அமர்ந்திருந்தார்கள்.

அவன் மெய் சிலிர்த்தது.

ஆவேசம் பிறந்தது.

ஒரு பர்லாங்கு தூரமும் ஓடினான்.

இரயிலுக்கு முன்னால் அமர்ந்து விட்டான்.

கூடியிருந்த பெருங்கூட்டம் கைதட்டியது.

எதிரே அவன் பார்த்தான்.

இரயிலின் இரண்டு பக்கங்களிலும் சுமார் ஐம்பது பேர்—ஆயுதந்தரித்த போலீசார்—அணிநடை போட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்து வெங்கட்ராமன், அரிய லூர் டேபுடி கலெக்டர், சில சார்ஜண்டுகள் முன்னால் வந்தார்கள்.

தடியடிக்கு உத்தரவிட்டார்கள்.

போலீசார் தடியடிப் பிரயோகத்தை ஆரம்பித்தார்கள்.

அவன் முதுகிலும் பலமான அடி விழுந்தது.

ஆனால் வலி இல்லை!

அடிக்கும் தடியை ஒடித்துவிட்டுக் கொண்டு அடித்த அந்தப் போலீசாரில் சிலர் கழகத்தின் அனுதாபிகள் என்பது பிறகு அவனுக்குத் தெரிந்தது.

ஒரு பகுதிக் கூட்டம் கலையாமலேயே இருந்தது.

உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பூண்போட்ட தடியால் அடிக்கத் தொடங்கினார்.

ஓரடி அவன் தலையில் பலமாக விழுந்தது.

அவன் நிலைவு கலங்கிற்று.

கண்கள் இரண்டும் வெளியே வந்து விழுவதுபோல் தோன்றிற்று.

சர்க்கிள் தன் பூட்ஸ் காலால் அவனை உதைத்து தண்ட வாளத்துக்கு வெளியே தள்ளினார்.

கூடியிருந்த கூட்டம் சிதறமடைந்தது.

கற்கள் சரமாரியாகப் போலீசார் மீது விழத் தொடங்கின.

கல்வீச்சைக் கண்டு போலீஸ் அதிகாரிகள் ஆத்திர மடைந்தனர்.

''சுடுங்கள்!'' என்று உத்தர விட்டார் டெபுடி கலெக்டர்.

கீழே கிடந்த அவன் மெதுவாக எழுந்தான்.

துப்பாக்கிகள் வெடித்தன.

சேலம் வழக்கறிஞர் சிவப்பிரகாசம் ஓடி வந்தார்.

அவனைக் கைத்தாங்கலாக அணைத்துக் கொண்டார்.

இருவரும் நடந்தார்கள்.

துப்பாக்கிகள் சுட்டுக் கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவனும் அன்று சுடப்பட்டிருக்கக்கூடும்!

சூடு அவன்மேல் படாததற்குப் போலீசாரின் ஜாக்கிரதையே காரணம் என்று கூற வேண்டும்.

அந்த இடத்தைத் தாண்டி, டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை அருகே வந்தார்கள்.

காரைக்குடியிலிருந்து கொண்டு வந்திருந்த வாடகை கார் அங்கே காத்துக் கொண்டிருந்தது.

சிவப்பிரகாசமும், அவனும் அதில் ஏறிக்கொண்டார்கள்.

அவனது இடது கை மூட்டு இறங்கியிருந்தது.

லால்குடி ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே வந்து சேர்ந்த முதல் ஆள் அவன்தான்.

லால்குடி ஆஸ்பத்திரி டாக்டர் மிக உயர்ந்த மனிதர்.

டாக்டர்களுக்கு இருக்க வேண்டிய கருணை முழுவதும் பெற்றவர்.

அதுவும் ஏழை நோயாளிகளை அவர் கவனிக்கின்ற முறை பற்றி லால்குடி வட்டாரம் முழுவதுமே புகழ்ந்து பேசும்.

அவருக்கு அமைந்த கம்பவுண்டரும் அப்படியே.

அவர்கள் இருவரும் அவனிடம் வந்தார்கள்.

அவனால் இடது கையைத் தூக்கவே முடியவில்லை.

பிறகு சட்டையையும், பனியனையும் வெட்டி எடுத்தார்கள்.

முட்டைத் தூக்கி நிறுத்தி கைக்கு ஒரு தொட்டில் போட்டார்கள்.



சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு போலீஸ் வேன் வந்தது.

காயம் பட்டவர்கள் சிலரை அதில் ஏற்றி வந்தார்கள்.

ஒரு தொண்டனுக்கு வயிற்றுச் சதையிலேயே குண்டு தேங்கியிருந்தது.

அதன் பாதிப் பகுதி வெளியே தெரிந்தது.

தடியடியால் மண்டை உடைந்தவர்களும் இரத்தம் வழிய வந்தார்கள்.

ஒரு தொண்டனுக்கு மட்டும் காயம் மிகப் பலமாக இருந்தது.

அவனைத் திண்ணையில் படுக்க வைத்தார்கள்.

அணித்தலைவன் என்ற முறையில் காயமடைந்தவர்களை அவன் சந்தித்தான்.

அந்தத் தொண்டர்களின் தீவிர உணர்ச்சி மறக்க முடியாதது.

தங்கள் வலியையும் மறந்து, தலைவன் உடம்பு எப்படி இருக்கிறது என்றே அவர்கள் விசாரித்தார்கள்.

அவர்களிலே மிகக் குறைவான காயம் அவனுக்குத் தான்.

அது அவனுக்கே வெட்கமாக இருந்தது.

இன்னும் கொஞ்சம் காயம் பட்டிருக்கக்கூடாதா என்று ஏங்கினான்.

படுகாயமடைந்த சிலரைத் திருச்சி பெரிய ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

சந்தானம் ஜோசப் என்ற பதினறு வயது இளைஞனுக்கு இடது கை துண்டிக்கப்பட்டு விழுந்து விட்டது.

சுந்தரராஜன் என்ற பையனுக்கு வலது கையில் ஒரு விரல் துண்டிக்கப்பட்டு விட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்து கொண்டிருந்தபோது அவன் இரண்டு கைகளையும் உயரத் தூக்கி, ''தோழர்களே! அமைதி! அமைதி!'' என்று சத்தம் போட்டானும். ஒரு குண்டு அவன் விரலைக் கொண்டுபோய் விட்டதாம்.

இந்தச் செய்திகளை அவர்கள் சொன்னார்கள்.

லால்குடி ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தவர்களில் மண்டை உடைந்தவர்களிலொருவர் சேலம்—வேலூரைச் சேர்ந்த சதாசிவம் என்பவர்.

பதினெட்டு வயது இளைஞரான அவர் மிகவும் உற்சாகத்தோடு காணப்பட்டார்.

''தலைவரே! உங்களுக்கு ஆபத்தில்லை என்பதில்தான் எங்களுக்குப் பெருத்த சந்தோஷம்!'' என்றார் அவர்.

அவன் கண்களில் கண்ணீர் பெருகிற்று.

சிறிது நேரத்தில் அன்பில் தர்மலிங்கம்—அவர்தான் திருச்சி மாவட்டச் செயலாளர்—அங்கே வந்தார்.

ரயிலுக்குள் குண்டு பாய்ந்து, கேசவன், நடராசன் என்ற இருவர் மாண்டுபோன செய்தியை அவர் தெரிவித்தார்.

அவர்கள் யாரோ பிரயாணிகள்.

கட்சிக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை.

தர்மலிங்கம் எல்லோரையும் விசாரித்தார்.

அந்த நேரத்தில் ஒரு போலீஸ்-ஜீப் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது.

தீச்சட்டி-கோவிந்தன் எனப் பெயர் பெற்ற விசுவநாத நாயர் திருச்சி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டாக இருந்தார்.

அவர்தான் அந்த 'ஜீப்'பில் வந்திருந்தார்.

அவர் நேரே டாக்டரிடம் போய், டால்மியாபுரத்தில் காயம்பட்டு வந்தவர்கள் யார் யார் என்று கேட்டார். அவர் அங்கே கேட்டுக்கொண்டிருக்கும்போதே கம்பவுண்டர் அவனிடம் வந்து, ''நீங்கள் கைதாக விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார்.

''விரும்பினால் இங்கே இருங்கள். இல்லையென்றால் எழுந்து போய்விடுங்கள்!'' என்று அவர் சொன்னார்.

அவன் போகத் தயாராக இல்லை.



கைதாவது தியாகம் என்பதற்காக அல்ல. வெளியே போனால் அவமானம் என்பதற்காக!

டி. எஸ். பி. உடனே தர்மலிங்கத்திடம் போனார்.

''நீ யார்?'' என்று கேட்டார்.

''திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர்!'' என்றார் தர்மலிங்கம்.

''அப்படியென்றால்...?''—டி. எஸ். பி. கேட்டார்.

''ஜில்லா கலெக்டர் மாதிரி!''! என்று பளிச்சென்று பதில் சொன்னார் தர்மலிங்கம்.

அவரை விட்டுவிட்டு அவனிடம் வந்தார் டி. எஸ். பி.

# தீர்ப்பு

நெருங்கி வந்த டி. எஸ். பி. அவனைக் கேட்டார்.

"நீ யார்?"

"கண்ணதாசன்!"

"டால்மியாபுரத்தில் அடிபட்டவரு?"

"ஆமாம்! நான்தான் குரூப் லீடர்."

"உன்னைக் கைது செய்திருக்கிறேன்."

அவர் சொன்னாரோ இல்லையோ, இரண்டு போலீஸ் காரர்கள் அவன் அருகில் வந்து நின்றார்கள்.

சட்டையில்லாத அந்தச் சிறந்த திருமேனி முதன் முதலாக போலீஸ் காவலுக்கு ஆளானது.

வேலூர் சதாசிவம், அரியலூர் வடிவேலு, தாத்தை யங்கார் பேட்டை தஸ்தகீர் உட்படப் பலரும் கைது செய்யப்பட்டார்கள்.

அந்த ஆஸ்பத்திரியிலேயே புதிய கட்டிடமொன்று கட்டப்பட்டிருந்தது.

திறப்பு விழாவுக்காக அது காத்துக்கொண்டிருந்தது.

மந்திரிகள் வந்து [illegible] வைக்க வேண்டிய அந்தக் கட்டிடத்தை அந்தக் கைதிகள் அன்று திறந்துவைத்தார்கள்.

ஆஸ்பத்திரியில் வேறு இடம் இல்லாததால் அந்தக் கட்டிடத்தில் போட்டு அவர்கள் பூட்டப்பட்டார்கள்.

ஆஸ்பத்திரியைச் சுற்றிலும் ஆயுதப் போலீஸ் நிறுத்தப் பட்டது.



அன்று மட்டும் கைதிகளைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை.

அன்று இரவும் அவன் எதுவும் உட்கொள்ளவில்லை.

கொடிய வெயிலில் கடுமையான தடியடிப் பிரயோகம் நடந்திருந்ததால், அவனுக்குத் தாகமே அதிகமாயிருந்தது.

அவனுக்காக வந்திருந்த உணவுப் பொட்டலம், பிரிக்கப்படாமலே கிடந்தது.

கிட்டத்தட்ட ஒரு சொம்பு தண்ணீர் முழுவதையும் குடித்துவிட்டு அவன் தரையில் சாய்ந்தான்.

அவனைப் பார்த்துப்பரிதாபப்பட்ட கம்பவுண்டர், அகல மானதும், கனமானதுமான பூத்துண்டு (டர்க்கி டவல்) ஒன்றை அவனுக்குக் கொடுத்தார்.

அது ஒரு மெத்தை போலவே இருந்தது.

அவன் உயரத்துக்கும் அது சரியாக இருந்தது.

அவன் கொண்டு வந்திருந்த வாடகைக் காரின் டிரைவர், போலீஸ் கெடுபிடிக்குப் பயந்து பணம் கூடக் கேட்காமல் காரை, காரைக்குடிக்கே கொண்டு போய்விட்டார்.

அவனுடைய சட்டையும் அதிலே போய்விட்டது.

அந்தப் பூத்துண்டை விரித்து, அன்று இரவு அவன் பிரக்ஞை இல்லாமல் தூங்கினான்.

இரவு சுமார் பன்னிரண்டு மணி இருக்கும்.

பூட்டியிருந்த கதவு திறக்கப்பட்டது.

ஜில்லா சூப்பிரெண்டண்ட் விஸ்வநாதன்நாயர் இரண்டு ஜவான்களுடன் உள்ளே நுழைந்தார்.

அங்கிருந்த ஒவ்வொரு கைதியையும் ஊர் பேரைக் கேட்டுக் குறித்துக்கொண்டார்.

அவன் தூக்கம் கலைந்த போதிலும் தூங்குகிற பாவனையில் படுத்துக்கொண்டிருந்தான்.

அவன் முதுகில் கைத்தடியால் மெதுவாகத் தட்டினார் சூப்பிரண்டண்ட்.

உடனே ஒரு குரல் ஆத்திரமாகக் கேட்டது, "தலை வரைத் தொடாதே" என்று.

"சாரி," என்று வருத்தம் தெரிவித்த சூப்பிரண்டண்ட்

''அவர் பெயரையும் ஊரையும் நீங்களே சொல்லுங்கள்'' என்று, அந்தக் குரல் கொடுத்தவரைக் கேட்டார்.

அந்தக் குரலுக்குரியவர்தான் அரியலூர் வடிவேலு.

அவனுடைய ஊர், பெயரை வடிவேலு சொன்னார்.

குறித்துக்கொண்ட சூப்பிரண்டண்ட் கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்.

பொழுது புலர்ந்தது!

அவன் எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

நாலடி தூரத்திற்கு ஒரு போலீஸ் வீதம், நிறுத்தப்பட்டிருந்தனர்.

வெளியூர்களிலிருந்து கைதிகளைப் பார்க்க வந்தவர்களில் பலபேர் உள்ளே வர முடியாமல் தெருவிலேயே அலைந்து கொண்டிருந்தனர்.

அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் ஜன்னலுக்குப் பின் பக்கத்தில் கடைத் தெருவின் ஒரு பகுதி இருந்தது.

ஜன்னலுக்கும் கடைகளுக்கும் இடையே சுமார் நாற்பது அடி தூரம் தானிருக்கும்.

ஒரு கடையில் பத்திரிகைகளின் வால்போஸ்டர்கள் தொங்கிக்கொண்டிருந்தன.

அவன் கூர்ந்து கவனித்தான்.

ஒவ்வொரு வால்போஸ்டரிலும் ''கண்ணதாசன் மரணப்படுக்கையில்!'' என்றிருந்தது.

''தூத்துக்குடியில் துப்பாக்கிப் பிரயோகம்'' என்று இன்னொரு தலைப்பும் இருந்தது.

பத்திரிகை பார்க்க அவன் துடித்தான்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

ஒரு சொம்பு நிறைய காப்பியோடும், குவளைகளோடும் கம்பவுண்டர் வந்தார்.

தனக்குச் சில பத்திரிகைகள் வாங்கித் தருமாறு அவன் அவரிடம் கேட்டான்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் பத்திரிகைகள் வந்தன.



அவன் இறந்துபோய்விட்டதாகவே சில பத்திரிகைகள் கேள்விக் குறியோடு செய்திகள் போட்டிருந்தன.

திருச்சி நகரத்தில் கொடிகள் அரைக்கம்பத்திலேயே பறந்ததாகவும், இன்னோர் ஊரில் அனுதாபத் தீர்மானமே நிறைவேற்றப்பட்டதாகவும் செய்திகள் வந்திருந்தன.

அவனைச் சுற்றிலும் மற்ற கைதிகள் உட்கார்ந்து ஆவலோடு பத்திரிகைகள் படித்தனர்.

சுமார் பதினொரு மணிக்கெல்லாம் குறிப்பாகச் சில பார்வையாளர்களை மட்டும் போலீசார் அனுமதித்தார்கள்.

அவனுடைய சகோதரரும், மற்றும் சில நண்பர்களும் வந்திருந்தார்கள்

அந்த நேரத்தில் அவன் தைரியமாகத்தான் இருந்தான்.

தான் நன்றாக இருப்பதாகவே அவர்களிடமும் சொன்னான்.

அவர்கள் போய் விட்டார்கள்.

அன்று மாலையே லால்குடி சப்ஜெயிலுக்கு அந்தக் கைதிகள் மாற்றப்பட்டார்கள்.

சிறைச்சாலையின் உட்பகுதியை அன்றுதான் அவன் முதன் முதலாகப் பார்க்கிறான்.

அங்கே போய்ச் சேர்ந்தபோது மணி ஐந்து!

ஒரு மணி நேரம் நண்பர்களோடு சப் ஜெயிலைப்பற்றி வேடிக்கையாகத்தான் பேசிக்கொண்டிருந்தான்.

லால்குடி சப் - மாஜிஸ்டிரேட்தான் ஜெயிலுக்கும் அதிகாரி.

அவர் இளைஞர்!

மிகவும் நல்லவர்!

ஆறு மணிக்கெல்லாம் அவர் சிறைச்சாலைக்கு வந்தார்.

''அறையிலே நீங்கள் தனியாக இருப்பீர்களா? துணைக்கு யாரும் வேண்டுமா?'' என்று கேட்டார்.

''தனியாகவே இருப்பேன்'' என்று தைரியமாகவே சொல்லி விட்டான்.

எல்லோரையும் 'லாக்-அப்' பண்ணும்படி அங்கிருந்த வார்டரிடம் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அவன் ஓர் அறைக்குள் நுழைந்தான்.

கதவு பூட்டப்பட்டது!

அவ்வளவுதான் தாமதம். அதுவரை தைரியத்தோடு இருந்த அவன் 'ஓ' என்று அழுது விட்டான்.

அறைச் சுவரைப் பார்த்தான்.

பழைய கைதிகளெல்லாம் அந்தச் சுவர்களிலே பெண் சித்திரங்களை வரைந்திருந்தார்கள்.

ஒவ்வொன்றும் அவனுக்குப்பயங்கரமாகத் தோன்றிற்று.

உடனே சத்தம் போட்டு வார்டரைக் கூப்பிட்டான்.

தனக்குத் துணைக்கு அரியலூர் வடிவேலுவை அனுப்பும் படி கேட்டான்.

வடிவேலு வந்து சேர்ந்தார்.

அவன் மனம் கொஞ்சம் தைரியமடைந்தது.

அரியலூர் வடிவேலு ஒரு விவசாயி! சொந்தமாக நில புலன்கள் உள்ளவர். நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அப்போது அவருக்கும் இருபத்தி ஐந்து, இருபத்து ஆறு வயது தான் இருக்கும்.

ஏற்கனவே ஒரு முறை அவர் சிறை சென்றிருந்தார்.

நாரணமங்கலத்தில் 144 தடையுத்தரவை மீறி ஆறு மாத தண்டனை அடைந்தவர்களில் அவர் முக்கியமானவர்.

(பின்னாளில் அவன் கழகத்தை விட்டு விலகியபோது, அவரும் விலகி த. தே க.வுக்கு வந்து, த. தே. க. அபேட்சகராக அரியலூர்த் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார். வேலூர் சதாசிவமும் விலகி வந்தவர்களில் ஒருவர்)

வடிவேலுவுக்கு சிறை விவகாரம் பழக்கப்பட்டதாகவே இருந்தது.

இரவு வெகுநேரம் வரை வடிவேலு அவனுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

மறுநாள் மாலை நண்பர்கள் சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன் முதலியோரும் மற்றும் சிலரும் அவனைப் பார்க்க வந்தார்கள்.

அவர்களைப்பார்த்ததும் பழையபடியும் அழுதுவிட்டான்.

அவர்களெல்லாம் அவனுக்கு வெகுவாகத் தைரியம் சொன்னார்கள்.



போராட்டம் நடந்த அன்று அவர்களிலே பலர்,—சி.பி. சிற்றரசு உட்பட-ஊரிலேயே இல்லை!

கைது செய்யும் கட்டம் முடிவடைந்த பிறகு தான் அவர்கள் தலைகாட்டினார்கள்.

தாங்கள் வெளியிலிருக்கிறோம் என்ற தைரியத்தில் அவர்கள் அவனுக்குத் தைரியம் சொன்னார்கள்.

அவனைக் கோழை என்றார்கள், தலைமறைவாக இருந்து தப்பிய அந்த வீரர்கள்!

சரியாகப் பதினைந்து நாட்கள் 'ரிமாண்டில்' அவனும், நண்பர்களும் இருந்தார்கள்.

அவனை முதல் எதிரியாக வைத்து இருபத்திநான்கு பேர் மீது, கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

நான்கு கிரிமினல் செக்ஷன்களிலும், இரண்டு இரயில்வே செக்ஷன்களிலும் வழக்கு தொடரப்பட்டது.

பதினைந்தாவது நாள் சொந்த ஜாமீனில் அவர்கள் வெளியே விடப்பட்டார்கள்.

வழக்கு வாய்தா போடப்பட்டது.

சுமார் நான்கு மாதகாலம் அந்த வழக்கு நடந்தது.

அந்த வழக்கு முடிவதற்கு முன்பே மூன்று மாத தண்டனையை அனுபவித்துவிட்டு கருணாநிதி—இராம சுப்பையா குழுவினர் வெளியே வந்து விட்டார்கள்.

வழக்கு நடந்த நான்கு மாதங்கள் அவனுக்குத் துயர் நிறைந்த மாதங்களாகும்.

அவனது 'ரிமாண்ட்' காலம்வரை கைது செய்யப் படாமல் இருந்த அன்பில் தர்மலிங்கமும் அந்த வழக்கில் எதிரியாகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

நான்கு மாத காலம் அவர்கள் பட்டபாடு சொல்லும் தரமன்று!

கையிலே காலணா இல்லாத நிலையில் வாயும் வயிறும் காய்ந்த வண்ணம், கோர்ட் வாசலில் அவனும் நண்பர்களும் காத்துக்கிடப்பார்கள்.

சிறையிலிருக்கும் வீரர்களுக்குத் தினமும் பணியாரம் செய்து அனுப்பும் திருச்சி நகரப் பிரமுகர்கள், ஒவ்வொரு

வேலைச் சாப்பாட்டிற்கும் அவனை ஆலாய்ப் பறக்க வைத்தார்கள்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வழக்கு நடந்து கொண்டே இருந்ததால் அவன் அடைந்த துன்பங்கள் அதிகம்.

ஒவ்வொரு வேலையும் யாரிடமாவது சென்று கையேந்தி நிற்கவேண்டி வந்துவிட்டது.

அவனுடன் சேர்ந்த மற்ற கைதிகளுக்கோ அதுவுமில்லை.

இந்த நிலையில் திருச்சியில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த சி. பி. சிற்றரசு, 'கல்லக்குடி வழக்கு நிதி' என்ற பெயரில் ஒரு நிதியை தன் பத்திரிகை வாயிலாகச் சேர்த்து வந்தார்.

அந்த நிதியில் காலணாகூட வழக்கு நடத்தவோ, கைதிகளின் பசியைத் தீர்க்கவோ பயன்படவில்லை.

அங்கேயும் காத்துக்கிடந்து அவன் அலுத்தான்.

தனது கஷ்ட நிலையிலும் அன்பில் தருமலிங்கம் ஓரளவு அவனுக்கு உதவினார்.

அந்த நான்கு மாதங்கள்—எழுத்திலே சுருங்கிவிட்ட அந்த நான்கு மாதங்கள்—அவன் இதயத்தை வேக வைத்த மாதங்களாகும்.

ஊருக்கு ஊர் தனக்கென்று ஒரு 'ஜால்ராக்' கூட்டத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்த குட்டித் தலைவர்கள் சிறையிலும்கூட ஜீவரசம் அருந்திக்கொண்டிருந்தார்கள்.

ஒரு தயிர்சாதப் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு, பசியெடுத்த காக்கைபோல் அதை விழுந்து விழுந்து சாப்பிட்டு அவன் அரை வயிற்றைக் காத்துக்கொண்டிருந்தான்.

நிதிப்பணங்கள் எங்கேயோ போய் முடங்கி விட்டன.

வழக்கறிஞருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை.

அதனால் சில வாய்தாக்களுக்கு அவர் வரவுமில்லை.

அந்த வழக்கிற்கே சம்மந்தமில்லாத சிலரும் அந்த வழக்கில் மாட்டிக்கொண்டிருந்தார்கள்.

அசல் போராட்ட வீரர்கள் பலர் எங்கோ ஓடி மறைந்து விட்டதால், மாடு விற்கப்போன சூசையையும், வழியிலே



போய்க்கொண்டிருந்த பலரையும் போலீசார் அந்த வழக்கிலே பிணைத்திருந்தார்கள்.

147-வது செக்ஷன்படி சட்ட விரோதமான கூட்டமென்று நிரூபிப்பதற்காக அவர்கள் பலரையும் பிடித்திருந்தார்கள்.

வழக்கறிஞர் கவனிக்காமல் விட்டதாலும், போலீஸ் தரப்பு சுறுசுறுப்பாக இருந்ததாலும் அப்பாவிகளும் சேர்ந்து தண்டிக்கப்பட்டார்கள்.

பிறந்த வீட்டிலே மனைவி மக்களை விட்டுவிட்டு திருச்சித் தெருக்களிலே அனாதை போல அலைந்து கொண்டிருந்த அவன், வழக்கு சீக்கிரம் முடிந்துவிடாதா என்று ஏங்கினான்.

வழக்கு மேலும் இரண்டு மாதம் நடக்கும் என்ற நிலை இருந்தபோது அவன் சேலத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

''மாடர்ன் தியேட்டர்ஸில்'' செலவுக்காவது கொஞ்சம் பணம் வாங்கி வரலாம் என்றுதான் அவன் அங்கே போனான்.

அங்கே அவனுக்கு வரவேண்டிய பாக்கி எதுவுமில்லை.

தன் நிலைமையைச் சொல்லி ஒரு ஐநூறு ரூபாயாவது கொடுக்கும்படி டி. ஆர். சுந்தரத்திடம் கெஞ்சினான்.

''நான் பணம் தரமுடியாது'' என்று அவர் கண்டிப்பாக மறுத்து விட்டார்.

ஏக்கத்தோடும் கண்ணீரோடும் அன்று மாலையே அவன் ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

மாலையில் டி. ஆர். சுந்தரம் ஒத்திகை விடுதிக்கு வந்தார்.

அவன் விடைபெற்றுக் கொள்வதற்காக அவரிடம் சென்றான்.

அவனைக் கண்டதும் அவர் மனம் இளகிற்று.

''ஒரு முழுப்படத்துக்கு கதை வசனம் எல்லாம் எழுதுகிறாயா?'' என்று அவர் கேட்டார்.

''எழுதுகிறேன்'' என்றான் அவன்.

ஒரு ஐநூறு ரூபாய் கொடுக்கும்படி மானேஜரிடம் சொன்னார்.

''சேலத்திலேயே தங்க வேண்டும்; வாய்தாவுக்கு மட்டும் போய் வரலாம்'' என்ற நிபந்தனையின் பேரில் அவனை வழியனுப்பினார்.

மறுநாளே வாய்தாவை முடித்துக் கொண்டு அவன் குடும்பத்தோடு சேலத்துக்கு வந்து சேர்ந்தான்.

இரண்டு மாதங்களில் எட்டு நாள் வாய்தாவிற்காகப் போய் வந்தான்.

'இல்லறஜோதி' என்ற படத்திற்கான கதை—வசனம் பாடல்களை எழுதி முடித்தான்.

வாழ்க்கைக்கவலை குறைந்தாலும் வழக்குக் கவலை அதிகமாகவே இருந்தது.

பல தடவை இரயிலிலே தூங்கி, சேலம் வரவேண்டியவன் திருப்பூருக்குப் போயிருக்கிறான்.

இரயிலை விட்டுவிட்டுத் திண்டாடியிருக்கிறான்.

தன்னுடைய அசதி, மறதி, செம்மைப்பாடற்ற தன்மை இவற்றுக்காக அவன் மிகவும் வருந்தினான்.

கடைசியில் தீர்ப்பு சொல்வதற்கு இரண்டுநாள் முன்னதாக குடும்பத்தினரைக் கொண்டு போய்க் கிராமத்தில் விட்டுவிட்டு, சேலம் வீட்டையும் காலி செய்து விட்டு திருச்சிக்கு வந்து சேர்ந்தான்.

அன்று தீர்ப்பு!

சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டின் முன்பு சுமார் ஐம்பதுபேர்தான் கூடியிருந்தார்கள்.

மாலை 5 மணிக்குத்தான் நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் ஒரே மாதிரியாக ஒன்றரை ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

விடுதலையாகி வெளியிலேயே இருந்த பெருந்தலைவர்களில் ஒருவர்கூட அன்று அவர்களை வழியனுப்ப வரவில்லை!

ஒரு போலீஸ் வேன் அந்த அனைவரையும் ஏற்றிக் கொண்டு திருச்சி மத்திய சிறைக்குப் புறப்பட்டது.





சிறைச்சாலைக்குள் அவர்கள் நுழையும்போது மாலை ஆறு மணி இருக்கும்.

சிறைச்சாலை மூடப்பட்ட நிலையிலேயும் உதவி ஜெயிலர் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

எல்லாக் கைதிகளும் அங்க அடையாளம் குறிக்கப்பட்டு உள்ளே அனுப்பப்பட்டார்கள்.

அவர்களுக்குச் சிறைச்சாலையிலேயே உணவு சொல்லப் பட்டிருக்கிறதென்று மாஜிஸ்டிரேட் சொல்லியிருந்தார்.

ஆனால், சிறைச்சாலையில் அப்படி எந்த ஏற்பாடும் இல்லை.

அன்று இரவு மட்டும் அவர்களை 'காமன் பிளாக்' என்னும் பொதுக் கொட்டடியில் அடைத்தார்கள்.

அங்கே ஏற்கனவே பல வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட கைதிகள் சுமார் ஐம்பது பேர் நிறைந்திருந்தார்கள்.

புதிய கைதிகளைப் பார்த்ததும் அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்

அவனிடமும் ஒரு கைதி வந்து ''என்ன சார், பேங்க் கேஸா?'' என்று கேட்டான்.

திருச்சி நகரத்திலிருந்த ஒரு பேங்க் அப்போதுதான் திவாலாகியிருந்தது.

அதுசம்பந்தப்பட்ட கைதிதான் போலிருக்கிறது இவனும் என்று கருதி அந்தக் கைதி அனுதாபத்தோடு விசாரித்தான்.

''இல்லையப்பா நான் டால்மியாபுரம் கைதி!'' என்று அவன் பதில் சொன்னான்.

''எத்தனை மாதம் சார்?'' என்று அவன் கேட்டான்.

''பதினெட்டு மாதம்!''—அவன் பதில் சொன்னான்.

அந்தக் கைதிக்குக் கோபம் வந்துவிட்டது.

''எந்த மாஜிஸ்டிரேட்?'' என்று கேட்டான்.

நீதிபதியின் பெயரை அவன் சொன்னான்.

உடனே அந்தக் கைதி நீதிபதியைக் கடுமையான வார்த்தைகளில் திட்டத் தொடங்கினான்.

''விடாதே சார்; அப்பீல் பண்ணு!'' என்று அவனுக்கு யோசனை சொன்னான் கைதி.

அன்று இரவு அவர்களுக்குச் சாப்பாடுக்கு எதுவுமில்லை என்று தெரிந்ததும், எல்லாக் கைதிகளும் அவரவர் சேமித்து வைத்திருந்த பழைய கஞ்சியைக் கலயத்தோடு எடுத்துக் கொடுத்தார்கள்.

கழுவப்படாத கலயங்கள்!

மூடப்பட்டிருந்ததோ அழுக்குப் படிந்த துணிகள்!

அவன் அந்தக் கஞ்சியைத் தொடக்கூட விரும்பவில்லை. ஆனால் வேறு வழி?

இருந்ததிலேயே கொஞ்சம் சுத்தமான கலயத்தைப் பார்த்துக் கையில் வாங்கிக் கொண்டான்.

மோரிலே ஊறப்போட்டிருந்த கஞ்சியை நன்றாகக் கரைத்தான்.

''மட,மட''வென்று குடித்து விட்டான்.

எண்ணெய் படிந்து கருத்துக்கிடந்த தரையில் தன் மேல் துண்டை விரித்து அவன் படுத்து விட்டான்.

பொழுது விடிந்தது.

திருச்சி மத்திய சிறையின் பரப்பளவை அவன் அப்போதுதான் பார்த்தான்.

உட்பக்கமாகச் சிறையின் மதிலைச் சுற்றி, வருவதென்றாலே ஒரு மணி நேரமாகும்.

பிரம்மாண்டமான ஒரு தொழிற்சாலை கட்டக்கூடிய நிலம் சிறைச்சாலையாக வடிவெடுத்திருப்பதுபோல் தோன்றிறு.

கைத்தறி நெசவு, தையல் வேலை, மாடு வளர்ப்பது போன்ற பல தொழில்கள் உள்ளே இருந்தன.



பலவகையான தொழிலாளிகளும் குற்றவாளிகளாக வரக்கூடுமல்லவா!

சிகைத் தொழிலாளி வந்தால் அவனுக்கு அதே வேலை.

சலவைத் தொழிலாளிக்கென்று தனி 'டோபி யார்டு!!

சமையல் தொழிலாளி என்றால் எண்பது வருஷங்களாக இடைவிடாமல் எரிந்து கொண்டிருக்கும் அடுப்பிலே சமையல் வேலை.

தபால் ஊழியர்கள் வந்தால் உள்ளுக்குள்ளேயே பட்டுவாடா.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் குற்றம் புரிந்து வந்துவிட்டால் உள்ளுக்குள்ளேயே ஆஸ்பத்திரியில் வேலை.

மாடு மேய்ப்பவர் பால் கறப்போருக்கென்று நூற்றுக் கணக்கான மாடுகள்.

சிறைச்சாலையின் தேவை பெருமளவு பூர்த்தியாகும் வண்ணம் காய்கறித் தோட்டம்.

படித்தவர்கள் மேலும் படிக்க விரும்பினால் அதற்கொரு புத்தகசாலை.

அது ஒரு தனி உலகம்!

எல்லாவகையான மனிதர்களிலேயும் குற்றவாளிகள் இருப்பார்கள் என்பதற்கு அந்த இடம் ஓர் உதாரணம்.

குடும்பக் கவலை இல்லாதவனுக்கும், உணவைப் பெரிதாகக் கருதாதவனுக்கும் சிறைச்சாலையைவிட இனிமையான சொர்க்கம் கிடையாது.

வெளி உலகத்தின் பரபரப்பு அங்கே இல்லை.

அமைதியான சிந்தனைகள் அங்கேபூத்துக்குலுங்குகின்றன.

தினமும் அவன் ஒவ்வொரு குற்றவாளியாகக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு அவர்களுடைய கதையை விசாரிப்பான்.

பயங்கரம், மர்மம், பரிதாபம் அனைத்தும் அந்தச் கதைகளில் வரும்.

சில கொலையாளிகளை அவன் அங்கே சந்தித்தான்.

கொலை செய்யும்போது அவர்கள் இருந்த நிலைமை வேறு; தண்டனை பெற்றபின் இருந்த நிலைமை வேறு!

தாங்கள் உணர்ச்சிக்கு வசப்பட்டு விட்டதற்காக அவர்கள் தலையிலே அடித்துக்கொண்டார்கள்.

அங்கு போன சில நாட்களிலேயே எந்த வகையான குற்றங்கள் அதிகம் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது.

எண்ணிக்கையில் அதிகமாக இருந்த குற்றவாளிகள் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்.

இரண்டாவது இடத்தை வகித்தவர்கள் 'பிக்பாக்கெட்' அடிப்பவர்களும், ஆடு மாடு திருடுபவர்களும்.

மூன்றாவது எண்ணிக்கை 'ஜாமீன் கேஸ்"கள்' எனப்படும் நிரபராதிகள்.

நான்காவது கொலைகாரர்கள்.

கொலைகாரர்களிலேயும் எந்தக் காரணத்திற்காகக் கொலைபுரிந்தோர் அதிகம் என்பதையும் அவன் ஆராய்ந்தான்.

பெண் தகராறு காரணமான கொலைகளே அதிகம்.

அடுத்தது வயல் வரப்பு சம்பந்தப்பட்ட கொலைகள்.

தண்டனையை எதிர்பார்த்தே அந்தக் கொலையைச் செய்தவர்கள்போல் அவர்கள் காணப்பட்டார்கள்.

ஜாமீன் கேஸ் என்பது மிக விசித்திரமானதாகும்.

அனாதையாக ஒருவன் ஊரிலே சுற்றிக்கொண்டிருந்தால் அவனைப் போலீஸார் பிடித்துக்கொண்டுபோய் நீதிபதி முன் நிறுத்தி, சந்தேகத்திற்கிடமாகச் சுற்றிக்கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டுவார்கள்.

உடனே நீதிபதி அவனைப் பார்த்து, ''உனக்கு ஜாமீன் கொடுக்க யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்பார்.

அப்படி யாரும் இல்லை யென்றால் அவனை மூன்று மாதம் நீதிபதி தண்டித்து விடுவார்.

ஆதரிக்க ஆளில்லாத காரணத்தால் ஒரு நிரபராதி குற்றவாளியாக்கப்படுவான்.

அது ஒன்று போதும் அவனுக்கு.

அவன் வாழ்க்கையே சிறை வாழ்க்கையாகிவிடும்.

ஜாமீனுக்கு ஆளில்லை என்று தண்டிக்கப்பட்டவன் விடுதலையானதும், இன்னொரு ஊரிலே போலீசார் அவனைப் பிடிப்பார்கள்.

கோர்ட்டிலே கொண்டு போய் நிறுத்துவார்கள்.

'சந்தேகத்துக்கிடமான நிலையில்' என்ற பழைய பல்லவியோடு குற்றச்சாட்டு அமையும்!



அவன் சந்தேகத்துக்கிடமான ஆசாமிதான் என்பதை ஏற்கனவே அவன் ஜெயிலிலிருந்ததைக் கொண்டு நிரூபிப்பார்கள்.

அவன் மறுபடியும் தண்டிக்கப்படுவான்.

பிறகு விடுதலை. மறுபடியும் கைது; தண்டனை!

நான்கு நாட்கள் வெளியேயும், மூன்றுமாதம் உள்ளேயுமாக அவன் காலம் கழியவேண்டியதுதான்.

சிறைப்பறவைகளான சில 'கேடி'களைப் போலீசார் துணைக்கு வைத்துக்கொள்வார்கள்.

பல சிறைச்சாலைகளையும் கண்ட அந்தக் கேடிகள், கைதிகள் விடுதலையான உடனே அவர்களைப் போலீசாருக்குக் காட்டிக் கொடுப்பார்கள்.

பிடிப்பதற்கு வேறு ஆள் கிடைக்காதபோது அந்தக் கேடிகளையே சந்தேகத்துக்கிடம் என்று போலீசார் உள்ளே பிடித்துக்கொண்டு வந்துவிடுவார்கள்.

போலீசாருக்கு உளவு சொல்பவர்களுக்குச் சிறைச்சாலைப் பரிபாஷையில் 'கை காட்டிகள்' என்று பெயர்.

''இவன்தான் என்னைக் காட்டிக்கொடுத்த கைகாட்டி'' என்று சொல்லிவிட்டால் போதும், உடனே எல்லாக் கைதிகளும் ஒன்று சேர்ந்து சிறைச்சாலைக்குள் அந்தக் 'கைகாட்டி'யை அடித்து நொறுக்கிவிடுவார்கள்.

ஜாமீன் வழக்குக் கைதிகளின் பரம விரோதிகள் இந்தக் 'கைகாட்டி'களும் லோகல் போலீசாரும்தான்.

லோக்கல் போலீஸ்காரர்களில்யாராவது குற்றம்செய்துவிட்டு உள்ளே வந்துவிட்டால் எல்லாக் கைதிகளும் அவர்களைப் பந்தாடிவிடுவார்கள்.

காரணம் அவர்களில் பலர் நிரபராதிகள்.

ஒரு நிரபராதி நிரந்தரக்குற்றவாளியாவது ஆச்சரியமே!

சட்டத்தின் எந்தப் பாதுகாப்பும் அவர்களுக்கு இல்லை!

போலீஸ்காரர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அவர்கள் ஆட்டிவைக்கப்படுகிறார்கள்.

ஜாமீன் கொடுக்க ஆளில்லை என்ற ஒரே காரணத்திற்காக நூற்றுக்கணக்கான நிரபராதிகள் சிறைச்சாலைக்கு வந்திருப்பதை அவன் கண்டான்.

சட்டம் தவறானதென்று அவன் கருதவில்லை.

சட்டத்தின் சந்துகளுக்குள் நுழைந்து விளையாடுகிற போலீசாராலேயே இந்த நிலை ஏற்படுகிறது.

அசல் குற்றவாளி கிடைக்காதபோது நிரபராதியைக் குற்றவாளியாக்குவது அவர்கள் வழக்கம்.

பலதடவை ஒருவன் சிறைச்சாலைக்கு வந்தால் அவனுடைய குல்லாவில் கருப்புப் பொட்டு வைத்து விடுவார்கள்.

சிறைப் பறவை என்பது அதன் பொருள்.

கொலைகாரர்களின் குல்லாவில் சிவப்புப் பொட்டு வைத்து விடுவார்கள்.

அங்கே கருப்பும் சிவப்பும் நிரந்தரக் குற்றவாளிகளின் சின்னமாகும்.

மனிதன், சமுதாயம் என்பதைப்பற்றியெல்லாம் அவன் அங்கேதான் சிந்திக்கத் தலைப்பட்டான்.

குற்றவாளிகளின் உலகத்திலேதான் நிரபராதிகள் வணங்கப்படுகிறார்கள்.

நல்ல மனிதர்களைப்பற்றிய சிந்தனையெல்லாம் அவனுக்கு அங்கே வந்தது.

குடும்பக் கவலை அவனுக்கு அடிக்கடி தோன்றிற்று என்றபோதிலும், சிறை வாழ்வு அத்தனை துன்பகரமாக இல்லை.

அவனுக்கும் 'சி' வகுப்புத்தான் தரப்பட்டிருந்தது.

சிறை டிரௌசரும், சட்டையும் தரப்பட்டன.

அவனுடைய அளவுக்குப் பற்றாத டிரௌசரைப் போட்டுக்கொண்டு இரண்டு நாள் படாதபாடுபட்டான்.

சிறைக்கு வந்து பத்து நாட்கள்தான் ஆயின.

'செஷன்ஸ் கோர்ட்'டில் அவர்களுக்காக அப்பீல் செய்யப்பட்டது.

அப்பீலை ஏற்றுக்கொண்ட இராமன் நாயர் என்ற நீதிபதி அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அவனும் ஜாமீனில் வெளி வந்தான்.

மறுபடியும் ஏழாவது நாளே செஷன்ஸ் விசாரணை போடப்பட்டது.



அதற்குள் ஒருமுறை ஊருக்குச் சென்று குடும்பத்தினரைப் பார்த்துவந்தான்.

செஷன்ஸ் விசாரணை இரண்டே நாட்கள்.

பதினெட்டு மாதத் தண்டனையையே உறுதி செய்துவிட்டார் நீதிபதி.

வெளியே வந்த பத்தாவது நாளே மறுபடியும் அவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள்.

இனி ஒன்றரை வருடமும் உள்ளேதான் இருக்கவேண்டும் என்று அவனுக்குத் தோன்றிவிட்டது.

மனத்தை வெகுவாகத் திடப்படுத்திக்கொண்டான்.

இருந்தாலும் கனவுலகில் நடப்பவன் போலவே நடந்துகொண்டிருந்தான்.

அங்கே மாலை ஐந்து மணிக்கெல்லாம் உள்ளே தள்ளிப் பூட்டிவிடுவார்கள்.

இரவு பத்துமணிவரை தூக்கம் வராது.

அந்த ஐந்துமணி நேரம் மட்டும் பெரும் வேதனையாக இருக்கும்

# ஒரு நாள் இரவு

சிறைச்சாலையில் நிறைந்து கிடந்த வேப்பமரங்கள் ஆடி அசைந்து கொண்டிருந்தன.

காற்று இலைகளை அசைத்தவண்ணம் பறந்து கொண்டிருந்தது.

அந்தச் சத்தத்தை மட்டுமே கேட்கக்கூடிய நிலையில் சிறிய கூண்டுக்குள் அவன் அமர்ந்திருந்தான்.

மின்சார விளக்கின் ஒளி லேசாக வீசிக்கொண்டிருந்தது.

அவன் சிந்தனை நதியில் மூழ்கிக் கிடந்தான்.

பிறப்பு, வாழ்க்கை, இறப்பு ஆகிய மூன்று பகுதிகளுக்கும் போய்ப் போய்த் திரும்பினான்.

இளம் பருவத்தில் வாழ்க்கையைத் துறந்த ஞானியைப் போல் ஞானத் தத்துவத்தில் ஆழ்ந்து கிடந்தான்.

''ஒன்று நடந்துதான் தீருமென்றால் அதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது...?'' என்ற மராட்டிய ஆசிரியன் 'காட்கரியின்' பொன்மொழி அவனுக்கு நினைவிற்கு வந்தது.

பதினெட்டு மாதங்கள்...!

அவன் உடம்பு சிலிர்த்தது...!

எப்படி அவ்வளவு காலம் சிறைக்குள்ளேயே இருப்பது?

அவன் மனத்திற்கு ஒத்த வேலையைத்தான் அவன் செய்தானா?

பெரிய தியாகியாக வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டுதான் சிறைச்சாலைக்கு வந்தானா...?

அரசியலில் உயர்ந்த பதவிகளை அடைவது அவன் இலட்சியமாக இருந்ததா...?

எதுவும இல்லை...!



படிப்பதும் எழுதுவதுமே அவனுக்கு உற்சாகமான வேலைகள்.

இனம் விளங்காத சபலத்திற்கும் சலனத்திற்கும் இரையாகி அவன் அரசியலில் கலந்துவிட்டான்.

அரசியலை வாழ்க்கைத் திட்டமாக ஆக்கிக் கொண்டவர்கள் மட்டுமே முழுநேர அரசியலில் ஈடுபட முடியும்.

ஒன்று; அரசியல் பிழைக்கவேண்டும்; அல்லது ஈடுபட்டவன் பிழைக்கவேண்டும்.

அரசியல் மூலம் பிழைப்பு நடத்தவேண்டும் என்று அவன் கொஞ்சம்கூட எண்ணியதில்லை.

அரசியலைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பில் தனக்கும் பங்கிருப்பதாகவும் அவன் கருதியதில்லை.

பின் ஏன் அவன் அந்தப் பெரிய காரியத்தில் ஈடுபட்டான்...?

பேச்சுக்களைக் கேட்டுப் பேசப் போனான்.

இழுத்தவர் இழுப்புக்குச் சென்று அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டான்.

தான் அறிய மனமறியத் தன்னை அவன் இயக்கிக் கொள்ளவில்லை.

அன்றைய அவன் நிலையை 'எடுப்பார் கைப்பிள்ளை' என்பது பொருந்தும்.

வந்தாகி விட்டது ; இனி என்ன செய்வது...?

மேலும் மேலும் பலவீனத்தையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் செய்யும் தியாகத்திற்கும் மரியாதை இல்லாமல் போய்விடும்.

சரியாகவோ தவறாகவோ, விரும்பியோ விரும்பாமலோ அவன் தியாகியாகி விட்டான்.

வெளியிலே அவனுக்காக அரசியல் உயிர்கள் துடித்துக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மை.

ஆனால், விடுதலை பெற்றுப் போகும்போதாவது மரியாதை இருக்காதா...?

நாலுபேருக்கு நடுவே ''நானும் தியாகிதான்'' என்று பேசிக்கொள்ள முடியாதா?

இதுவும் வாழ்க்கைக்குத் தேவையான அனுபவம்தானே!

அவன் தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டான்.

ஆனால், கட்சியின் பிரமுகர்கள் என்று சொல்லிக்கொள்வோர் நடந்துகொண்ட விதம் அவனை அறுத்துக் கொண்டே இருந்தது.

அவனை அவர்கள் யாரும் மதித்ததில்லை.

வாழத் தெரியாத கோமாளி ஒருவன் சிக்கலில் வந்து மாட்டிக் கொண்டுவிட்டான்; சிரிப்பதற்குச் சுவையான அம்சம் என்று அவர்கள் கருதினார்கள்.

உள்ளுக்குள்ளேயே புதைந்து கிடந்த எண்ணங்களை வெளிப்படுத்தச் சக்தியற்ற நிலையிலே அவன் மிகச் சாதாரண மனிதனாகத் தோற்றமளித்தான்.

கட்சிப் பிரமுகர்கள் மட்டும் அவனை மதிக்கவில்லை என்பதல்ல; உலகத்தில் யார் தான் அவனை மதித்தார்கள்?

தூங்குகிற நேரம் போக பாக்கி நேரங்களில் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரமாவது அவன் அவமானப் படாமல் இருந்ததில்லை.

எல்லாவகைகளிலும் அவன் கேலிக்கு ஆளாக நேர்ந்ததால் அவன் பேசிய உயர்ந்த தத்துவங்கள்கூட கேலிக்கே ஆளாயின!

உலகத்தின் மதிப்பை எப்படிப் பெறுவது...? அதற்கென்று ஏதாவது திட்டம் இருக்கிறதா...?

வாழ்க்கை வசதிகளற்ற மனிதன் அந்த மதிப்பைப் பெற முடியுமா...?

பாகவதர் சுதிகெட்டுப் பாடினாலும் பக்கவாத்தியங்கள் உச்சஸ்தாயியில் இருந்தால் கெட்டசுதி வெளியே வராமல் போகிறது. மரியாதையும் ஏற்பட்டு விடுகிறது!

உலகத்தில் மரியாதை என்பதும் அப்படித்தான்.

பத்து வாத்தியங்கள்கூடி ''அவனைப்போல் உண்டா?'' என்று ஒருவனை வர்ணிக்க ஆரம்பித்து விட்டால், அவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் ஓரளவுக்கு மரியாதை பெற்று விடுகிறான்.

அந்த அப்பாவி தனக்கென்று எந்தக் கோஷ்டியையும் வைத்துக்கொண்டதில்லை.



கையிலிருப்பதைக் கேட்பவருக்குக் கொடுத்துவிட்டுத் தன் வழியே போய்க்கொண்டிருந்தானே தவிர, 'இந்தக் கூலிக்கு நீ கைமாறு செய்யவேண்டும்' என்று யாரையும் கேட்டதில்லை.

அதனால் அவனுக்கு 'வள்ளல்' என்ற பட்டமும் கிடைத்ததில்லை.

அந்தப் பட்டத்தின் மறு பெயரான 'ஏமாளி' என்ற பெயர் கிடைக்கத் தவறவுமில்லை...!

இப்படியும் ஒருவன் வாழ்வானா...?

அவன் தகப்பன் வாழ்க்கையின் சூதுவாதுகளை யெல்லாம் அவனுக்குக் கற்பிக்கவே இல்லை.

தான் எப்படி ஏமாந்தானோ அப்படியே தன் மகனும் ஏமாறட்டும் என்று விட்டுவிட்டான்.

வளைந்தும் நெளிந்தும் குழைந்தும் வஞ்சித்தும் வாழ வேண்டிய உலகில் கிஞ்சிற்றும் அவனுக்கு அந்தப் பழக்கமில்லை.

இது எங்கே அவனைக் கொண்டு போகுமோ...?

ஒன்றில் மட்டும் அவன் தெளிவாக இருந்தான்.

மனது களங்கமில்லாதிருந்தால் வாழ்க்கையில் வரும் துயரங்கள் தானாகவே விலகிவிடும் என்பதுதான் அது.

எப்போது விலகும்...? எப்படி விலகும்...? அதெல்லாம் தெரியாது.

விலகும்!

அதுமட்டும் நிச்சயம்...!

சிறைச்சாலையை விட்டு வெளியே சென்றதும் தான் யார் என்பதை உலகத்திற்குக் காட்டிவிட வேண்டும் என்று அவன் முடிவுகட்டிக் கொண்டான்.

பத்திரிகைதான் அதற்குச் சரியான சாதனம் என்று கருதிய அவன் வெளியே சென்றதும் முதல் வேலையாக பத்திரிகையைத் தொடங்க உறுதி கொண்டான்.

உடனே கற்பனையில் மிதக்கத் தொடங்கினான்...!

எப்படி எழுதவேண்டும்...? என்னென்ன எழுத வேண்டும்...?—என்பதையெல்லாம் அந்த இரவே சிந்தித்தான்.

தன் முன்னால் மற்றவர்களை கைகட்டி நிற்கும்படிசெய்து

விட முடியும் என்று முழுக்க முழுக்க அவன் நம்பினான்.

அந்த நம்பிக்கையோடு அந்தக் கூண்டுக்குள்ளே இருந்த திண்ணையில் சாய்ந்தான்.

'சர்' என்று பயங்கரமான சத்தம் ஒன்று எழுந்தது.

திடுக்கிட்டு எழுந்தான்...

ஒரு மழை விட்டில்-மூன்று விரற்கடைப் பருமன் இருக்கும். அவன் முகத்தில் வந்து விழுந்தது. கீழே தள்ளிக் காலால் மிதித்தான். வெளிப்பக்கமாகத் தள்ளிவிட்டு மறுபடியும் படுத்தான். அமைதியாகத் தூங்கினான்...! நடுச்சாமம் இருக்கும்...! உடம்பெங்கும் ஏதோ ஊர்வது போல் தோன்றக் கண்விழித்தான்.

அவன் உடம்பு முழுக்க ஆயிரக்கணக்கான சிற்றெறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன. முதுகு, மார்பு, கண் காது, மூக்கு அனைத்திலும் அவை ஊர்ந்து கொண்டிருந்தன.

உடம்பைத் தேய்த்தால் எல்லாம் கடிக்கும். அவனுக்கு நடுக்கமாகவே இருந்தது! ஒன்றிரண்டு எறும்புகள் கடிக்கவும் தொடங்கின.

அவனால் அடித்துப் போடப்பட்ட விட்டில் பூச்சியால் வந்த வினை அது...! அந்தப் பூச்சியை இழுத்துக் கொண்டு வந்த எறும்புகள் அவன் உடம்பின் மீது ஏறிவிட்டன.

பக்கத்தில் இருந்த பானையில் தண்ணீர் இருந்ததைக் கண்டதும் அவனுக்கு ஆறுதல் பிறந்தது. பானையை அப்படியே தூக்கித் தலையிலே தண்ணீரை ஊற்றினான்...! ஒரு வழியாக எறும்புகள் எல்லாம் தண்ணீரோடு பூமியில் விழுந்தன. அந்த நேரத்திலும் அடுத்த அறையில் ஒருவன் விழித்துக் கொண்டிருந்தான்.

''என்னசார், இந்த நேரத்தில் குளிக்கிறீர்கள்...!'' என்று அவன் குரல் கொடுத்தான். நடந்த கதையைச் சொன்னான்.

அறை...முழுவதும் ஈரமாகிவிட்டது.

பாக்கி நேரத்தைத் தூங்கிக் கழிக்க அவனால் முடியவில்லை. அப்படியே திண்ணையில் உட்கார்ந்தான்.

பொழுது விடிந்தது! சிறைவாசத்தில் அந்த ஒருநாளும் கழிந்தது.



# விடுதலை

அன்றைக்குத் தலைமைக் கழகத்திலிருந்து ஒருவர் வந்தார்.

அவர்களுக்காக உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப் போவதாக அவர் சொன்னார்.

''செய்வதைச் சீக்கிரமாகச் செய்யுங்கள்'' என்று அவன் அவசரப்படுத்தினான்.

விடுதலையின் சுகத்தைச் சிறைச்சாலையில்தானே உணர முடியும்.

அவர் போய்விட்டார்...!

ஒன்று, இரண்டு என மாதங்கள் கடந்தன.

அப்பீல் செய்யப்படவில்லை...!

காரணம், அது இரண்டாவது அப்பீல்.

ஒருவன் ஒரு கோர்ட்டில் தண்டிக்கப்பட்டதும் முதல் அப்பீலுக்கு நீதிபதி அனுமதி கொடுத்தே ஆக வேண்டும்.

அங்கேயும் தண்டனை உறுதிசெய்யப்பட்டால், அதற்கும் மேல் கோர்ட்டில் அப்பீல் செய்யப்படும்.

அதை நீதிபதி விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் இல்லையென்றால் தள்ளிவிடலாம்;

அது நீதிபதியின் மனோநிலையையும் வழக்கின் தன்மையையும் பொறுத்தது.

சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவன் தண்டிக்கப்பட்டான்.

செஷன்ஸ் அப்பீலில் அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

உயர்நீதி மன்றத்தில் இரண்டாவது அப்பீல்..!

உயர்நீதி மன்ற நீதிபதிகளிற் கருணையுடையவர்களென்று சில பேர் உண்டு.

அவர்களுடைய தவணை வரும்போதுதான் வக்கீல்கள் இரண்டாவது அப்பீலைக் கொண்டுபோய் நீட்டுவார்கள்.

அவன் சிறையிலிருக்கும்போது அப்பீல் போகவேண்டிய இடத்தில் ஒரு நீதிபதி இருந்தார்.

அவர் கருணை இல்லாதவர், கோபக்காரர் என்றெல்லாம் பெயர் வாங்கியவர். அவர் இருக்கும்வரை அப்பீலைக் கொடுப்பதில்லையென்று கழகவக்கீல் முடிவு கட்டியிருந்தார்.

அந்தப் பாவி, வழக்கத்திற்கு விரோதமாக ஐந்து மாத காலம் அந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்.

இடையிலே இரண்டுநாள் அவரது பிள்ளைக்குப் 'பூணூல் கல்யாணம்' என்று 'லீவு' எடுத்துக்கொண்டார்.

அந்த இரண்டு நாட்கள் டபிள்யூ எஸ். கிருஷ்ணசாமி நாயுடு என்பவர் அந்த ஆசனத்தில் இருந்தார்.

கைதிகளால் கருணைக் கடவுள் என்று போற்றப்படுகிற நீதிபதிகள் சிலர் உண்டு.

அவர்களில் நீதிபதி சோமசுந்தரமும், கிருஷ்ணசாமி நாயுடுவும் முக்கியமானவர்கள்.

கிரிமினல் குற்றவாளிகள்கூட தங்கள் அப்பீல் மனு இவர்களிடம்தான் போயிருக்கிறதென்று அறிந்தால் உற்சாகமாகவே இருப்பார்கள்.

அவனது வழக்கிலும் கருணை கிடைத்தது...!



நீதிபதி அப்பீலை ஏற்றுக்கொண்டு அவர்களை ஜாமீனில் விட உத்திரவிட்டார்.

அந்தச் செய்தியும் கட்சிப் பிரமுகர்களால் அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

ஒருநாள் மத்தியானம் வேப்பமர நிழலில் துண்டை விரித்து அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு வார்டர் வேகமாக வந்து, ''நல்ல செய்தி சொன்னால் எவ்வளவு கொடுப்பீர்கள்?'' என்று கேட்டான்.

அவனுக்கிருந்த விடுதலை வெறியில் ''ஆயிரம் ரூபாய் தருகிறேன்'' என்றான் அவன்.

வார்டர் சிரித்துக்கொண்டே ''அவ்வளவு வேண்டாம், ஐம்பது ரூபாய் கொடுங்கள் போதும்...!'' என்று மடியிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்தான்.

அந்தப் பத்திரிகையில் எட்டுப் பத்தி தலைப்பில் 'கண்ணதாசன் ஜாமீனில் விடுதலை' என்று போடப்பட்டிருந்தது.

அதனடியில் முழு விவரமும் தரப்பட்டிருந்தது.

அந்த நேரத்தில் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

துள்ளிக் குதித்தான்......!

ஓர் அரசியல் தியாகி விடுதலைச் செய்தியைக் கேட்டு அப்படிக் குதிக்கலாமா......!

கூடாதுதான்......!

அவன் என்ன தியாகியாவதற்கா ஜெயிலுக்கு வந்தான்......?

ஏதோ வந்தான்; மாட்டிக் கொண்டான்......!

விடுதலை என்றதும் உற்சாகம் பிறந்துவிட்டது.

அவனது நண்பர்கள் இருபது பேருமே மிகுந்த உற்சாகமாக இருந்தார்கள்.

அவனைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு வெளியேபோனதும் பத்திரிகை ஆரம்பித்து 'போலித் தலைவர்கள்' கொட்

டத்தை அடக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அந்த நேரத்தில்தான் அவனது 'கலை நண்பர்' தனது பத்திரிகையின் முதல் இதழை வெளியிட்டிருந்தார்.

அதில் அவனைப்பற்றிக் கொஞ்சம் விஷமும் கலந்திருந்தார்.

அவர் சிறையிலிருக்கும்போதே அவன் எழுதிய இல்லற ஜோதிப்படம் வெளிவந்து தோல்வியடைந்திருந்தது.

அதில் ஒரு பகுதியை தான் எழுதியதாக அந்த நண்பர் வெளியிட்டிருந்தார்.

மனத்திலே ஆத்திரத்தையும் வஞ்சத்தையும் சுமந்த வண்ணம் அவன் விடுதலையை எதிர்பார்த்திருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனும், அவனது நண்பர்களும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள்.



# தென்றல் பிறந்தது

விடுதலை ஆனது மாலை ஐந்து முப்பது மணிக்கு...!

அங்கிருந்து நேரே தியேட்டருக்குப் போனான்.

தான் முதன் முதலாக எழுதிய படத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆவல்.

கொட்டகையில் பெரும் பகுதி காலியாகக் கிடந்தது.

திருச்சி நண்பர்கள் சிலரும் அவனோடு வந்திருந்தார்கள்.

படித்தவர்கள் எல்லாரும் வசனத்தையும் பாட்டையும் புகழ்ந்ததாக அவர்கள் சொன்னார்கள்.

படிக்காதவர்களுக்கு அவனைப்பற்றி எப்படிப் புரியும்...? தானே படத்தைப் பார்த்து அனுபவித்து விட்டு ஊருக்குப் புறப்பட்டான்.

அப்பா...! ஐந்து மாதம் முடங்கிக் கிடந்த சிறகுகள் விரிந்தன.

பஸ்ஸிலே ஊருக்குப் புறப்பட்டான்.

அந்தப் பயணம்தான் எவ்வளவு சுகம்......!

ஒரு மாதம் 'C' வகுப்பிலும், நான்கு மாதங்கள் 'B' வகுப்பிலுமாக ஒரே சோறு, ஒரே கறி, ஒரே பார்வை, ஒரே உலகம் என்று அலுத்துப் போய்க்கிடந்த அவன், விரிந்த வெளி உலகக் காட்சியில் மெய் மறந்தான்.

கிராமத்திலிருந்து குடும்பத்ினரைக் கூட்டிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டான்.

"நான் யார் என்பதை இந்த உலகத்திற்குக் காட்டுகிறேன்...!" என்ற வெஞ்சினத்தோடு ரயிலேறினான்.

புத்தியும் சக்தியும் புது உணர்ச்சியும் பொங்கி வழிந்த நிலையில் சென்னையில் இறங்கினான்.

சென்னை நகரம் இப்போது பழைய நகரமாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஏதோ ஒரு சொர்க்க பூமிக்கு வந்து சேர்ந்துவிட்ட உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

திருச்சி நகரத்தில் பட்டபாடு சென்னை நகரத்தை இன்ப பூமியாகக் காட்டிற்று.

சிறிது காலமாவது ஜெயிலிலிருந்து வெளியே வந்தால், வெளி உலகத்தின் சிறிய சுகங்கள்கூடப் பெரிதாகத் தெரிகின்றன.

திருச்சி நகரத்தில் அலையும் போதும் சிறைச்சாலையில் வதியும்போதும் தான் பெரும் தவறு ஒன்றைச் செய்துவிட்டதாகவே அவன் கருதியிருந்தான். ஆனால், அது தவறல்ல நியாயமே என்பதை அவன் சென்னைக்கு வந்ததும் உணர்ந்தான்.

'நிழல் அருமை வெய்யிலிலே' என்றபடி வாழ்வின் அருமை, வாழ்வு கொஞ்சநாள் மறுக்கப்பட்டதன் மூலம் அவனுக்குப் புலனாயிற்று.

சென்னை இராயப்பேட்டையில் சண்முகமுதலி தெரு என்பது மிகச் சிறிய தெருவாகும்.

ஆறு ஏழு வீடுகள்தான் அங்கே உண்டு என்றாலும், அந்தத் தெருவிற்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

இணையில்லாத மேதை ஒருவர் அந்தத் தெருவிலே வசித்து வந்தார்.

பள்ளிப்படிப்பு இல்லாமலேயே உலகத்தை அளந்து முடித்த பகுத்தறிவாளராக அவர் வீற்றிருந்தார்.



மனித மனத்தின் இளகிய தன்மை முழுவதும் அவரிடம் குடியிருந்தது.

இதயம் என்பதற்கு அடையாளமே அவர்தான்.

மிகமிக நல்லவன் மிகமிகத் துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்பதற்கும் அவரே சான்றாக விளங்கினார்.

அவர் பெயர் தமிழர் சமுதாயம் மறக்கமுடியாத பெயராகும்!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனே அவராவார்!

அவர் வசித்த அந்தத் தெருவிலேயே அவனுக்கும் ஒரு வீடு கிடைத்தது.

அங்கே அவன் குடியேறியவுடனேயே தன் பத்திரிகைக்குத் தலைப்புத் தேடத் தொடங்கினான்.

அதற்கு முன்னால் அவனது நண்பர் கவிஞர் குயிலன் நடத்தி நிறுத்திவிட்ட 'தென்றல்' அவன் நினைவிற்கு வந்தது.

முதன் முதலில் அந்தப் பெயரே அவனுக்கு நினைவு வந்தது.

எந்த விஷயத்திலும் முதலாவதாக அவன் மனத்தில் எது படுகிறதோ அது சரியாகவே இருக்கும்.

தென்றலையே தன் பத்திரிகைத் தலைப்பாக அவன் கொண்டு விட்டான்.

அரசாங்க அனுமதிக்கு எழுதக்கூடவில்லை.

அப்படி ஒரு பத்திரிகை வருவதாக செய்தித்தாள்களில் விளம்பரம் செய்துவிட்டான்.

குடியிருந்த இடத்திலேயே ஒரு பகுதியை அலுவலகமாக ஆக்கிக்கொண்டான்.

தன்னோடு சேலத்தில் பணியாற்றி வந்த நாகலிங்கம் என்பவரை நிர்வாகியாக்கிக்கொண்டான்.

விற்பனையாளர்களின் கடிதங்கள் வரத்தொடங்கின.

சுமார் இரண்டாயிரம் பிரதிகளுக்கு விற்பனை வேண்டுகோள் வந்திருந்தது.

அரசாங்க அனுமதிக்கு எழுதினன்.

அதுவும் கிடைத்தது.

அந்த அனுமதியைப் பெறுவதற்காகப் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவன் கையெழுத்திடப் போன போது, ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது.

அவன் ஆங்கிலத்திலே 'கண்ணதாசன்' எனக் கையெழுத்திட்டான்.

அந்தக் கையெழுத்தைக் கொண்டு அவன் பெயரை யாரும் கண்டுபிடிக்க முடியாது என்பது என்னவோ உண்மை தான்.

அதை அந்த நீதிபதி வேறு விதமாகக் கேட்டார்.

'என்னபாஷையில் கையெழுத்துப்போட்டிருக்கிறீர்கள்' என்று கேட்டார்.

சிரித்துக்கொண்டே 'கையெழுத்துப் பாஷையில்' என்ருன் அவன்.

ஏனென்ருல், பெரும்பாலும் மெத்தப் படித்தவர்களுடைய கையெழுத்தெல்லாம் படித்துப் புரிந்துகொள்ள முடியாத வண்ணமே அமையும்.

அவன் பத்திரிகை ஏற்பாட்டில் வெகு மும்முரமாக முனைந்தான்.

மாடர்ன் தியேட்டர்ஸில் கணக்குத் தீர்த்து வாங்கிய ரூபாய் இரண்டாயிரம் அவன் கையில் இருந்தது.

அன்றைக்கு அது அதிகம்தான்!

பத்திரிகையின் முதல் இதழுக்கு எழுத உட்கார்ந்தான்.

ஒன்ரு, இரண்டா...? ஆறு விஷயங்களை எழுதினன்.

எழுத்திலே இருந்த வெறி அவ்வளவு!

அதுவரை மற்ற பத்திரிகைகளெல்லாம் எட்டுப் பக்கங்களைப் போட்டு 'இரண்டணு' விலை போட்டிருந்தார்கள்.

அவன் பன்னிரண்டு பக்கங்கள் இரண்டணு என்று விளம்பரப்படுத்தினன்.



அப்படிப் போட்டால் லாபம் வருமா, நட்டம் வருமா என்று அவன் கணக்குப் பார்க்கவில்லை.

எப்போது, எதில் அவன் கணக்குப் பார்த்தான்...?

முதல் இதழிலேயே அவனும் குறும்பு செய்யத் தொடங்கினன். அவனது 'கலை நண்பரைப்'பற்றி அந்நாளில் ஓர் அபிப்பிராயம் பரவலாகப் பரவி இருந்தது.

அவரது எழுத்துக்கள் எதுவும் சொந்தமானவை அல்ல என்பது அது!

பழைய சக்திப் பத்திரிகையை அவன் புரட்டிக்கொண்டிருந்தபோது அதில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது.

அந்தக் கட்டுரையில் 'ஷேக்ஸ்பியர்'கூட தனக்கு முன்னல் இருந்த நாடக ஆசிரியன் ஒருவனின் நாடகங்களைத் தழுவித் தான் தனது நாடகங்களை இயற்றினர் என்று கண்டிருந்தது.

அவன் அதையே தனது முதல் இதழுக்கு முதல் பக்க விஷயமாக கொண்டுவிட்டான்.

''திருடித்தான் புகழ்பெற்ருன் ஷேக்ஸ்பியர்'' என்று தலைப்பிட்டு அவன் எழுதினன்.

'கலைநண்பர்' அதைப் படித்தால் அது அவரது மனத்தைக் குத்தவேண்டும் என்பதற்காகவே அவன் அதை எழுதினன்.

அதற்காக அவரை 'ஷேக்ஸ்பியரோடு' ஒப்பிட்டுப் பெரும்பாவம் புரிந்தான்.

அந்தக் கட்டுரையைப் படித்த அண்ணுத்துரைகூட ''ஆங்கிலத்தில் 'புளுடார்ச்' கருத்தை வைத்துக் கொண்டு எழுதியிருக்கிருயா?'' என்று கேட்டார்.

அவன் 'புளுடார்ச்'சைக் கண்டானு? 'கிரீன் டார்ச்'சைக் கண்டானு?

'சக்தியில்' தமிழில் வந்ததைப் பார்த்தான். அவ்வளவு தான்...!

தலையங்கம் எழுதும்போது 'தென்றல் உங்களைத் தீண்ட வருகிறது. ஆம், தென்றல்தான் மனிதனைத் தீண்டுகிறது!' என்று அவன் எழுதினன்.

அதற்குக் காரணம் அவனுடைய கலை நண்பர் தான் எழுதிய ஒரு படத்தில் 'நான் தென்றலைத் தீண்டியதில்லை. தீயைத் தாண்டியிருக்கிறேன்' என்று வசனம் எழுதியிருந்தார்.

தென்றலை மனிதன் தீண்டுவதில்லை. மனிதனைத்தான் தென்றல் தீண்டுகிறது என்று அவன் குத்தியிருந்தான்.

முதல் இதழ் வெளிவந்தது...!

அவனை உலகம் அறிந்து கொள்வதற்காக முதல் தூது ஒன்று புறப்பட்டது.

எப்போதும் பத்திரிகை நடத்துவது என்றால் பத்திரிகையின் அமைப்பும் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் அவன் சிரத்தையாக இருப்பான்.

அதை ஒரு கலையாகவே பயின்று வந்தான்.

முதல் இதழின் அமைப்பே பலபேரை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

அவனது 'தென்றல் சரித்திரம்' தொடங்கிற்று.

அவனை ஏமாளி என்றும், கோமாளி என்றும் கணக்கிட்டவர்களின் இறுமாப்பைத் தகர்க்க அது சம்மட்டி தூக்கிச் சென்றது. அறிவுப்போரை 'தென்றல்' ஆரம்பித்துவைத்தது.



# கூட்டுக்குரல்!

22—6—54 அன்று வெளியான முதல் தென்றல் இதழில் ''கூட்டுக்குரல்'' என்று ஒரு கற்பனையை வரைந்தான். இறந்து போன காதலர்கள் ஒன்று சேர்ந்து பேசுவது போன்ற கற்பனை அது.

அந்த நேரத்தில் தமிழுக்கு அந்தப் பாணி புதியதாக இருந்தது. அதைப் படித்தவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் பல வந்தன. அந்தக் கட்டுரை இது!...

> சாக்காட்டின் அடிவாரத்திலே — எண்ணங்களற்ற இன்ப உலகத்திலே, போட்டி, பொறாமைகளற்ற பொதுவுடைமை பூமியிலே-நீங்காத் துயில் மடுத்திருக்கும் எங்களை, மானிட ஜாதியே! நீ மறந்து விடாமல் இருப்பாயாக!
>
> உயிரோடு உயிராகக் கலந்து உறவாடிக்கொண்டிருந்த எங்களை, இதயத்தில் மாறிமாறி இடம் பெற்றுக் கொண்டிருந்த எங்களை, சதி மனம் படைத்த தன்னலக்காரர்களால், சாய்த்துக்கிடத்தப்பட்ட எங்களை, ஏ மனித சமுதாயமே! நீ யுகயுகாந்திரங்களுக்கு மறந்து விடாமல் இருப்பாயாக!
>
> காற்றிலேறி விண்ணிலே பறந்தோம், கண்களைக்கட்டி மண்ணிலே தவழ்ந்தோம். நாற்றிடைத் தென்றல் நடிப்பது போலவே, நலமிகும் காதலில் மனமகிழ்வுற்றோம். களங்க மனத்தினர் ஆசைகட்காக, காதலர் நாங்கள் சாவினை அடைந்தோம். லட்சிய வாதிகளுக்கு கோபுரம் கட்டும் நல்ல மனி

தர்களே! காதலும் ஒரு லட்சியம் தான் என்பதை
மறந்து விடாதீர்கள்!

போரிலே மாண்டால்தான் வீரசுவர்க்கம் போக
லாம் என்பீர்களே, நாங்கள் இருப்பதும் வீரசுவர்க்
கம்தான் என்பது இன்னும் இங்கு வாராத உங்க
ளுக்குத் தெரியுமா?

இதோ லைலா! இதோ கயஸ்! இதோ அம்பிகா
பதி! இதோ அமராவதி! ரோமியோ! ஜூலியட்!
கிளியோபாத்ரா
சீசரும் இங்கேதான் இருக்கிறான். இன்
எங்கள் பக்கத்தில்! எல்லோரும் இங்கேதான். இன்
னும் சாகாதவர்களே! வீரசுவர்க்கம் என்றால் சரித்
திரம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

படித்த சரித்திரத்தையும் மறந்துவிடும் பரிதாப
ஜென்மங்களே! ஆடவர் பலருண்டு, அழகியர் மிக
உண்டு அவனியில்; எனினும் ஒருவருக்கொருவர்
என்கிற உறுதியை உயிர் போகும் வரையில் கடைப்
பிடித்த எங்களை ஒவ்வொரு விநாடியும் நினைத்துக்
கொண்டிருப்பீர்களாக!

மேகம் குவிந்தால் மயில் ஆடுகிறது; மரங்கள்
அசைந்தால் குயில் பாடுகிறது; வசந்தத்தின் வரவை
நாணல் தலை சாய்த்து வரவேற்கிறது. மலர்ந்திருக்
கும் சோலைக்கு வண்டு அழைப்பில்லாமலே வரு
கிறது. சுவையோடு இசை பிறந்தால் கருநாகம்
கூட அசைவற்றுப் போகிறது. ஞானமுள்ளவன்
விரல் பட்டால் வீணையிலே நல்லிசை எழுகிறது.
சமுத்திரத்திலே நிறைய நீர் இருந்தாலும், சக்ர
வாகப் பட்சி பனித்துளியைத்தான் நாடுகிறது
தினசரி நிகழும் இவையெல்லாம் எங்கள் காதலை,
உங்களுக்கு நினைவூட்ட வில்லையா?

அன்பு மலை முகட்டில், இன்பக் கடலடியில்,
ஆசை நதிப் பெருக்கில், காதற் பூங்காவனத்தில்
எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் எங்கள் உரு
வம் தோன்றவில்லையா?



ஓ! உறக்கத்திலிருப்பவர்களே! எங்கள் குரல்
உங்கள் காதுகளில் விழவில்லையா?

அறுபட்ட காற்றாடிபோல் அலைந்து, மரம்விட்ட
இலை போல மறைந்து விடும் மக்கள் கூட்டமே! எங்
களைப்பாருங்கள்; நாங்கள் சொல்வதைக்கேளுங்கள்.

வசந்தம் உங்களைத் தழுவ வரும்போது, அசந்த
நிலையில் அதை அணைத்துக் கொள்ளுங்கள்.

மாமழை உங்களைச் சுற்றி விழும்போது, மாளி
கையோ, மண் குடிசையோ, 'ஒருவர் உடலில்
ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோற்றமின்றி'
இன்பங்காண விழையுங்கள்.

ஆடவரெல்லாம் அழகியரின் தலைகோதி மெய்
சிலிர்த்திருங்கள்; அழகியரெல்லாம் ஆடவரின்
மார்பில் சாய்ந்து மனம் குளிருங்கள்.

போட்டி உங்களுக்கு வேண்டாம், பொறு
மையை மறந்து விடுங்கள். சண்டைக்கு வேறு
களம் வேண்டாம். காதற் களம் போதும், சச்சர
வுக்கு நேரமில்லாமல் காதல் அளியுங்கள். கண்ணீர்
வரட்டும், ஆனந்தத்தில் மட்டும்! கவலை என்று
அழுபவனைப் பார்த்துச் சிரியுங்கள். மண்ணகத்
திலே வாழுகின்ற போதிலும் உங்கள் கன்னத்திலே
கணந்தோறும் களிப்புச் சிந்தட்டும். இன்பம்
கொள்ளுங்கள். எக்காளமிடுங்கள், நாளைக்கு நாம்
போவது உறுதி யென்றாலும், இந்த வேளையிலே சுக
மிருப்பது உறுதி என்று நினையுங்கள்.

பொழுது போய்க் கொண்டிருக்கிறது. பகல்
நடந்து விட்டது; மாலை வந்து விட்டது. இதோ
தென்றல்! ஆஹா! இன்பமயமான தென்றல்!
கவலைகளை மறைப்பதற்கு 'மணமூடி' கொண்டு
வரும் தென்றல்! இதோ வந்து விட்டது.

ஓ! தோழரே! தோழியரே! தயாராகிக் கொள்
ளுங்கள். பஞ்சணையிலே மலர் தூவுங்கள்! சன்னல்
களைத் திறந்து வையுங்கள். வீணை எங்கே? மெல்
லியரே எடுத்துக் கொள்ளுங்கள்! மீட்டுங்கள்!

பாடுங்கள்! காதல் கீதம் பாடுங்கள்! வீரர்களே கேளுங்கள்! உங்கள் செவிகளிலே, தேன்மாரி பெய்த தீஞ்சுவைக் கனியைத் தழுவத் தாவுங்கள்! அவசரம் வேண்டாம். மெல்ல வாருங்கள். வீணையை வாங்கித் தரையிலே வையுங்கள்.

பூங்கரம் பற்றி புளகாங்கிதம் பெறுங்கள். அருகிலே அணைத்தபடி அணையருகே செல்லுங்கள். கட்டிலுக்கு வலிக்காது. ஆனாலும் மெதுவாக அமருங்கள். காதற் புறாக்களே! கதவை மூடி விடுங்கள்!

நீலங் கரைத்த வானிலே, கோலங் குழைத்து வந்திருக்கிறது வெண்ணிலா! அது நடந்து வந்த வேளையில் விழுந்து விட்ட வைரங்கள் பொறுக்குவாரில்லாமல் கிடக்கின்றன.

ஓ! காதலரே! இவற்றை நீங்கள் காண முடியாது! ஆனாலும், கதவைத் தாழிட்ட கட்டழகரே! இவற்றின் நினைவே உங்களுக்கு வாராது!

சுவையாகச் சுவையாக இரவு போய் விட்டது. பொழுது விடிந்து விட்டது......

கண்ணாடி மேனியரே! நீங்கள் வெளி உலகத்திற்கு வாருங்கள்!

இதுதான்—பகல்தான்—இப்போது காண்பது தான்—உலகமா? இல்லை...

நிச்சயமாக இல்லை...

இரவு நீங்கள் கண்டீர்களே: அதுதான் உலகம். அதுதான் உண்மையான உலகம்...

பகல் வெறும் கனவு

நீங்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் தினசரி வரும் கனவு!

கனவைப் பொறுமையோடு போக விடுங்கள்!

மாலை வரட்டும்...ஆகா! மாலை வரட்டும்...

மீண்டும் தென்றல் வரும்...வரும்...வரும்... தடையில்லாமல் வந்துகொண்டே யிருக்கும்.

ஓ! மானிட ஜாதியே! எங்கள் குரல் உன் காதுகளில் விழுந்ததா?



# இலக்கிய உலகில் அவன்

உடம்பிலே தெம்பும், உள்ளத்திலே உற்சாகமும் நிரம்பி இருக்கும் போது எழுத எழுத, எழுத்து வளரும். தென்றலின் முதல் இதழ் வெளிவந்ததும் அதைப் பார்த்துப் பார்த்து அவனே முதலில் ரசித்துக் கொண்டான். அந்த ரசனையோடு, கட்சி வெறி ஒன்றையும் வளர்த்துக் கொண்டான். அதன் விளைவாக அடுத்தடுத்த இதழ்களில் எதிர்க்கட்சிக்காரர்கள் அதிகமாகத் தாக்கப்பட்டார்கள்.

சில நேரங்களில் சுவைக் குறைவாகவும் அது இருந்தது. வயதுக் குறைவும், பக்குவமற்ற தன்மையுமே சுவைக் குறைவான தாக்குதல்களுக்குக் காரணங்களாய் அமைந்தன.

ஆனால், சில இதழ்களில் அவன் எழுதிய இலக்கிய விமர்சனங்கள் பலரால் வரவேற்கப்பட்டன.

ஒருமுறை திரு. ம. பொ. சி. அவர்கள் ஒரு தினப்பத்திரிகையில், ''பண்டைக் காலத் தமிழர்களின் திருமணங்களில் 'தாலிகட்டும் பழக்கம்' இருந்தது என்றும், அது தொன்று தொட்டு வரும் மரபு என்றும், தாலி எதற்கு என்று கேட்கும் சீர்திருத்தவாதிகள் தமிழே படிக்காத மூடர்கள்'' என்பது போலவும், எழுதி யிருந்தார்.

அவன் தாலிக்கு விரோதியல்ல வென்றாலும், பழங்காலத் திருமணங்களில் தாலிகட்டும் பழக்கம் இருந்ததில்லையென்று கருதுபவனாக இருந்தான்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஒரு தினப்பத்திரிக்கை
யில் எழுதியிருந்ததைக் கொண்டே அவனும் இந்த முடிவிற்கு
வந்திருந்தான்.

அந்தக் கருத்தை மறுத்துத்தான் ம. பொ. சி. அவர்
களின் கட்டுரை பிறந்திருந்தது.

உடனே அவன் தமிழாராய்ச்சியில் இறங்கினான். சில
நாட்கள் ஒரு தனியிடத்தில் அமர்ந்துகொண்டு எல்லா இலக்
கியங்களையும் படித்தான்.

தாலி என்றோ, வேறு பெயரிலோ அது குறிப்பிடப்பட்
டிருக்கிறதா என்று தேடினான்.

சங்க இலக்கியங்களிலிருந்து, கம்பனது இராம காதை
வரை அவன் துருவித் துருவி ஆராய்ந்தான். அது பற்றித்
தென்றலிலே ஒரு கட்டுரை வரைந்தான். மிகுந்த பரபரப்
பையும், இலக்கிய ரசிகர்களின் நெஞ்சில் அவனுக்கு ஒரு தனி
இடத்தையும் ஏற்படுத்திய அந்தக் கட்டுரைதான், அவன்
எழுதிய முதல் ஆராய்ச்சிக் கட்டுரையாகும். அது இது:—

## தமிழர் திருமணத்தில் தாலி

தமிழ்ப் பண்பாட்டில் தாலிகட்டும் வழக்கம்
உண்டா? இதுபற்றிப் பல பெரும்புலவர்கள்
ஆராய்ந்தனர். மிகப் பெரும்பாலோரின் முடிவு,
தாலிகட்டும் வழக்கம், தமிழ்வழக்கம் அல்ல
என்பதே.

தமிழன் தாலிகட்டியதாகவோ, திருமணத்தின்
புனிதத் தன்மைக்கு அது நீங்காத சின்னம் என்ப
தாகவோ தமிழ் வரலாறு எதுவும் குறிப்பிடவில்லை.
இதனையே, அண்மையில், மதுரைத் தியாகராயர்
கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராயிருக்கும் தோழர்,
டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் உறுதிப்படுத்
தினார்கள். அதாவது, பழங்காலத்தில் தமிழர்க
ளிடையே தாலி கட்டும் வழக்கம் இல்லை என்றும்,



எட்டாம் நூற்றாண்டிற்கூட, தமிழர் திருமண முறை
யில், சடங்குகள் சில இருந்தன என்றும், தாலி
கட்டும் வழக்கம் இல்லையென்றும் உரைத்தார்கள்.
இதனை எதிர்த்துத் தாலியின் சார்பில் வழக்காட
விரும்பிய தமிழரசுப் பெருந்தகையாளர் தோழர் ம.
பொ. சிவஞானம் அவர்கள், 'தாலிகட்டும் வழக்கம்
இருந்தது' என்பதற்கு ஆதாரமாக, சிலம்பு முதல்,
கம்பன் வரை உள்ள இலக்கியங்களில் இரண்டு
மூன்றிலிருந்து ஆதாரம் காட்டியுள்ளார்கள்.

(இது 25-10-54 'தினத்தந்தி'யில் வந்
துள்ளது.)

அந்த ஆராய்ச்சி எவ்வளவு வழுவுள்ளது—
எவ்வளவு குறைபட்ட ஆராய்ச்சி என்பதைக் கூறு
முன், அவர் ராசமாணிக்கனார் பற்றிக் கூறிய முதற்
கருத்தையும் ஆய்தல் வேண்டும். முதன்முதலாக
அவர், ''தமிழினத்தின் வாழ்வை ஒட்டிய பழக்க
வழக்கங்கள் பற்றி, தெளிவாக எழுதப்பட்ட வர
லாற்று நூல் நம்மிடம் இல்லை. இதனால் பெரும்
புலவர்கள் கூட சில சமயம், உண்மைக்கு மாறான
கருத்துக்களை வெளியிடுவதைக் காண்கிறோம்''
என்கிறார்.

இதில் அவர், 'பெரும்புலவர்கள்' என்ற வார்த்
தையில் உள்ளடக்கியவர்களில், தோழர் ராச
மாணிக்கனாரும் ஒருவர் என்பது அவர்தம் உரை
யால் அறியக்கிடக்கின்றது. அத்தகைய பெரும்
புலவர், இராசமாணிக்கனார் ''உண்மைக்கு மாறான
கருத்தை'' வெளியிட்டு விட்டார் என சிவஞானம்
கூறுகிறார். ஏதோ, தெளிவான உண்மை என்று
ஒன்று முடிபு கண்டு இருத்தல் போலவும்; அதனின்
நீங்கி, இராசமாணிக்கனார், அறியாமையால் பேசி
விட்டதாகவும் அவர் கருத்து! முதல் வரியில் சிவ
ஞானம் கூறுகிறார், ''தெளிவாக எழுதப்பட்ட வர
லாற்று நூல் இல்லை'' என்று. மறுவரியில், உண்

மைக்கு மாறானதைச் சொல்கிறார்கள்'' என்று கூறு கிறார். தெளிவான நூல் இல்லாதபோது, முடிபு கட்டிய உண்மை எங்கிருந்து புலனாயிற்றோ, நாம் அறியோம்!

''இது இப்படி இருந்திருக்கலாம்'' என ஒருவர் ஆராய்வதில் தவறில்லை. தெளிவான வரலாறு காணமுடியாத விஷயத்தில், இதுபோன்ற யூகங் களே கூறமுடியும். இதுதான் உண்மை என்று முடிபு கட்டுதற்கு மறுத்தளிக்கப்படமுடியாத ஆதா ரங்கள் வேண்டும். சகஜமாக சிவஞானம் செய்கிற தவறுகளில் இப்படி சுலபமாகமுடிவுகட்டிவிடுதலும் ஒன்று. ஆராய்ச்சியாளன், முழு விபரமும் கிடைக் காதவரை, யூகந்தான் கூறமுடியும். எந்த விஷயத் திற்கும் 'அதாரிட்டி' ஆக முடியாது. தெளிவு இல்லாத வரலாற்றில், அவர் உண்மை கண்டதாகக் கூறி, இராசமாணிக்கனார், அதற்குமாறான கருத்தை வெளியிடுவதாகக்கூறுவது, முதற்பெரும்பேதைமை! நிற்க.

தாலி கட்டும் வழக்கம் இருந்தது என்பதற்கு எவ்வெவற்றிலிருந்து ஆதாரம் காண்கிறார், சிவ ஞானம்? 'சங்ககாலம்தொட்டு இருந்தது என்கிறார்' முதலில் சிலப்பதிகாரத்தை ஆதாரமாக்குகிறார்.

''சிலப்பதிகாரத்தில், கண்ணகி-கோவலன் திருமணத்திற்கு முன்பு, 'மங்கல அணி' புகார் நகர வீதிகளை வலம் வந்ததாகக் கூறுகிறார், இளங்கோவடிகள். இந்த 'மங்கல அணி' என் பதற்கு 'மாங்கல்ய சூத்திரம்' என்று பொருள் கூறுகிறார் அரும்பத உரை ஆசிரியர்.''

—இது சிவஞானம் எழுதியிருப்பது. 'மங்கல அணி' புகார் நகரை வலம் வந்ததாக சிலப்பதி காரத்தில் உள்ள பாடலைக் குறிப்பிடவில்லையேனும் அதன் பொருளைக்குறிப்பிடுகிறார். பாடல் இதுதான்:



முரசியம்பின! முருடதிர்ந்தன;
முறை எழுந்தன பணிலம் வெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன
வகலுண் 'மங்கல அணி' எழுந்தது!

—இது சிலப்பதிகாரப் பாடல். இதில் வருகிற 'மங்கல அணி' என்பதற்கு 'மாங்கல்ய சூத்திரம்' என அரும்பத உரையாசிரியர் உரை கூறியிருப் பதை, தமது கூற்றுக்கு ஆதாரமாக்குகிறார், சிவ ஞானம். உண்மையில் இவ்விடத்தில் 'மங்கல அணி' என்பது 'மாங்கல்ய சூத்திரம்' என்ற பொரு ளோடு இயங்குகிறதா?

முரசு இயம்பின—முரசு முதலியன ஒலித்தன.

முருடு அதிர்ந்தன—மத்தளம் முதலியன அதிர்ந்தன.

முறை எழுந்தன பணிலம்-சங்கம் முதலியன முறையே முழங்கின.

வெண்குடை அரசு எழுந்ததோர் படி எழுந் தன—வெண்குடைகள் அரசன் உலா எழுந்தபடி யாக எழுந்தன.

—இதுவரை சொன்ன உரையிலிருந்து ஊருக் குள்ளிருந்த உற்சாகம்-புகாரின் உள்நிலை விளக்கப் படுகிறது. ஊர் ''ஜே ஜே'' என்றிருந்தது என்பது போல, உற்சாகத்தை விளக்குகிறார் இளங்கோ அடிகள். 'அகலுண் மங்கல அணி எழுந்தது' என முடிக்கிறார். இதற்கு, மாங்கல்ய சூத்திரம் வலஞ் செய்தது எனப்பொருள்கொள்வது தவறு அரும்பத உரையாசிரியர்தான் இதற்கு அப்படிப் பொருள் கொண்டுள்ளார். அடியார்க்கு நல்லார் தன் உரை யில் ''மங்கல அணி—மங்கல அணி'' என்று மட்டுமே கூறிவிட்டார். இதிலிருந்தே, அரும்பத உரையாசிரியரின் கருத்தில் அடியார்க்கு நல்லார் ஐயப்பாடுகொண்டார்என்பதும்அப்பெரியாருக்குப் பின் மாற்றுப் பொருளான எதிர் பொருளைக் கூற

அஞ்சி விடுத்தார் என்பதும் அறியக் கிடக்கின்றன.
ஊரிலே முரசு, மத்தளம், சங்கம் ஆகியவற்றின்
ஒலியோடு இயற்கை அழகும் எழுந்தது எனக்
கொள்வதே முறை. 'மங்கல அணி' என்பதற்கு
இயற்கை அழகு என்பதே பொருள்—இந்த இடத்
தில்! ''அத்தனையோடும், ஊரில் இயற்கை அழகும்
எங்கும் எழுந்தது'' என்பதுதான் இளங்கோவடிகள்
கருத்து. மங்கல அணியை, வேறு பொருளின்றி
மங்கல அணி என்றே கூறிப்போந்த அடியார்க்கு
நல்லார், அதற்குத் தனிப்பொருள் கூறவில்லையே
தவிர, பொதுப்பொருளில் தம் கருத்தை வெளியிடு
கிறார். அதாவது மங்கல அணி எங்கும் எழுந்தது
என அடியார்க்கு நல்லார் கூறுகிறார். எங்கும்
எழுந்தது! ஆம்; வலஞ் செய்யவில்லை! எங்கும்
ஒரே பொருள் திடீரென்று எழுவதற்கும், ஒரு
பொருளே ஊரைச் சுற்றிவலம்வருவதற்கும் ஏராள
மான வேறுபாடு-முரண்பாடு உண்டு. ஆகவே
இயற்கை அழகு எங்கும் எழுந்தது என, சிறப்புரை
யாகத்தான் இளங்கோவடிகள் கூறியுள்ளார். இந்த
மங்கல அணியை மங்கல நாணாக-மாங்கல்ய சூத்
திரமாகக் கொள்ள முடியாது என்பதற்கு இன்னும்
சிலப்பதிகாரமே சான்று காட்டுகிறது.

மாங்கல்ய சூத்திரம் வலம் வந்தது என்னும்
பொருளில் இதைஇளங்கோவடிகள் கூறியிருந்தால்,
திருமணம் நடப்பதைக் குறிக்கும் இடத்தில் அதை
மறந்தா போயிருப்பார்? மாங்கல்யம் வலம் வந்தது
என்று கூறியிருந்தால், 'தாலி கட்டப்பட்டதை
மறைத்தா இருப்பார்? அல்லது மறந்தா இருப்பார்?
திருமணக் கூற்றில், தாலி கட்டப்பட்டால்-அதைக்
கூறாது விடுவதுண்டா?'

''சாலியொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறை வழிக் காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்.........''



என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். பார்ப்பான் மறைவழி காட்டியது, தீவலம் செய்தது, அருந்ததி பார்த்து எல்லாம் குறிப்பிடுகிறார். தாலி கட்டியது-அல்லது அரும்பத உரையாசிரியர் கருத்துப்படியும் அதைத் தழுவிய சிவஞானம் கருத்துப்படியும் மாங்கல்ய சூத்திரம் கட்டியது இதிலே இல்லை. இதிலிருந்து 'மங்கல அணி' மாங்கல்ய சூத்திரம் ஆக முடியாது என்பது புலனாகும். அதுவுமன்றி, எல்லாச் சடங்குகளையும் புகுத்திய பார்ப்பனர், அந்நாளில் தாலிகட்டும்பழக்கத்தைப்புகுத்தவில்லை என்பதும் அறியக்கிடக்கும். அதற்குப் பின்னரே, அடிமைத்தனத்தை உறுதிப்படுத்துவான் வேண்டிப் புகுத்தியிருக்கலாம். ஆய்விலே காணும் முடிபு. இளங்கோ அடிகளும் அவருக்கு முந்திய சங்க இலக்கியகர்த்தர்களும் தாலி கட்டும் முறை இருந்ததாகவே குறிப்பிடவில்லை என்பதுதான்.

இந்த அரும்பத உரையாசிரியரின் உரை, பொருந்தா உரை என, தமிழ்ப்புலவர் கு. மதுரை முதலியார் அவர்களால் ஒருமுறைஎடுத்துக்காட்டப் பெற்றிருக்கிறது. மேலும் 'மங்கல அணி' என்பது இயற்கை அழகு என்ற பொருளிலேயே சிலப்பதிகாரத்தின் மற்றோர் பகுதியில் கையாளப்படுகிறது. 'மனையறம்படுத்த காதை'யில் அறுபத்துமூன்றாவது வரியில் 'மங்கல அணி' பற்றிக் குறிப்பிடுகிறார், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்.

'' நறுமலர்க் கோதை நின் நலம் பாராட்டுநர்
மறுவின் மங்கல அணியே யன்றியும்
பிறிதணி அணியப் பெற்றதை யெவன்கொல்''

என்கிறார். இதன் பொருள்:

''நறுமலரணிந்த கோதையே! இன்னும் புனைந்து அழகு செய்யும் மகளிர், குற்றமற்ற உனது இயற்கை அழகு இருக்கும்போது வேறு நகைகளையும் அணிந்ததனால் பெற்றது யாது கொல்?''

நூல் நிலையம் திருச்சி எண்: டி. கிருட்டிணமூர்த்தி, M.A., L.T.

—ஆமாம்; இயற்கையழகாகிய 'மங்கல அணி'
இருக்கும்போது வேறு அணிகள் எதற்கு என்று
கேட்கிறார் இளங்கோ அடிகள். இதே உரையைத்
தான் பெரும்புலவர், நாவலர் ந. மு. வேங்கடசாமி
நாட்டார் அவர்களும் கூறிப்போந்தார். சிவஞானம்
பாராட்டுகிற கம்பன் கூட ஒரு இடத்தில்,

''உமிழ் சுடர்க்கலன்கள் நங்கை யுருவினை
மறைப்ப தோரார்''

—என்கிறான். இயற்கையான 'மங்கல
அணி'யை நகைகள் மறைக்கின்றன என்கிறான்,
கம்பன். ஆகவே அணிகள் யாவினும் பெரிது,
மங்கல அணி—அதாவது இயற்கை அழகு என்னும்
பொருளையே இளங்கோவடிகள் வலியுறுத்தியுள்
ளார் என்பது யாவர்க்கும் புலனாகும்.

—மங்கல அணி, தாலிதான் என்பதற்கு, சிலப்
பதிகாரத்தில் துளிக்கூட இடமில்லை. முழுதும் ஆரா
யாத தோழர் சிவஞானத்தின் ஆராய்ச்சி 'தாலி'
தான் மங்கல அணி என்று கூறுகிறது. 'மங்கல
அணி'யை 'இயற்கை யழகு' என்ற பொருளில்
மங்கல வாழ்த்துப் பகுதியிலும், மனையறம்படுத்த
காதையிலும், முறையே 'அகலுள் மங்கல அணி
எழுந்தது' என்றும், 'மறுவின் மங்கல அணியே'
என்றும் கூறியிருப்பதைப் பார்த்துவிட்டு, 'அந்தி
மாலை சிறப்புச் செய் காதை'க்கு வருவோமானால்
இங்கேயும் அதே பொருளைக் காண முடியும்!

சிவஞானம் இப்படிக் கூறுகிறார்:

''மற்றும், 'அந்திமாலை சிறப்புச்செய் காதை
யில்', கோவலனைப்பிரிந்த வருத்தத்தால் வாடியிருக்
கும் கண்ணகியின் தோற்றத்தைக் கூறுமிடத்து,

''அஞ்செஞ்சீரடி அணிசிலம் பொழிய
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்
மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்''



என்ற வரிகளால், சிலம்பிழந்த சீரடி, குங்குமத்
தொய்யில் எழுதாக் கொங்கை என, அங்கங்களின்
அணிகளை அல்லது அலங்காரத்தைத் துறந்
ததைக் கூறுகிறார். மார்புக்கு மேலிடமான கழுத்து
வரும்போது 'மங்கல அணி' என்று குறிப்பிட்டிருப்ப
தால் அவ்வணி தாலியே என்பது உறுதிப்படு
கின்றது...''

—இது சிவஞானத்தின் சீரிய கருத்து. இது
வரை பார்ப்போம். இதில்கூட இளங்கோவடிகளின்
ஒரு வரியை நண்பர் விட்டுவிட்டார். அந்த வரி
யைச் சொன்னால் எங்கே ஆபாசம் என்று மற்றவர்
கள் கூறி விடுவார்களோ என்றபயத்தில் இளங்கோ
வடிகளைக் காப்பாற்ற ஆசைப்பட்டு, விட்டுவிட்டார்
போலும்! தோழர் பயப்படவேண்டியதில்லை! இந்த
இடத்தில் அந்த வரி வருவது இலக்கியத்துக்குப்
புறம்பும் அல்ல; ஆபாசமும் அல்ல. மேலும் இது
மணிதக்கதை. அந்த வரி இதுதான். ''மென்துகில்
அல்குல் மேகலை நீங்க''...மறைவிடத்தே மேகலை
அணிதலும் ஒழிந்தாள் என்பது பொருள்.

சிவஞானத்தின் ஆராய்ச்சி, உண்மையாக
முடியாமல், அவர் வரிகளும் அவரைக் காட்டிக்
கொடுக்கின்றன! இளங்கோவடிகள், கண்ணகியின்
தோற்றத்தை, உள்ளங்கால் முதல் உச்சிவரையில்
கூறுவதாகவும், ஒவ்வொரு அங்கத்தின் நகைகளை
யும் கூறும்போது கழுத்தருகில் வந்து 'மங்கல
அணி' என்பதாகக் குறிப்பிடுவதாகவும் ஆகவே
அது தாலிதான் என்றும் சாதிக்கிறார். ''ஒவ்வொரு
அங்கத்தின் அணிகளை—அல்லது அலங்காரத்தைத்
துறந்தாள்'' என சிவஞானம் கூறுகிறார். அதன்படி
இளங்கோவடிகள் முழுதும் அணிகளையே கூறவில்லை;
அலங்காரத்தைச் சில அங்கங்களுக்கும் கூறுகிறார்
என்கிற உண்மை அறியக் கிடக்கிறது. உதாரண
மாக, ''கால் சிலம்பு இல்லை—இது நகை. மேகலை
விட்டாள்—இதுவும் நகை. கொங்கைக்கு தொய்

யில் எழுதவில்லை—இது அலங்காரம்! நகையல்ல!
எழுதுவிக்கும் ஒரு செயற்கை அலங்காரம்—அவ்
வளவுதான்! அதேபோல, தொடர்ந்து போகும்
போதும் இளங்கோவடிகள்,

''மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்!
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக்கண்ணகி...''—என்கிறார்.

இந்த வரிகளால், இளங்கோவடிகள் வெறும்
அணிகளைப் பற்றி மட்டும் கூறவில்லை. ஒவ்
வொரு அங்கத்தின் செயற்கை அழகையும் துறந்
தாள் என்று சொல்ல வந்து, அணி பூட்டக்கூடிய
வற்றிற்கு அணிகளையும், அது முடியாத, நெற்றி,
கண், முதலியவற்றிற்கு அலங்காரத்தையும் துறந்
தாள் என்று கூறுகிறார். காலில் சிலம்பு இல்லை;
மேகலை இல்லை; கொங்கைக்கு அலங்காரம் இல்லை;-
எனக் கூறி, கழுத்தில் ஒரு அணியும் இல்லை என்
பதை—இயற்கை அழகன்றி வேறு அணிகள் சூட
வில்லை என்பதை—வேறு அழகு செய்யாமல்
இயற்கை அழகோடு இருந்தாள் என்பதை—மங்கல
அணியிற் பிறிதணி மகிழாள்' என்று கூறுகிறார்.
கழுததில் ஒரு அணியும் இல்லை என்பதே பொருள்.
தாலிகட்டப்பட்டிருந்தால் அதைக் கழற்றக்கூடாது
என்கிற புனிதத் தன்மைப்படி, கழற்றியிருக்க முடி
யாது ஆகவே தாலி கட்டப்படவில்லை—ஒன்று!
மங்கல அணியைத் தவிர வேறு அணி இல்லை—
தாலிதவிர வேறுஇல்லைஎன்கிற சிவஞானக்கருத்துப்
படி பார்த்தால், ஏதோ நூற்று எட்டு நகைகளைக்
கழுத்தில் அணிந்தாள்; தாலியைத் தவிர மற்றவற்



றைக் கழற்றிவிட்டாள் என்று வலிந்து பொருள்
கொள்ள வேண்டும்! இது தவறு! ஆகவே, பெரும்
புலவர் வேங்கடசாமி நாட்டார் கருத்துப்படி,
'இயற்கை அழகின்றி செயற்கை அழகு செய்யாள்'
எனப் பொருள் கொள்வதே முறை. அடிமுதல்
நுனிவரை முழுதும் அணிபற்றிக் கூறியிருந்தால்
சிவஞானம் கருத்துச் சரிதான்! ஆனால் அப்படி
இல்லையே! பின்பும், ''காதிற்குழையில்லை; முகத்தில்
காதலில் வரும் சிறு வியர்வு இல்லை; கண்களில் அஞ்
சனம் இல்லை; நெற்றியில் பொட்டு இல்லை'' என்று
அலங்காரத்தை—அணியில்லாத அலங்காரத்தை—
அடுக்கி வைத்துள்ளாரே! அது போன்றே, ''கழுத்
தில் இயற்கை அழகின்றி செயற்கை அழகில்லை''
என்று பொருள் கொள்ளவேண்டும். இந்த இடத்தி
லும் மங்கல அணி தாலி அல்ல!

அப்படி அது, தாலிதான் என்றால், கணவன்
இறந்ததும் அலங்காரங்களைச் சிதைக்கிற கண்ணகி
தாலியையும் கழற்றினாள் என்று கூறியிருக்க
வேண்டும். அவர் அப்படிக் கூறவில்லை. 'கட்டுரை
காதை'யில்

கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன்; நிற்றலும் இலனெனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்து...!
—என்கிறார்.

இதில், கண்ணகி, துர்க்கை கோயிலில், தன் வளை
யல்களை உடைத்து, தன் கணவனைக் கண்டபின்
அல்லது 'இருத்தலும் இல்லேன் நிற்றலும் இல்
லேன்' என்கிறாள். கொலைச் செய்திக்குப்பின், இச்
செய்தி வருகிறது. தாலி கட்டப்பட்டிருந்தால்,
கண்ணகி தாலியைக் கழற்றினாள் என, இளங்கோ
வடிகள் குறிப்பிடாமல் இருந்திருக்க முடியாது.
கண்ணகியும் தாலியைக் கழற்றாமல் முடியாது!
இங்கேயும் கண்ணகி வளையல்களை உடைக்கிறாளே

தவிர, 'தாலி' கழற்றவில்லை. காரணம் தாலி இல்லை!

கோவலனுக்கும் கண்ணகிக்கும்; திருமணம் நிகழ்ந்த பின்னர், சில தோழியர், அவர்களை அமளியில் ஏற்றுவித்து, பின்வருமாறு வாழ்த்துகிறார்கள்.

''காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்,
தீதறுக!''

—அதாவது 'கண்ணகி, தன் இன்னுயிர்க் காதலனை, கண்ணிலும் நெஞ்சிலும் பிரியாமல் வாழ்க! கோவலனும் தன் துணையாகிய கண்ணகியைத் தழுவியகை நெகிழாமல் எக்காலத்திலும் வாழ்வதாக!' என்பதாகும்.—இதிலும் 'தாலிக் கயிறு தங்கவேணும்' என்கிற நவீன ஒப்பாரி இல்லை!

ஆகவே, நன்று, முறையே கற்றுத் தேர்ந்து ஆராய்ந்த, வேங்கடசாமி நாட்டார், மதுரை முதலியார், இராசமாணிக்கனார் முதலியோர் கருத்துப்படி 'சிலப்பதிகாரத்திலும் சங்க இலக்கியங்களிலும் தாலி குறிப்பிடப்படவே இல்லை' என்னும் சரியான ஆராய்ச்சி முடிவுக்கு நாம் வரலாம்,

தோழர் சிவஞானம், சிலம்புச் செல்வர் என்றெல்லாம் புகழ் வாங்கிக்கொண்டவர்; அதிலே தேர்ந்த அறிவாளி என்று தம்மைத்தாமே பாராட்டிக் கொள்பவர். நாமும் அவனுக்குத் தெரிந்தது அது ஒன்றுதான் என்று கருதிக்கொண்டிருந்தோம். இப்போது அதுவும் பூஜ்யமா அவருக்கு? என்ற ஆயாசம் பிறக்கிறது!

மேலும் தோழர் சிவஞானம் 'தாலி உண்டு' என்ற கூற்றுக்கு, புறநானூற்றுப் பாடல்களிலிருந்தும் ஆதாரம் தேடுகிறார். சான்றாக, ஒரு புறநானூற்றுப் பாடலிலிருந்து இந்த வரியைக் கூறுகிறார்:

''ஈகை யரிய இழையணி மாதர்''

—அதாவது, ''கொடுத்தற்கரிய தாலி மங்கல



அணியை அணிந்த பெண்கள்'' என்று உரையாசிரியர் கூற்றையும் சேர்த்துக் காட்டுகிறார். தாலி, கொடுத்தற்கு அரியது என்று 'ஆரிய வழக்கு'ப் படி ஏற்பட்ட புனித எண்ணம். இதை வாதத்துக்காக சரி என்று வைத்துக்கொண்டாலும், வெறும் இழையணி என்றாலே, கொடுத்தற்கரியது என்னும் பொருள் வந்துவிடும். 'மனிதன்' என்று சொன்னாலே, சாப்பிடாமல் வாழ முடியாதவன்; சாகாமல் இருக்க முடியாதவன் என்கிற பொருள்கள்—மனிதனுக்கு இயற்கையாக உள்ள நிலைகள்—தோன்றிவிடும்! ''சாப்பிடாமல் வாழுதற்கரிய மனிதன்; சாகாமல் இருத்தற்கரிய மனிதன்'' என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதிலும் ஒரு சிறந்த புலவர் இந்தக் குற்றத்திற்கு ஆட்படமாட்டார். ஆகவே, இழையணி என்பதற்குஆபரணங்கள் என்ற பொதுப் பொருளைத்தான் கொள்ள முடியும். 'தாலி' என்கிற 'ஸ்பெஷல்' பொருள் கொள்ள முடியாது! ஈகையரிய என்றால், 'கொடுத்தற்கரிய விலையுயர்ந்த' என்னும் பொருள் சுலபமாக வந்து நிற்கிறது. ஆகவே, பொதுவாக, விலையுயர்ந்த நகைகளை (தாலி அல்ல!) அணிந்த பெண்கள் என்று கொள்வதே அறிவுடைமை!

இதற்கு எடுத்துக்காட்டாக, புறநானூற்றிலேயே வேறு பாடலைக் காணலாம்! முள்ளை முள்ளால் தானே எடுக்கமுடியும்!

சோழன் கரிகாற் பெருவளத்தான் உயிர் நீத்த காலை, அவன் பிரிவாற்றாது வருந்திய கருங்குளவாதனார் என்னும் புலவர் அவனைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று, புறநானூற்றில் 224-வது பாடலாக நிற்கிறது. அதில், கரிகாற் பெருவளத்தான் இறந்ததும் அவனது 'உரிமை மகளிர்' நின்ற கோலத்தைப் புலவர் கூறுகிறார்.

''...............................

பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்து கட்டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரும் இழைகளைந் தனரே!''

—அதாவது, ''ஆடுமாடுகளுக்கு இரைபோடுவான் வேண்டி மேய்ப்போர், வேங்கை மரத்தின் இலைகளைக் கொய்துவிடுகிறார்கள். அந்த மரம் மொட்டையாக நிற்கின்றது. அதுபோன்று மங்கையரும் எல்லா அணிகளையும் களைந்துவிட்டு நிற்கின்றனர்... ......'' இதுதான் பொருள். இதில் ''இழை களைந் தனர்'' என்பதற்கு ஔவை துரைசாமி பிள்ளை சொல்லும் பொருள், ''அருங்கல அணி முதலாய அணிகளை ஒழித்தனர்'' என்பதாகும்.

இதில் 'அருங்கலம்' என்பதற்கு, ஆபரணம், அழகு செய்யும் பொருள்—என்ற இரண்டு பொருள்கள் உண்டு. அதைத்தவிர 'தாலி' என்கிற பொருள் கிடையவே கிடையாது.

ஆகவே அழகு செய்யும் ஆபரணங்களோடு, நகைகளோடு, மற்ற அணிகளையும்—அதாவது அழகுகளையும் (தொய்யில் எழுதல் போன்ற அழகுகள் — அலங்காரங்கள்) துறந்தனர் என்பதே பொருள். இதிலும் மங்கல அணி—தாலி—வரவே இல்லை! மரத்திலிருந்து சகல இலைகளையும் பறித்துப் போட்ட மாதிரி சகல நகைகளையும் பறித்துப் போட்டு, மொட்டை மரம் மாதிரி—எவ்வித செயற்கை அழகும் அணியும், அலங்காரமும் இன்றி யிருந்தார்கள் என்பதே பொருள். இதிலும், இழை வந்திருக்கிறது. பொதுப் பொருளில்—தாலி என்கிற 'ஸ்பெஷல்' பொருளில் அல்ல! ஆகவே, 'ஈகையரிய இழையணி' என்பதற்கு விலையுயர்ந்த—கொடுக்க முடியாத-நகைகள் என்ற பொதுப் பொருள் கொள்ளலாமே அன்றி தாலி என்று தனிப் பொருள் கொள்வது இமயமலையளவு மடமையாகும்!



224-வது பாட்டில் 'இழை களைந்தனர்' என்று வருகிறதே தவிர 'கழற்றினர்' என்று வரவில்லை. தாலி அந்நாளில் இருந்திருந்தால், கணவனை இழந்த பெண்கள்பற்றிக் கூறும்போது அதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மேலும் வெறும் நகை பற்றி மட்டுமே கருங்குள வாதனார் கூறியிருந்தால், துறந்தனர் என்றோ, கழற்றினர்என்றோ கூறியிருக்கலாம். இலக்கணம் தப்பாமலேயே இவ் வார்த்தைகளில் ஒன்றைப் போட்டிருக்க முடியும். 'களைந்தனர்' என்று வருதலால், எல்லா அலங்காரங்களையும் அணிகளையும் களைந்தனர் என்பதே பொருள். ஆகவே புறப்பாட்டின் 400 பாடல்களிலும் ஒரு இடத்தில்கூட தாலி (மங்கல அணி!) குறிப்பிடப்படவில்லை.

வேண்டுமானால், ''நான்கு கால் இருப்பதால் ஆடு; ஒரு வாலிருப்பதால் மாடு'' என்கிற மாதிரி, வாதத்துக்காக வலிந்து பொருள் கொள்ளலாம். அது, ஆராய்ச்சியாளர்களுக்கு இருக்க வேண்டிய அறிவுடைமைக்கு எடுத்துக்காட்டாக முடியாது.

இவற்றை நோக்குமிடத்து சில உண்மைகள் புலனாகும். சிவஞானம் எடுத்துச் சொன்ன சங்க காலப் பாடல்களில் எங்கும் மங்கல அணி, இழையணி, என்று அணி அணியாக வருகிறதே அன்றி, தாலி என்கிற பதத்தைக் காணோம். அப்படியானால் தாலி என்கிற பதமே சங்க காலத்தில் இல்லையா? இருந்தது! அப்படியானால் அதை ஏன் ஒரு இலக்கிய கர்த்தனும் தொடவே இல்லை? எல்லோரும் 'தாலி'யை 'அணி' என்றே அழைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஒரு இடத்தில்—ஒரு கவிஞனாவது 'தாலி' என்கிற பதத்தை, உபயோகித்திருக்க வேண்டாமா? 'மங்கல அணி' தாலிதான் என்றால், ஒருவன் கூட அதை அப் பெயரிட்டே அழைக்காதது ஏன்? உண்மை இதுதான் : மங்கல

அணிக்குத் தாலி என்ற பொருளே அந்நாளில் கிடையாது!

சங்ககாலத்தில் 'தாலி' என்று வரும் வார்த்தை, மணமகன் மணமகளுக்குச் சூடிய 'மாங்கல்ய சூத்திர' மாக வரவில்லை. உதாரணமாக, புறநானூற்றில் காணப்படும் 374-வது பாடலில், 'உறையூர் ஏணிச் சேரி முட மோசியார்' என்ற புலவர், ஆய் அண்டிரன் என்ற வேளைப்பற்றிப் பாடியதாக உள்ள பூவை நிலைப்பாட்டில், ஒன்பதாவது வரியில்,

"புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்..."

என்று வருகிறது. அதாவது, சிறுவர்களுக்கு புலிப் பல்லாற் கோர்க்கப்பட்ட தாலி அணிதலைக் குறிக்கிறது. அதுதான் தாலி என்று அழைக்கப்படுகிறது. (இதில் ஐம்படைத் தாலி, முப்படைத் தாலி எனப் பலவகை உண்டு.) இந்தப் பாடலில், சிவஞானம் கருதுகிற 'தாலி'யின் பொருள் சுக்கு நூறாக உடைபட்டுப் போகிறது.

புலிப்பல் கொண்டு வந்து திருமணம் செய்து கொள்வதுகூட இலக்கிய வழக்காக இல்லை. வெறும் சமீபகால வாய் வழக்காகவே தான் இருக்கிறது. ஆகவே தாலி அணிதல்-மணமகன் மணமகளுக்குப் புனிதச் சின்னமாக அணிதல்—தமிழ்ப் பண்பாட்டில் அறவே இல்லை எனத் துணிந்து கூறலாம். திருமணமான பிறகு, வேட்டைக்குப் போகும் கணவன், புலியைக் கொன்று அதை மாலையாக்கி தன் பெருமையை மனைவிக்குக் காட்டி மனைவியின் கழுத்தில் 'ஜம்' மென்று வேடிக்கையாகப் போட்டிருக்கிறான். அதாவது திருமண மெல்லாம் முடிந்து, எல்லாம் ஆன பிறகு!

ஆகவே, அறுதியிட்டு உறுதியாக தமிழ்ப் பண்பாட்டில்—சங்க இலக்கியத்தில் — 'திருமணத்தில் தாலி அணிதல்' இல்லவே இல்லை என்று கூறலாம்.



மற்றொரு கருத்தைக் கூறுகிறார் சிவஞானம். இதில் தான் மடமையின் சிகரத்துக்கு ஏறிவிடுகிறார்! ஆண்டாள் பாடல்களில்-நாச்சியார் திருமொழியில் —திருமண சம்பந்தமாக வருகிற ''வாரணம் ஆயிரம்' என்ற பாடலில், 'கோடி உடுத்தி மண மாலை சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்'' என்று வருகிறது. இதில் மணமாலை என்பது தாலி தான் என்று உடும்புப் பிடியாகப் பிடிக்கிறார்! மணமாலை என்பதற்கு நேரடியாக 'தாலி' என்ற பொருள் எந்தஅகராதியிலும் இல்லை! இப்படி யாரும் கூறிவிடுவார்களே என்ற பயத்தில், ''மண மாலை என்ற சொல்லில் தாலியைக் குறிப்பிடுவது இன்றளவும் வழக்கமாகவும் இருந்திருக்கிறது'' என்கிறார். ஆமாம்; வழக்கமாக இருந்திருக்கிறது என்றுதான் கூறுகிறார். அந்தப் பொருள் வெறும் 'வாய் வழக்கு' என்பதைத்தான் குறிப்பிடுகிறார். வாய் வழக்கை வைத்து இலக்கியச் சொற்களை எடை போடுவது என்ன ஆராய்ச்சியோ நமக்குப் புரியவில்லை! பொருள் காண முடியாத பதங்களுக்கு, 'வழக்கு'த் தேடுவதுதான் அறிவுடையோர் வழக்கம்! மணமாலை என்ற பதத்துக்கு மணம்தரும் பூமாலை என்கிற பொருள் அழகாக-தெளிவாக இருக்கிறது! அப்படிப் பொருள் உள்ள சொல்லை 'வாய்வழக்கை' வைத்துக் கொண்டு ஆராய்வது, மடமையை வெளிப்படுத்திக் கொள்வதாகும்! இதிலிருந்து ஆண்டாளின் 'மணமாலைத் தாலி'யும் சிவஞானத்தைக் கைவிடுகிற பரிதாபத்தைப் பார்க்கிறோம். மணமாலை என்ற சொல்லுக்கு மலர்மாலை என்ற பொருளே, சரியாக அழகாக நிற்பதைக் காண்கிறோம். அங்கே, தாலி இல்லவே இல்லை என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

30—10—54-ம் தேதி இதழில் கட்டுரை வெளிவந்தது. கல்லூரிமாணவர்களிடையே ஒருபுதியபரபரப்பு ஏற்பட்டது.

தென்றலில் விற்பனை ஏறத் தொடங்கிற்று. கல்லூரித் தமிழ் மன்றங்களில் பேசும்படி அவனுக்கு அழைப்புகள்

குவிந்தன. கல்லூரி மாணவர்களிடையே முன்னேற்றக் கழ
கத்துக்குசெல்வாக்கு வளர்ந்ததற்கு அவனும்காரணமானான்.
இலக்கியப் பேச்சுக்களில் பழங்காலப் புலவர்களையும்
விமர்சிக்கத் தொடங்கினான்.
அவர்களில் அதிகமாக அவனிடம் அகப்பட்டுக்கொண்டு
திகைத்தவன் கம்பனுவான். பல்லாயிரம் பாடல்களில்
தமிழ்த் தேனைப் பிசைந்து கொடுத்த அந்த மகாகவி ஒரு
இளங் கவிஞனின் குறும்புக்கு ஆளானான்.
வானளாவி நிற்கும் கோபுரத்தின் மீது கல் எறிந்து விளை
யாடும் சிறுவன் போல அவன் விளையாடினான்.
மாணவர்களின் மனத்தை அவன் மாற்றினான். அண்
ணாத்துரையிடம் அவன் நெருங்கிப் பழகாமலேயே அவரை
உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றினான்.
இவரைப் போல ஒரு தலைவர் பிறந்ததில்லை. இனிப்
பிறக்கப் போவதுமில்லை என்று எல்லையற்றுப் புகழ்மாலை
களைச் சூட்டினான்.
சின்னஞ் சிறிய கோழிக்குஞ்சு ஒரு கள்ளிச் செடியைப்
பார்த்து ஆகா எவ்வளவுபெரிய செடி என்று வியந்ததுபோல்
அவனும் அண்ணாத்துரையை வியந்து பாடினான்
ஒன்றல்ல இரண்டல்ல ஒவ்வொரு இதழிலும் ஏதேனும்
ஒரு புகழ்மாலை சூட்டிக்கொண்டே இருந்தான்.
பத்திரிக்கைக்கு ரசிகர்கள் நிறைந்திருந்தார்கள். புலவர்
களிடையே வரவேற்பிருந்தது, என்றாலும் கட்சி தோழர்
களிடம் அதற்குரிய நியாயமான மரியாதை கிடைக்கவில்லை.
காரணம்? அவர்களுக்குப் புரியக் கூடிய விஷயங்கள்
தென்றலில் குறைவாகவே வெளிவந்தன.
இந்த நேரத்தில் இரண்டொரு படங்களுக்கு எழுதும்
வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது.
ஒரு பக்கம் வருமானம் வந்தால் இன்னொரு பக்கம் கடன்
வரவேண்டும் என்பது அவன் தலை எழுத்தல்லவா?
பத்திரிக்கையின் நிர்வாகச் சீர்குலைவு படத் தொழிலில்
வந்த வருமானத்தைச் சாப்பிடத் தொடங்கிற்று.



பத்திரிகையை வியாபாரமாகவா அவன் நடத்தினான்? வேடிக்கையாக நடத்தினான்! வேதனைகளைச் சம்பாதித்தான்! ஒழுங்காக நடத்தினால் லாபம் தரக் கூடிய பத்திரிக்கை வியாபாரம் தெரியாதவன் நடத்தியதால் நஷ்டத்தில் ஆழத் தொடங்கிற்று.

பாட்டு எழுதிச் சம்பாதித்த பணம் எல்லாம் பேப்பர் கொடுத்தவர்களுக்கும் பிளாக் செய்தவர்களுக்கும் போகத் தொடங்கிற்று.

இது அவன் பிறப்போடு வந்த விதி - எதுவும் அவன் கையில் தங்கக் கூடாது என்பதே இயற்கை வகுத்த சட்டம். ஆனாலும் அவன் மனம் தளரவில்லை.

பத்திரிகையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தான். சனிக்கிழமை பத்திரிகை எப்படியும் திங்கட்கிழமையாவது வெளி வந்து விடும்.

தள்ளாடித் தள்ளாடி தென்றல் நடந்து கொண்டிருந்தாலும் அவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதற்கு அது பேருதவி செய்தது.

தென்றலில் எழுதிய எழுத்துக்கள் அவனது சிந்தனைகளுக்கு உரமேற்றின. சில கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காகவே அவன் பெரும் விலை கொடுத்துக் கொண்டிருந்தான்.

# கட்சி வாழ்க்கை

சூழ்நிலைகளாலும் சந்தர்ப்பங்களாலும் அப்போது கிடைத்த நண்பர்களாலும் அரசியல்வாதியாக மாறிய அவன், அதை ஒரு பெரிய விளையாட்டு மைதானமாகக் கருதி விளையாடத் துவங்கினான்.

கட்சியில் அவனது போக்கு ஒரே சீராக இருந்ததில்லை. கட்சி எப்படி ஒரே சீராக இருக்கவில்லையோ—அப்படியே அவனும் இயங்கினான். மனித நாகரிகத்தின் சாதாரண வரம்புகளைக்கூட அவன் கடைப்பிடிக்கவில்லை. சேர்க்கையின் பாவம் அவனைப் பெரிதும் தொத்திக் கொண்டது. கீழ்த் தரமான ரசனையே அவன் மனத்தில் ஒரு பெரிய நியாயமாக உருக் கொண்டிருந்தது. கட்சியின் தொண்டர்களும் தலைவர்களும் வேடிக்கை காட்டுவதே அரசியல் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதுதான் அரசியல் என்று அவனும் நம்பினான்.

'திராவிடத் தனி நாடு' என்பது சாத்தியமானதே என்று அவனும் கருதினான். 'இதைவிடச் சிறிய நாடுகள் சுதந்திரமாக வாழும்போது—இது ஏன் வாழ முடியாது' என்ற கட்சியின் கருத்தை அவன் ஒப்புக்கொண்டான். பார்ப்பன ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் தெய்வ நம்பிக்கை தகர்க்கப்பட வேண்டும் என்றும் 1956 வரை கட்சி பலமாக வாதிட்டது. ஆகவே பிரச்சாரத்திற்கான வாய்ப்பு, பேச்சா



ளர்களுக்கு அதிகமாகவே இருந்தது. மூச்சு விடாமல் மூன்று மணி நேரம் பேசுவதற்கு, கட்சியின் கருத்துக்கள் பெருந் துணை புரிந்தன.

இது வெறும் அரசியல் கட்சியல்ல; மாபெரும் விடுதலை இயக்கம். பிரஞ்சுப் புரட்சி போலவும் ரஷ்யப்புரட்சி போலவும் பெரும் புரட்சி ஒன்றை நடத்தப் போகிற ஒரு இயக்கம். 'இத்தாலிய வீரன் கரிபால்டி–துருக்கியின் கமால் பாட்சா, தத்துவமேதை இங்கர்சால்-கிரேக்க நாட்டு சாக்ரடீஸ், சோவியத் நாட்டு லெனின்-இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வந்து பிறந்த வடிவமே அண்ணாத்துரை! இப்படிக் கட்சிப் பேச்சாளர்களும் பேசினார்கள். அவனும் முழு நம்பிக்கையோடு பேசினான்.

'சமூகம்—பொருளாதாரம்—அ ர சி ய ல் விடுதலைக் கிளர்ச்சி' என்ற எல்லாத் தலைப்பிலும் பேசினான். கானல் நீரிலே விண்மீனை வேட்டையாடுவதுபோல், இல்லாத ஒன்றிலே எல்லாவற்றையும் சுட்டிக்காட்டிய ஒரு அரசியல் கட்சியாக அன்று தி. மு. கழகம் இயங்கியது உண்மை. இது பகையினால் வரும் வார்த்தை அன்று. காலம் உணர்த்திவிட்ட ஒன்றாகும்.

ஆனால் இன்றைக்கு இந்தக் கருத்துக்களெல்லாம் ஒரு நாள் பொய்யாகும் என்று அவன் கருதியதில்லை. மந்திரவாதியிடம் நம்பிக்கை வைத்த மலடியைப்போல்-கட்சியின் கருத்துக்களில் அவன் நம்பிக்கை வைத்திருந்தான். என்ன தான் மந்திரம் ஜபித்தாலும் கடைசிவரை பிள்ளை பிறக்காது என்று தெரிந்தே மந்திரவாதி ஜபித்தான். மலடிதான் மகனை எதிர்பார்த்து ஏமாந்தாள்.

எத்தனை கூட்டங்கள்-எத்தனை மாநாடுகள்-எத்தனை ஊர்வலங்கள்-எத்தனை தலைப்புக்களிலே முழக்கங்கள்–திராவிடப் பொன்னாடு பற்றி எத்தனை இசைப்பாடல்கள்-எத்தனை சினிமாக்களிலே பிரச்சாரம்–தொண்டர்களின் உள்ளத்தில் தான் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை–பகலிலும் இரவிலும் தொடர்ந்து வந்த இந்த மாபெரும் கனவு பல உள்ளங்களை வெறி கொள்ளச் செய்தது. அந்த உள்ளங்களில் அவன் உள்ளமும் ஒன்று.

மேடைமீது ஏறிவிட்டால் சாமியாடும் பூசாரியைப் போல் ஆடித் தீர்ப்பான். 'அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு'—என்ற முழக்கத்தின் ஓசைநயம் அந்த பிஞ்சு மனத்தின் ஆசை நயத்துக்குத் தூபம் போட்டது. பின்னாளில் திரு. சம்பத் சொன்னதுபோல் 'அது ஒரு பயங்கரமான அரசியல் மோசடி' என்பதை யாரும் சிந்திக்கக்கூடவில்லை. கட்சியின்மீது நம்பிக்கை; கருத்துக்களின்மீது நம்பிக்கை; தலைவர்மீது பக்தி-ஆம் ஒரு கட்சியாக இல்லை; மதமாகவே இயங்கிற்று.

1954 ல் இருந்து 56 வரை அவன் பெரிய இலக்கிய விமர்சகனாகவும், அரசியல் ஆர்ப்பாட்டக்காரனாகவும், கவிஞனாகவும், வசனகர்த்தாவாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான்.

கவிஞன் என்பதைத்தவிர மற்ற தகுதிகளை, மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பதும் உண்மை. ஆனால் ஒவ்வொரு துறையிலும் தான் ஓங்கி வளர வேண்டும் என்று அவன ஆசைப்பட்டான்.

இந்தக் காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளைத் தேதி வாரியாகவோ, மாதவாரியாகவோ விவரிப்பதில் அர்த்தமில்லை. காரணம் ஒரே மாதிரியான சிறு பிள்ளைத் தனத்தில் தான் அவன் வருடக் கணக்கில் வாழ்ந்தான். ஆட்டம், ஓட்டம், பரபரப்பு, அடி—தடி ரகளை, கீழ்த்தரமான தாக்குதல்-தள்ளாடும் பத்திரிகை-தலையில் ஏறிய கடன்-நன்றி மறந்த ஊழியர்கள்-நன்மை செய்யாத நண்பர்கள் இதுதான் அன்றையக் கட்சி வாழ்வில் அவன் கண்ட நிலை.

வாழ்க்கையில் ஒருவனுக்குத் திட்டமில்லாமல் போனால்-அவனது எல்லா அனுபவங்களும் கசப்பாக இருக்கும் என்பதற்கு அவன் உதாரணம். தெளிவில்லாத மனது அலைபாய்வதினால் ஏற்படும் குழப்பம்—அவனுக்கே சொந்தமான ஒன்று.

ஆகவே—கட்சி வாழ்க்கையைப்பற்றி அணு அணுவாகச் சொல்வதற்கு அவனிடம் ஒன்றுமே இல்லை. கட்சியில் எந்தவித அந்தஸ்தையும் அவன் தேடவில்லை. அதற்கான



முயற்சிகளில் ஈடுபடவில்லை. அவனுக்கு ராஜதந்திரம் தெரியாது. தனக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொள்ளத் தெரியாது. தானாக வரும் கூட்டத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாது.

அவன் எப்படி அரசியலுக்கு லாயக்காவான்? ஆத்திரப் போக்கிலேயே காலம் தள்ளினான். இன்னார்—இனியார் என்ற வேறுபாடில்லாமல்—எல்லாரையுமே கண்மண் தெரியாமல் தாக்கினான்.

ஆட்களை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய சாதாரண அறிவுகூட, அன்று அவனுக்கு இல்லையென்பதை ஒப்புக்கொள்வதில் தவறென்ன?

நியாயங்களை மதித்து அநியாயத்தை எதிர்த்து, தாழ வேண்டிய நேரத்தில் தாழ்ந்து, எழ வேண்டிய நேரத்தில் எழுந்து, கொஞ்ச வேண்டிய நேரத்தில் கொஞ்சி, கோபிக்க வேண்டிய நேரத்தில் கோபித்து, அஞ்ச வேண்டிய நேரத்தில் அஞ்சி, ஆர்ப்பரிப்பு தேவைப்படும் நேரத்தில் ஆர்ப்பரித்து, வளைந்தும் குழைந்தும் நிமிர்ந்தும் வாழ வேண்டிய பூமியில் அவன் கல்லிலும் மோதினான்; காற்றிலும் மோதினான்.

ஆனால் அந்த நிலையிலும் பனித்துளியைத் தேடிப் பிடிக்கும் சக்கரவாகப் பட்சிபோல—பயனுள்ள இலக்கியங்களைப் படிக்கத் தவறவில்லை.

துன்பத்தில் இன்பம் இது. தீமையில் நன்மை இது. நஷ்டத்தில் லாபம் இது. தென்றலில் பணம் போனது, அறிவு வந்தது. கட்சியில் அறிவு போனது, தெளிவு வந்தது.

அவன் சொல்வதெல்லாம் உண்மையைத் தவிர வேறில்லை. அன்றைக் கட்சி வாழ்க்கையில் ஒவ்வொரு படியாகத் தனித் தனியாக அவன் விவரிக்கத் தொடங்கினால். ஒரே மாதிரியான அருவருக்கத் தகுந்த அம்சங்களாகவே அவை இருக்கும். ஆகவே அவற்றை அவன் விவரிக்க விரும்பவில்லை. அதில் பலனுமில்லை; சுவையுமில்லை; அது தேவையுமில்லை!

# திருச்சி மாநில மாநாடு

1957-ல் நடைபெற்ற திருச்சி மாநில மாநாடு அவன் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால் கட்சியின் சமு தாய சீர்திருத்தக் கருத்துக்கள் சரியத் தொடங்கிய கட்டம் அதுதான்.

1952-ல் சென்னையில் நடந்த மாநில மாநாட்டைவிட— திருச்சி மாநாடு அளவிலே பெரியது. கூட்டமும் அதிகம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பில் பேசினார்கள். சமு தாய சீர்திருத்தக் கருத்துக்களையும் உதிர்த்தார்கள். அந்த மாநாட்டிலேதான் — தான் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லவென்றும்—பார்ப்பனீயத்துக்கே எதிரியென்றும் அண்ணாத்துரை பேசினார்.

அந்தப் பேச்சுக்குக் காரணம் உண்டு. முன்னு லெல்லாம் பதவி தேடுவோர்—பட்டுப்பூச்சிகள்—வெட்டுக் கிளிகள் என்று பேசி வந்த அவர்—அந்த மாநாட்டில் தேர்தலில் கலந்து கொள்வதுபற்றி ஓட்டெடுப்பு நடத் தினார். 'கலந்து கொள்ள வேண்டும்' என்பதற்குச் சாதகமாக ஓட்டுகள் கிடைத்தன. அது எதிர்பார்த்தது தான். அந்த நம்பிக்கையோடுதான் அவர் வாக்கெடுப்பு நடத்தினார். ஆகவே மாநாட்டில் தனது இறுதிப் பேச்சை வாங்கப் போகிற ஓட்டுக்குச் சாதகமாகத் திருப்பினார்.

பார்ப்பனர்கள் என்னதான் ஆதிக்க வெறியர்களாய் இருந்தாலும்—அவர்களுக்கும் ஓட்டுரிமை இருக்கிறதல்லலா? அந்த ஓட்டும் அவருக்குத் தேவை அல்லவா? அதுவும் அது கூட்டமாக வந்து விழுகிற ஓட்டு அல்லவா? அதோடு அந்த நேரத்தில் சக்கரவாத்தி ராஜகோபாலாச்சாரியார் காங்கிர சோடு முரண்டிக கொண்டிருந்தார் அல்லவா!



விடுதலை வீரர் அண்ணாத்துரை ராஜ தந்திரியாகத் தொடங்கினார். சமுதாயக் கருத்துக்கள், நாத்திகக் கருத் துக்கள், மெல்ல அவரிடம் இருந்து விடைபெறத் தொடங்கின. கொள்கைகளின் முதற்கட்டச்சரிவைத் துவக்கி வைத்தது திருச்சி மாநில மாநாடு.

அந்த மாநாட்டில்தான் திரு. சம்பத் கட்சியை விட்டு விலகி விட்டதாக ஒரு புரளி கிளம்பிற்று. சம்பத் அதை மறுத்துப் பேசினார். ஒரு மணி நேரம் பேசினார். 'கொள்கைக் குழப்பங்கள்' என்பது அவர் பேசிய தலைப்பு. அவரது பேச்சின் பாணி அவனை ஈர்த்தது. எப்போதோ சில சந்தர்ப்பங்களில் அவன் சம்பத்தைச் சந்தித்துப் பேசி யிருக்கிறான். ஆனால் திருச்சி மாநாட்டில் இருந்து பல விஷயங்களையும் அவரிடமே கலந்து பேச வேண்டும். என்ற முடிவுக்கு வந்தான்.

# தேர்தலும் தேறுதலும்

தேர்தல் நாள் நெருங்கிற்று. கட்சி பல தொகுதிகளிலும் பலபேரை நிற்கவைத்தது. சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் அவன் நிற்க வேண்டுமென்று சென்னை நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் கலப்படமான சென்னை குடி வாழ்க்கையில் தனக்கு வெற்றி கிடைக்குமென்று அவன் நம்பவில்லை!

அந்தத் தொகுதியில், விருப்பம் இல்லாமலேயே ஒருவர் நிறுத்தப்பட்டுச் செலவில்லாமலேயே ஜெயித்தும் விட்டார். உள்ளங்கைக் கனிபோல் இருந்த அந்தத் தொகுதியை உதறிவிட்டு, தான் பிறந்த ஊரும் அடங்கி இருந்த தன் தொகுதியை அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அந்தத் தொகுதியில் உள்ள நண்பர்கள் அவனுக்கு அபாரமான நம்பிக்கையை ஊட்டி இருந்தார்கள். அங்கே அவன் ஜாதி ஓட்டுகள் மட்டும் பத்தாயிரத்துக்கு மேல் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஜாதியின் மொத்த ஜனத்தொகையே பத்தாயிரத்துக்கு மேல் இருக்காதே என்று அவன் சிந்திக்கவில்லை!

அவர்களும் அவனைச் சிந்திக்க விடவில்லை.

அவர்கள் சொன்ன கணக்கையெல்லாம் வைத்து அவன் தனது திருக்கோஷ்டியூர் தொகுதியில் நிற்பதென



முடிவு கட்டினான். தேர்தல் வருவதற்கு முன்னாலேயேதான் நிச்சயமாக ஒரு எம். எல். ஏ. என்று எல்லோரிடமும் சொல்லிவிட்டான். கையிலே பணமில்லை. இல்லை என்பதையும் நண்பர்களிடம் சொன்னான், ஏதோ கொஞ்சம் இருந்தால் போதும் ஜெயித்து விடலாம் என்று அவர்கள் ஆறுதல் சொன்னார்கள். அப்போது அவன் கதை எழுதிக்கொண்டிருந்த இரண்டொரு கம்பெனிகளிலிருந்து சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரை வாங்கிக்கொண்டு விண்ணப்பம் தாக்கல் செய்ய திருக்கோஷ்டியூருக்குப் புறப்பட்டான்.

முதல் கூட்டம் திருப்பத்தூரில் பேசினான். அவனுடைய சகோதரர் ஏ. எல். சீனிவாசனிடமிருந்துஒரு 'இந்துஸ்தான்' கார் வாங்கிக் கொண்டான். தன்னிடமிருந்த பழைய காரையும் எடுத்துக் கொண்டான். தொகுதி முழுவதையும் சுற்றினான். அந்தத் தொகுதியில் ஐந்துபேர் போட்டி; ஒருவர் காங்கிரஸ், ஒருவர் கம்யூனிஸ்ட், அவன் தி. மு. க, இரண்டு சுயேச்சைகள்.

அந்தத் தொகுதியில் கம்யூனிஸ்டுகளுக்குக் கணிசமான செல்வாக்கு உண்டு. அன்று அவன் கம்யூனிஸ்டுகளின் பரம எதிரி. காங்கிரசை அவன் தாக்கிப் பேசவில்லை. கம்யூனிஸ்டுகளையே தாக்கினான். வரை முறையில்லாமல் தாக்கினான். அவர்களைத் தாக்கியே போஸ்டர்கள் அச்சடித்தான். சுமார் [illegible]5 நாட்கள் தேர்தல் பிரச்சாரம், அவனிடமிருந்த பணமோ விண்ணப்பம் தாக்கல் செய்த மறுநாளோடு தீர்ந்துவிட்டது. ஒரு கார் ஓடாமல் நின்று விட்டது. சில தொண்டர்கள் மட்டும் தங்கள் கைக் காசைப் போட்டு தேர்தல் வேலை செய்தார்கள்.

அவனிடம் பணம் இருந்தபோது அதை வாங்கிப் பாத்திரம் வாங்கியவர்கள், பணம் இல்லாதபோது படுத்துறங்கி விட்டார்கள். ஊழியர் கூட்டம் போட்டான். அதில் தன்னிடம் பணம் இல்லாத நிலையை எடுத்துச் சொன்னான். கண் கலங்க ஒருவர் எழுந்தார். அவர் ஒரு ஏழை விவசாயி தன் மடியில் இருந்த ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவனி

டம் கொடுத்தார். மற்றவர்களில் சிலர் பணம் இல்லாமல் வேலை நடக்காது என்று கூறி விட்டார்கள். சிலர் எங்கிருந்தாவது கடன் வாங்குவதற்கு முயற்சித்தார்கள். அவர்கள் அனைவரிலும் அன்று நூறுரூபாய் கொடுத்தவரை நினைத்தே மெய் சிலிர்த்தான். அவர் பெயர் காளாப்பூர் அழகு என்பதாகும்.

அவ்வளவு நல்லவர் தி. மு. க. வில் வெகுகாலம் இருக்க முடியாதல்லவா? அவர் அடுத்த வருஷமே கழகத்தை விட்டு விலகி காங்கிரசில் சேர்ந்துவிட்டார்.



# தூது வந்தனர்

அவனது தேர்தல் வேலை மிகவும் புரட்சிகரமானதாகும். அவனது கழகத் தோழர்கள் அந்தக் கனத்த சரீரத்தைக் காடு மேடெல்லாம் இழுத்து அடித்தார்கள். ஏறாத வீடெல்லாம் ஏறி இறங்கினான். எவரும் தனக்கு ஓட்டுப் போடுவார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. அந்தத் தொகுதி மக்கள். கழகத்தை உற்சாகமாக வரவேற்கவில்லை.

மேடை போட்டுத் திட்டுவதையே தேர்தல் வேலையாக அவன் ஆக்கிக் கொண்டான். காங்கிரஸ் அபேட்சகரோ உள்ளாங் குருவிகளைப் பிடிப்பதுபோல் ஓட்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் அபேட்சகரோ தனக்குச் சாதகமான ஓட்டுகளை உறுதிப்படுத்திக்கொண்டு மற்ற ஓட்டுகளைக் கவர முயற்சித்துக்கொண்டிருந்தார். அவனோ எந்த ஓட்டு தனக்கு விழுமென்று தெரியாமலே ஓடிக் கொண்டிருந்தான்.

அவன் நடத்திய பிரச்சாரத்தின் வேகத்தில் வாக்காளர்கள் மயங்க வில்லையென்றாலும் காங்கிரஸ் கட்சியினர் பயந்தார்கள். அந்தத் தொகுதியில் பாராளுமன்றத்திற்கு நின்றவர் ராஜாசர். முத்தையா செட்டியார் அவர்களின் தம்பி இராமநாதன் செட்டியாராகும். அவரை எதிர்த்துப் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்டவர்கள், ஒரு கம்யூனிஸ்ட் அபேட்சகர் (பெயர் நினைவில்லை), ஒரு பி. சோ. அபேட்சகர் முத்துச்சாமி வல்லத்தரசு ஆகிய இருவரும்.

அவன்தான் ஜெயிப்பான் என்பது போல ஓர் எண்ணம் அவர்கள் அனைவருக்கும் உண்டாயிற்று. உடனே

வல்லத்தரசு அவனோடு சேர்ந்துகொண்டு பார்லிமெண்டுக்குத் தனக்கும், சட்டசபைக்கு அவனுக்கும் ஓட்டுக் கேட்கலானார். வல்லத்தரசும் அவனும் சேர்ந்து விட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் பார்லிமெண்டுக்கு நின்ற காங்கிரஸ் அபேட்சகர் ராமனாதன் செட்டியார் சார்பில் இரண்டு பேர் அவனிடம் தூது வந்தார்கள்.

அவன் சட்டசபை ஓட்டு மட்டும் கேட்க வேண்டுமென்றும் பார்லிமெண்டுக்கு வல்லத்தரசுக்காக ஓட்டுக் கேட்கக் கூடாதென்றும் அவர்கள் கூறினார்கள். அந்தச் சந்திப்பு மகிபாலன் பட்டியில் ஒரு வீட்டில் நடந்தது. தூது வந்தவர்கள் கருமுத்து தி. சுந்தரமும், பிரபல எழுத்தாளர் 'சோமலே' அவர்களும் ஆகும்.

தன்னிடம் சில பேர் தூது வந்திருக்கிறார்கள் என்ற உடனேயே அவனுக்குத் திமிர் வந்துவிட்டது. அந்தத் தூதை வைத்துத்தான் தான் ஜெயிப்போம் என்று அவன் கருத ஆரம்பித்தான். இயற்கையாகவே அவனுக்கு நம்பிக்கை இல்லை என்பது உண்மை.

சில ஊர்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கூட்டம் போட்டு அவனை வந்து அதில் ஓட்டுக் கேட்கச் சொன்னார்கள். அவனும் அங்கெல்லாம் போய் மரியாதையாக எழுந்து நின்று தானும் ஒரு நகரத்தார் ஜாதிக்காரன் என்ற முறையில் நகரத்தார்கள் தனக்கே ஓட்டுப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

தெக்கூரிலும், பூலாங்குரிச்சியிலும், நெற்குப்பையிலும் நகரத்தார் கூட்டம் கூட்டப்பட்டது. பலவான் குடி என்று ஒரு ஊர். அந்த ஊர் திருக்கோஷ்டியூர் தொகுதியின் ஒரு எல்லையாகும். அதன் மறு எல்லையில் காரைக்குடித் தொகுதி ஆரம்பமாகிறது. அப்போது காரைக்குடித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டவர் ராஜா சர். முத்தையா செட்டியார். அவர் சா. கணேசனை எதிர்த்துப் போட்டியிட்டார்.

காரைக்குடித் தொகுதி திருக்கோஷ்டியூர் பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். ஆகவே பலவான்குடி நகரத்தாக் கூட்டத்தில் ஓட்டுக் கேட்க ராஜா சர். முத்தையா செட்டியாரும், ராமனாதன் செட்டியாரும் வந்



திருந்தார்கள். அவர்கள் கேட்டு விட்டுப் போனதும் அவன் வரலாமென்று சொல்லியிருந்தார்கள்.

அப்படியே அவர்கள் போனதும் அவன் கூட்டத்திற்குள் சென்றான். கூட்டத்தில் இருந்த சூழ்நிலை அவனுக்குச் சாதகமாக இல்லை. நகரத்தார் கூட்டங்களில் ஒரு மரபு உண்டு. அதில் ஓட்டுக் கேட்கிறவர்கள் கீழே விழுந்து கும்பிட்டு விட்டு ஓட்டுக் கேட்க வேண்டும் என்பதே அது. ராஜா சர் கூட அப்படித்தான் கேட்டார் என்று அவர்கள் சொன்னார்கள். அவன் மறுத்துவிட்டான். நின்றுகொண்டே கும்பிட்டுவிட்டு அவன் ஓட்டுக் கேட்டான். கேட்டுவிட்டு—ஒரு ஓட்டுக்கூட தனக்கு வராது என்கிற முழு நம்பிக்கையோடு வெளியேறினான்.

அன்று மாலை அதே பலவான்குடி கோயில் குளக்கரையில் கூட்டம். நகரத்தார்களே தனக்கு விரோதிகள் என்ற எண்ணம் அவனுக்கு வந்து விட்டது. இந்த ஊரில் ஒரு ஓட்டுக்கூட விழாதபடி ராஜா சர். செய்துவிட்டார் என்று அவன் கருதினான். கருதியதை மனத்திற்குள் வைத்துக் கொள்வதுதான் அவனது வழக்கமில்லையே!

அன்றையக் கூட்டத்தில் அவனும் வல்லத்தரசும் பேசினார்கள். வல்லத்தரசு பேசும்போது செட்டியார்களைக் கொஞ்சம் அரவணைத்தே பேசிவிட்டார். அவன் பேசும்போது ராஜா சர்! பரம்பரையையும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களையும் கடுமையாகத் தாக்கினான். "உங்கள் ஓட்டு எனக்கு வேண்டாம் போங்கடா" என்று முடித்தான்.

சாதாரண காலத்துக்கே அந்தப் பேச்சுப் பொருந்தாது என்றால் தேர்தல் காலத்தில் எப்படிப் பொருந்தும். பெரும்பாலும் அவன் தேர்தல் நடத்திய விதமே இதுதான். கூட இருந்த தோழர்களும் அனுபவமற்ற சிறுவர்களாக இருந்ததால்—குற்றம் கண்டுபிடித்து அவனை அவர்கள் திருத்தவில்லை!

# சோதனைகள்

வேலை செய்துகொண்டிருந்த ஒரு கார்படுத்துவிட்டது. சகோதரர் கொடுத்த இந்துஸ்தான் கார் தெக்கூரில் பிரச்சாரத்திற்காகப் போனபோது ஒரு கல்லில் மோதி 'சைலன்சரை' இழந்துவிட்டது. வேறு கார் இல்லாததால் அதிலேயே அவன் பிரயாணம் பண்ண வேண்டியவனானான். திருப்பத்தூரில் அது புறப்படும் போதே இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள நெற்குப்பையில் அதன் சத்தம் கேட்கும். அதுவும் அந்தத் தொகுதி மக்களுக்கு ஒரு வகையில் நன்மையாகவே இருந்தது. அது தூரத்தில் வரும்போதே அவன் கார் வருகிறது என்பதை அறிந்து வாக்காளர் ஓடி ஒளிந்து கொள்ள வசதியாக இருந்தது.

வாடகைக்கு இரண்டு கார்கள் எடுத்திருந்தான். வாடகை பாக்கி தரவில்லை என்பதற்காக அவர்களும் போய் விட்டார்கள்.

தேர்தல் நெருங்கிவிட்டது. இன்னும் ஏழே நாள் தான் இருக்கிறது. கட்சி நிதியில் இருந்து நெடுஞ்செழியனுக்கும் மற்றவர்களுக்கும் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட அவன், தானும் கட்சியிடம் பணம் கேட்கலாம் என்ற முடிவுக்கு வந்தான். அண்ணாத்துரைக்கு ஒரு கடிதம் எழுதி நண்பரைச் சென்னைக்கு அனுப்பி வைத்தான். அந்த நண்பர் இரண்டு மூன்றுநாள் அலைந்து விட்டு ஏமாற்றத்தையே பதிலாகப் பெற்றுக் கொண்டு திரும்பி வந்தார்.

காலணாக் கூடத் தரமுடியாது என்று அண்ணாத்துரையும் நெடுஞ்செழியனும் சொல்லிவிட்டதாக அவர் கூறினார். அவனுக்கு அழுகை வந்துவிட்டது. கட்சியில் இருந்து எந்த உதவியும் பெற்றறியாத அவன் அவசர காலத்தில் கூட உதவி பெற முடியவில்லை. தேர்தல் நெருங்கிற்று. ஓடிக்கொண்டிருந்த இந்துஸ்தான் காரும் நின்று விட்டது. ஒரு பைசாக் கூட கையில் இல்லை.

ஒருவர் கடன் தருவதாக இரண்டு நாள் அலைய வைத்து மூன்றாவது நாள் மறுத்துவிட்டார். தனது சொந்த ஊரான சிறுகூடல்பட்டி கிராமத்து வீட்டில் படுத்துக்கொண்டு அவன் அழுதான். நண்பர்கள் வந்து ஆறுதல் சொல்லி அழைத்துப் போனார்கள்.

வாக்குப் பதிவு நாள் வந்தது. சாவடிகளைச் சுற்றிப் பார்க்க அவனிடம் காருமில்லை. தொண்டர்களுக்குக் காப்பி வாங்கிக் கொடுக்க அவனிடம் காசுமில்லை. ஆகவே அவனது சின்னத்தில் விழுகிற ஒவ்வொரு ஓட்டும் உண்மையான அனுதாப ஓட்டாகத்தான் இருக்க முடியுமே தவிர நோட்டு ஓட்டாக இருக்க முடியாது. விழுகிற ஓட்டு விழட்டும் என்று திருப்பத்தூர் தெருவில் நின்றுவிட்டான்.

திடீரென்று திருச்சியில் இருந்து 'அம்பி' என்னும் நண்பர் ஒரு 'பியட்' காரில் வந்தார். அந்தக் காரில் ஏறிக் கொண்டு சாவடிகளை அவன் சுற்றிப் பார்த்தான். அவர் நூறு ரூபாய் கொடுத்தார். அதைத் தொண்டர்களுக்காகக் கொடுத்தான்.

# தேர்தல் முடிவு

அன்று இரவு—அவனுக்காக வேலை செய்தவர்களெல்லாம் ஒரு இடத்தில் கூடினார்கள். 'வெற்றி நமக்குத்தான்—வித்தியாசம் எவ்வளவு என்றுதான் பார்க்க வேண்டும்' என்றார் ஒருவர். 'அதில் சந்தேகமேயில்லை; இப்போதே எம். எல். ஏ. என்று போட்டுக் கொள்ளலாம்' என்றார் ஒருவர். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை ஜெயித்தாலும் ஜெயிக்கலாம் என்று நம்பத் தொடங்கினான். 'நான் ஜெயித்து விடுவேன்' என்று நண்பர்களுக்குத் தந்தியும் கொடுத்துவிட்டான்.

மறுநாள் ஒட்டுகள் எண்ணப்பட்டன. எண்ணப்படும் இடத்தில் அவனும் இருந்தான். ஒவ்வொரு பெட்டியிலும் அவனைத் தவிர மற்றவர்களுக்கு ஒட்டுகள் அதிகமாகவே இருந்தன. அவனது சொந்த ஊரிலேயே அவனுக்கு நூறு ஒட்டுகள்தான் விழுந்திருந்தன. மாலையில் ஒட்டுகள் எண்ணி முடிக்கப்பட்டன. காங்கிரஸ் அபேட்சகர் இருபதாயிரம் ஒட்டுகள் வாங்கி யிருந்தார். கம்யூனிஸ்ட் அபேட்சகர் பதினோராயிரம். அவனுக்கு விழுந்தது ஒன்பதாயிரம். அருமையான தோல்வி. ஒன்றரை மாதச் சுவையான அனுபவ நிலைக்குப் பிறகு ஒரு கசப்பான உண்மை. அவன் நிச்சயமாகத் தோற்றுவிட்டான்.

திருப்பத்தூர் நகரத்தில் மட்டும் மற்றவர்களை விட அவ



னுக்கு அதிகமான ஒட்டுகள் வந்திருந்தன. அவன் வாங்கிய ஒன்பதாயிரம் ஒட்டுகளில் திருப்பத்தூரில் கிடைத்தது மட்டும் நாலாயிரம். கிடைத்தென்ன பயன்? அவன் தோற்று விட்டான்.

தோற்ற உடனேயே அவன் புத்தி வேறு விதமாக வெறி கொண்டது. அதுவரை அவன் பரம வைரியாகப் பேசி வந்த கம்யூனிஸ்ட் அபேட்சகருடன் உடனே சேர்ந்து கொண்டான். ஏனென்றால் அவரும் தோற்றவரல்லவா? இரண்டு பேரும் சேர்ந்து வாக்கு எண்ணப்பட்ட இடத்தில் இருந்து ஊர்வலமாக திருப்பத்தூர் கடைவீதிக்குப் போனார்கள். அங்கே அவன் தன் ஒட்டுப் பெட்டியை உடைத்து ஒட்டுக்களைத் திருடி விட்டார்கள் என்று பேசினான். ஜெயித்த காங்கிரஸ் அபேட்சகரைத் திட்டினான். 'அவர் ஒழிக' என்றான் அடுத்த தடவை நானும் கம்யூனிஸ்ட்டுகளும் ஒன்றாகச் சேர்ந்து போட்டியிடுவோம் என்றான். பேசினான் என்பதை விட தோல்வியால் பிதற்றினான் என்பது பொருந்தும்.

அந்த ஊரில் இருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. கடன் பாக்கிக்காக 'மைக்'காரனும் சைக்கிள்காரனும் கடைக்காரனும் இரவிலே வந்து நின்றார்கள். சென்னைக்குப் போய் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு அன்று இரவே புறப்பட்டுவிட்டான். அதற்குள் அவன் ஜெயித்து விட்டதாகக் கழக நண்பர்கள் பல இடங்களிலே போர்டு எழுதி வைத்து விட்டார்கள்.

மறுநாள் பத்திரிகைச் செய்தி வரும்வரை அந்தப் போர்டுகள் இருந்தன.

# தயாரிப்பாளன் ஆனான்

தேர்தலில் தோற்று அவன் சிறிதளவே கடன் பட்டிருந்தான். அவ்வளவு பெரிய பேச்சாளன், அவ்வளவு பெரிய எழுத்தாளன் அவனுடைய தகுதிக்குக் குறைந்த அளவு கடன் படலாமா? எப்படியாவது சொந்தத்தில் ஒரு படம் பிடித்து விட வேண்டும் என்று முயன்றான். 'ஊமையன் கோட்டை' என்றொரு கதை எழுதினான். கழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் அன்றைக்கு அவனுக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். தொழிலிலும் அவர் நண்பராகவே இருப்பார் என்று அவன் கருதியது தவறுதானென்றாலும், பெருகி வந்த ஆசையால் அவரை நண்பரென்றே கருதி ஒப்பந்தம் செய்து விட்டான். அவனும் அந்த நடிகரும் நண்பர்கள் என்பதற்காகவே துணிந்து ஒருவர் பணம் கொடுக்க முன் வந்தார். படத்தின் ஆரம்ப விழாவன்று 'இதை என் சொந்தப் படம் போல் கருதி முடித்துக் கொடுப்பேன்' என்றும் அவர் பேசினார்.

ஆரம்பித்த இரண்டு மாதத்திற்குள் அறுபத்திரெண்டாயிரம் ரூபாய்கள் செலவாகிவிட்டன. நடிகர் 'கால்ஷீட்' கொடுக்கவில்லை. முகம் கொடுத்தும் பேசவில்லை. ஒருவன் நல்ல நடிகனென்றால் அவன் நண்பர்களிடமும் நடிக்க வேண்டும் என்ற விதிப்படி அவனிடமே அவர் நடித்து விட்டார்; ஆனால் படத்தில் நடிக்கவில்லை!

படம் பாதியில் நின்றது. பணம் கொடுத்தவருக்கு அவநம்பிக்கை வந்தது. அவர் கோர்ட்டுக்குப் போனார்; அவன் வீட்டுக்குப் போனான்.



தேர்தலில் மூவாயிரம் ரூபாய் கடன்பட்டு அதைத் தீர்க்க சினிமாப் படம் எடுக்க வந்து அதில் அறுபத்திரெண்டாயிரம் ரூபாய் கடனாகிவிட்டது. ஆனாலும் படம் எடுக்கும் ஆசை அவனை விடவில்லை. முன்பு தேர்தலில் வாக்குப் பதிவு நாளன்று காரோடு வந்து நூறு ரூபாய் உதவினாரே அம்பி என்ற நண்பர், அவரைத் தேடித் திருச்சிக்குப் புறப்பட்டான். திருச்சிக் காற்று அவனுக்குச் சாதகமாக அடித்தது. அம்பியும் அவனது நண்பர்களும் அவனுக்கு உதவ முன்வந்தார்கள். கொஞ்சம் பணமும் ஒரு இந்துஸ்தான் டிராவெலர் வேனும் கொடுத்தார்கள்.

அன்று ஜனவரி 5-ந் தேதி. பொழுது விடிந்தால் ஆறும் தேதி. அன்றுதான் சென்னையில் நேருவுக்கு கறுப்புக் கொடி காட்ட தி. மு. கழகம் திட்டமிட்டிருந்தது. 5-ம் தேதியன்றே பல பேரைக் கைது செய்திருக்கிற செய்தி திருச்சிக்கு வந்துவிட்டது. பணத்தையும் காரையும் பெற்றுக் கொண்ட அவன் சென்னைக்குப் போனால் தன்னைக் கைது செய்து விடுவார்கள், பணம் கொடுத்தவர்களுக்கு அவநம்பிக்கை வந்து விடுமே என்று பயந்தான். அதனால் சென்னைக்கு வராமல் நேரே பெங்களூருக்குச் சென்றான்.

கறுப்புக் கொடி நிகழ்ச்சி முடிந்தவுடன் சென்னைக்குத் திரும்பினான்.

கறுப்புக் கொடி நிகழ்ச்சியைப் பற்றி ஒரு கவிதை எழுதினான். அந்தக் கவிதையின் மூலம்தான் போராட்டத்தில் கலந்துகொள்ளாத 'பாவ'த்தைத் துடைத்துக்கொண்டான்.

சரத் சந்தரரின் 'சந்திரநாத்' என்ற கதையைத் தழுவி 'மாலையிட்ட மங்கை' என்ற தலைப்பில் ஒருகதை எழுதினான். பதினேழுபாட்டுக்களோடு அதனைப்படமாகத் தயாரித்தான். மூன்றே மாதங்களில் முடிந்துவிட்ட அந்தப் படம் அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

ஆனால் அந்தப் படத்தை எடுத்த விலைக்கே ஒருவருக்கு விற்றுவிட்டான். அதில் லாபம் முழுவதும் அவருக்குப்

போய்விட்டது. அடுத்து 'சிவகெங்கைச் சீமை' என்ற தலைப்பில் ஒரு படத்தை எடுத்தான். அந்தப்படம் எடுக்கப் படும் போதே அது பற்றி அரசியலில் கட்சி-பிரதி கட்சிகள் தோன்றின.

அதை வேறொரு படத்திற்குப் போட்டியாகவே அவன் எடுத்தான். அந்தப் படம் எவ்வளவோ தரமான படமாக இருந்துங்கூட-போட்டிப்படத்தின் நட்சத்திர மரியாதைக்கு முன் வீழ்ச்சியடைந்துவிட்டது. அறுபத்தி ரெண்டாயிர மாக இருந்த கடன் ஒன்றரை லட்சமாக மாறிற்று.



# மாநகர் மன்றத்தேர்தல்

இந்த நிலையில் சென்னை மாநகர் மன்றத்தேர்தல் வந்தது. பொதுத்தேர்தல் முடிந்து திருக்கோஷ்டியூரில் அவன் தோல்வி யுற்று, சென்னைக்குத் திரும்பிய உடனேயே சென்னையில் திரா விட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைக் கண்டான்.

அப்போதே 'தென்ற'லில் ஒரு தலையங்கம் எழுதினான். 'அடுத்த மாநகர் மன்றத் தேர்தலில் முன்னேற்றக் கழகத் தவரே மேயராக வருவார்' என்று அதில் அவன் குறிப் பிட்டான்.

அந்த நம்பிக்கையைத் துணை கொண்டு இப்போது தேர்தல் வேலைகளிலே இறங்கினான். அந்தத் தேர்தலில் சென்னையில் தி. மு. க. வுக்காக அதிகம் உழைத்தவர்கள் அவனும் நடிகர் டி. வி. நாராயணசாமியுமே யாவர்.

உடலுழைப்பு, வாகன உதவி, பொருள் உதவி அனைத் தும் அவர்கள் இருவருமேசெய்தார்கள். சிவகெங்கைச் சீமைப் படம் வெளியாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் தேர்தல் நடந்ததால் அவன் கையில் அதிகப் பணம் புழக்கம் இருந்தது. பல தொகுதிகளில் அவன் தன் பணத்தைச் செலவழித்தான். காய் கறிகளுக்குப் போடப்பட்டிருந்த வரி களையே பிரச்சாரத்திற்குப் பொருளாகக் கொண்டான். அவன் எதிர்பார்த்ததுபோல் தி. மு. கழகம் பெரும்பான்மை யாக வெற்றி பெற்றது. அண்ணாத்துரையே திகைத்தார், ஏனென்றால் அவர் எதிர்பார்க்கவில்லை. வெற்றி பெற்ற கவுன்சிலர்கள் பலர் அவனது கம்பெனிக்கே முதலில் அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் போனார்கள்.



# கணையாழியும் கசப்பும்

கடற்கரையில் மாபெரும் பாராட்டுக் கூட்டம். வெற்றி பெற்ற கவுன்சிலர்கள் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். நடுவிலே அண்ணாத்துரை. அவர் பக்கத்திலே கருணாநிதி. கவுன்சிலர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். பலர் பாராட்டிப் பேசுகிறார்கள். தேர்தலில் கடுமையாக உழைத்த அவனும் மற்றவர்களும் அனாதைகள் போல் ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறார்கள்.

கருணாநிதி பேசுகிறார். அந்த வெற்றிக்குத் தானே கஷ்டப்பட்டவர்போல் பேசுகிறார். இவ்வளவு பேர் ஜெயிப்பார்கள் என்று ஏற்கனவே தனக்குத் தெரிந்ததாகவே பேசுகிறார்.

அடுத்தாற்போல் அண்ணாத்துரை சென்னை மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார். காங்கிரசை வீழ்த்திவிட்ட பெருமையைப் பேசுகிறார். வெற்றிக்காக உழைத்தவர்கள் பட்டியலைச் சொல்லுகிறார். அதில் தன் பெயரும் வரும் என்று அவன் காத்துக் கொண்டிருக்கிறான். அந்தோ, அப்படி ஒருவன் உலகத்தில் இருப்பதாகவோ, அவன் தேர்தலில் உழைத்ததாகவோ அவர் சிந்திக்கக்கூடவில்லை. அது மட்டுமா அவர் செய்தார்? வருணனைகளோடு ஒரு விஷயத்தை ஆரம்பித்தார்.

''நான் என் மனைவிக்கு நகை வாங்கக்கூடக் கடைக்குச் சென்றதில்லை, எனக்கென்றுகூட நான் நகைக் கடை ஏறிய





தில்லை, இன்று மதியம் வேகாத வெயிலில் ஊரெங்கும் அலைந்து கடையெங்கும் தேடிவாங்கி வந்தேன் ஒருகணையாழி; அந்தக் கணையாழியை இந்த வெற்றியை ஈட்டித் தந்த என் தம்பி கருணாநிதிக்கு அணிவிக்கிறேன்.'' கூட்டத்தில் பெருத்த கையொலி. கருணாநிதி வாழ்க! என்ற முழக்கம். அவன் கூனிக் குறுகினான். பயன் கருதாத உழைப்பு அரசியலில் எப்படி அலட்சியமாக ஒதுக்கப்படும் என்பதை அப்போதுதான் அவன் கண்டான்.

பெரிய ஜாதிக்காரனையும் சிறிய ஜாதிக்காரனையும் ஒரே மாதிரியாக எப்படி ஜாதி வெறி ஆட்டிவைக்கிறது என்பதை அன்று அவன் நேருக்கு நேர் பார்த்தான்.

அண்ணாத்துரை அவன் இதயத்திலிருந்து சரியத் தொடங்கினார். அவரை வரம்பு மீறிப் புகழ்ந்து கொண்டிருந்த அவன் உள்ளத்தில் அன்றுதான் அவரைப் பற்றிய கசப்பான எண்ணம் உதயமாயிற்று. ஒரு களங்கமற்ற பக்தனை அன்று அவர் இழக்கத்தொடங்கினார். அவன் இதயம் நெருப்பாகவே எரிந்தது. கூட்டம் முடிந்து அவர் கடற்கரை மரக்கலத்தின் மீது போய் அமர்ந்தார்.

அவன் நேரே அவரிடம் போனான். ''என்ன அண்ணா! இப்படிச் சதி செய்து விட்டீர்கள்?'' என்று நேருக்கு நேரே கேட்டான்.

''அட நீயும் ஒரு மோதிரம் வாங்கிக் கொடு. அடுத்த கூட்டத்தில் போட்டு விடுகிறேன்'' என்றார்.

''அப்படித்தான் கருணாநிதியும் வாங்கிக் கொடுத்தாரா?'' என்று அவன் கேட்டான்.

''அட சும்மா இரு. அடுத்தத் தேர்தல் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

அவன் அவரிடம் சொல்லிக் கொள்ளாமலேயே நடக்கலானான்.

அவன் கண்களில் நீர் மல்கிற்று. பயன் கருதி அவன் உழைக்கவில்லை என்றாலும் உழைத்தவனுக்கு ஒரு நன்றிகூட இல்லையே என்று கலங்கினான்.

கட்சியிலும் அண்ணாத்துரை மீதும் அவன் வைத்திருந்த பிடிப்பு நெல்லின் உமி சிறிது நீங்குவதுபோல நீங்கத் தொடங்கிற்று!

# இலங்கை வேந்தன்

அண்ணாத்துரை அவனுக்கு இழைத்த தீமையை விட—
அவன் தனக்கே இழைத்துக் கொண்ட பெருந்தீமை—'கவலை
இல்லாத மனிதன்' என்ற தலைப்பில் மூன்றுவது படம்
எடுத்ததாகும்.

அமைதியற்ற நெஞ்சம், உட்கார்ந்து சிந்திக்க முடியாத
அளவு கவலை, இந்தச் சூழ்நிலையில்—எதையோ நினைத்து
எதையோ எழுதி அதையொரு கதையென்று படமெடுக்க
ஆரம்பித்தான். அந்தப் படத்தில் அவன் செய்த எல்
லாமே தவறு.
முன்பின் தொடர்பில்லாத குழப்பமான கதை.
பொருத்த மில்லாத நடிகர்கள். கடன் வாங்கிப் படம்
பிடிக்கும் சூழ்நிலை. அவனுடைய பங்காளியாக இருந்த
வரோ இது என்ன காகிதம் என்று பாராமலேயே கையெழுத்
துப் போடுபவர். வேலை பார்த்த ஊழியர்களில் சிலரோ—
எடுத்த வரை லாபமென்று கருதுகிறவர்கள். இதில் கம்
பெனியைக் கவனிக்காமல் அவன் செங்கல்பட்டு மாவட்டத்
தில் கட்சிப் புரட்சி நடத்தியது—இவ்வளவும் சேர்ந்து 1960
செப்டம்பர் மாதத்தில் படம் வெளியான போது அவனைப்
பெரும் கடன் காரனுக நிறுத்தின. அன்றையக் கணக்குப்
படி ஐந்து லட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் ரூபாய்க்கு
அவன் கடன் காரனுய் ஆகி யிருந்தான்.

பின்னுளில் அது வட்டியேறி ஏழு லட்சமாகப் பரிண
மித்தது. ஒரு கடன் பத்திரத்தில் கூட அவன் கையெழுத்துப்
போட்டதில்லை! யார் யாரிடம் எவ்வளவு கடனென்று



அவனுக்கே தெரியாது. பங்காளி போட்ட கையெழுத்துக்
கெல்லாம் அவனே ஆளானுன்.

பங்காளி கொடுத்த கணக்கின்படி அவ்வளவு கடன்.
ஆனால் அவர் கொடுக்காத கணக்கின்படி பலபேர் வந்தார்
கள். அவர்களில் பலரின் முகத்தைக்கூட அவன் அப்பொழு
துதான் பார்த்தான். தூக்கம் பிடிக்கவில்லை. உணவு
செல்லவில்லை. துடித்தான்; துவண்டான்!

கம்பெனியை இழுத்து மூடினுன். கம்பெனிக்குச் சொந்த
மாகப் பதினேரு கார்கள் இருந்தன. அவ்வளவு கார்களி
லும் கழுத்தளவு கடன் இருந்தது.

அந்தந்தக் கார்களை அதனதன் மீது பணம் கொடுத்தவர்
களிடமே கொண்டுபோய் விட்டுவிட்டான். ஆரம்பமா
யிற்று துயரம். தினசரி தபால்காரன் ரிஜிஸ்தர் தபால்
களோடு வீட்டுக்கு வரத் தொடங்கினுன். அந்தத் தபால்
கள் ஒவ்வொன்றின் மீதும் ஒவ்வொரு வக்கீலின் பெயர்
இருக்கும். விடிந்தால் எழுந்தால் வக்கீல் நோட்டீஸ் வந்து
கொண்டே இருந்தது.

பரிகாரம் ஒன்றும் தோன்ற வில்லை. கடன் கொடுத்
தவர்கள் எல்லோருக்கும் கடிதம் போட்டு, ஒரு குறிப்பிட்ட
நாளில் திரு. ஏ. சுப்பையாச் செட்டியார் அவர்கள் வீட்
டிற்கு வரும்படிக் கேட்டுக்கொண்டான்.

திரு. சுப்பையாச் செட்டியார் இந்தியாவிலேயே மிக
உயர்ந்த மனிதர்களில் ஒருவர். பிள்ளை குட்டி இல்லாதவர்.
அடுத்தவன் பணத்திற்கு ஆசைப்படாதவர். பெரும் வட்டி
வாங்குகிறவர்களைக் கோபிப்பார். கடன் வாங்கவும்
கூடாது. கடன் கொடுக்கவும் கூடாது என்று இருப்பவர்.

சென்னையில் எவ்வளவு பெரிய சிக்கலும் மத்தியஸ்தத்துக்
காக அவரிடம்தான் வரும். மார்வாடிகளில் இருந்து சாதா
ரண லேவாதேவிக்காரர்கள் வரை பலரும் அவரைத்தான்
தங்கள் நீதிபதியாகக் கருதி யிருந்தார்கள். எவ்வளவு பெரிய
வழக்கையும் கோர்ட்டுக்குப் போகாமலேயே தீர்த்து
வைத்து விடுவார். திட்டமிட்ட வாழ்க்கை; தெளிவான

நெஞ்சம்; சிக்கலுக்குப் பரிகாரம் காணும் நுண்மாண் நுழை புலம் அவரை நாடிச் சென்று தங்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ளாமல் திரும்பியவர்கள் அரிது.

ஆகவே அவரை மத்தியஸ்தராக வைத்துக் கடன்களைப் பைசல் செய்வதென்று எல்லோரையும் அவன் அங்கே கூட்டியிருந்தான். சிலர் வந்தார்கள்; சிலர் வரவில்லை. வந்தவர்களிடம் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து விடுவதென்று முடிவு செய்யப்பட்டது வராதவர்கள் அனைவரும் நேரே கோர்ட்டுக்கே சென்று விட்டார்கள்

மூன்று மாதங்களுக்குள்ளாக 34 வழக்குகள் கோர்ட்டுக்கு வந்து விட்டன. நேரே வழக்கறிஞர் வி. பி. இராமனிடம் சென்றான் அவன். அவரை அவன் தன் வாழ்நாளில் மறக்க முடியாது. அவர் அவனுக்குப் பெரும் உதவி செய்தார். ஒரு வருஷத்துக்குள் சம்பாதித்துக் கட்ட முடியுமா என்று கேட்டார். 'முடியும்' என்றான் அவன்.

ஒரு பக்கம் கடன் வந்தால் ஒரு பக்கம் வரவு வர வேண்டும் அல்லவா? அந்தப் பக்கம் அடி விழுந்த போது இந்தப் பக்கம் அவனுக்கு ஏராளமான படங்களுக்குச் சந்தர்ப்பம் வந்தது. நோட்டெழுதி வாங்கிய கடனுக்குப் பாட்டெழுதி வாங்கிய பணம் போகத் தொடங்கிற்று!

தனக்கு வரும் பணத்தைத் தான் சேர்த்து வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை அவன் இழந்து விட்டான். அரசியலில அண்ணாத்துரையும் அவரது ஜாதி வெறியும் தன்னை ஒதுக்குவதை எண்ணிக் கலங்கினான். எல்லாத் துன்பங்களும் ஒரே நேரத்தில் வந்து சேர்ந்தன.

உலகத்தில் தான் சில காவியங்களைப் படைக்க முடியும் என்று நம்பிக் கொண்டிருந்த அவனை—அந்த நம்பிக்கையும் கை விடத் தொடங்கிற்று. நிம்மதியில்லாத நெஞ்சில் கற்பனை எங்கிருந்து வரும். சினிமாப் பாடல்களுக்கே அந்தக் கற்பனை பயன்படத் தொடங்கிற்று.

இனியும் பயனற்ற கட்சி வேலை செய்து கட்சித் தலைவரின் பாவங்களுக்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்று அவன் முடிவு கட்டினான். ஊட்டி குன்னூர் பகுதிகளில் ஒப்புக்



கொண்டிருந்த கூட்டங்களைத் தவிர—மற்ற கூட்டங்களை ரத்துச் செய்தான்.

தன் மனக்கிடக்கையை ஒரு தத்துவக் கட்டுரையாக வடித்தான். அதுவரை அவன் மனத்தில் அப்படியொரு கவனம் இருப்பதாக கட்சியில் யாருக்கும் தெரியாது. ஆனால் அந்த ஆண்டு அவன் கட்சியில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வில்லை என்பது மட்டும் அனைவருக்கும் தெரியும்.

அந்தக் கட்டுரை கட்சித் தோழர்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கிற்று. உட்கிடக்கையைச் சரிவரப் புரிந்து கொள்ள அவர்களில் பலரால் முடிய வில்லையென்றாலும்—அதன் தலைப்பு அவர்களைச் சங்கடப் படுத்திற்று.

'போய் வருகிறேன்' என்பதே அந்தத் தலைப்பாகும்.

அந்தக் கட்டுரை இது தான் :

## போய் வருகிறேன்!

என் இனிய நண்பர்களே!

தூய்மையான உங்கள் இதயங்களைக் கொஞ்சம் இந்தப் பக்கம் திருப்புங்கள்

நல்லோர் உரைகளைக் கேட்டுக் கேட்டு, மெல்லிய பண்பு படைத்த உங்கள் செவிகளைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் விழுந்துவிடப் போகிறது

உங்கள் சோலையிலிருந்து ஒரு குயில் கண்காணா உலகத்திற்குப் பறந்து செல்லப் போகிறது.

உங்கள் மலர்த் தோட்டத்திலிருந்து ஒரு மலர் உதிர்ந்து விடப்போகிறது.

உங்கள் கூடத்தில் கட்டப்பட்டிருந்த நன்றி மிக்க ஒரு உருவம், தன் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு போய்விடப் போகிறது.

தனக்கென வாழ்ந்து பழக்கமில்லாதது என்று உங்களால் சொல்லபபட்ட ஒரு இதயத்தை, நீங்கள் இழந்துவிடப் போகிறீர்கள்.

இருள் கப்பியதும், சோகமயமானதுமான
முடிவை, உங்கள் தோழன் பெறப் போகிறான்.
முடிவின் தலைவாசலில் நின்றுகொண்டு, அவன்
உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறான்.
முடிவின் கதவுகள், திறந்து வைக்கப்பட்டிருக்
கின்றன.
அந்த வாசலிலே நிற்கின்ற உங்கள் நண்பன்,
சிரந்தாழ்த்திக் கடைசிமுறையாக உங்களைப் பார்த்
துக் கொண்டிருக்கிறான்.
துள்ளித் துடித்துக் கொண்டிருந்த அவனது
போராட்ட இதயம், மெல்ல மெல்ல அமைதி
அடைந்து கொண்டிருக்கிறது.
எந்தக் கடமையை முழு மனதோடும், யாரு
டைய தூண்டுதலும் இல்லாமல்ஏற்றுக்கொண்டிருந்
தானோ, அந்தக் கடமையிலிருந்து ஓய்வு பெறப்
போகிறான்.
அவன் இந்த முடிவை விரும்பவில்லை.
இந்த முடிவு அவனை விரும்புகிறது.
தாண்ட முடியாத உங்கள் அன்பு வேலியை,
அவன் தாண்டிக் கொண்டு ஓடப் போகிறான்.
அடர்ந்த காடும், பசுமை நிறைந்த மரங்களும்,
மணம் பரப்பும் மலர்களும், சலசலவென ஓடிக்
கொண்டிருக்கும் நதியும், அந்த நதியின், கரையி
லுள்ள அழகிய சிறு இல்லமும், அமைதியை நாடும்
அவன் கண்களுக்குத் தெரிந்து கொண்டிருக்
கின்றன.
அவன் இனிச் சுதந்திரம் நிறைந்தவன்.
அவன் இனி, தனி மனிதன்.
ஆனால்............
எந்த மூலையிலிருந்தாலும், அவன் உங்களையே
சிந்தித்துக் கொண்டிருப்பான்.
கன்னங்கரிய காகங்களையும் குயில்களையும்
காணும் போதும், செக்கச் சிவந்த செம்போத்துப்
பறவைகளையும் பார்க்கும் போதும், உங்கள் அணைப்



பிலே அவன் மகிழ்ந்து கொண்டிருந்த இன்பகர மான நாட்களை எண்ணிக் கொண்டிருப்பான்.

கனவுகளிலும் நினைவுகளிலும், எளிய கவிதை மலர்களைப் பறித்துக் கொண்டிருந்த அவனது உள்ளம், உங்களுக்காகவே ஏங்கிக் கொண்டி ருக்கும்.

ஒருவேளை மறுபடியும் அவன் உங்களைச் சந்திக்க நேர்ந்தால், ஊமை தான் கண்ட கனவுகளை சைகையில் விளக்குவதுபோல், தத்துவங்களால் விமர்சனம் செய்து கொண்டிருப்பான்.

எதையும்பொருட்படுத்தாதவனாகவும், எதிலும் அகப்பட்டுக் கொள்ளாதவனுமாகத்தான் இதுவரை அவன் உங்களோடு வாழ்ந்திருந்தான்.

அவனது வாழ்க்கை, வேடிக்கையான நாடக மாக முடிந்துவிடப் போகிறது.

பதவி வேண்டும்; பதவிக்குமேல் பதவி வேண் டும் என்று அவன் அடித்துக் கொண்டதை எப்போ தாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

தன்னைப் பற்றித் தானே விளம்பரம் செய்து கொள்ளும் வேடிக்கை மனிதர் கூட்டத்தில், எப்போ தாவது அவனை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா?

இன்னொருடைய கண்ணீருக்கு, அவன் காரண மாயிருந்தான் என்று எப்போதாவது அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அவன் 'ஜார்' மன்னனின் நிழலில் குடியிருந் திருக்கிறான்.

அவன் 'சார்லசி'ன் குணங்களை அனுபவித் திருக்கிறான்.

ஆனால், அவன் மட்டும் 'பைர'னாகவே வாழ்ந் திருக்கிறான்.

ஏனோ அவன் மனம் சலித்துவிட்டது.

அவன் வேலை பார்த்த அரசாங்கம், அவனை நிம்மதியில்லாமல் அடித்துவிட்டது.

உள்ளதை உள்ளபடி சொல்வது எவ்வளவு
பெரிய தவறு என்பதை அவன் அனுபவ பூர்வ
மாகக் கண்டு விட்டான்.

நெஞ்சத்தால் ஒரு மனிதன், சொல்லால் ஒரு
மனிதன், செயலால் ஒருமனிதன், என்று ஒவ்வொரு
மனிதனும் மூன்று வடிவம் எடுக்கும் உலகத்தில்
அவன் மட்டும் ஒரே மனிதனாக வாழ்ந்துவிட்டான்.

அவன் அன்போடு கைபோட்ட சில தோள்
களில், முட்செடிகள் கத்தை கத்தையாக வளர்ந்
திருந்தன.

யாரைக் குத்துகிறோம் என்று தெரியாமலேயே
அவன் கையைக் கிழித்துவிட்டன.

கையில் ரத்தம் வடிகிறது என்று கதறினான்.

அதை எப்படி நீ சத்தம் போட்டுச் சொல்ல
லாம் என்று சிலர் கோபித்தனர்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

கூடவே அழுகையும் வந்தது.

ஊமையாகவே இருந்துவிட்டான்.

என் அருமை நண்பர்களே!

இது அவனுக்குப் பழக்கமில்லாத ஒன்று.

இரகசியங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவ
னுக்குத் தெரியாது.

அதிலும், பத்துப்பேரின் கட்டளைக்குப் பயந்து
தான் தவறென்று நினைப்பதைச் சரியென்று மாற்
றிக் கொள்ள அவன் தயாராக இல்லை.

உங்கள் குழப்பம், அவனுக்குப் புரிகிறது.

நீங்கள் இதற்கெல்லாம் உட்பொருள் கற்பித்
துக் கொண்டிருக்க வேண்டாம்.

பல காலமாக உள்ளடக்கிக் கொண்டிருந்த
விஷயங்களைத்தான், மரணப்படுக்கையில் ஒருவன்
சொல்லுவான்.

இது, அவனது மரணப்படுக்கையே!

இந்தப் படுக்கை அவனுக்குச் சம்மதமே.

பிரிவின் துயரம் அவனை உறுத்திக் கொண்டே



இருந்தாலும், உங்கள் நலன் கருதியே அவன் புறப்
படுகிறான்.

இனி, அவனை நீங்கள் எந்தப் பகுதியிலும்
சந்திக்க மாட்டீர்கள்.

யாருடைய மாளிகையிலும் அவன் மணமக
னாகக் காட்சி தர மாட்டான்.

வேறு எவனுடைய சந்நிதானத்திலும், அவன்
பக்தனாக நிற்க மாட்டான்.

முடியுமானால், அவன் பழைய பக்தர்களுக்குத்
தெய்வமாக விளங்குவான்.

சோழச் சக்கரவர்த்தியின் மாளிகையைப்
போல், பாடும் பாணர் கூட்டமும், பரிசில் பெறும்
புலவர் கூட்டமும், நண்பர் கூட்டமும் நிறைந்த தன்
கவிதை மாளிகையில், அவன் இனித் தத்துவக் கன
வுகள் கண்டு கொண்டிருப்பான்.

தான் நினைக்கும் அனைத்தையும் உரத்த குரலில்
பாடுவான்.

ஒவ்வொரு வார்த்தையையும் முத்துச் சரம்
போல் கோர்ப்பான்.

உங்கள் இதயத்தையும் காதுகளையும் அவன்
தடவிக் கொண்டிருப்பான்.

பழைய பாணர் பரம்பரையில் ஒருவனாகவே
அவன் தன்னை முடிவு கட்டிக் கொள்வான்.

அவன் எப்போதும் உங்கள் நண்பன்.

நீங்கள் அவனை மறந்து விடலாம்.

நிச்சயமாக அவன் உங்களை மறக்க மாட்டான்.

எப்போதாவது தற்செயலாக நீங்கள் அவனைச்
சந்திக்க நேர்ந்தால், அவன் கண்களிலே கண்ணீர்
வரும்.

அந்தக் கண்ணீர், அவன் மாறவில்லை என்
பதைக் காட்டும்.

என் இனிய நண்பர்களே!

உங்கள் இதயங்களை மூடிக் கொள்ளுங்கள்.

என் இனிய நண்பர்களே!

மீண்டும் கொஞ்சநேரம் உங்கள் இதயங்களையும் காதுகளையும் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்.

மீண்டும் அந்த வேடிக்கை மனிதன் உங்களுக்குச் சில செய்திகளைச் சொல்ல இருக்கிறான்.

யார் மீதும்அவன் குற்றம் சாட்டவில்லை.

நீங்கள் சம்பந்தப்பட்டுள்ள எந்தக் காரணங்களைக் கொண்டும், அவன் தன் முடிவுகளைச் செய்யவில்லை.

எப்போதும் அவன் எதையாவது சொல்லிக் சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம்.

அந்த எதிலும், ஏதாவது சில உண்மைகள் இருப்பது வழக்கம்.

கேளுங்கள்!

காலங்களால் பிரிக்கப்பட்ட அவனது சமுதாயத்தின் ஒரு பகுதி, கடல் கடந்து ஓலமிட்டது.

கிழக்கு வானத்தைப் பார்த்துப் பார்த்து, அங்கே உதிக்கும் கதிரவன் தன் வாழ்விலும் உதிப்பான் என்று, அந்தப் பகுதி எதிர்பார்த்து நின்றது.

தொல்லைகள் தோன்றும் போதெல்லாம், கீழ்த்திசையையே பார்த்துப் பார்த்து, அது பெருமூச்சு விட்டது.

'நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? எங்கள் கரங்கள் கட்டப்பட்டதையும், கைகள் வெட்டப்பட்டதையும் நீங்கள் கவனிக்கவில்லையா?

இதோ பாருங்கள்!

உங்கள் சகோதரர்களின் இரத்தம், கடற்கரை மணலைச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

''ஒருவரை யொருவர் அணைத்தவாறு நாங்கள் அலறும் குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா?''— என்று அந்தப் பகுதி குமுறிக் கேட்டது.

''எங்களுக்குப் பசிக்கிற''தென்று பக்கத்திலிருந்த ஒரு குரல் ஓலமிட்டது.

அவன் இவற்றைக் கவனித்தான்.



கவனித்தால் பேசுவதற்கு விஷயம் கிடைக்குமென்று, அவன் கவனிக்கவில்லை.

இந்த அவலத்தையும் ஓலத்தையும் பற்றிப் பாடினால், பாட்டுக்கு மதிப்பேறும் என்றும் அவன் பாடவில்லை.

சராசரி மனிதர்களில் ஒருவனாகவே, அவன் அவற்றைக் கவனித்தான்.

நிலைமை என்னவென்று அவனுக்குப் புரிந்தது.

நியாயம் எந்த வழியில் கிடைக்குமென்று அவனுக்குத் தெரிந்தது.

பாம்பைக் கம்பால் அடிக்க வேண்டும்,

வலைவீசியும், தூண்டிலிட்டும் மீனைப் பிடிக்க வேண்டும்.

பறவையைக் கண்ணிவைத்து மடக்கவேண்டும்.

ஆனால்,

தூண்டிலிட்டுப் பாம்பைப் பிடிக்க முடியாது.

கம்பாலடித்துப் பறவையைப் பிடிக்க முடியாது

பயங்கர மிருகங்களைக் கொல்வதற்கு பயங்கர ஆயுதங்கள் தேவை.

அற்புதமான பாடல்களைப்பாடி, புல்லாங்குழலில் இனிய கீதங்களை வாசித்து, வீணையை மீட்டி யானையை மடக்கிய சரித்திரத்தை அவன் படித்ததில்லை.

கூண்டில் அடைபட்ட புலி, வித்தைக்காரனைக் கொஞ்சியும், கெஞ்சியும் விடுதலை பெற்றதில்லை.

தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் காட்சியையும், மகிழ மலர்கள் பூத்துக்குலுங்கும் அழகையும், கன்னி வயதிலேயே நரைத்துவிட்ட கூந்தலைப் போல், மலையருவி விழும் சிறப்பையும், பெண்களை விட்டுப் பறந்து வந்த கண்களைப்போல், வண்டுகள் பறந்து திரியும் அலங்காரத்தையும், வந்ததுதான் வந்துவிட்டோம், வளர்ந்துதான் பார்ப்போமே என்று பனையும், தென்னையும், வான் பார்த்து

நிற்கும் ஒய்யாரத்தையும், ஓவியர்கள் கண்டு ஓவிய மெழுதலாம்.

கவிஞர்கள் கண்டு காவியம் பாடலாம்.

ஓய்வு மிகுந்தவர்கள், கொஞ்சம் உட்கார்ந்தும் ரசிக்கலாம்.

கணையும் வில்லும் கையிலே தாங்கி ''புலியெங்கே? சிங்கமெங்கே?'' என்று புறப்படுவோர், மானைப் பார்த்து மயங்கி விழுந்தால், மலர்களைப் பார்த்துச் சொக்கி நின்றால் வேட்டையும் நடக்காது, விரும்பியதும் கிடைக்காது.

அவன் புறப்பட்டது என்னவோ வேட்டைக்குதான்.

வேட்டையாடும் நேரமும், தூரமும், அவன் கண்களுக்கு விலகியே போய்க்கொண்டிருந்தன.

வில்லையும் கணையையும் கீழே வைத்தான்.

மெல்ல அமர்ந்தான்.

அவன் கண்கள் கவர்ச்சிகளால் இழுக்கப்பட்டன.

அவனுக்கு, தான் ஒரு வேட்டைக்காரன் என்பதை மறந்து விடுமளவுக்கு ஓய்வு கிடைத்தது.

'தான் வேட்டைக்காரன்' என்பதை நினைத்துக்கொண்டே பாட்டுப்பாட அவனால் முடியவில்லை.

''நீ பாட்டுப்பாடுகிறவனா? வேட்டைக்காரனா?'' என்கிற கேள்வி, அவன் இதயத்தில் எழுந்துகொண்டேயிருந்தது.

என் உயிரினும் இனியவர்களே!

அந்தக் கேள்விக்கு அவன், பதில் கண்டு பிடித்துவிட்டான்.

அமைதி நிறைந்த உலகம்!

அங்கே ஒரு கயிற்றுக் கட்டிலில், அவன் சாய்ந்து கிடக்கிறான்.

காகங்கள் குஞ்சுகளுக்கு இரையூட்டுகின்றன.

அவன் உள்ளம் கிளுகிளுக்கிறது.



ஏராளமான காகங்கள் ஒன்றுகூடி விருந்துண்ணப் புறப்படுகின்றன.

அவனுக்குத் தன் இனத்தின் நினைவு வருகிறது.

இனத்தையும் குலத்தையும் நினைத்தபடி அவன் கண்களை மூடிக் கிடக்கிறான்.

ஓர் இலையின் விளிம்பிலிருந்து, ஒரு பனித்துளி மலர்மீது விழுகிறது.

அந்த ஓசைகூட அவன் காதுகளுக்குக் கேட்கிறது.

செண்பகமலர் ஒன்று பூமியில் விழுகிறது.

இலட்சக்கணக்கானவர்களின் கையொலியைக் கேட்டுக் கேட்டு மரத்துப்போன அவன் செவிகள், அந்த மெல்லிய மலர்விழும் ஓசையைக் கேட்குமளவுக்கு மென்மையடைந்து விடுகின்றன.

எந்த அமைதியிலிருந்து, ஒருநாள் அவன் தப்பியோடி வந்தானோ, அந்த அமைதியிடமே அவன் மீண்டும் போய்ச் சேர்ந்து விடுகிறான்.

உலகம் உருண்டை என்பது எவ்வளவு பெரிய உண்மை.

ஒவ்வொரு மனிதனும் தான் புறப்பட்ட இடத்திற்கு ஒருமுறை திரும்பி வருகிறான்.

பயம் பிறக்கவில்லை.

பழிபாவங்கள் தோன்றவில்லை.

பரபரப்பில்லை.

இங்கேயிருந்து அங்கே, அங்கேயிருந்து இங்கே என்று இதயம் ஓடவில்லை.

இன்றும் நாளையும் ஒன்றேபோல் தோற்றமளிக்கின்றன.

ஏறும்போது இருந்த மயக்கம் இறங்கும்போது இல்லை.

அது வேண்டும் இது வேண்டுமென்கிற ஆசை முடிந்துவிட்டால், வாழ்க்கை சுவை நிரம்பியதாக ஆகிவிடுகிறது.

ஆசை, அதற்கான முயற்சி, முயற்சியில் பரபரப்பு, பரபரப்போடு பயம், பயத்தில் நாலுபேர் துணை, துணை செய்வோருக்கு உதவி, உதவி செய்வதற்கு விளம்பரம்—

ஒன்றைத் தொடர்ந்து ஒன்று வாழ்விலிருந்து நிம்மதியை அழித்துவிடும் நிலையை விட்டு அவன் பறந்துவிட்டான்.

இறந்து போனவன் காதுகளுக்கு முன்னால் வீணையை வாசித்தாலென்ன? தாரை தப்பட்டை முழக்கினாலென்ன?

யாவும் ஒன்றே!

சமாதிநிலை பேரறிவின் அடிப்படை.

அங்கிருந்து கிளம்பும் சிந்தனை, பிறரை மெய் சிலிர்க்க வைக்கிறது.

உலகத்திலுள்ள அனைவரும் இந்த அமைதியை விரும்புகிறார்கள்.

இந்த அமைதியை எப்படிக் கொண்டு வருவது என்பதில் சண்டை போட்டுக் கொள்கிறார்கள்.

அமைதிக்காகச் சண்டை போடுவதைவிட, சண்டையிடுகிறவனைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருப்பவன் நல்ல சேவை செய்கிறான்.

என் நண்பர்களே!

இந்தப் பிச்சையை நீங்கள் அவனுக்கு வழங்கிவிட வேண்டும்.

''எங்கள் குயிலொன்று அதோ பறந்து கொண்டிருக்கிறது பார்த்தாயா?''—என்று அவனை உங்கள், நண்பர்களுக்குக் காட்டலாம்.

கூர்ந்து கேளுங்கள்!

பேரிரைச்சலுக்கு நடுவே, அடிதடிகளுக்கு நடுவே, குழுவும் குழுவும் மோதிக்கொள்ளும் கூச்சல்களுக்கிடையே, என் நண்பர்களே கூர்ந்து கேளுங்கள்!

ஒரு சிறு பாட்டு உங்கள் காதுகளுக்குக் கேட்கிறதா?



''நான் நானாக, எனக்குள் எனக்காக, என் பொருட்டுத் தனியாக, அடங்கி அமைவுற்றிருக்கிறேன்.''

இந்தப் பாடல் உங்கள் காதுகளில் விழுகிறதா? அதோ அவன்தான் பாடிக் கொண்டிருக்கிறான்.

அவன் இப்படித் தினமும் பாடுவான்.

ஒவ்வொரு கட்டத்திலும், அவன் வாழ்வில் ஒவ்வொரு அதிசயம் நடக்கும்.

அந்த அதிசயம் ஒவ்வொன்றும் அவன் நம்மவன் என்று உங்களைச் சொல்ல வைக்கும்.

என் இனிய நண்பர்களே!

உங்கள் இதயங்களை மூடிக் கொள்ளுங்கள்.

உங்கள் இதயங்கள் மறுபடியும் திறக்கட்டும்.

கேளுங்கள்!

புனிதமானதோர் ஆலயத்தில் அவன் குடியிருந்தான்.

பூமணமும் பால்மணமும் அங்கே கமழக் கண்டான்,

பளபளக்கும் விதானமும், பளிங்குத் தூண்களும், கடைந்தெடுத்த வண்ணச் சிலைகளும் அவன் கண்களுக்குத் தெரிந்தன.

கலகலக்கும் மணியோசை அவன் காதுகளுக்குக் கேட்டது.

இலட்சக்கணக்கான பக்தர்கள், அந்த ஆலயத்திற்குள் புன்னகை தவழ உலவிக் கொண்டிருந்தார்கள்.

ஆலயத்தின் கொடிக் கம்பத்தில், கரிய மேகத்தையும் மாலை நேரத்து வானத்தையும் ஒளிபரப்பிப் பறந்து கொண்டிருந்தது கொடி.

இதோ, இந்தத்தெய்வம் நம்மைக் காக்குமென்பாரும், இத்தெய்வம் ஒன்றே இறுதிவரை துணை நிற்கும் என்பாரும், உலகம் முழுவதும் பரவிக் கிடந்தனர்.

அந்த ஆலயத்திலுள் அவன் புகுந்தபோது சின்னஞ்சிறு வடிவத்தில் இருந்தான்.

அங்கிருந்த நம்பிக்கை என்னும் தெய்வத்தின் மகிமையால் அவன் வடிவம் வளர்ந்து கொண்டே வந்தது.

அவனது கண்படு தூரம்வரை அதன் புகழைப் பாடுவோர் விரிந்தனர்.

''அவன் எங்கள் ஆலயத்தைச் சேர்ந்தவன்;

எங்கள் நம்பிக்கைத் தெய்வத்தின் சன்னி தானத்தில் குரு பீடங்களில் ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறான்;

அவன் எங்கள் மரியாதைக்குரியவன்,'' என் றெல்லாம் அவனைப் பாராட்டுவீர்கள்.

அது, அவனுக்குக் குளிர்ச்சியாகவே இருந்தது.

அவன் மேனி பூரித்துப் பொதும்பி நின்றது.

ஆயினும், அவன் தன்னை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொள்ளவே ஆசைப்பட்டான்.

வெற்றிகளால் ஏற்படும் மயக்கங்களில் ஏ, தெய்வமே என்னை வீழ்த்தி விடாதே!

தோல்விகளால் ஏற்படும் கலக்கங்களில் ஏ, தெய்வமே என்னைத் துவள வைக்காதே!

ஆசைகளால் ஏற்படும் பரபரப்பில், ஏ தெய் வமே என்னை ஆழ்த்திவிடாதே!

பயத்தால் ஏற்படும் கோழைத்தனத்தில், ஏ, தெய்வமே; என்னை பதுங்க வைக்காதே!''

-என்று அவன் நம்பிக்கைத் தெய்வத்தை வேண்டிக் கொண்டான்.

உலகத்தைச் சுலபத்தில் உணர்ந்து கொண்ட அவன் தன்னையறிந்து கொள்வதற்கு அரும்பாடு பட்டான்.

உலகுக்கெல்லாம் தானே போய் மருத்துவம் செய்யும் மருத்துவன், தனக்கு நோய் வரும்போது மற்றொரு மருத்துவனை நாடுவதுபோல், அவனும் தன்னடக்கத்தையும் நிதானத்தையும் தனக்குத்



திரும்படி மற்றொரு குருபீடத்தை வேண்டிக் கொண்டான்.

அதற்கவன் தேடிக்கொண்ட குருவும் நியாய மானவரே.

முதல் மழையிலேயே பக்குவப்பட்டுவிட்ட நிலம் போல், இளமையிலே தெளிவும் பக்குவமும் படைத்துவிட்ட அவரும், அவனுக்கு அவற்றைப் போதித்தார்.

ஏறி நிற்கும் சபையிலெல்லாம், அவர் குரலே மேலோங்கி நிற்கும்.

இமயம்வரைமுதல், குமரிக்கரைவரை அவரை அறியாதவரில்லை.

சாம்பல் நிறத்திலொரு சால்வையை உடம் பிலே போர்த்திய வண்ணம், வலது கையை மேலோங்கி உரத்த குரலில் செழுமையான வார்த் தைகளை, பரபரப்பின்றித் தடையின்றி அள்ளிச் சொரியும் அவர், அவனதுஇறகுகளை வெட்டிவிட்டுக் கொண்டே வந்தார்.

தனது தகுதிக்கு மீறிய நிலையிலேயே அவன் வளர்ச்சியடையத் தொடங்கினான்.

கடும் பகைவர்களையும், அரைகுறை அறிவோடு தன்னைப்பற்றி விமர்சனம் செய்வோரையும், அணு வளவும் பொருட்படுத்தாத பரிபக்குவ நிலையை அவன் அடைந்தான்.

சிறிய வயதிலேயே பெரிய சிந்தனைகளில் இறங் கினான்.

அது அவனுக்குச் சுவையாகவும் இருந்தது. அவன் பார்க்கும்உலகம் விரிந்துகொண்டே வந்தது.

கொந்தளிக்கும் அவனது உணர்ச்சிகள் துள்ளித் துடித்தன.

மனந் திறந்து பேசத் தொடங்கினான்.

ஆலயத்தின் கொடி. ஆடம்பரப் பிரியர்களின் விளம்பரத்திற்குப் பயன்பட வேண்டாமென்று கேட்டுக் கொண்டான்.

''நாம் மரப்பாச்சித் திருமணம் செய்யவில்லை.

நாம் நம்பிக்கைத் தெய்வத்தின் பிள்ளைகள்.

எந்த நம்பிக்கை நம்மை ஒன்று சேர்த்து வைத்ததோ, அந்த நம்பிக்கைத் தெய்வத்தின் பெயரால், என் சகோதரர்களே, நாம் இறுதியும் உறுதியுமான முடிவுக்கு வருவோம்.

நம் இரண்டு கால்களையும், இரண்டு கோயில்களில் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு கோயில் தியாக, உள்ளத்தை வளர்ப்பது; ஒரு கோயில் ஆசைகளை வளர்ப்பது.

தியாகமும் ஆசையும் உறவினர்களல்ல.

ஆசைக் கோயிலில் விளம்பரப் பிரியர்களின் மடியிலே நாம் தவழக்கூடாது.

''வாருங்கள் ஒருமுடிவுக்கு வருவோம்,'' என்று தடித்த குரலில் கூறினான்.

அவன் பைத்தியக்காரன்!

உலகத்தில் எந்த அங்கமும், உண்மைகளை உண்மை யளவில் ஏற்றுக் கொள்வதில்லை.

அவன் கேலிக்கும் ஆளானான்.

எதிரிகளின் கேலியை, ஏறிட்டுப் பார்த்துவிட்டு நடக்கிறவன் நண்பர்களின் கேலியைத் தாங்க முடியாதவனானான்.

இப்போதும் அவன் பைத்தியக்காரன்!

பௌத்த தேவாலயத்தைவிட, இந்து அற நிலையங்களைவிட, முகமதியப் பள்ளிவாசல்களைவிட, கிறித்தவக் கோயில்களைவிட, புனிதமான தன் ஆலயத்திலிருந்து புறப்பட்டான்.

உயர்ந்து நிற்கும் ஆலயத்தின் கதவுகளை நோக்கி வந்தான்.

''எங்கே போகிறாய்?'' ஒரு குரல் கேட்டது.

''எதற்காகப் போகிறாய்?'' மறு குரல்

''எப்படிப் போய்விடுவாய்?'' மூன்றாவது குரல்.

''எங்களை விட்டா போகிறாய்?'' நான்காவதுகுரல்.

''பார்க்க வேண்டியதை இங்கிருந்து பார்;



சொல்ல வேண்டியதை இங்கிருந்து சொல்; பாட வேண்டியதை இங்கிருந்து பாடு'' பல குரல்கள் மோதி எழுந்தன.

''அடபாவி, எங்கள் எண்ணங்கள் முழுக்க முழுக்க உன்னிடம் பதியும்வரை இருந்துவிட்டு, ஓடி விடப் பார்க்கிறாயே இது நியாயமா?'' ஒருவன் தழதழத்த குரலில் கேட்டான்.

அவன் நெஞ்சு விம்மிற்று. தொண்டை கம்மிற்று. கண்களில் ஊற்றுப் பெருகிற்று.

சலனத்திற்கும் இரக்கத்திற்கும் அடிக்கடி ஆட்பட்டுவிடும் அவன் குழந்தைபோல் அழுதான்.

அன்பு கொடுமையானது, பாசம் பயங்கரமானது.

நூறு வகைக் குழப்பங்களில் அவனது இளகிய மனது தடுமாறியது.

''என்னை விட்டு விடுங்கள்—என்னை விட்டு விடுங்கள்,'' மறுபடியும் கெஞ்சினான், கெஞ்சுகிறான்.

என் அருமை நண்பர்களே!

அவனைவிட முயலுங்கள்.

அவன் தன்னை வளர்த்துக்கொண்டதன்றி உங்களுக்கு என்ன செய்து விட்டான்?

அவன் எதைக் கேட்டு, நீங்கள் இல்லையென்றீர்கள்?

நகைக் கடையில் குவியும் பெண்கள் கூட்டத்தைப் போல், அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அதிசயித்தீர்கள்.

நீங்கள் நினைப்பதற்கு மாறாக அவன் ஒன்றைச் சொல்லி விட்டாலும், அவன் சொன்னதற்கு மாறாக நீங்கள் ஒன்றைச் சொன்னதில்லை.

அடித்தளத்தில் மலர்ந்துள்ள எந்த மலரிடத்தும் அவனுக்கு வெறுப்பில்லை.

உணர்ச்சி அலைகளில் ஏறி, உச்சிக் குன்றில் உட்கார்ந்துவிட்ட அவன், தளரும் அலைகளோடு

தவழ்ந்து கரையேற முயல்கிறான். நீங்கள் உங்கள் தோணிகளால் வழி மறிக்கிறீர்கள்.

அவன் மயங்குகிறான்.

இறந்து போன தாயை இடுகாட்டில் புதைத்து விட்டுத் திரும்பிவரும் வழியில் நின்று திரும்பிப் பார்க்கும் மகனைப்போல், தன் முடிவுகளை அவன் திரும்பிப் பார்க்கிறான்.

விடிந்துவிட்ட வானத்தில் மறைந்துவிட்ட நட்சத்திரங்கள், இருண்டுவிட்ட வானத்தில் மறுபடியும் தோன்றுவதுபோல் அவனை மீண்டும் தோன்றச் சொல்கிறீர்கள்.

கெட்டிபட்ட நெய், மறுபடியும் சூடுபட்டு உருகுவதுபோல், உங்கள் ஆசை இதயத்தின் சூடு அவனை உருக வைக்கிறது.

ஓடுகின்ற யானையை, வளையங்களால் ஆன சங்கிலிகளால் கட்டி இழுப்பதுபோல், கண்ணீர்த் துளிகளாலான சங்கிலியைக் கட்டி அவனை இழுக்கிறீர்கள்.

இவற்றிற்கும் அவன் தப்பிவிட்டால் என் இனிய நண்பர்களே!

அவன் வாழ்வில் வியக்கத்தக்க சம்பவங்கள் நடக்கும்.

சிறையிலிருந்து தப்பியோடிய கைதி, நள்ளிரவில் தன் வீட்டுக்கு வந்து தன் குழந்தைகளைப் பார்த்து முத்தங் கொடுத்துவிட்டு விடை பெறுவது போல.

அவன் அடிக்கடி உங்களைத் தேடி வருவான்.

இரவில் ஊர்ந்து சென்றுவிட்ட தானிய வண்டியிலிருந்து சாலைகளில் சிதறி விழுந்த தானியங்களை, காலையில் மாடப் புறாக்களும் மணிப் புறாக்களும் கூடிக் குனிந்து கொத்தித் தின்பதுபோல், சென்றுவிட்ட அவன் சிதறிவிட்ட கவிதைத் தானியங்களை நீங்களும் சுவைத்துக் கொண்டிருப்பீர்கள்.



மலையின் உச்சியிலிருந்து இறங்குவதாகப் பாவித்துக் கொண்டு, உருண்டு விழுந்து அடித்தளத்திற்கு வந்துவிட்ட அவனை, அங்கே நிற்கின்றவர்கள், அனுதாபத்தோடு பார்ப்பார்கள்.

அதன் பிறகு அவன் குரலே அடைபட்டுப் போகலாம்.

எந்தச் சக்தி அவனைப் பாட வைத்துக் கொண்டிருந்ததோ அந்தச் சக்தியிலிருந்து வெளியேறிய பிறகு, அவன் ஊமையாகவும் ஆகிவிடலாம்.

வாழும்போது நாலுபேருக்கு நடுவிலே வாழ்ந்த அவன், சாகிறபோது யாரும் அறியாமலேயே செத்தும் போகலாம்.

நெடுநேரம் தூங்குகிறவனையே செத்துவிட்டவனாக நினைத்து கொத்தித் தின்னும் கழுகுகள், உண்மையிலேயே செத்துவிட்டவனை உடனே கொத்தித் தின்றுவிடலாம்.

அவன் மனைவி மக்கள் கூடி நின்று அழுது ஓய்ந்துவிடலாம்.

இதோ பாருங்கள்!

அவன் சாவைப் பார்த்துவிட்டுத்தான் வாழ்வுக்குத் திரும்பி வந்திருக்கிறான்.

இன்பங்கள் அனைத்தையும் அவன் அறிவான்.

துன்பங்களில், உலகத்தின் பரம்பரைத் துன்பங்களோடு புதிய துன்பங்களையும் அவன் அனுபவித்திருக்கிறான்.

வானத்தில் வட்டமிடும் போதே, பூமியில் கிடக்கும் இறைச்சித் துண்டைக் கவனிக்கும் கழுகினைப் போன்ற மனிதர்கள், அவன் அருகிலேயே இருந்திருக்கிறார்கள்.

மற்றவர்களின் கால்களில் தன் உடம்பைத் தூக்கி நிறுத்திவிட்டு, தானே நடப்பதுபோல் பாவித்துக் கொள்வோர் அவன் நண்பர்களாக இருந்திருக்கிறார்கள்.

என் இனிய நண்பர்களே!

அவனை அதிகம் பேச வைக்காதீர்கள்!

அவன் துறவியாவதை உங்களால் அனுமதிக்க முடியாதென்றால், அவனை ஒரு மௌன தேவதை யாக வைத்துக்கொள்ளுங்கள்.

அவன் ஆயுள் மிகவும் குறுகியது.

அந்தவகையில் அவன் சொல்வது தப்பாது.

அவன் கதை முடியும்போது நீங்கள் அனைவரும் உயிரோடு இருப்பீர்கள்.

உங்கள் தோள்களிலேயே அவன் சவம் ஊர் வலம் போகட்டும்.

அதுவரை, அவன் தான் விரும்பும் வழியில் பாடட்டும்.

என் இனிய நண்பர்களே!

இதயக் கதவுகள் மூடட்டும்.

இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்பட்ட தென்றல் வெளியான அன்று—அவன் குன்னூர்க் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந் தான். இரண்டொரு தினப் பத்திரிகைகளும் அதை எடுத் துப் போட்டு 'கண்ணதாசன் கழகத்தை விட்டு விலகுவார்' என்று தலைப்புக் கொடுத்திருந்தன. அந்தப் பத்திரிகையைத் தூக்கிக்கொண்டு குன்னூர்த் தோழர்கள் கவலையோடு ஓடி வந்தனர். ''அது வெறும் தத்துவக் கட்டுரைதான்'' என்று சொல்லி அவன் மழுப்பிவிட்டான்.



# உட்கட்சிக் குழப்பம்

அந்த நேரத்தில் கட்சிக்குள் ஒரு பெரிய குழப்பம் உருவாகிக்கொண்டிருந்தது உண்மையில் அவனுக்குத் தெரி யாது. கட்சிக்கு கருணாநிதியைப் பொதுச் செயலாளராகக் கொண்டுவர வேண்டுமென்று சம்பத் முயற்சித்ததாகவும், சம்பத்துக்குத் தெரியாமல் கருணாநிதியை அண்ணாத்துரை அழைத்துக்கொண்டுபோய் மனத்தை மாற்றிவிட்டதாகவும், கருணாநிதி மறைமுகமாக சம்பத்தைத் தாக்கிப்பத்திரிகையில் எழுதியிருப்பதாகவும் அவனிடம் கூறப்பட்டது. அவன் இந்தமாதிரி விவகாரங்களில் எல்லாம் தலையிட்டுக் கொள்வ தில்லையாகையால் இவற்றைக்கூடப் பிறரிடம் கேட்டே அறிந்துகொண்டான்.

அப்பொழுதுதான் கட்சியில் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவன் சாதாரண உறுப்பினராகக் கூட ஆகாமலேயே இருந்துவிட்டான். ஆகவே அவனுடைய இராமநாதபுர மாவட்டத்தில் இருந்து வழக்கமாகப் பொதுக் குழு உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப் படும் அவன் அந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப் பினர்கள் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுப்பதற் காக லாயிட்ஸ் ரோடில் ஒரு கட்டடத்தில் கூடினார்கள். அன் றைக்குச் சம்பத்தின் கைதான் வெகுவாக ஓங்கியிருந்தது. அன்று அவர் விரும்பியிருந்தால்—அவர்தான் பொதுச் செய லாளர். அப்படி இருந்தது அன்றைய நிலைமை. அண்ணாத் துரையே நடுங்கிக்கொண்டிருந்தார். துணைக் குழுக்களுக்

கான தேர்தல் அங்கு நடந்தபோது எல்லாக் குழுக்களிலும் சம்பத்தின் ஆதரவாளர்களுக்கே ஏராளமான வாக்குகள் கிடைத்தன.

மதியழகனைப் பொதுச் செயலாளராக்குவது என்று சம்பத் எடுத்துக்கொண்ட முடிவிற்கு. அங்கே பெருத்த ஆதரவிருந்தது. கருணாநிதியும் அவரது ஆதரவாளர்களும் கலங்கிப்போய் இருந்தார்கள். எல்லோரும் சம்பத்தையே சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அண்ணாத்துரை சம்பத்தை தனியே அழைத்துக்கொண்டு பேசினார். உண்மையிலேயே கண்ணீர் விட்டு அழுதார். ''இந்தத் தடவை மட்டும் நான் பொதுச் செயலாளராக இருந்துவிடுகிறேன். நமக்குள்ளே தகராறு இருப்பதாக யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்றார்.

தன்னாலே ஏற்றி வைக்கப்பட்ட ஒரு மனிதர், தன் கையைப் பிடித்துக்கொண்டு அழுகிறார் என்ற உடனேயே சம்பத் செய்த முதற் பெருந் தவறு இதுதான். அவரைச் சுற்றி இருந்த பலபேரும் உறுதியாக நின்றபோது—அவரது சபல நெஞ்சம் அண்ணாத்துரையின் கண்ணீருக்குப் பணிந்துவிட்டது.

பிறகு சம்பத்தே தன் ஆதரவாளர்களிடம் அண்ணாத்துரைக்கு விட்டுக் கொடுக்குமாறு கூறினார். அண்ணாத்துரை பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவை அனைத்தையும் அவன் பொதுக் குழு உறுப்பினர்களிடம் இருந்து கேட்டுத் தெரிந்துகொண்டான். அந்தக் குழுவுக்கு அவன் போகவில்லை. அந்தக் குழுவில் அவன் உறுப்பினராகவும் இல்லை; அக்கரையும்காட்டவில்லை.

இந்தப் பொதுச்செயலாளர் தேர்தல் நடக்கும்போது—பொதுக் குழு நடந்த வீட்டிற்கு நான்காவது வீடான வி. பி. இராமன் வீட்டிலேயே அவன் இருந்தான். குழு முடிந்ததும் சம்பத்தின் ஆதரவாளர்கள் அங்கே வந்து அவனிடம் இந்த விவரங்களைக் கூறினார்கள். அண்ணாத்துரையின் ஆதரவாளர்களும் அதை அப்படியே ஒப்புக்கொண்டார்கள். அப்



பொழுதுதான் அவனுக்கு வேறொரு விஷயமும் தெரிய வந்தது.

சில மாதங்களுக்கு முன் அதே வி. பி. இராமன் வீட்டில் கருணாநிதி, நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத் ஆகியோர் கூடி திராவிடநாடு கொள்கையைக் கைவிடுவது பற்றி யோசித்ததாகவும்—அண்ணாத்துரைக்கு செய்தி அனுப்பி அவரை வரச்சொன்னதாகவும், அண்ணாத்துரை வந்து சம்பத்தை தாஜா செய்து அனுப்பிவிட்டு, மற்றவர்களைத் திட்டி அனுப்பிவிட்டதாகவும் அவனிடம் கூறப்பட்டது.

அதிலிருந்து சம்பத்திடம் அவனுக்கு ஓர் தனிக் கவர்ச்சி ஏற்பட்டது. அன்றிலிருந்துதான் தினசரி அவன் சம்பத்தைச் சந்திக்க ஆரம்பித்தான். அவருடைய சிந்தனைகளில் அவன் லயித்தான் கழகத்தில் அவருடைய முயற்சிகள் எல்லாவற்றிற்கும் துணை நிற்பது என்று முடிவு கட்டினான்.

லாயிட்ஸ்ரோடு பொதுக் குழுவிற்குப் பிறகும் கட்சியில் சம்பத்தின் கையே ஓங்கி இருந்தது. அதைத் தகர்க்க அண்ணாத்துரை ரகசியமாகத் திட்டமிட்டார். திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு முன்னால் பொதுக் குழுவில் கண்ணீரைக் காட்டி தான் பெற்ற வெற்றியை கம்பீரமான வெற்றியாகக் கருதி திராவிடநாடு இதழில் மறைமுகமாக ஒரு கட்டுரை எழுதினார்.

# கட்டுரையும் வெட்டுரையும்

அப்பொழுதும் சரி இப்பொழுதும் சரி—தி. மு. கழகத்தில் ஒருவரை யொருவர் மறைமுகமாகத் தாக்கி எழுதுவது மிகவும் அதிகம். அது தொண்டர்களில் பலபேருக்குப் புரியாது; குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் புரியும். அந்தப் பாணியில் அண்ணாத்துரை சம்பத்தைக் கேலி செய்து ஆப்பிள் கார்ட் என்ற பெர்னாட்ஷா நாடகத்தை மையமாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது அதன் தலைப்பாகும்.

அதை அவன் கூடப் படிக்கவில்லை. பொதுவாக அவன் அண்ணாத்துரையின் திராவிடநாடு பத்திரிகை உட்பட எந்தத் தி. மு. க. பத்திரிகையையும் படிப்பதில்லை. காரணம் அவர்களின் சத்தற்ற தமிழ்நடை தன்னைப் பற்றிக் கொள்ளக் கூடாதே என்ற பயம்.

அந்தக் கட்டுரை வெளிவந்த திராவிடநாடு இதழை அவன் முதலில் பார்க்கவில்லை. அவனது துணையாசிரியர் அதைப் படித்துவிட்டு அவனிடம் கொண்டுவந்து காட்டினார். 'இந்தப்' 'போணர்ஜியஸ்' என்ற பாத்திரம் 'புயலார்' என்ற பெயரில் மாற்றப்பட்டு சம்பத்தைக் கேலி செய்வது போல் எனக்குத் தோன்றுகிறது' என்று அவர் சொன்னார். அவன் அதை முழுக்கப் படித்துப் பார்த்தான். பொதுக்குழுவில் சம்பத் ஏமாந்துவிட்டதாகவும் தான் வெற்றி பெற்றுவிட்டதாகவும் மறைமுகமாக அண்ணாத்துரை அதில் கூறியிருப்பதைக் கண்டுபிடித்தான். 'புயலார்' என்ற சொல் சம்பத்தை மனத்திற் கொண்டே உருவாக்கப்பட்டிருப்பது அவனுக்கும் தோன்றிற்று. உடனே சம்பத்துக்கு டெலிபோன் செய்தான். அவர் வீட்டில் இருந்தார். அவன் புறப்பட்டுச் சென்றான்.



'திராவிட நாடு' இதழைக் கொடுத்து அதனைப் படித்துப் பார்க்கச் சொன்னான். தன்னைத்தான் அது குறிக்கிறது என்பதை அவரும் உணர்ந்துகொள்ள வெகு நேரம் ஆகவில்லை! சம்பத் சிறிது நேரம் யோசித்தார். பிறகு ''நானொரு கட்டுரை எழுதித் தருகிறேன். அதைத் 'தென்றலில்' போடுவீர்களா?'' என்று அவனிடம் கேட்டார். ''உடனே கொடுங்கள் பிரசுரிக்கிறேன்'' என்றான் அவன்.

ஊரில் எந்தப் பரபரப்பு ஏற்பட்டாலும் அதற்குத் தான் தான் காரணமாக இருக்க வேண்டும் என்பதில் அவனுக்கு அலாதி ஆசை.

''நாளைக் காலைக்குள் தருகிறேன்'' என்றார். பத்திரிகை வெளி வருவது ஒருநாள் தாமதிக்கப்பட்டது. மறுநாள் காலையில் அவருடைய கட்டுரை வந்து சேர்ந்தது. சம்பத் கொஞ்சம் 'வெகுளி' என்பது அந்தக் கட்டுரையில் இருந்து தெரிய வந்தது. அண்ணாத்துரையைப்போல் முழுக்க முழுக்க மறைமுகமாக அவரால் எழுத முடியவில்லை. கட்டுரையின் தலைப்பையே 'அண்ணாவின் மன்னன்' என்று கொடுத்து விட்டார்.

அண்ணாத்துரையின் மறைமுகக் கட்டுரைக்கு நேரடியாக அந்தக் கட்டுரை பதில் சொன்னது. நேர் பெயர் கொண்டே அண்ணாத்துரையை அவர் கேலி செய்திருந்தார். தென்றலின் வரலாற்றில் அதிகமான பிரதிகள் அந்த இதழ் விற்பனையாயிற்று!

அண்ணாத்துரை அதைப் படித்துவிட்டார் என்று அவன் கேள்விப்பட்டான். அதைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை! அவர்களுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான் என்று மகிழ்ச்சியடைந்தான். அதன் எதிரொலி என்ன என்பதைப் பத்திரிகைகளிலும் கண்டுகொள்ள முடியவில்லை!

இந்த நிலையில் தென்றலில் கட்டுரை வெளிவந்த ஏழாவது நாள்—வேலூரில் கட்சியின் பொதுக் குழு கூடுவதாக இருந்தது.

# பொதுக்குழுவில் சதிக்குழு

லாயிட்ஸ் ரோடில் நடைபெற்ற பொதுக் குழுவில் அண்ணாத்துரை பொதுச் செயலாளரானதை சம்பத் ஒப்புக் கொண்டதும் அதுவரை பொதுக்குழு உறுப்பினராய் இல்லாத அவனை நியமன உறுப்பினராக்க அண்ணாத் துரை சம்மதித்திருந்தார்.

திராவிட நாட்டில் கட்டுரை வெளியாவதற்கு சில வாரங்களுக்கு முன்பே பொதுக்குழு உறுப்பினராக அவன் நியமிக்கப்பட்டிருப்பது பற்றி 'நம் நாட்'டில் அறிக்கை வந்து விட்டது. ஆகவே வேலூரில் நடைபெறப்போகும் பொதுக் குழுவில் அவன் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று சம்பத் கூறினர். குழு கூடுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு சம்பத் வீட்டில் மதியழகன், ராஜாராம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, ஆர். எஸ். பாண்டியன், பொன்னுவேல், கண்ணப்பா வள்ளியப்பன், அவன் ஆகியோர் கூடி பத்துக்கு மேற்பட்ட தீர்மானங்களைத் தயாரித் தார்கள். அந்தத் தீர்மானங்கள் பொதுக் குழுவில் நிறை வேறினால் பல தலைவர்களுக்கு வயிற்றுப் பிழைப்பு போய் விடும். அவ்வளவு பயங்கரமானவையாக அவை இருந்தன.

தீர்மானங்கள் தயாரிப்பதில் சம்பத் கைதேர்ந்தவர். முறையற்ற தலைவர்களை தீர்மானங்கள் மூலமே அவர் சித்ர வதை செய்வார். லாயிட்ஸ் ரோடு பொதுக்குழு நடப் பதற்கு முன் நடைபெற்ற மாயவரம் பொதுக் குழுவில் ஒர் தீர்மானம் கொண்டுவந்து அண்ணாத்துரையையும் கருணாநிதி



யையும் அலற வைத்தவர் அவர். அந்தப் பழைய குழுவில் அவனும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினனாக இருந்தான். கட்சியின் செயலாளர், பொருளாளராக இருக்கின்றவர்கள் எம். எல். ஏ. ஆகவோ எம். பி. ஆகவோ ஆகக்கூடா தென்றும் அப்படி ஆனால்—கட்சியில் வகிக்கின்ற பதவிகளை ராஜினாமாச் செய்துவிட வேண்டும் என்றும் கூறிய அந்தத் தீர்மானம் பலத்த விவாதத்துக்குப் பிறகு—தீர்மானமாக இல்லாமல் சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆகவே—இந்தத்தடவை வேலூர்ப் பொதுக் குழுவுக்கு தீர்மானம் தயாரிக்கிறார் என்றால்—அது கண்டிப்பாகப் பர பரப்பை உண்டுபண்ணும் என்பது அவனுக்குத் தெரியும். சில தீர்மானங்களில் அவனும் கையெழுத்து இட்டான். அத்தனை தீர்மானங்களும் உடனே பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டன. அவனது இல்லத்தில், தீர்மானத்தில் கையெழுத்திட்டவர்கள் கூடி யார் யார் எந்தெந்தத் தீர்மா னங்கள் மீது பேசுவது என்று முடிவு கண்டார்கள்.

சம்பத்தின் ஆதரவாளர்கள் எல்லாம் வேலூர்ப் பொதுக் குழுவில் இந்தத் தீர்மானங்களை விவாதிப்பது பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக் குத் தெரியாமலேயே கருணாநிதி ரகசியமாக ஒரு வேலை செய்துகொண்டிருந்தார்.

பொதுக்குழுவில் பெரும் ரகளை செய்வது என்று முடிவு கட்டி அண்ணாத்துரையின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு—மேல் மட்டத்தில் இருந்த அண்ணாத்துரையின் ஆதரவாளர்களுக்கெல்லாம் தெரிவித்து விட்டு, மற்றப் பொதுக்குழு உறுப்பினர்களை நேரிலாகப் போய்ச் சந்தித்து ஒவ்வொருவரையும் தயார் செய்து உறுப்பினர் அல்லாத அடி யாட்கள் சிலரையும் ஏற்பாடுசெய்துகொண்டு பல கார்களில் எல்லோரையும் ஏற்றி முதல் நாளே வேலூருக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டு—தானும் அங்கேயே வந்துவிட்டார்.

இந்த ரகளைக்கு அண்ணாத்துரையும் கருணாநிதியும் திட்டமிட்டிருந்தது சம்பத் கோஷ்டியினரில் யாருக்குமே முன் கூட்டித் தெரியாது. அவ்வளவு ரகசியமாக வைக்கப்பட்

டிருந்தது அதை முதல் நாளே தெரிந்துகொள்வதற்கு சம்பத் குழுவினருக்கு ஒரு வாய்ப்பு இருந்தது. அப்போது சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளராக இருந்த தோழர் தி மணிவண்ணன் அவர்களை ஒரு நடிகருடைய கார் அவருடைய தேனாம்பேட்டை வீட்டுக்கு அழைத்துச் சென்றது அங்கே நடிகர்களும் அவர்களது ஸ்டண்ட் கோஷ்டியினரும் அவரைத் தங்களோடு சேரும்படியும் இல்லையென்றால் பயங்கரங்கள் நடக்குமென்றும் மிரட்டினார்கள். மணிவண்ணன் அதற்கு மசியவில்லை. உடனே அதுவரைக்கும் அங்கே தோன்றாதிருந்த அண்ணாத்துரை அடுத்த அறையிலிருந்து அந்த அறைக்குள் நுழைந்தார். மணிவண்ணனை மாற்ற எவ்வளவோ முயன்றார். அதற்கும் மணிவண்ணன் மயங்கவில்லை. உடனே, அப்படி என்றால் இப்பொழுதே எங்களுடைய காரிலேயே நீ வேலூருக்கு வா''—என்று அண்ணாத்துரை அழைத்தார். அவருடைய பேச்சிலிருந்தும் அங்கு நிலவிய சூழ்நிலையிலிருந்தும் மறுநாள் வேலூரில் கலவரம் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது என்பதைஉணர்ந்துகொண்ட மணிவண்ணன், வீட்டுக்குப் போய்ச் சொல்லிவிட்டு வேட்டி சட்டை எடுத்துவருகிறேன் என்று கூறினார். போவதென்றால் எங்கள் காரிலேயே போ—என்று தங்கள் காரைக் கொடுத்து நடிகர்கள் அவரை அனுப்பினார்கள். தன் வீட்டுக்குச் சென்ற மணிவண்ணன் பக்கத்து வீட்டிற்குள் நுழைந்து டெலிபோனில் சம்பத்தைக் கூப்பிட்டார். ஆனால் அதற்குள்ளாக அத்தனைபேரும் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். பிறகு அவர் சம்பத்தின் துணைவியாரிடம் வேலூருக்கு நம்முடையவர்கள் ஜாக்கிரதையாகப் போகவேண்டும். நான் சிக்கிக்கொண்டிருக்கிறேன்''—என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டார். அந்தச் செய்தி சம்பத் குழுவினரில் யாருக்கும் கிடைக்கவில்லை.

வேலூருக்குப்போய் அங்கிருந்த சூழ்நிலையைப் பார்க்கிற வரை அவனுக்கும் அது தெரியாது. அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு அவன் வேலூருக்குச் சென்றான். பொதுக்குழு நடைபெற இருந்த ஒரு கட்டிடத்திற்கு அவன் சென்றான்.



அன்றைக்குக் காலையில் செயற்குழு கூட்டம்தான். மாலையில்தான் பொதுக்குழு. செயற்குழுவில் அவன் இல்லை!

செயற்குழு வேறொரு இடத்தில்—ஒரு பீடி முதலாளியின் கட்டிடத்தில் நடந்து கொண்டிருந்தது. மாலையில் பொதுக்குழு நடக்க இருந்த கட்டிடத்திற்குத்தான் அவன் சென்றான். சகஜமாகவே உள்ளே சென்றான். தன்னை எல்லோருமே விரோதியாகப் பாவிப்பார்கள் என்று அவன் எண்ணவே இல்லை.

ஒவ்வொருவர் கையிலும் 'அண்ணாவின் மன்னன்' கட்டுரை வெளிவந்த 'தென்றல்' இதழ் இருந்தது ''படித்துப் பாருங்கள். அண்ணாவுக்கு ஆபத்து'' என்று ஒவ்வொருவரிடமும் அந்த இதழைச் சிலபேர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு மிகவும் வேண்டியவர்கள் அவனிடமிருந்து தொடர்ந்து உதவி பெற்றுக் கொண்டிருந்தவர்கள் சிலர்கூட அந்தக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அவனுக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. 'கட்டுரையைப் படித்துவிட்டுப் பலபேர் கோபமாக இருக்கிறார்கள்' என்றே அவன் நினைத்தான்.

அங்கிருந்த சாப்பாட்டுப் பகுதியில் சாப்பிட உட்கார்ந்தான். இரண்டொருவர் குத்தலாகவும் மறைமுகமாகவும் பேசுவதைக் கேட்டான். அவர்கள் பேச்சில் அவன் அந்த ஆண்டு வெளியிட்ட தென்றல் பொங்கல் மலரும் அடிபட்டது. பொங்கல் மலர்களில் வழக்கமாக அண்ணாத்துரையின் மூவர்ணப் படம் போடுகிற அவன் அந்த ஆண்டு அவர் படத்தைப் போடாமல், சம்பத்தின் படத்தை மூவர்ணத்தில் வெளியிட்டு ''எல்லாம் நிறைந்தவர்''—என்ற தலைப்பிட்டு கவிதை எழுதியிருந்ததை அவர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். சாப்பிட்டுவிட்டு வெளிக் கொட்டகையில் வந்து அமர்ந்தான். இசைத்தட்டுகளை ஒருவர் ஒலிபரப்பிக் கொண்டிருந்தார். கண்ணனைப்பற்றிச் சில பாடல்கள். அவன் மனதில் வேறு அர்த்தம் தொனிக்கும்படியான கருத்துக்கள் உள்ள சில பாடல்கள். அவை ஒலிபரப்பப்படும் போது சிலர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ணடித்துக்

கொண்டார்கள். யாரும் அவன் அருகில் வந்து அமரவில்லை. அப்போது சம்பத்தின் ஆதரவாளர்கள் சிலர் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அவனுக்குத் தெம்பு வந்தது அவர்களும் மிகுந்த உற்சாகத்துடனேயே காணப்பட்டார்கள்.

மற்றவர்களுக்குக் கேட்கும்படியாகச் சத்தம் போட்டுப் பேசினார்கள். அவன் அருகிலேயே வந்து உட்கார்ந்து, இருக்கும் சூழ்நிலையை விவரித்தார்கள். ''பெரிய ஏற்பாட்டோடு வந்திருக்கிறார் கருணாநிதி. அதோ பாருங்கள் மதுரை திருச்சி அடியாட்கள். என்ன நடக்கிறதென்று பார்த்துவிடுவோம். இங்கிருந்து பேச வேண்டாம். சம்பத் தங்கியிருக்கும் ரூம் நகர சத்திரத்தில் திறந்திருக்கிறது. மேயர் முனுசாமி அங்கிருக்கிறார். அங்கே போகலாம்'' என்றார்கள். அவனை அழைத்துக்கொண்டு எல்லோரும் புறப்பட்டார்கள்.



# வன்செயற்குழு

இரவு 7-30 மணி இருக்கும். காலையில் முடிந்திருக்க வேண்டிய செயற்குழு—முடியாமலேயே நீண்டுகொண்டு போவதாகச் செய்திவந்தது. ஆகவே சத்திரத்தில், முனுசாமி ஒரு கட்டிலில் சாய்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவன் ஒரு சிறிய பேப்பரில் குறிப்புகள் எழுதிக் கொண்டிருந்தான்.

''கவிஞர், கவிஞர்''—என்றொரு குரல் கேட்டது. அந்தக் குரலில் தோன்றிய பதற்றத்தில் அவனும் பதறி எழுந்தான். பரபரப்போடு உள்ளே நுழைந்தார் ஆர். எஸ். பாண்டியன்.

''செயற்குழுவில் அடிதடி நடக்கிறது. சம்பத்தை எல்லோரும் அடிக்கிறார்கள்'' என்றவர் சொன்னார். அவன் கலங்கிவிட்டான். அங்கிருந்த காரை எடுத்துக்கொண்டு செயற்குழு நடக்குமிடத்திற்குச் சென்றார்கள். செயற்குழுவில் கலந்து கொண்டிருந்த எம். பி. சுப்பிரமணியம் (எம்.எல்.ஏ.) இறங்கி வந்தார். மதுரை சண்டியர் ஒருவர் சம்பத்தின் சட்டையைப் பிடித்ததாகவும் கருணாநிதி சத்தம் போட்டுத் திட்டியதாகவும், இரண்டு நடிகர்கள் முண்டாப் பனியனோடு வந்து நின்றதாகவும் அண்ணாத்துரை அழுததாகவும் அவர் சொன்னார்.

''உனக்காவது சொத்து சுகம் இருக்கிறது சம்பத். அரசியலை விட்டால் வேறு எங்களுக்குத் தொழில் ஏது'' என்று அன்பழகன் பரிதாபமாகக் கேட்டாராம். கட்சியில் இந்தக் குழப்பம் வந்ததனால் 'வசூல் வேலை' தடைப்படுகிறது என்று பலபேர் ஆத்திரமாக இருந்தார்களாம். இவர்களைச்

சும்மா விடக்கூடாது என்றார் சுப்பிரமணியம். ''எவனுக்கு என்ன யோக்கியதை என்பதைப் பார்த்துவிடுவோம்'' என்றான் அவன்.

மாடியில் இருந்து எட்டிப்பார்த்தார் மதுரை சண்டியர். ஒரு கணைப்புக் கனைத்தார். அவன் சத்தம் போட்டுச் சிரித்தான். 'உஸ், நீங்கள் பேசாமல் நகரச் சத்திரத்திற்குப் போங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் செயற்குழு முடிந்துவிடும். நாங்கள் வந்துவிடுகிறோம் என்றார், சுப்பிரமணியம். கோவிந்தசாமி இறங்கி வந்தார். அவனைக் காரில் ஏற்றி அனுப்பினார்.

அந்த இடம், வேலூரிலேயே ஒரு ஒதுக்குப்புறம். அதனால் அங்கே கூட்டம் சேரவில்லை. இப்படிச் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டே செயற்குழுவுக்கு அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது போல் தோன்றிற்று. இரவு 9 மணிக்குக் கட்சியில் தான் வகித்து வந்த அவைத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு சம்பத்தும் எம். பி. சுப்பிரமணியமும் மற்றைய நண்பர்களும் சத்திரத்திற்கு வந்தார்கள். அதற்குள் செயற்குழுச் செய்தி பரவி சம்பத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் அங்கே வந்துவிட்டார்கள். 50 பேருக்கு மேலிருக்கும். அவ்வளவு பேரும் கட்சியின் பொறுப்பான அங்கங்கள். கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணன், சேலம் மாவட்டச் செயலாளர் குப்புசாமி, சென்னை மாவட்டச் செயலாளர் மணிவண்ணன், மேயர் முனுசாமி, ஏ. கோவிந்தசாமி எல். எல். ஏ. எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., ஏ. செல்வராஜ் எம். எல். ஏ., மதியழகன், க ராஜாராம், ஆர். எஸ். பாண்டியன், கோவை செழியன், உ. பில்லப்பன், டி. கே. பொன்னுவேலு முதலியோர் அவர்களுள் சிலர். ஒவ்வொருவரும் நெருப்பாக நின்றார்கள். மறுநாள் பொதுக்குழுவைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று ஒருவர் யோசனை சொன்னார்.

''இப்பொழுதே கட்சியில் இருந்து எல்லோருமே ராஜினாமாச் செய்ய வேண்டும்'' என்றொருவர் கூறினார். மதியழகன் தான் இதில் தீவிரமாக இருந்தார்-சம்பத் எல்லோரையும் அமைதிப்படுத்தினார். சம்பத் செய்த இரண்டாவது தவறு இது. தனது ஆதரவாளர்களின் ராஜினாமா யோசனையை அன்றைக்கே அவர் ஒப்புக் கொண்டிருந்தால் அண்ணாத்துரையும் கருணாநிதியும் சம்பத்திடம் சரணடைய வேண்டியதிருந்திருக்கும். காரணம், அன்று பெரும்பான்மையான ஆதரவு சம்பத்துக்கே இருந்தது.

நீலிக்கண்ணீர் வடித்து சம்பத்தின் ஆதரவாளர்கள் பலபேரை தன் பக்கம் இழுப்பதற்கு அண்ணாத்துரைக்கு ஒரு வாய்ப்பை சம்பத் கொடுத்துவிட்டார். ஏராளமானவர்கள் ராஜினாமா யோசனை சொன்ன போது அதை மறுத்துவிட்டார்.

ஆத்திரப்படாமல் நிதானமாக இருந்து மறுநாள் பொதுக்குழுவில் கலந்துகொள்ளும்படியும் தீர்மானங்களை வலியுறுத்தும்படியும் கூறினார். பொதுக்குழுவுக்கு சம்பத் வரக்கூடாதென்றும் வந்தால் அவரிடம் கண்ணீர் வடித்து தீர்மானங்களை வாபஸ் வாங்க அண்ணாத்துரை வைத்துவிடுவாரென்றும் சிலர் கூறினார்கள். அப்படியே பொதுக்குழுவில் சம்பத் கலந்து கொள்வதில்லையென முடிவு செய்யப்பட்டது. அன்று இரவு, எல்லோரும் அங்கேயே தங்கினார்கள். யார் தூங்கினார்கள். ஒருவரோடொருவர் காரசாரமாக விவாதித்துக்கொண்டு தூக்கத்தையே மறந்துவிட்டார்கள்.

அந்த இரவு ஒரு வேடிக்கையான இரவு. போர்க்களத்தில் முகாமிட்டிருக்கும் படைகள் மறுநாள் பொழுதைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பதைப் போல அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதுமாதிரி நேரங்களில் அவன் மிகவும் உற்சாகமாக இருப்பான். டீயும் சிகரெட்டுமாக அன்றைய இரவை தூங்காமல் கழித்தான்.




பொழுது விடிந்தது. வேலூரிலும் சூரியன் கிழக்கே தான் உதித்தான். கட்சியிலே சிலருடைய இதயங்களைத் தவிர வேறெங்கேயும் இருள் இல்லை. எல்லோரும் அவசர அவசரமாகக் குளித்தார்கள். குழு உறுப்பினர்களுக்கு குழுக் கூட்டம் நடக்கும் இடத்திலேயே பலகாரம் உண்டு. ஆனாலும் ஓட்டலிலேயே சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவோம் என்று அவன் யோசனை சொன்னான்.

''கூடாது. இன்று கண்டிப்பாக அங்கே போய்த்தான் சாப்பிட வேண்டும்'' என்றார்கள் மற்றவர்கள். சாப்பிடும் இடத்திலேயே சண்டை வந்தாலும் தயார் என்பது போல அவர்கள் இருந்தார்கள்.

கட்டிட வாசலுக்குள் அவர்கள் நுழைந்தனர். எதிரே ஜீப் கார்கள் பறந்து கொண்டிருந்தன. அடியாட்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அதிலே ஆச்சரியம் என்னவென்றால்—அரசியலையே ஜீவனாம்சமாகக் கொண்டவர்கள் மட்டுமே அண்ணாத்துரையின் ஆதரவாளர்களாக இருந்தார்கள். ஆகவே அங்கே அவர்களை அடையாளம் கண்டு கொள்வதும் சுலபமாக இருந்தது. உண்மையிலேயே அது ஒரு போர்க்களம் போலக் காட்சியளித்தது. சம்பத் ஆதரவாளர் அனைவரும் சாப்பாட்டு விடுதிக்குள் நுழைந்தார்கள். அங்கே பயங்கரமான மௌனம் நிலவியது.



''இங்கே யாரும் எதையும் பேசக் கூடாது'' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களே பேசாமலிருக்கும்போது நாம் பேசலாமா! இவர்களும். பேசாமல் இருந்தார்கள்.

சாப்பிட்டு முடித்து பொதுக்குழு நடக்கவிருந்த மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். அங்கே மூன்று பகுதிகளாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாலாவது புறத்தில் பொதுச் செயலாளரும் மற்ற நான்கு செயலாளர்களும் அமர்வதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சம்பத் குழுவினர் அனைவரும் ஒரு இடத்தில் அமராமல் மாவட்ட வாரியாகப் பரவலாக அமர்ந்தனர். அண்ணாத்துரையின் ஆதரவாளர்களும் ஒவ்வொருவராக வந்து மற்ற நாற்காலிகளில் அமர்ந்தனர்.

வழக்கம்போல் காலதாமதமாகவே அண்ணாத்துரை வந்தார். அவரது ஆதரவாளர்கள் கை தட்டினார்கள். மற்றவர்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தார்கள். குழுவுக்கு வந்திருக்கும் தீர்மானங்களை அந்தந்தச் செயலாளர்கள் பரபரப்பாகப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். தகராறுக்கு இடமில்லாத பொதுத் தீர்மானங்கள் மளமளவென்று நிறைவேற்றப்பட்டன. பிறகு சம்பத் குழுவின் தீர்மானங்களைக் கையில் வைத்துக்கொண்டு அண்ணாத்துரை எழுந்து பேசினார்.

கருணாநிதி ஒன்றும் அறியாத கன்னிபோல் உட்கார்ந்திருந்தார். அண்ணாத்துரை உருக்கமாகவே தனது பேச்சை ஆரம்பித்தார். ''கட்சியில் குழப்பம் வந்து ஏதாவது ஆகுமென்றால் என்னை உயிரோடு காண முடியாது', என்று அவர் கூறியதும் ''ஐயோ அண்ணா'' என்று சிலபேர் அழுதார்கள். அழுதவர்களின் நடிப்பு, அண்ணாத்துரையின் நடிப்பையும் மிஞ்சி நின்றது. அவன் மட்டும் புன்னகை புரிந்து கொண்டிருந்தான். உண்மைக்கும் நடிப்புக்கும் உள்ள வித்தியாசத்தை ஓரளவு கண்டுகொள்ளக்கூடியவன்தானே அவன்.

அவன் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து பலபேர் ஆத்திரமாகக் கத்தினார்கள். அண்ணாத்துரை தொடர்ந்து பேசினார். ''சம்பத்குழுவின் தீர்மானங்களை இப்போது விவா

திக்க வேண்டாம். இந்தச் சூடு தணிந்த பிறகு விவாதிக்கலாம். அதுவரை தீர்மானங்களை ஒத்தி வைக்க விரும்புகிறேன். நான் ஒத்தி வைப்பதை ஆமோதிப்பவர்கள் கையைத் தூக்குங்கள்'' என்றார்.

அவர்களுடைய ஆதரவாளர்கள் மட்டுமே கையைத் தூக்கினார்கள். எண்ணிக்கை அதிகமாகத் தெரிய வேண்டும் என்பதற்காக சிலபேர் இரண்டு கைகளையும் தூக்கினார்கள். கை தூக்காதவர்களைப்பற்றி அண்ணாத்துரை பேசினார்.

''அந்தக் கைகளை நான் அறிவேன். சமயம் வரும்'' என்றவர் சொல்லிவிட்டு தீர்மானங்களை ஒத்தி வைத்தார். அதோடு பொதுக் குழுவையே ஒத்தி வைத்தார்.

அன்று மாலை, வேலூர் கோட்டை மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. அண்ணாத்துரை, சம்பத், கருணாநிதி எல்லோரும் அதில் கலந்து கொள்வதாக இருந்தது. மாலையில் ஊர்வலமும் வைத்திருந்தார்கள். சம்பத் ஆதரவாளர்கள் யாரும், ஊர்வலத்திற்கோ கூட்டத்திற்கோ போகவில்லை. அன்று மாலையே எல்லோரும் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.



## நாமறியப் பிளவு

சென்னைக்கு வந்தவுடன் பல கட்சித்தோழர்கள் அவனை வந்து சந்தித்தார்கள். வேலூரில் நடந்ததுபற்றி யாருமே விசாரிக்கவில்லை. அப்படியொரு நிகழ்ச்சி நடந்த செய்தியும் அந்த நேரம் வரை பத்திரிகைகளில் வரவில்லை. பத்திரிகைக்காரர்கள் பலபேருக்கும் அந்தச் செய்தி தெரியாது. முதன் முதலில் இந்தச் செய்திகளை யெல்லாம் படித்து அறிந்தவர் 'நவ இந்தியா' நிருபர். நவ இந்தியாவின் அன்றைய மாலைப் பதிப்பில் எட்டுக் காலம் தலைப்பில் 'தி. மு. க. அவைத் தலைவர் பதவியில் இருந்து சம்பத் ராஜினாமா' என்று போட்டு பொதுக்குழு நிகழ்ச்சிகளை விவரித்தார் அவர்.

அந்தப் பத்திரிகை வந்த மாலை நேரத்தில் தேனாம்பேட்டை ஆலையம்மன் கோவில் திடலில் ஒரு பொதுக் கூட்டம். அதில் அவன் பேசிக்கொண்டிருந்தான். சூசகமாகச் சில விஷயங்களை அவன் வெளியிட்டான்.

கூட்டத்தார் அதைப் புரிந்துகொள்ளவில்லை. காரணம், பலபேர் அப்போது பத்திரிகையைப் பாராதவர்களாக இருந்தார்கள். கூட்டம் முடிந்து வீடு செல்லும் போது பல கடைகளின் முன்னால் கூட்டங் கூட்டமாக நின்று மக்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்கள்.

அறைக்குள் நடந்தது அம்பலத்திற்கு வரத் தொடங்கிற்று! பத்திரிகை நிருபர்கள் அன்று இரவு சம்பத் வீட்டை முற்றுகையிட்டார்கள். மறுநாள் காலைப் பத்திரிகைகளில் வேலூர்ப் பொதுக்குழுச் செய்தியே பிரதானமாக இருந்தது.

அன்று மாலை 'நம் நாடு' பத்திரிகையில் சம்பத்தின் ராஜினாமாக் கடிதத்தைப் பிரசுரித்து—அவரே தான் விரும்பி ராஜினாமா செய்தாரென்றும் வற்புறுத்தப்பட்டதாகச் சொல்வது பொய்யென்றும், கலவரம் ஏதும் நடக்க வில்லை யென்றும் குறிப்பெழுதியிருந்தார்கள்.

சம்பத் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

"பெரியாரை மடாதிபதிபோல் நடக்கிறார் என்று குற்றஞ்சாட்டி நாம் வெளி வந்தோம். அந்த மடாதிபதியை விட்டு வெளி வந்தது, இந்த மடாதிபதிக்குப் பட்டங்கட்டுவதற்கு அல்ல." என்று சம்பத் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். கட்சியில் ஜனநாயகம் அவமதிக்கப்பட்டு விட்டது. எந்தத் தனி மனிதஸ்துதியை அண்ணாத்துரை வெறுத்து எழுதி வந்தாரோ, அந்த ஸ்துதிக்குத் தான் ஆளானபோது அதை விரும்பத் தலைப்பட்டுவிட்டார். ஆகவே அவர் விரும்பாத கருத்தைச் சொல்கிறவன் அவருக்கும் கட்சிக்கும் எதிரியென்றும் அவன் உதைக்கப்பட வேண்டியவனென்றும் அவருக்குத் தூபம் போடுகிற பூசாரிகள் கீழ் மட்டத் தொண்டர்களைத் தூண்டி விடுகிறார்கள். வேலூர்ப் பொதுக்குழுக் கலவரம் திட்டமிட்டு நடந்ததே தவிர, இயற்கையாக எழுந்தது அல்லவென்றும் சம்பத் தனது அறிக்கையில் கூறியிருந்தார். அதற்கு அண்ணாத்துரையின் மறுப்பு வெளி வந்தது. அவனும் தனது பத்திரிகையில் அதுபற்றி எழுதி யிருந்தான். கட்சித் தொண்டர்களிடையேபீதியும் பரபரப்பும் பயமும் தோன்றத் தொடங்கின. நாலைந்து நாட்கள் இந்த அறிக்கைப் பரிமாற்றம் நடந்த பிற்பாடு அண்ணாத்துரைக்கும் சம்பத்துக்கும் இடையே சமரசம் காண சிலர் முயன்றார்கள். அவர்களில் உண்மையாகவே சமரசத்தில் ஆர்வம் காட்டியவர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களாகும்.

அண்ணாத்துரை அப்போது காஞ்சியில் இருந்தார். அவரைச் சுற்றியிருந்த சில பூசாரிகள் சமரசமே கூடாதென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களிடமிருந்து அண்ணாத்துரையைப் பிரித்து எப்படியும் தான் கொண்டு வந்து விடுவதாகவும், ஒரு பொது இடத்தில் இருவரும்



சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் திரு. கோவிந்தசாமி தொலைபேசியில் கூறினார். முதலில் சம்பத் அதற்கு இணங்கவில்லை. அவனும் இரண்டொரு நண்பர்களும் வற்புறுத்தியதன் பேரில் சம்பத் இணங்கி வந்தார்.

எங்கே சந்திப்பது என்ற பிரச்னை வந்தபோது—எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் ஒரு வீட்டைத் தான் ஏற்பாடு செய்வதாக அவன் கூறினான்.

அதன்படி சன் தியேட்டருக்கு எதிரேயுள்ள பாலமந்திருக்குப் பக்கத்துத் தெருவில்—அபிபுல்லா ரோடு வந்து சந்திக்குமிடத்தில் இருந்த ஒரு நண்பரின் வீட்டை ஏற்பாடு செய்து, அதன் விலாசத்தையும் காஞ்சியிலிருந்த ஏ. கோவிந்தசாமிக்குத் தெரிவித்து விட்டான்.

ஐந்து மணிக்கெல்லாம் அந்த விலாசத்துக்கு வந்து விடுவதாக அவர்களும் கூறினார்கள்.

# அண்ணாதுரையின் அறிக்கை

அவன் வீட்டிற்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டு, சரியாக ஐந்து மணிக்கு அந்த வீட்டருகில் வந்தான். அங்கு ஏற்கெனவே ஒரு சிறிய காரில் அண்ணாத்துரை வந்து வீட்டைத் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே காரை விட்டிறங்கி ஓடிச் சென்று அண்ணாத்துரையை வீட்டிற்குள் அழைத்து வந்தான்.

சுமார் ஏழு மணிக்கு சம்பத்தும் அண்ணாத்துரையும் சந்தித்தார்கள். திரு ஏ. கோவிந்தசாமியும் அவனும் கூட இருந்தார்கள். பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. நடந்து போன விவகாரங்களைக் கிளப்பாமல் இனி எப்படி நடந்து கொள்வது என்பது பற்றியே அவர்கள் பேச விரும்பினார்கள். நேர்முகச் சந்திப்பில் அவர்கள் மிகவும் கவலையோடு காணப்பட்டார்கள். சிறு வயது முதலே நெருங்கிப் பழகிய பழக்கத்தின் பாசத்தால் அன்று மிகவும் அதிகமாகவே பேசினார்கள். இறுதியில் இருவரும் சேர்ந்து ஒரு அறிக்கை விடுவதென்று முடிவாயிற்று.

அந்த அறிக்கையில் செயற்குழுவில் நடந்த வன்முறைகளுக்காக தான் வருந்துவதாக அண்ணாத்துரை குறிப்பிட வேண்டும் என்று சம்பத் கேட்டுக் கொண்டார். முதலில் யோசித்த அண்ணாத்துரை பிறகு அதனை ஒப்புக்கொண்டு அவ்வாறே அறிக்கை எழுதினார். பத்திரிகை நிருபர்களுக்கு அந்த அறிக்கை தரப்பட்டது

அன்று இரவே நாகர்கோயிலில் ஒரு கூட்டத்திற்கு அண்ணாத்துரை போக வேண்டி இருந்தது. அவன் தன்னுடைய காரைக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தான்.

"சம்பத்தை அண்ணாத்துரையோடு சேர்த்துவிட்டோம்; என்பதால் சலனமற்ற அமைதி யொன்று அவன் நெஞ்சில் நிலவியது.

அந்த ஒருவார காலத்தில் அன்று அவன் நிம்மதியாகத் தூங்கினான்.





# நடிகர்களால் குழப்பம்

காலைப் பத்திரிகைகளில் 'அண்ணாத்துரை — சம்பத்' அறிக்கை வெளி வந்தது. பிற பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கை, கருணாநிதியின் முரசொலியில் மட்டும் வெளிவரவில்லை. இந்த சமாதானத்தில் தனக்கு விருப்பமில்லையென்பதை அவர் அப்படிக் காட்டிக் கொண்டார். அறிக்கையைக் கண்ணுற்ற கழகத்து நடிகர்கள் நாகர் கோயிலில் இருந்த அண்ணாத்துரைக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள்.

ஏற்கெனவே செயற்குழுவில்நடந்த வன்முறையில்நடிகர்களும் பங்கு கொண்டதாக சம்பத் கூறியிருந்தார். ஆகவே வன்முறையைக் கண்டித்து அறிக்கையில் இருந்த வாசகம் தங்களைக் காட்டிக் கொடுப்பதாகவும், தாங்களும் வன்முறையில் ஈடுபட்டதாக அண்ணாத்துரையே ஒப்புக் கொள்வது போல் இருக்கிறதென்றும் அது தங்கள் மனதைப் புண்படுத்துவதாகவும் நடிகர்கள் தங்கள் தந்தியில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அடங்கி விட்டதாக அவன் கருதிய நெருப்பு—மீண்டும் புகையத் தொடங்கிற்று! இந்தப் புகையை மீண்டும் மீண்டும் கிளப்பியதில் கருணாநிதிக்குப் பெரும் பங்குண்டு. தந்தியைப் பார்த்த அண்ணாத்துரை குழப்பமடைந்தார். குழப்பமே அவரது மனோதர்மம்; ஆகையால் நடிகர்களை எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாமல் திண்டாடினார்.

அவர் சென்னைக்குத் திரும்பியதும் நடிகர்களும் மதுரை

பயில்வான்களும் அவரிடம் படையெடுத்து தங்களை வன்முறையாளர்கள் என்றதற்கு அண்ணாத்துரை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் தாங்கள் கட்சியைவிட்டே ஓடிவிடுவதாகவும் பயமுறுத்தினார்கள். அன்று சகல குழப்பங்களுக்கும் தாய் போல் இருந்த அண்ணாத்துரை அவர்களுக்காகப் பரிந்து வேறோர் அறிக்கை வெளியிட்டார். அதன் விளைவாக கட்சியின் உள் தகராறு தனது பழைய ஸ்தானத்தை மீண்டும் பிடித்துக்கொண்டது.

சம்பத் வீட்டில் அவனும் மற்றவர்களும் இது பற்றிக் கலந்து பேசினார்கள். ''நிலையான புத்தியில்லாதவர்களின் எந்த வாக்குறுதியை மதித்து நடப்பது? வரட்டும் பார்க்கலாம்'' என்றார் சம்பத். கட்சி வேலைகள் ஸ்தம்பித்து நின்றன. இரண்டு குழுவினரும் ஒருவரையொருவர் காணும்போது பகைவர்களாகவே பாவித்து நடந்தனர். அவன் மீண்டும் எரிச்சலுக்கு ஆளானான்.

தங்கள் சொந்த வாழ்க்கைக்காக அரசியலிலே புகுந்த நடிகர்கள் அரசியல் வாதிகளையே ஆட்டிப் படைப்பதை அவன் வெறுத்தான். ஏற்கெனவே நடிகர்கள் பெயரால் ஏராளமான மன்றங்கள் தோன்றி, கட்சிக் கிளைகளுக்கு இல்லாத செல்வாக்கை அவை பெற்றுக்கொண்டு இருந்ததில் அவன் ஆத்திரமடைந்திருந்தான்.

கட்சிக்கு நெருக்கடி வரும்போது கட்சியை விட்டு ஓடிவிடக் கூடிய நடிகர்கள் தங்கள் தொழிலுக்கு கட்சியைப் பயன்படுத்துவதை அவன் அவ்வப்பொழுது எதிர்த்தும் வந்திருந்தான். ஆகவே இந்தத் தடவை கட்சியில் நடிகர்களுக்குள்ள செல்வாக்கை கடுமையாகக் கண்டிக்க அவன் விரும்பினான். விளைவுகளைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவர்களை எதிரிகளாகவே பாவித்தான்.

அடுத்தவார 'தென்றல்' இதழில் ஒரு கற்பனை நாட்டையும் கற்பனைக் கட்சியையும் படைத்து அந்த நடிகர்களைக் கேலி செய்திருந்தான். அதன் தலைப்பு 'பாவ மன்னிப்பு' என்பதாகும்.



மீனாட்சி நூல் நிலையம்

# பாவமன்னிப்பு

'தோமான்' என்னும் ஒரு தேசத்தை, 'ருதுவான்' என்னும் தேசத்துக்காரர்கள் ஆண்டு வந்தார்கள்.

தோமானும் ருதுவானும் ஒரே நிலப்பரப்பாக இருந்ததால், இது சாத்தியமாக இருந்தது.

தோமானியர்களை ஆளுவதற்குத் தங்களுக்குள்ள உரிமையை, இந்த நிலத்தொடர்ச்சியின் மூலமே ருதுவானியர்கள் நிறுவிக்கொண்டார்கள்.

நாளாக நாளாக, தோமானியர்கள் தாங்கள் அடிமைகள் என்பதை உணர ஆரம்பித்தார்கள்.

அந்த உணர்ச்சியை முதலாகக் கொண்டு, தோமானியர்களுக்குச் சில தலைவர்கள் தோன்றினார்கள்.

அப்போது அவர்கள் சிறுபான்மையினராக இருந்ததால், அவர்களுக்குள் நெருங்கிய பாசம் இருந்தது.

ஒருவரையொருவர் கண்டால், கண்ணீர் விட்டுக் கட்டியணைக்கிற அளவுக்கு அவர்கள் உறவு வளர்ந்தது.

அவர்கள் உண்மையையே பேசினார்கள்,

அதனால், தங்குதடையின்றி வார்த்தைகள் வெளிவந்தன.

தோமான் தேசத்து ஒவ்வொரு அடிமையும் அவர்களை நம்ப ஆரம்பித்தான்.

கடுகளவு இருந்தவர்கள், கடலளவு விரிந்தார்கள்.

தோமானியத் தலைவர்களே, தங்கள் விடுதலைக்கு வழிகாட்டிகள் என அவர்கள் நம்பினார்கள்.

ஒவ்வொருவனும், தான் ஒரு தோமானியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட ஆரம்பித்தான்.

தலைவர்களின் பாதங்களில் காணிக்கைகள் குவிந்தன.

''நமது தேசம் சுதந்திரதேவதையின் குடியிருப்பாக மாறும்'' என்று அந்தத் தலைவர்கள் நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தனர்.

ஆனால்—

அடிமைகள் அடிமைகளாக இருக்கும்போதே, தலைவர்கள் தாங்கள் விடுதலை பெற்றுவிட்டதாக உணர ஆரம்பித்தார்கள்.

போர்க்கருவி செய்வதற்காகச் சமைக்கப்பட்ட மண்டபம்-போக மண்டபமாயிற்று.

ஆத்திரம் கொண்டிருந்த மக்களின் நடுவே கூத்தர்கள் குடியேறினர்.

ஆரவாரமும் போர்முரசும் கேட்டுக்கொண்டிருந்த மாளிகையில்—

ராகமும் தாளமும் கேட்கத் தொடங்கிற்று.

எதிரியை மிதிக்க ஒருவன் காலைத் தூக்கினான். அந்தக் காலில் ஒருவன் சதங்கையைக் கட்டி விட்டான்.

வீரக்கால் நாட்டியமாடத் தொடங்கிற்று.

''எங்கே பகைவன்? எங்கே பகைவன்?'' என்றொருவன் எதிரியைத் தேடினான்.

அதையே பல்லவியாக வைத்து ஒருவன் பாட்டுப் போட்டு, அவனையும் நாடக மேடைக்கு இழுத்துச் சென்றான்.



ருதுவானியரின் முகத்திரையைக் கிழிக்க வேண்டுமென்று ஒருவன் முழங்கினான்.

அதற்குவழி, நாடகமேடையின் திரையைத் தூக்குவதுதான் என்றொருவன் அழைத்துச் சென்றான்.

''நாம் அடிமைகள்.

நமக்கு விடுதலை எப்போது?'' என்று சிலர் முழங்கினார்கள்.

''ஆடுகளே ஆடுகளே, அவசரப்படாதீர்கள்; மேய்ப்பவனை நம்புங்கள்'' என்று கூத்தர்கள் பதில் தந்தார்கள்.

ஆடுகள் மேய்ப்பனைப் பார்த்து,

''மேய்ப்பனே மேய்ப்பனே எங்களை எந்தத் திசையில் அழைத்துச் செல்லப்போகிறாய்?'' என்று கேட்டன.

மேய்ப்பனுக்கு மயக்கம் வந்தது.

மேய்ப்பனின் அருகில் இருந்த ஏய்ப்பன் பதில் சொன்னான்.

''எவ்வளவுக் கெவ்வளவு தங்கச்சுரங்கங்களைக் கைப்பற்றுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு விடுதலை சுலபம்.''

கூத்தர்கள் குதித்தெழுந்தார்கள்.

ஏய்ப்பனின் ராஜ தந்திரத்தை அவர்கள் வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

ஆடுகள் தங்கச் சுரங்கத்தைத் தேடிப் புறப்பட்டன.

அடிமைகளின் கோட்டையில் கூத்தும் கும்மாளமும் பெருகத் தொடங்கிற்று.

அடிமைகளுக்கு வழிகாட்டிவந்த தோமானியத் தலைவர்களுக்குக் கூத்தர்கள் வழிகாட்டத் தொடங்கினர்.

தலைவர்களின் போர் முழக்கத்தைவிட, கூத்தர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதே தங்களுக்குப்

பெருமையென்று அடிமைகள் கருத ஆரம்பித்தார்கள்.

கிழக்கில் வெள்ளி முளைத்திருந்தது.

விடுதலைச் சிவப்போடு இளம்பரிதி கிளம்புவான் என்று எதிர்பார்க்கப்பட்டது.

''விடுதலை வரப்போகிறது; வரப்போகிறது'' என்றொரு தலைவன் கத்தினான்.

உஷ்-சத்தம் போடாதே-சுவையான நாட்டியம் நடந்து கொண்டிருக்கிறது''—என்றொருவன் அவனை அடக்கினான்.

''இதுதான் நேரம்- இதுதான் நேரம்-போர் புரிவோம்''-என்றொருவன் முழங்கினான்.

''எது நேரம் என்று எனக்குத் தெரியும்—நாட்டியத்தைக் கவனி'' என்றொருவர் அவனை அடக்கினார்.

''தோமான் தேசத்துக் குடிமக்களே!

சுகபோகத்தில் ஆழ்ந்து விட்ட பரிதாபத்துக்குரியவர்களே!

ஆனந்த வெறிதானா அடிமைகளுக்கு மீட்சி?

தன்னைக் கொன்று கொண்டு தாயை வாழ வைப்பதல்லவா விடுதலை?

இதயத்தைப் புனிதப் படுத்துங்கள்.

வேரோடு களையெடுங்கள்.

தருணம்—இது தருணம்.''

என ஒருவன் முழங்கினான்.

ஆத்திரக் கூத்தனொருவன் அவனை அழித்து விடுவதுபோல் பார்த்தான்.

''போரும் கலையும் நமது இரண்டு கண்கள்'' என்றொரு கூத்தன் விளக்கினான்.

''இரண்டு கண்களும் பாதையைப் பார்த்தால் தானே ஊர்ப் போய்ச் சேர முடியும்?



வலது கண் இடது கண்ணையும், இடது கண் வலது கண்ணையுமே பார்த்துக் கொண்டிருந்தால் வழிநடப்பது எப்படி''—என்றொருவன் கேட்டான்.

வார்த்தை வளர்ந்தது; ஆத்திரம் பெருகிற்று.

இன்ப நாடக சூத்திரதாரிகள் பொங்கி எழுந்தனர்.

தங்கள் எஜமானர்களோடு போர் செய்ய வேண்டிய நேரத்தில்—

அடிமைகள் தங்களுக்குள்ளாகவே போர் செய்யத் துவங்கினார்கள்.

ருதுவானியர்கள் இந்தப் பேரரைக் கேள்விப் பட்டு விழாக் கொண்டாடினார்கள்.

''அவர்களை நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவர்கள் தங்களுக்குள்ளாகவே கவனித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

தோமானிய விடுதலை வீரர்கள், இரு பிரிவாய் ஆகிவிட்டதை எண்ணித் தோமான் தேசத்துப் பொதுமக்கள் அனைவருமே கண்ணீர்வடித்தார்கள்.

''இதற்கொரு வழியில்லையா?'' என்று ஏக்கத்தோடு கேட்டார்கள்.

சமாதான தேவதைகள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தார்கள்.

அவர்கள் நினைத்தது ஒருநாள் நடந்தது.

ஒருநாள்; ஒரே ஒருநாள்.

மறுநாள்—

''இந்தச் சமாதானத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை'' என்று ஒரு கூத்தரின் குரல் கிளம்பிற்று.

கூத்தாட்டரங்கின் விளக்குகள் ஒளி வீசத் தொடங்கின!

பக்கவாத்தியங்கள் தாங்களாகவே இசையெழுப்பத் தொடங்கின!

பளபளவென வெள்ளி வட்டங்கள் உதிர்ந்தன!

கூத்தர்களின் சரிகைத் தலைப்பாகைகள் மின்னின!

அவர்களின் மேலங்கிகளில் தொங்கிக் கொண்டிருந்த அடிமைக்குஞ்சங்கள் ஆர்ப்பரித்தன!

''தோமான் தேசத்து விடுதலைக்கு நாங்களே மூல முதல்வர்கள்'' என்று கூட்டுக் குரல் எழுப்பிற்று!

ஒவ்வொரு அடிமையின் முதுகும் தடவிக் கொடுக்கப்பட்டது!

எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளிப்பது போன்ற ஒரு சுகம், அடிமைகளின் உடம்பில் படர ஆரம்பித்தது.

ஆடரங்கின் ரதங்கள் திசைகள் தோறும் பறந்தன!

''பரம்பரையாக நாம் கைக்கொண்ட ஆனந்தத் தத்துவத்தை ஒருவன் எதிர்க்கிறான்.

அவனைச் சிலர் ஆதரிக்கிறார்கள்!

அவர்களுக்குச் சமாதி தருவதே நமது முதல் வேலை.''

என அந்த ரதங்களில் சென்ற போதகாதிபர்கள் புத்திமதி கூறினர்.

ஆயினும்—

தர்மத்தை நம்பி உண்மைகளைச் சொன்ன சிலர், தங்கள் கடமைகளைச் செய்தனர்.

''அடிமைகளே! தோமானிய அடிமைகளே!

தன்னை அர்ப்பணித்துக் கொண்டவனைத் தான் விடுதலைத் தேவி நேசிப்பாள்.

நம்மில் எத்தனைபேர் நம்மை அர்ப்பணித்துக் கொண்டோம்?''

என்றகேள்வி, ஒரு பகுதியிலிருந்து கிளம்பிற்று!

''இருந்ததை இழந்தவர்கள் எத்தனைபேர்?

இல்லாததைப் பெற்றவர்கள் எத்தனைபேர்?''

என்று அந்தக் கேள்வி தொடர்ந்தது.



''அடுத்தது என்ன? சிந்தித்துச் சொல்லுங்கள். அடுத்தது என்ன?''

என்று அந்தக் கேள்வி முடிந்தது.

வேட்டையாடப் புறப்பட்டு, நாட்டியமாடத் தொடங்கிய வீரர்கள், சற்று நின்று சிந்தித்தார்கள்.

அவர்கள் சிந்தனையைக் கண்ட ஒரு கூத்தனுக்குப் பயம் வந்தது.

''சிந்திக்காதே! சிந்திக்காதே! சிந்தனையைக் கட்டுப்படுத்திக்கொள்!''

என்று அவன் போதிக்க ஆரம்பித்தான்.

''மேய்ப்பனை நம்புங்கள்!

ஆடுகளே அவன் குரலைக் கேளுங்கள்?''

என்றொருவன் யோவான் சுவிசேஷத்தை விரித்து வைத்தான்.

முன்பு தங்கச்சுரங்கத்தைத் தேடிப்போன ஆடுகள், ஒரு பகுதியில் அந்தச் சுரங்கத்தைக் கண்டு பிடித்து—

ஏய்ப்பனிடம் கொடுத்தன.

ஏய்ப்பன் அதைத் தூக்கிக் காட்டி, ''இதோ பாருங்கள் தங்கச் சுரங்கம்; தங்கம் சரமாரியாக வந்து கொண்டிருக்கிறது. நம் எதிரிகளை இனித் தங்கத்தாலேயே அடித்துக் கொள்வோம்.''

என்று பொருள் விளக்கம் கொடுத்தான்.

''நமக்குள்ளேயே நம்மை எதிர்ப்பவர்கள், நம்மிடம் இருக்கும் தங்கத்தைக்கண்டதும் ஓடி ஒளிந்து கொள்வார்கள்.''

என்று கூத்தாட்டரங்கில் காற்றுடிக்கொண்டிருந்த கூத்தர்கள் கூடி முழங்கினார்கள்.

அந்த நேரத்தில், காற்று 'ஓ'வென்று இரைந்தது!

வடிவமற்ற காலதேவன், ஒரு வடிவு கொண்டு அங்கே தோன்றினான்!

அடிமைகள் கூட்டம் அவனை உற்று நோக்கிற்று!

''காலதேவனே; காலதேவனே!

நாங்கள்வெற்றிபெற்றுவிட்டோம்தெரியுமா?''

என்று ஏய்ப்பன் துள்ளிக்குதித்துக் கேட்டான்.

''அதைக் காணத்தான் இங்கே வந்தேன்.''

என்று சொல்லிவிட்டு அமர்ந்தான் காலத்தேவன்.

''சுயமாகச் சிந்தித்துக்கொண்டிருந்த துரோகிகளை நாங்கள் ஒழித்துவிட்டோம்.

காலதேவா! எங்கள் கூத்தாட்டரங்கம் இனிக் குதூகலமாக இருக்கும்.

தோமானுக்கு விடுதலை கிடைத்த பிறகு என்னென்ன சுகங்கள் கிடைக்குமோ, அவையனைத்தும் இப்போதே எங்களுக்குக் கிடைக்கின்றன.''

—என்றான் ஒரு கூத்தன்.

காலதேவன் சிரித்தான்.

''சிறுவர்களே!'' என்று ஆரம்பித்தான்.

''இல்லை நிறுத்து; நாங்கள் சிறுவர்களல்ல, தலைவர்கள்'' என்றான் ஒருவன்.

காலதேவன் மீண்டும் சிரித்து விட்டு—

''தலைவர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்பவர்கள் சிறுவர்களாகத்தான் இருக்கமுடியும்'' என்றான்.

''நாங்கள் வெற்றி பெற்றவர்கள்'' என்றொரு குரல் எழுந்தது!

''யாரிடம்? ருதுவானியர்களிடமா?'' — காலதேவன் மேலும் தொடர்ந்தான்.

''கலாதேவியின் சீட கோடிகளே!

கூத்தாட்டரங்கின் சதுரங்கக் காய்களே!

சற்றுக் கோபமின்றி என்னைச் செவிமடுங்கள்.



உலகத்தைப் பார்க்கவேண்டிய கண்ணால், நீங்கள் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்!

கலகத்தை அடக்கவேண்டிய கையால், நீங்கள் கலகங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

கல்லியும் முள்ளும் நிறைந்த பாதையைச் செப்பனிட வேண்டியவர்கள்—

கலாதேவியின் கால்களை வருடிக்கொண்டிருக்கிறீர்கள்.

கூட்டங் கூட்டமாகச் சத்தம் போட்டுச் சொன்னால், பொய்யே உண்மையாகி விடுமென்று நீங்கள் மனமார நம்புகிறீர்கள்!

உங்கள் வாய் உங்கள் இருதயத்தில் இருக்குமானால், நீங்கள் மக்கள் நடுவே நிற்கமாட்டீர்கள்!

உங்கள் இருதயம் பன்னீரில் மிதக்கிறது-வாய் மட்டும் வெந்நீராகக் கொதிக்கிறது.

சூடான வார்த்தைகள், உங்கள் தொண்டையிலிருந்து புறப்படுகின்றன!

பாவம்! அடிமைகள்!

தங்கள் விடுதலை எண்ணத்தைக் கைதட்டித் தீர்த்துக் கொள்கிறார்கள்.

ருதுவானிய எஜமானர்கள் இந்த அடிமைகளின் கைகளில் மட்டும் இருந்திருந்தால்—

இவர்கள் தட்டிய தட்டிலேயே அவர்கள் இறந்திருப்பார்கள்.

உங்கள் நியாய புத்தியின் மீது எந்தக் களங்கத்தையும் நான் சுமத்தவில்லை!

நீங்கள் ஏழைகளாகவும்—குறைந்த தொகையினராகவும் இருந்தபோது எவ்வளவு பிணைப்பு உங்களுக்குள் இருந்ததென்பதை எண்ணிப் பாருங்கள்!

ஒன்றுமில்லாத போது தான் உறவு நெருக்கமாகிறது!

தெருவழியே ஒழுங்காகச் சென்று கொண்டிருந்த மனிதன் திடீரென்று ஒரு வெள்ளிக்காசைக் கண்டெடுத்து விட்டால்—

தெரு முழுக்கக் காசு கிடைக்குமென்று அலைவதுபோல், நீங்களும் ஒரு சுகத்தைக் கண்டெடுத்துப் பல சுகங்களைத் தேடுகிறீர்கள்.

வீடே இல்லையென்றால் விசனம் வருவதில்லை.

ஒரு வீடு கிடைத்து விட்டால் மறுவீடு கேட்கிறது.

உங்களுக்கு மட்டுமல்ல—எந்தச் சராசரி மனிதனுக்கும் இதுதான் இயல்பு!

ஆனால் நீங்கள் சராசரி மனிதர்கள் அல்லவே? தலைவர்களாயிற்றே?

சிந்திக்க வேண்டுமென்று உலகுக்குச் சொன்னீர்களே? நீங்கள் ஏன் சிந்திக்கவில்லை?

தோமான் தேசத்துக்காக முழுக்க முழுக்க ஈடு கொடுத்துக் கொண்டே ஒருவனையும்—அவனது நண்பர்களையும் ஒழித்துவிட்டதாக நீங்கள் பெருமைப் படுகிறீர்கள்.

நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!

அவர்கள் சிலராகவும்—நீங்கள் பலராகவும் இருக்கலாம்.

யாரந்தச் சிலர்? ஒருவரிடமிருந்து ஒருவர் எதையும் எதிர்பார்க்காமலேயே ஒன்றாகச் சேர்ந்தவர்கள்

நீங்களோவெனில்—

ஒருவர் தோளில் ஒருவர் கையைப் போடும் போதே பைக்குள் என்ன இருக்கிறதென்று பார்ப்பவர்கள்.

அன்பாக அணைத்துக் கொள்கிறீர்களென்றால்,

இடுப்பைத் தடவுகிறீர்களென்று பொருள்.

'என் அருமை நண்பர்' என்று அழைத்து ஒருவன் பெயரை இன்னொருவன் சொன்னால்—

அடுத்தநாள் உதவிக்கு வரப்போகிறான், என்று அர்த்தம்.



நீங்கள் இல்லையென்று எனக்குச் சொல்ல வேண்டாம்; உங்கள் உள்ளங்களைத் தடவிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்கள் மனோகரமான வாசனைத் திரவியங்களை மார்பிலே பூசிக்கொண்டு அரங்கங்களில் தோன்றி இறங்கிவிட்ட பிற்பாடு, அன்றைய வரிவசூல் எவ்வளவு என்றுதான் விசாரிப்பார்களாம்.

நீங்களும் அவ்வாறே!

உங்கள் உறவும் அப்படியே!

ஆனால் அவர்களோ வெனில், அரண்மனையை விட்டுக் காடு நோக்கிப் புறப்பட்ட சித்தார்த்தனைப் போல்—

அகம், புறம் இரண்டையும் சுத்தமாக வைத்துக் கொண்டு மாளிகையை விட்டு இறங்கி வந்த ஒருவனுக்கு நண்பர்களாக இருக்கிறார்கள்.

அவனை நீங்கள் சுலபத்தில் கேலி செய்துவிட முடியாது.

அவனது மதியின்மீது களங்கம் சுமத்த முடியாது.

அந்த நகரத்தின் தந்தை உறுதியான உள்ளம் படைத்தவர்.

அங்கே ஒருவனது பாட்டுக் குரல் கேட்கிறது.

அவன் உங்கள் வேட்டுக் குரல்களை இலட்சியம் செய்ய மாட்டான்.

அவனுக்கு எதையாவது நீங்கள் வழங்கியிருந்தால், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்!

அதன் பிறகும் அவனைப் பாருங்கள்!

தளராத தன்னம்பிக்கை கொண்ட அவர்களை நீங்கள் ஒதுக்கி விடுவது எளிதல்ல.

நீங்கள் ஆடத் தொடங்கிய ஆட்டங்களில்கூட உங்கள் வளர்ச்சிக் கட்டம் முடிந்துவிட்டது.

ஆனால் அவர்கள் இன்னும் வளருவார்கள்.

நீங்கள் உயிரோடு இநந்து அதைக் காணண வேண்டும்.

நீங்கள் இளைஞர்கள்!

போர்க்களத்திற்குப் போனால் தானே உங்களுக்குச் சாவு வரும்?

நீங்கள் உயிரோடு இருந்து கவனிப்பீர்கள்.

அவர்கள் ஒவ்வொரு நாளும். அரிசியாக இருந்து சோறாகச் சமைக்கிறார்கள்.

அவர்களை யாரும் உண்பார்கள்.

ஆனால் நீங்களோ.—

அரிசியாகவும் இல்லை; சோறாகவும் இல்லை.

அரைவேக்காடுதான் நீங்கள் வெந்திருக்கிறீர்கள்.

'உங்களைச் சாப்பிடுவதா? காயப்போடுவதா' என்பதே பிரச்னை.

தோமானியர்களே!

இந்தக் கிழவன் மீது நீங்கள் கோபப் படாதீர்கள்!

காலக் கிழவன் நடக்கப் போவதைச் சொல்கிறான்.

உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உறவு. எவ்வளவு காலம் தொடருமென்று எனக்குத் தெரியும்.

இன்னும் ஒரு பருவம் மாறும் போது நான் உங்களைச் சந்திப்பேன்.

அப்போது, உங்களுக்குள்ளாகவே நீங்கள் அடிதடி நடத்திக் கொண்டிருப்பீர்கள்

ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்து விட்டு—

அவரது மேலங்கியைப் பங்கு போட முயன்ற சேவகர்கள், தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக் கொண்டது போல் நீங்களும் சண்டையிடுவீர்கள்.

சரியாகவோ தவறாகவோ, பொற்காசுகள் நிறைந்த பொக்கிஷம் உங்கள் கையில் இருக்கிறது.

பொக்கிஷமென்ற அடுப்பில் போட்டியென்ற புகை கிளம்பி அடிதடியில் வந்து முடியும்.



இதில் நான் சொல்வது தப்பாது!

உங்கள் ஒவ்வொருவருடைய இருதயமும் எனக்குத் தெரியும்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான தேவையிருக்கிறது.

கொஞ்சகாலத்திற்கு நீங்கள் அதைப் பரிமாறிக் கொள்வீர்கள்.

கொடுப்பவர்கள் சிலராகவும்—கேட்பவர்கள் பலராகவும் இருந்தால். முடிவென்ன ஆகுமென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

நான் இன்னும் உங்களுக்குச் சொல்லவேண்டியது பாக்கி யிருக்கிறது.

எதையும் எதிர்பாராதவனும்-எந்த முடிவையும் பொருட்படுத்தாதவனுமான ஒருவனே இந்த உண்மைகளை உங்களுக்குச் சொல்ல முடியும்

நான் இங்கே வரும்படியும்—இவற்றை உங்களுக்குச் சொல்லும்படியும் நீங்களே உண்டாக்கி விட்டீர்கள்.

ஜெயகோஷம் போட்டுக் கொண்டிருக்கும் அடிமைகளை ஏமாற்றிவிடாதீர்கள்.

காசை உள்ளே போட்டவுடன், சீட்டை வெளியே தள்ளும் எந்திரம்போல்—

உங்கள் பெயரைக் காதில் கேட்டவுடன், ஜெயகோஷம் போடும் பரிதாபத்துக்குரியவர்களை இனியாவது காப்பாற்ற முயலுங்கள்!

தோமானியக் குடிமக்களே!

உங்களுக்கு இறுதியாக ஒன்றே ஒன்று சொல்லுவேன்.

கொலை உட்பட, எந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு உண்டு.

ஆனால்—

ஒரு புனிதமான காரியத்தைத் துவங்கிக் கெடுத்த பாவத்திற்கு மன்னிப்பு இல்லை.

தோமானிய விடுதலை இயக்கம் தனக்குள்ளேயே அடித்துக் கொண்டு செத்தது.

சுகபோசத்தில் மூழ்கி விடுதலை முயற்சியைக் கெடுத்தது.

ஆட்டபாட்டங்களில் ஈடுபட்டு ஆரவாரத்தைக் குறைத்துக்கொண்டது.

அதன் மூலம் அடியோடு ஒழிந்தது.

அதன் பிறகு 'விடுதலை' என்ற வார்த்தையிலேயே தோமானியர்கள் நம்பிக்கை இழந்தார்கள்.

என்று இந்தச் சரித்திரம் முடியுமானால்—

ஒவ்வொரு தலைமுறையும் உங்களைப் 'பாவிகள்' 'பாவிகள்' என்றே பழிக்கும்!

''நிரந்தரமாக உங்கள் பாவத்திற்கு மன்னிப்பில்லாமல் போய் விடும்.''

காற்று மீண்டும் 'ஓ'வென்று இறைந்தது.

காலத்தேவன் அதில் கலந்து மறைந்தான்.

கூத்தரும் பிறரும் எழுந்து நடந்தனர்.



# பெரும் பரபரப்பு

'பாவ மன்னிப்பு' வெளிவந்த தென்றல் இதழ் அடிதடிகளுக்கிடையே விற்பனையாயிற்று. 'அண்ணாவின் மன்னன்' கட்டுரை வெளிவந்தபோது ஏற்பட்ட பரபரப்பையும் அது மிஞ்சியது. கதை போலத் தோற்றமளித்த அந்தக் கட்டுரை நடிகர்களை 'கூத்தர்கள்' என்று கேலி செய்திருந்தது.

ஆங்காங்கே அந்தக் கட்டுரையைக் கையில் வைத்துக் கொண்டு ஆத்திரமான சர்ச்சைகள் செய்யப்பட்டன. நடிகர்களுக்கு எதிரானவர்கள் அனைவரும் அதைப் படித்துப்படித்து ரசித்தார்கள். கருணாநிதியும் மற்றும் சிலரும் அதற்குப் பதில் சொல்லும் முறையில் அதே பாணியில் ஒரு கட்டுரை எழுத முயன்றார்கள். இரண்டொருவர் எழுதியும் வெளியிட்டார்கள்.

அதை அண்ணாத்துரையே படித்து விட்டு ''இந்த மாதிரி முயற்சியும் பாணியும் உங்களில் யாருக்கும் வராது. ஆகவே வேறு முறையிலேயே எழுதுங்கள்'' என்று சொன்னாராம்.

'பாவ மன்னிப்பு—பயங்கரக் கட்டுரை' என்ற தலைப்பில் கருணாநிதி தன்னுடைய 'முரசொலி'யில் அதற்குப் பதில் சொல்லியிருந்தார். பதிலல்ல அது—தனக்குக் கீழிருந்தவர்களைக் கிளப்பி விடும் முயற்சிதான். அந்த முயற்சியில் அவர் ஓரளவு வெற்றி பெற்றார் என்று கூடச் சொல்லலாம்.

அந்தக் கட்டுரை வெளிவந்த சில தினங்களுக்கெல்லாம் மதுரையில் ஒரு பொதுக் கூட்டத்திலும் எழுத்தாளர் மன்றக் கூட்டத்திலும் சம்பத்தும் அவனும் கலந்து கொள்வதாக

இருந்தது. அந்தக் கூட்டத்தைப்பற்றி சென்னையிலேயே பல பயங்கரமான வதந்திகள் உலாவின.

மதுரை நகரம் ஒரு பெரிய சண்டியருக்கே சொந்தமான நகரமென்றும் அங்கே போகிற சம்பத்தும் அவனும் உயிரோடு திரும்பமாட்டார்களென்றும் பலவாறான வதந்திகள் கிளம்பின. அதனால் அவர்கள் போகப் போவதே இல்லையென்றும் சிலர் பேசிக் கொண்டார்கள். அவனுக்குச் சிரிப்பு வந்தது. பயம் என்பது சம்பத்தோ அவனோ அறியாத ஒன்று. எங்கே எதிர்ப்பு இருக்கிறதோ அங்கே போவதுதான் ஆண்மைக்கு அழகு என்று கருதுபவர்கள் அவர்கள்.

மேலும் மதுரையில் அந்தச் சண்டியருக்கு இருந்த மரியாதையைப்பற்றி ஒரு தவறான கணக்கையே போட்டு வைத்திருந்தார்கள். நாலைந்து சாவிகளை அவர் கையிலே வைத்திருந்தார் என்பதைத் தவிர மதுரை நகரில் அவருக்கு எந்த விதமான செல்வாக்கும் இல்லையென்பதை நகரசபைத் தேர்தல்கள் நன்றாகக் காட்டிக்கொண்டிருந்தன. ஆனால் எப்படியோ—பொதுச்செயலாளர் அண்ணாத்துரையில் இருந்து கீழ்மட்டப் பேச்சாளர்கள் வரை அந்தச் சண்டியர் தன்னைப் பற்றி ஒரு பயங்கரமான எண்ணத்தை உண்டாக்கி வைத்திருந்தார்.

அவனிடம் கூட பலமுறை தன் உடம்பில் இருந்த கத்திக் குத்துக் காயங்களை அவர் காட்டியிருக்கிறார். அவை தனது வீரத்துக்குக் கிடைத்த விழுப்புண்கள் என்பது போலப் பேசியிருக்கிறார். அதற்காகவே சில நடிகர்கள் அவருக்கு அடிக்கடி பணமும் கொடுத்து வந்தார்கள். ஏன் அவனும் கூடக் கொடுத்திருக்கிறான்.

இப்படியெல்லாம் அவரைப் பற்றி ஒரு பிரம்மாண்டமான கற்பனை பலர் மனதிலும் வேரூன்றிப் போயிருந்ததால் மதுரையில் அவருக்கு எதிரானவர்கள் நடத்தும் பொதுக் கூட்டத்தைப்பற்றி எல்லோருக்குமே பயமிருந்தது. 'மதுரைக்கு சம்பத் வரட்டும். என்ன நடக்கிறதென்று பார்' என்று அவரும் கர்ஜித்துவிட்டுப் போயிருந்தார்.

அந்த நாளும் வந்தது. சென்னையில் இருந்து ஒரு காரில் சம்பத்தும் அவனும் மதுரை புறப்பட்டார்கள். மதுரை



ஒத்தக் கடை அருகில் இருந்தே போலீசார் அவர்களை பின் தொடரத் தொடங்கினார்கள். மதுரையில் டாக்டர் அருணாசலம் என்பவர் வீட்டில் அவர்கள் தங்கினார்கள். அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிக் கூட போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். அளவு கடந்த போலீசாரின் எண்ணிக்கை வதந்தியின் பரப்பரப்பைக் காட்டிக் கொண்டிருந்தது. மாலை 4 மணிக்கு பழனி டாக்கீஸில் எழுத்தாளர் மன்றக் கூட்டம். அந்தக் கூட்டத்திற்குக் கட்சிக்காரர்கள் யாரும் போகக் கூடாதென்று வீடுவீடாகப்போய் சில சண்டியர்கள் சொல்லிவிட்டு வந்தார்கள். ஆகவே அந்தக் கொட்டகையில் நாகரீக மக்களின் கூட்டம் மட்டுமே நிறைந்திருந்தது.

அங்கே சம்பத் பொது விஷயங்களையே பேசினார். ஆனால் அவன் தன் சுபாவத்தின்படி கட்சியின் உள் விவகாரங்களை குத்தலாக இலக்கியத்தோடு பரிமாறினான். மாலை 6 மணிக்கு மேலமாசி வீதியில் கூட்டம். மதுரையில் மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒரு குடும்பத்தின் பிள்ளை அந்தக் கூட்டத்தை நடத்துகிறார். அவர்கள்வீடும் மேலமாசி வீதியிலேயே இருக்கிறது. எந்தச் சண்டியரும் அந்தக் குடும்பத்தினரிடம் வாலாட்ட முடியாது. 'விவேகானந்த அச்சக' உரிமையாளரான திரு. பழனியப்பர் அந்தக் குடும்பத்தின் தலைவர். அவரது மகனும் சம்பத் கோஷ்டியில் முக்கியமானவருமான திரு. ப. நெடுமாறன் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்.

ஆகவே கூட்டத்தில் கலவரமோ குழப்பமோ நடக்காதென்று மதுரை மக்களுக்கும் தெரிந்தது; கட்சித் தோழர்களுக்கும் தெரிந்தது. ஏராளமான கூட்டம். தெருவே நிறைந்திருந்தது. அவர்கள் பேச்சுக்களை கூட்டத்தினர் உற்சாகமாகக் கைதட்டி வரவேற்றார்கள். நகரில் போலீசார் அதிகம் உலாவினார்கள் என்பதைத் தவிர வேறு எந்தப் பரபரப்பும் இல்லை. இரவு 9 மணிக்கு கூட்டம் முடிந்ததும் திரு. நெடுமாறன் வீட்டில் சாப்பிட்டுவிட்டு அவர்கள்புறப்பட்டார்கள். போலீசார் அவர்களைப் பின்தொடர்ந்து ஒத்தக்கடை வரை கொண்டு வந்து விட்டுத் திரும்பினார்கள்.

# கழக மரியாதை

அடுத்து திருச்சிக் கூட்டம். திருச்சியில் இருந்த சம்பத் கோஷ்டி பிரமுகர்கள் அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். மதுரையைப் போல் திருச்சியைப் பற்றி வதந்திகள் ஏதும் பரவவில்லை. அதனால் போலீஸ் வளையங்களும் இல்லை. அவர்கள் இருவரும் சாம்பு வீட்டில் இறங்கிக் குளித்துவிட்டு ஆறு மணிக்கு டவுன் ஹால் மைதானத்திற்குச் சென்றார்கள்.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு தலைவர் பேசி முடிந்ததும் அவன் பேச எழுந்தான். உடனே கீழே இருந்து ஒருவன் மாலை போடுகிற பாவனையில் மேடைமேல் ஏறினான். அவன் கையில் ஒரு ஜரிகை மாலை இருந்தது. உடனே மடியில் இருந்து ஒரு செருப்பை எடுத்தான். அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு சத்தமிட்டபடி செருப்பை ஓங்கியதும் அவன் தன் காலால் எட்டி உதைத்தான், அந்தக் காலி கூட்டத்திற்குள் போய் விழுந்தான். உடனே அந்தக் காலியை பொது மக்கள் நன்றாக உதைத்துப் பக்கத்தில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குள் தள்ளினார்கள். போலீசார் உதைத்து உள்ளே இழுத்துக்கொண்டு போனார்கள் அந்தக் காலியை அதற்கு முன்னால் அவன் சில தடவைகள் சந்தித்திருக்கிறான். திருச்சியில் வந்து தங்கும் கழகத் தலைவர்களுக்கு எல்லாவிதமான 'சப்ளை'களையும் அவன்தான் செய்வான்.



ஆகவே—கருணாநிதிக்கு அவன் மிகவும் வேண்டியவனாக இருந்தான். திடீரென்று ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியில் கூட்டம் பரபரப்படைந்தது. சிலர் அழுது விட்டார்கள். மேடைக்கு அருகே போலீஸ் வளையம் வந்து விட்டது. ஆனால் அவனோ சம்பத்தோ எந்த விதமான சலனமும் இன்றி இருந்தார்கள். அண்ணாத்துரை கோஷ்டியினர் முன் கூட்டியே திட்டமிட்டிருந்தபடி கூட்டத்தின் ஒரு மூலையில் சுமார் நூறுபேர் உட்கார்ந்து கொண்டு 'அண்ணா வாழ்க!' என்று கோஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் சிரித்தபடி அரைமணி நேரம் அமைதியாகப் பேசி முடித்தான். அடுத்துப் பேசிய சம்பத்தின் உருக்கமான பேச்சு கூட்டத்தையே கவர்ந்துவிட்டது. கோஷித்தவர்கள் அடங்கிக் கிடந்தார்கள். கூட்டம் முழுவதும் அவர் பேச்சைக் கைதட்டி வரவேற்றது. அண்ணாதுரை கோஷ்டியினர் முகம் சுருங்கி வெளியேறினர். சுமார் ஒரு மணி நேரம் அவர் பேசினார். திராவிடர் கழகத் தோழர்கள் அங்கு ஏராளமாக வந்திருந்தனர். அதன் பிறகு கூட்டத்தில் ஏதாவது கலவரம் நடந்திருக்குமானால் சில கொலைகளே விழுந்திருக்கும். ஏனெனில் பெரியார் தொண்டர்கள் மரணத்திற்குத் துணிந்தவர்கள். முன்னேற்றக் கழகத்தினரைப் போல் அடிவிழுந்ததும் ஓட்டம் பிடிப்பவர்களாக அவர்கள் இருப்பதில்லை!

அன்றைய நிகழ்ச்சி தான் அவன் மனதில் பழி வாங்கும் உணர்ச்சியைத் தூண்டியது, அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் யாராக இருக்குமென்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. இன்னார்தான் 'இந்த நிகழ்ச்சிக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்று சாம்புவின் வீட்டில் அவன் பேசிக் கொண்டிருந்த போது திருச்சி தொலைபேசி இலாகாவில் இருந்து ஒரு பெண்மணி அங்கே வந்தார். அவர் அவனைத் தனியே அழைத்துக் கொண்டு போய்—பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு நடிகர் சென்னையில் இருந்து திருச்சியில் ஒரு காலண்டர் கம்பெனிக்கு ட்ரங்கால் போட்டு, 'நிகழ்ச்சி எப்படி நடந்தது?' என்று விசாரித்தாராம். அதே போல் ஆயிரம் விளக்கில்

உள்ள ஒரு பத்திரிகை அலுவலகத்தில் இருந்தும் அந்தக் காலண்டர் கம்பெனிக்கு ட்ரங்கால் வந்ததாம். அவன் நினைத்ததையே தான் அந்தப் பெண்மணியும் சொன்னார்.

''தேவைப்பட்டால் என் வேலைபோனாலும்பரவாயில்லை, நான் சாட்சி சொல்ல வருகிறேன்'' என்றார் அந்தப் பெண்மணி. அவருக்கு நன்றி சொல்லி அனுப்பினான் அவன். பழி தீர்க்கும் உணர்ச்சி அவன் நெஞ்சில் தலை தூக்கி நின்றது. சிலரை ஓட ஓடத் துரத்தி அடிப்பது என்று முடிவு கட்டிக் கொண்டான். அது அவனால் முடியும்.

மறுநாள் காலைப் பத்திரிகைகளில் திருச்சி நிகழ்ச்சி பிரதானமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவன் சென்னை வந்து சேர்ந்தபோது பத்திரிகையைப் படித்துக் காட்ட நண்பர்கள் அவன் வீட்டில் வந்து கூடியிருந்தார்கள். அவன் வந்து இறங்கியதும் அவர்கள் கண் கலங்கினார்கள். தான் எடுத்துக்கொண்டிருக்கும் ஓர் அரசியல் முயற்சிக்கு இது நல்ல சகுனம் என்றே அவன் கருதினான். அனுதாபத்துக்குரிய நிகழ்ச்சிகள்தான் சிலரது நட்பை உறுதி செய்கின்றன. திருச்சி நிகழ்ச்சியின் மூலம் சம்பத் கோஷ்டியினர் ஆவேசம் கொண்டவர்களாக மாறினார்கள்.

அன்று மாலை சம்பத் வீட்டில் எல்லோரும் கூடினார்கள். அடுத்த நடவடிக்கை பற்றி தீவிரமான ஆலோசனை ஆரம்பமாயிற்று. மதியழகன், ராஜாராம் முதலியோர் பலவிதமான யோசனைகளைக் கூறினார்கள். இறுதியில் திருச்சி நிகழ்ச்சியைக் கண்டித்து மறுநாள் முதல் தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சம்பத் கூறினார். சிலரைத் தவிர மற்ற அனைவரும் அதனை ஆதரித்தார்கள். பத்திரிகைகளுக்குச் செய்தி தரப்பட்டது. நண்பர்கள் மணிவண்ணன், குமாரசாமி முதலியோர் அன்று இரவோடிரவாக கீத்துகள் வாங்கி வந்து நுங்கம்பாக்கம் ஏரிப்பகுதியில் கொட்டகை போடத் தொடங்கினார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் இன்றைக்கென்ன பரபரப்பென்றே பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்த பொது மக்கள் அன்றும் உண்ணாவிரதப் பரபரப்பைக் கண்டார்கள்.



பத்திரிகைகளுக்குச் செய்திகொடுக்கும் முன்பே காஞ்சியில் இதை அண்ணாத்துரையோடு சம்பத் டெலிபோனில் பேசினார். சமாதான அறிக்கைக்குப் பிறகு இருவரும் சுமுகமாகவே பழகிவந்தார்கள். ஆகையால், தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதை முன் கூட்டியே அவருக்கு அறிவித்தார். அண்ணாத்துரை எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். திருச்சி நிகழ்ச்சிக்குச் சரியான பரிகாரம் கிடைக்கும்வரை தான் உண்ணாவிரதம் இருக்கப் போவது உறுதியென்று சம்பத் தெரிவித்துவிட்டார்.

சம்பத்தை அண்ணாத்துரையோடு டெலிபோனில் பேசவைத்தவர் அப்போது சம்பத் வீட்டு ஆலோசனையில் கலந்து கொண்டிருந்த திரு ஏ. கோவிந்தசாமி ஆவார். உண்ணாவிரதம் ஆரம்பமாயிற்று. கொட்டகை முன்னால் ஏராளமான கூட்டம். நகரின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஏராளமான தோழர்கள் வந்து சம்பத்தைப் பார்த்துவிட்டுப் போனார்கள். சம்பத்தை விரோதியாகக் கருதியவர்கள் கூட சம்பிரதாயத்துக்காகப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

சாதாரணமாக உண்ணாவிரதம் இருக்கிறவர்கள் விரதம் இருப்பதற்கு முதல் நாளே சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இனிமாக் கொடுத்து வயிறு சுத்தம் செய்யப்பட வேண்டும். இரவில் நீர்ப்பாங்கில் (Liquid) இருக்கும் உணவுகளைத் தவிர கடின உணவுகள் எதையும் சாப்பிடக் கூடாது. சம்பத் அந்த விதிகளை எல்லாம் கடைப்பிடிக்கவில்லையாதலால் விரதம் இருக்க தொடங்கிய முதல் நாளே ஓரளவு வேதனையும் தொடங்கிவிட்டது. காஞ்சியில் இருந்து அண்ணாத்துரை வந்தார்.

முதல் நாள் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போனார். திருச்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் அனைவரையும் கண்டித்து, கட்சியை விட்டு விலக்கவேண்டும் என்ற சம்பத்தின் கோரிக்கையை தன் சகபாடிகளுடன் கலந்து பேசுவதற்காகவே அன்று ஒரு முடிவும் சொல்லாமல் போனார். அன்று இரவு கருணாநிதியையும் மற்றவர்களையும் சந்தித்து அண்ணாத்துரை பேசினார். ஆனால் கட்சியை

உடைப்பதிலேயே அவர்கள் கருத்தாக இருந்தார்களே தவிர, வேறு எந்த சமரச யோசனைக்கும் தயாராக இல்லை.

சம்பத் தன் கோரிக்கையை வற்புறுத்தாமலேயே உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி வேண்டி மறுநாளும் அண்ணாத்துரை வந்து பேசினார். சம்பத் அதற்கு இணங்கவில்லை. கலக்கத்தோடு சென்ற அண்ணாத்துரை தனது நண்பரான தேவராஜ முதலியார் வீட்டில் தங்கினார். அவர் மிகவும் வாடிப்போய் இருந்தார். சம்பத்தின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து விளைந்தால் அரசியலில் அதன் விளைவு எப்படி இருக்குமென்று அவருக்கு மட்டுமே தெரியும்.

அன்றிரவு சம்பத் உண்ணாவிரதம் இருந்த கொட்டகைக்கு 'தீ' வைக்கும் முயற்சி நடைபெற்றது. அந்த முயற்சியில் ஈடுபட்ட சிலரைப் போலீசார் வளைத்துக் கொண்டு போய் உள்ளே வைத்தார்கள். ஆகவே கொட்டகையைச் சுற்றி சம்பத்தின் ஆதரவாளர்கள் இரவு முழுவதும் கண் விழித்து அமர்ந்திருந்தார்கள்.

மூன்றாவது நாளே சம்பத்தின் உடல்நிலை மோசமாகத் தொடங்கிற்று. முறையான விதிகளைக் கடைப்பிடிக்காததால் வயிற்றில் சிக்கியிருந்த மலம் வேதனை தரத் தொடங்கிற்று. அண்ணாத்துரை அன்று முழுதும் எதுவும் சாப்பிடவில்லை. இரண்டு பகுதியையும் திருப்தி செய்ய முடியாமல் அவர் தடுமாறினார். அன்று மாலை [illegible] மணிக்கெல்லாம் சிறு நீரும் கெட்டு உயிருக்கே ஆபத்து விளையும் நிலைமை ஏற்பட்டு விட்டதாக சம்பத்தைப் பரிசோதித்த டாக்டர் கிருஷ்ணன் கூறினார். அந்தச் செய்தி உடனே அண்ணாத்துரைக்கு தெரிவிக்கப்பட்டது அவனும் திருச்சி சாம்புவும் காரெடுத்துக்கொண்டு தேவராஜமுதலியார் வீட்டிற்குச் சென்றார்கள். பகல் முழுவதும் கலங்கியிருந்த அண்ணாத்துரை அப்போது தான் லேசான தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவன் போய்ச் செய்தியைச் சொன்னதும் பெரும் பதட்டத்தோடு எழுந்தார். குரல் கொடுத்தே அழுதுவிட்டார். அவனது கையைப் பிடித்துக்கொண்டு 'இந்த உண்ணாவிரதத்தை உடனே நிறுத்துவதற்கு நீயாவது எனக்கு உதவக் கூடாதா' என்றார். 'நீங்கள் புறப்படுங்கள். எப்படியும் நிறுத்திவிடலாம்' என்று அவன் சொன்னான்.



அண்ணாத்துரையும் தேவராஜ முதலியாரும் உடனே கொட்டகைக்கு விரைந்தார்கள். சம்பத்தின் கையைப் பிடித்துக் கொண்டு அண்ணாத்துரை அழுதார். கடைசியில் சம்பத்தின் கோரிக்கைப்படி கட்சியில் நடைபெறும் காலித்தனங்களை உடனுக்குடன் கண்டிப்பதாகவும் திருச்சி நிகழ்ச்சிகளுக்கு காரணமானவர்களைக் கண்டுபிடித்துக் கட்சியை விட்டு விலக்குவதாகவும் ஒப்புக்கொண்டார்.

உண்ணாவிரதத்தை நிறுத்த சம்பத் சம்மதித்தார். உடனே சம்பத்தைத் தூக்கி நிறுத்தி 'இதில் வெற்றி பெற்றது சம்பத்துதான்' என்று கூடியிருந்த கூட்டத்தினருக்குச் சொன்னார். சம்பத்தைக் கையில் தாங்கியவாறே சிறிது பழச்சாறு கொடுத்து நெற்றியில் முத்தமிட்டு அழைத்துக் கொண்டு சம்பத் வீட்டிற்குப் புறப்பட்டார்.

உண்ணாவிரதம் முடிவு பெற்று சம்பத் வெற்றிபெற்றதாக அண்ணாத்துரை அறிவித்து அவரை அழைத்துக்கொண்டு போயிருந்துங்கூட, கீழ்மட்டத்தில் இருந்த பகைச் சூழல் மாறவில்லை. தொண்டர்களில் இருந்து பேச்சாளர்கள் வரை ஒருவரை யொருவர் முறைத்தவண்ணமே இருந்தனர்.

சம்பத் வீட்டுக்கு அண்ணாத்துரையுடன் அவரின் இரண்டொரு நண்பர்கள மட்டுமே வந்திருந்தனர். சம்பத் கோஷ்டியில் பெரும்பாலோர் அங்கே இருந்தார்கள். அண்ணாத்துரை அவர்களோடு மனம் விட்டுக் கலந்து பேசி அடுத்த நாலாவது நாள் காவலர் கூட்டம் என்ற பெயரில் எல்லா மாவட்டங்களிலும் இருந்தும கட்சியில் முக்கியமானவர்களை அழைப்பதென்றும் கூட்டத்தைச் சென்னையில் நடத்தினால் கலவரம் நடக்கக் கூடுமென்றும், ஆகவே திருவொற்றியூரில் நடத்துவதென்றும் முடிவு எடுத்தார். அந்த நேரத்தில் கருணாநிதி தனது பத்திரிகையில் ஒரு நாடகமாடி இருந்தார். கட்சியின் பொருளாளர் பதவியை தான் ராஜினாமாச் செய்திருப்பதாக அவர் அறிவித்து இருந்தார். ஆகவே எல்லா விஷயங்களையும் கலந்து பேச காவலர் கூட்டம் உதவும் என்று அண்ணாத்துரை எண்ணினார்.

பொதுக்குழு என்றோ செயற்குழு என்றோ கூட்டினால் குறிப்பிட்ட சிலர்தான் கலந்துகொள்ள முடியும். காவலர் கூட்டம் என்றால் எல்லோரும் கலந்து கொள்ளலாம் என்பது அண்ணாத்துரையின் நோக்கம். அதனை சம்பத்தும் ஆதரித்தார்.

# காவலர் கூட்டம்

உண்ணா விரதத்துக்குப் பிறகு அண்ணாத்துரையின் மனப்போக்கில் மட்டும் நல்ல மாறுதல் தென்பட்டது. மேலும் மேலும் கட்சியில் குழப்பங்கள் நீடித்தால் தன்னால் சமாளிக்க முடியாதென்பதையும் அவர் பூரணமாக உணர்ந்திருந்தார். ஆகவே காவலர் கூட்டத்தில் தங்களுடைய நண்பர்கள் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்று சம்பத் விரும்பினார். ஆனால் அவன் மட்டும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை. தான் கலந்து கொண்டால் ஓரளவுக்கு மாறியிருக்கின்ற சூழ்நிலை மீண்டும் கெட்டு, தொடர்ந்து எல்லோருக்குமே நிம்மதியில்லாமல் போகக்கூடும் என்று அவன் கருதினான். அவன் மனதில் இருந்து கட்சிப்பற்று முழுக்க முழுக்க வெளியேறி விட்டது.

அன்றிலிருந்து அமைதியாக ஒதுங்கி விடுவதென்றே அவன் காவலர் கூட்டத்திற்குப் போகவேண்டாமென்று இருந்தான் காலை சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் மேயர் முனுசாமியும் மற்றும் சிலரும் அவன் வீட்டிற்கு வந்தார்கள். எப்படியும் அவனும் காவலர் கூட்டத்திற்கு வரவேண்டும் என்றார்கள். 'எனக்கு உங்கள் கட்சியும் வேண்டாம். அதில் கிடைக்கும் எந்த லாபமும் வேண்டாம். என்னை இப்படியே இருக்க விடுங்கள்' என்று அவன் கூறினான்.

முனுசாமி விடவில்லை. ''கூட்டத்திற்கு வரவில்லையென்றால் உங்களைக் கோழையென்று தீர்மானித்து விடுவார்கள்'' என்று குத்திக் காட்டினார். அது, அவனது ஆண்மைக்குச்



சவாலாக இருந்ததால் காவலர் கூட்டத்தில் மட்டும் கலந்து கொள்வதென்ற முடிவு கட்டி அவர்களோடு சென்றான்.

திருவொற்றியூரில் ஒரு சத்திரத்தில் காவலர் கூட்டம் நடந்தது. கூட்டம் நடக்கும் இடத்தைச் சுற்றிலும் பயங்கரமான சூழ்நிலை நிலவியிருந்தது. இரண்டு கோஷ்டியினரும் ஆயுதங்களுடனேயே வந்திருப்பதாக அங்கே பேச்சு அடிபட்டது. அங்கேயும் போலீஸ் வளையம் அதிகமாக இருந்தது. திருவொற்றியூருக்குள் அவன் நுழைந்ததும் பின்வாசல் வழியாக அவனை அழைத்துச் சென்றார்கள்.

பெரும்பாலும் முக்கியமான பிரமுகர்கள் அனைவரும் அந்த வாசல் வழியாகத்தான் வந்து கொண்டிருந்தார்கள். அவன் உள்ளே செல்லும்போது திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் 'எங்களைக் காலிகள் என்று சொன்னதை வாபஸ் வாங்கு' என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் உள்ளே போய் அமர்ந்தான். கொஞ்சம் தாமதித்து அண்ணாத்துரை வந்தபோது அவரைச் சார்ந்தவர்கள் 'அண்ணா வாழ்க' என்று குரல் எழுப்பினார்கள். கூட்டம் ஆரம்பமாயிற்று. மிகவும் இறுக்கமான சூழ்நிலையில் அண்ணாத்துரை உருக்கமாய்ப் பேசினார். 'இந்தக் கட்சி அழிந்துவிட்டால் இன்னும் ஒரு தலைமுறைக்குத் தமிழர்களுக்கு விடிவே கிடையாது. ஆகவே ஒற்றுமை வேண்டும்' என்றார்.

இரண்டு பகுதியினரையும் திருப்தி செய்கிற மாதிரிப் பேசினார். ''இதுவரை தவறு செய்தவர்கள்—இங்கே வேண்டாம்—தனியாக என்னிடம் வந்து வருத்தம் தெரிவித்தால்கூடப் போதும். இந்தப் பிணக்கு விடுபட்டுப் போகும். பழைய பாச உணர்ச்சி வந்துவிடும்'' என்று அவர் சொன்னார்.

அங்கிருந்த சூழ்நிலையில் தான் ஒருவன் வருத்தம் தெரிவித்தாலே சகல குழப்பங்களும் தீர்ந்துவிடும் என்று அவன் கருதினான். யார் எவ்வளவு தவறு செய்தார்கள் என்று யோசித்துக் கொண்டிருப்பதைவிட நிலைமையை மாற்றுவது எவ்வளவு நல்லது என்ற முடிவு கட்டிய அவன் உணர்ச்சி வசத்தோடு எழுந்தான். அண்ணாத்துரையின் கைகளைப்

பிடித்துக் கொண்டு "இதில் நான் தவறு செய்திருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கண்ணீர் சிந்தினான்.

அண்ணாத்துரை மனம் நெகிழ்ந்தார். அவன் அவரது கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவர் அவனது கைகளை முத்தமிட்டார் உள்ளம் உருகிற்று. சந்தோஷ ஆரவாரம் பெருகிற்று. எல்லோரும் அவனைக் கட்டித் தழுவினார்கள். உடனே அண்ணாத்துரை மேடைமீது ஏறி திருச்சி நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்தார். கட்சியை விட்டு விலக்குவேன் என்று எச்சரித்தார். நடிகர்கள் அவனை அலாக்காகத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினார்கள். கூட்டத்திலிருந்த தொண்டர்கள் அவன் கையிலும் வாயிலும் மிட்டாய்களையும் சர்க்கரையையும் கொட்டினார்கள்.

கூட்டம் 'வாழ்க' முழக்கத்தோடு உற்சாக மதமதப்பில் கலைந்தது. பிறகு அனைவரும் திரு டி. சண்முகம் வீட்டில் மாலைப் பலகாரம் உண்ணச் சென்றார்கள். எல்லோருமே அவனிடம் மிகுந்த அன்பு பாராட்டினார்கள், கருணாநிதியைத் தவிர. கருணாநிதி அப்பொழுதும் 'இது ஒரு போலி நாடகம்' என்று நெடுஞ்செழியனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அதை அவன் கேட்டுக்கொண்டிருந்தான். உடனே அவன் நெடுஞ்செழியனிடம் ஜாடையாக "என்னுடைய இருதயம் எப்போதும் உண்மையையே பேசும்" என்றான். அவர் மிகுந்த பணிவோடும் அன்போடும் அதனை ஒப்புக்கொண்டார்.

கருணாநிதியைத் தவிர அனைவர் நெஞ்சிலும் கட்சி, நூற்றுக்கு நூறு அமைதிக்குத் திரும்பிவிட்டது, என்ற நம்பிக்கை பிறந்தது. அன்று இரவு, சம்பத்திடம் அனைத்தையும் தெரிவித்தபோது அவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். இரண்டொரு தீவிர வாதிகள் மட்டுமே அவன் செய்தது தவறு என்று வாதிட்டனர்.



# நச்சுக் கூட்டங்கள்

மறுநாள் சம்பத் வீட்டுக்கு அண்ணாத்துரை வந்தார். அண்ணாத்துரை, சம்பத், கருணாநிதி, அவன் ஆகிய நால்வரும் எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்வதென்றும் இந்த ஒற்றுமையைக் கீழ்மட்டத் தொண்டர்கள் வரை நிலைநாட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது!

அந்த வகையில் அண்ணாத்துரை மிகத் தெளிவாக இருந்தார். ஆனால், கட்சியை எப்படியும் உடைத்தே தீருவது என்று முடிவு கட்டியிருந்த கருணாநிதி அந்தக் கூட்டங்கள் நடைபெறாமல் தடுப்பதில் முனைந்தார். பலவீனமான அண்ணாத்துரையின் இதயம் மீண்டும் சலனமடையுமாறு மாற்றுவதில் அவர் வெற்றி பெற்றார்.

மாயவரத்தில் நடைபெற்ற முதற் கூட்டமே முற்றுங்கோணலாக நடைபெற்றது. ஏன் அப்படி அண்ணாத்துரை மாறினார் என்று விவரித்துக் கொண்டே போவது தேவையற்றது. சுயமாகச் சிந்திக்கிற சக்தியையே அவர் அப்போது இழந்திருந்தார். அவரை விஷமாக்குவதில் கருணாநிதி வெற்றி பெற்றார்.

ஒற்றுமைக்காகப் போடப்பட்ட கூட்டங்களையெல்லாம் ஒத்தி வைத்திருப்பதாகவும் ஏப்ரல் ஒன்பதாம் தேதி சென்னைக் கூட்டம் மட்டும் நடைபெறும் என்றும் அண்ணாத்துரை அறிவித்து விட்டார். அவன் மிகவும் வேதனையுற்றான். 'இதுவும் ஒரு அரசியலா?' என்று அலுப்புற்றான். மிச்ச சொச்சமென்று அண்ணாத்துரையிடம் வைத்திருந்த கடைசி நம்பிக்கையையும் இழந்தான். இனி யார் வந்தாலும் வரா

விட்டாலும் தான் கட்சியில் இருந்து விலகிவிடுவது என்று முடிவு கட்டினான்.

ஓர் இரவு முழுதும் சிந்தித்துக் கட்சியைவிட்டு விலகி விடுவதே தன் எதிர்காலத்திற்கு உகந்தது என்று இறுதியும் உறுதியுமாக முடிவு கட்டிக்கொண்டான்.

'நாளைக்கே நான் ராஜினாமாச் செய்யப் போகிறேன்' என்று சம்பத்திடம் தெரிவித்தான். 'கொஞ்சம் பொறுங்கள் ஏப்ரல் ஒன்பதாம் தேதிக் காலையில் எல்லோரையும் வரச் சொல்லியிருக்கிறேன்; அன்று ஒரு முடிவு எடுப்போம்' என்றார் அவர். அந்த மூன்று நாட்களும் அவன் பொறுத் திருந்தான்.

## விடுதலை தந்த ஏப்ரல் ஒன்பது

**1961** ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி. சம்பத் வீட்டில் சம்பத் ஆதரவாளர்கள் திரண்டனர். வெகுநேரம் கூடி எதை எதையோ விவாதித்தனர் அவன் எந்த விவாதத் தையும் விரும்பவில்லை. ''நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் சரி. என்னுடைய ராஜினாமாவை இன்றைக்கே சமர்ப்பிக்கப் போகிறேன்' என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டான். எந்த மதியழகனைப் பொதுச்செயலாளராக்குவதற்காக இவ்வளவு கலவரங்களும் நடைபெற்றதோ—அந்த மதியழகன் தேர்தல் வரும்போது ராஜினாமாச் செய்தால் வர வேண்டிய பதவி போய்விடுமே என்று கலங்கினார்.

சம்பத் யோசித்தார் ஆனால் அவன் யோசிக்கவில்லை. 'உங்களுக்குக் கொஞ்சங்கூடப் புத்தி கிடையாது. நாம் எவ்வளவோ சமாதான வேட்கையைக் காட்டினோம். இருந்தும் அலட்சியப்படுத்தப் பட்டோம். இதற்குமேல் எந்த மானமுள்ள மனிதனும் இந்தக் கட்சியில் இருக்க மாட்டான் நீங்கள் என்ன செய்கிறீர்களோ செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு ஒரு பேப்பரை எடுத்து மளமளவென்று தன் ராஜினாமாவை எழுதி சம்பத்தின் கையில் கொடுத்து விட்டுப் போயே போய்விட்டான்.



# பத்தாண்டு வனவாசம் முடிவு

அன்று மாலைப் பத்திரிகைகளில் அவனைப் போலவே சம்பத்தும் ஏராளமான நண்பர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ராஜினாமாச் செய்துவிட்ட செய்தி பிரதான மாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தது!

அவன் நெஞ்சு நிம்மதி யடைந்தது.

கண்மூடித்தனமான அவனது அரசியல் வனவாசம் முடிந்துவிட்டது!

காட்டுக் குரங்குகளிடமிருந்து அவன் விடுதலை பெற்று விட்டான்!

சின்னஞ் சிறிய கூண்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த அந்தப் பறவை, பரந்த வானத்தில் எழுந்து பறக்கத் துவங்கியது.

சபலத்திற்கும் சலனத்திற்கும் ஆட்பட்ட கோழை மனி தர்களை 'தலைவர்கள்' என்று போற்றிப் பாடிய அவன் பாட்டு முடிந்து விட்டது.

சமுதாயத்தின் மூன்றாந்தர மனிதர்களோடு அவனுக் கிருந்த உறவு அறுந்து விட்டது!

அர்த்தமில்லாமல் அவன் வளர்த்துக் கொண்டிருந்த வெறி தணிந்து விட்டது!

ஒரு நெடுஞ்சாலைக் கொள்ளைக் கூட்டத்திடமிருந்து அந்த அப்பாவி மனிதன் தப்பி வெளியே வந்துவிட்டான்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த பொருளற்ற கூட்டத்தில் இருந்து அவன் புதிய உலகத்திற்கு வந்து விட்டான்!

பாண்டவர்களைப் போல்—பதின்மூன்று அல்ல—பத்தாண்டு காலம் வனவாசம் புரிந்த அவன், நாட்டுக்குத் திரும்பிவிட்டான்!

கூண்டுப் பறவை சுதந்திரப் பறவையாகி விட்டது!

வனவாசம் புரிந்த மிருகம் அன்று மனிதன் ஆனது!

ஏப்ரல் ஒன்பது—அவன் வரலாற்றில் புனிதமான நாள்!

அன்றுதான் அவன் உண்மையை நோக்கி நடைபோடத் துவங்கினான்!

அன்று இரவு நிம்மதியாகத் தூங்கினான்!

மறுநாள் பொழுது 'மனிதா எழுந்திரு! உன் வனவாசம் முடிந்துவிட்டது' என்று அவனுக்கு நினைவுறுத்திற்று!

GNANALAYA
Regd. No. 39/91.
PUDUKKOTTAI.

ஸ்ரீ ஜெட்லி நூல் நிலையம்,
திருச்சி.
நாள்: ..........
எண்: ..........
பா. கிருட்டிணமூர்த்தி, M.A., B.T.,